www.tamilarangam.net

# வியூகம்

இதழ் 2

Aug 2010 **Viyooham** ஆவணி 2010

சிங்கள தேசியவாத்தின் தோற்றம் குறித்து

பாராளுமன்றமும் புரட்சிகர சக்திகளும்

சூழலியலும், நிலைத்து நிற்கக்கூடிய வளர்ச்சியும்

வீட்டு வேலைக்கு ஊதியம் தொடர்பான முன்மொழிவுகள்.

விடியலிற்கான தேடல்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வியூகம்

இதழ் 2 ஆவணி 2010

வெளியீடு:

வியூகம் வெளியீட்டு பிரிவு

தொடர்புகளுக்கு:

**Viyooham**
**PO Box 66541**
**685 McCowan Road**
**Toronto, ON M1J 3N8**
**Canada.**

Website: www.viyooham.com
Email: viyooham@gmail.com

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**பொருளடக்கம்** **பக்கம்**


1. ஆசிரியர் தலையங்கம் 3

2. வரலாற்று பிரக்ஞையின் உருவாக்கம்: மகாவம்சத்திலிருந்து சிங்கள தேசியவாதத்தை நோக்கி 27

3. சூழலியலும் - நிலைத்து நிற்க கூடிய வளர்ச்சியும் 49

4. வீட்டுவேலைக்களுக்கான ஊதிய இயக்கமும் சல்மா ஜேம்ஸ்சும் 68

5. பாராளுமன்றமும் புரட்சியாளரும் 90

6. எதிர்வினைகள் 165

www.tamilarangam.net

# ஆசிரியர் தலையங்கம்

இரண்டாவது இதழில் உங்களை சந்திப்பதில் மிக்க மகிழ்ச்சி! காலாண்டிதழ் என்று தொடங்கிய நாம் இத்தனை காலம் கழித்துத்தான் எமது இரண்டாவது இதழை கொண்டுவர நேர்ந்தற்காக வருந்துகிறோம். ஆனால் ஒரு கோட்பாட்டு இதழை வெளிக்கொணர்வதிலுள்ள சிரமங்களை உணர்ந்து கொள்ளும் எவரும், இன்றைய எமது அரசியல் சூழலில் இதன் வருகைக்கான தாமதத்தை புரிந்து கொள்வார்கள் என்றே நம்புகிறோம். வியூகத்தின் முதலாவது இதழுக்கு நீங்கள் தந்த ஆதரவு மிகச் சிறப்பானது. அந்த உற்சாகத்துடனேயே தொடர்ந்தும் செயற்படுகிறோம். இந்த இதழின் நோக்கமே எமது தேசிய விடுதலைப் போராட்டம் முகம் கொடுக்கும் முக்கியமான கோட்பாட்டு, அரசியல், அமைப்புத்துறை சார்ந்த பிரச்சனைகளை விவாதிப்பதே என்பதால், இந்த இதழ் தொடர்பாகவும் உங்களது கருத்துக்களையும், விவாதங்களையும் அறிந்து கொள்ள ஆவலாக உள்ளோம்.

தமிழர் தேசிய விடுதலைப் போராட்டமானது ஒரு பெரிய நெருக்கடிக்குள் தள்ளப்பட்டுள்ளது. முன்பெல்லாம் பல்வேறு தவறுகளுடன்தான் என்றாலும் விடுதலைப் புலிகள் அமைப்பினர் இந்த போராட்டத்தில் ஏதோ ஒரு விதத்தில் தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தி வந்தனர். இதனால் தமிழ் மக்களது தேசிய பிரச்சனைக்கு தீர்வு காணப்பட்டதோ இல்லையோ, அப்படிப்பட்டதொரு பிரச்சனை இருப்பதையும், அதற்கு தீர்வு காணப்படவேண்டியதன் அவசியத்தையும் அனைவரும் ஏற்றுக் கொண்டாக வேண்டிய நிலைமை காணப்பட்டது. இப்போது விடுதலைப் புலிகள் அமைப்பின் மறைவானது, சிங்கள தேசத்திடம் இந்த தேவையை முற்றிலும் இல்லாமற் செய்துவிட்டுள்ளது. முன்பெல்லாம் புலிகள் அமைப்பினது இருப்புத்தான், அவர்களது “பயங்கரவாதம்” தான், தமிழர் தேசிய பிரச்சனைக்கு தீர்வு காண்பதற்கு தடையாக இருப்பதாக கூறிவந்தார்கள். இப்போது புலிகளில்லாத இந்த ஒரு வருடத்தில் நடந்து முடிந்தவை என்ன என்று பார்ப்பது இப்போது அவசியமாகிறது.

தேசியப்பிரச்சனை பற்றி பேசப்பட்ட விடயங்கள் தொடர்பாக இதுவரை காலமும் முன்வைக்கப்பட்டு வந்துள்ள முன்மொழிவுகள் தொடர்பாக சிங்களத்தலைமை என்னவிதமான நிலைப்பாடுகளை இப்போது கொண்டுள்ளது? சமஸ்டி பற்றி பேசவே கூடாது! வடக்கு - கிழக்கு இணைப்பு சாத்தியமில்லை. தனித்தனியான வடக்கு, கிழக்கு மாகாணசபைகளுக்குக் கூட பொலிஸ், காணி அதிகாரங்கள் கிடையாது. இவற்றைவிட நடப்பிலுள்ள கிழக்கு மாகாணசபை பற்றி பிள்ளையானின் முறைப்பாடுகளின் பட்டியல் மிகவும் நீண்டது. இதே வேளை சிறீலங்கா அரசு தேசியப்பிரச்சனை தொடர்பாக முன்னெடுத்துவரும் எதிர்மறையான நடவடிக்கைகளின் பட்டியலும் நீண்டு கொண்டுதான் செல்கிறது. யுத்தத்தை அடுத்து வன்னியில் முகாம்களில் அடைக்கப்பட்டிருந்த மக்களது மீள்குடியேற்றம் என்பது மிகவும் கண்டிக்கத்தக்க அளவிற்கு கண்துடைப்பாக நடந்து கொண்டிருக்கிறது. அவர்களை முகாம்களை விட்டு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வெளியே விட்டுவிட்டால் அதற்குப் பெயர் மீள்குடியேற்றம் என்று கருதும்படி அந்த மக்கள் மிகவும் மோசமான நிலைமைகளில், தமது வாழ்க்கையை தொடங்குவதற்கு அவசியமான எந்த அடிப்படையான வசதிகளும் இன்றி சொல்லொணாத் துயரில் கைவிடப்பட்டுள்ளார்கள். சரணடைந்த போராளிகள் இன்னமும் சிறைப்படுத்தப்பட்ட நிலையிலேயே உள்ளார்கள். சரணடைந்த பலர் இரகசிய முகாம்களில் வைக்கப்பட்டிருப்பதும், இன்னும் சிலர் கொல்ல ப்பட்டதாக கூறப்படுவதும், இவர்களது "புனர்வாழ்வு" நடவடிக்கைகளின் இலட்சணம், அரசின் நோக்கத்தை வெளிப்படுத்துவதாக உள்ளது.

இன்னொரு புறத்தில் சிறீலங்கா அரசானது வெற்றி விழாக்களை தொடர் ந்தும் நடத்துவதில் குறியாக இருக்கிறது. கொழும்பிலும், நாட்டின் ஏனைய பிரதேசங்களிலும் தமிழர்களை வெற்றி கொண்ட விழாவாக அது கொண்டாட ப்படுகிறது. தமிழர் தாயகத்தில் ஒரு வெற்றி கொண்ட இராணுவமாக அது செயற்பட்டுக் கொண்டு இருக்கிறது. பௌத்த மதத்தாபனங்களை அமைப்பது, வெற்றியின் நினைவுத்தூபிகளை அமைப்பது, போராளிகளது நினைவிட ங்களை அழிப்பது, இப்படியான தமிழர் தேசியஅடையாளங்களை திட்டமிட்ட முறையில் சிதைப்பதற்கான பணிகளை அரசு தீவிரப்படுத்தியுள்ளது. அத் தோடு இனிவரும் எதிர்காலத்தில் தமிழர் தேசிய உணர்வானது விழித்தெழக் கூடாது என்ற முனைப்பில் திட்டமிடலுடன் கூடிய நடவடிக்கைகள் முன்னெடுக்க ப்படுகின்றன.

தமிழ் மக்களை ஒரு தேசம் என்றவகையில் இல்லாதொழிப்பதன் மூலமாக தேசியப்பிரச்சனைக்கு தீர்வுகாண சிறீலங்கா அரசு முயல்கிறது. இந்தவிதமான கலைகளை சிறீலங்கா அரசானது இஸ்ரேல் போன்ற சியோனிச அரசுகளின் வழிகாட்டலில் செயற்படுகின்றது. உள்நாட்டு யுத்தம் ஒன்று முடிவுக்கு வந்ததும், அந்த யுத்தத்திற்கிட்டுச் சென்ற காரணங்களை இனம்கண்டு அவற்றை களை வதற்கு முழு அளவில் செயற்படுவது அரசின் கடமை. ஆனால், அந்த கட மையை முற்றாக கைகழுவிவிட்டு, ஒரு ஆக்கிரமிப்பு படையின் செயற்பா டுகளை சிறீலங்கா படைகள் மேற்கொள்கின்றன. உள்நாட்டு யுத்தத்தில் ஒரு தரப்பானது முற்றாக தோற்கடிக்கப்பட்ட நிலையில், அரசானது படைக்குறை ப்பை செய்ய முன்வர வேண்டும். படைகளின் எண்ணிக்கையை குறைப்பது: பெரிய அளவிலான படை முகாம்களை அகற்றிவிட்டு, மிகவும் அடிப்படையான சட்டம் - ஒழுங்கை பேணுவது என்ற அளவிற்கு படைகளின் எண்ணிக்கையை குறைப்பது: இந்த பணிகளைக் கூட அந்த பிரதேச மக்களில் இருந்து தேர்ந் தெடுக்கப்பட்ட பொலிசாரின் கரங்களில் ஒப்படைப்பது: முன்னைய "உயர் பாதுகாப்பு வலையங்களை" அகற்றுவது: மக்கள் தமது சொந்த இடங்களில் குடியமர்வதை தீவிரப்படுத்துவது: அரசியல் கைதிகளை உடனடியாக விடு விப்பது: போன்றவை அடங்கும். இதற்கு மாறாக, ஏற்கனவே இருக்கும் அரச படைமுகாம்களை பலப்படுத்துவது, நிரந்தர கட்டமைப்புக்களாக மாற்றுவது: அவற்றையொட்டி படை வீரர்களுக்கு நிரந்தர இருப்பிடங்களை ஏற்படுத்தி அவர்களது குடும்பங்களை குடியமர்த்துவது என்பவை, ஒரு ஆக்கிரமிப்பு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இராணுவத்தின் (occupying force) நடவடிக்கைகளே அன்றி வேறல்ல.

கிழக்கில் அரசானது நிலைமைகளை இன்னமும் சிக்கலாக்கிவிடும் செயற்பாட்டை மேற்கொள்கிறது. சிங்கள குடியேற்றங்களை தீவிரப்படுத்துவது: உயர் பாதுகாப்புவலையம் என்ற பெயரில் யுத்தத்தின் போது வெளியேற்றப்பட்ட மக்களை மீண்டும் தமது சொந்த இருப்பிடங்களுக்கு திரும்ப அனுமதிக்காமல் இருப்பது: சம்பூரில் அனல்மின்னிலையம் அமைப்பதற்கான அனுமதியை இந்த மக்களது சம்மதமும், உரிய நட்டஈடும் வழங்கமால், அளிப்பது: கிழக்கை சிங்களமயப்படுத்த வேண்டும் என்ற பிக்குகளது அழுத்தங்களுக்கு செவிசாய்ப்பது: இது போன்ற நடவடிக்கைகள் மீண்டும் ஆக்கிரமிப்பு இராணுவத்தின் நடவடிக்கைகளாகவே அமைகின்றன. தமிழர் தாயகத்தில் பல்வேறு அந்நிய நாடுகளது செயற்பாடுகளுக்கு அனுமதியளிப்பது எதிர்காலத்திலும் கூட தேசிய பிரச்சனையானது சுமுகமாக தீர்வு காணப்படுவதற்கான சாத்தியப்பாடுகளை இல்லாமற் செய்துகொண்டு போகிறது. இப்படியான ஆக்கிரமிப்பு செயற்பாடுகளை சிறீலங்கா அரசானது தீவிரப்படுத்தும் போதிலேயே, அவற்றை வெறுமனே அறிக்கையளவில் கூட கண்டிக்க முடியாதவர்களாக இன்றைய தமிழ் அரசியல் தலைமைகள் ஆகியுள்ளார்கள்.

தமிழ் தேசியத்தை முறியடிப்பதற்கான முயற்சிகளில் சிறீலங்கா அரசானது கடைசியாக களத்தில் இறக்கியிருக்கும் துருப்புச் சீட்டுதான் கேபியின் வருகை. புலிகளின் தலைவர் பிரபாகரனால் தனது வாரிசாக நியமிக்கப்பட்டவரும், புலிகளின் தலைமையின் மறைவை அடுத்து அதன் தலைமைப் பொறுப்பை முன்னெடுத்தவரும், பின்னர் சிறீலங்கா அரசினால் சர்ச்சைக்கு உரிய முறையில் கைது செய்யப்பட்டு கடத்திச் செல்லப்பட்டு, சிறை வைக்கப்பட்டிருந்த கேபி அவர்களை சிறீலங்கா அரசானது களத்தில் தனக்கு சார்பாக இறக்கியுள்ளது. இவருக்கு விரைவில் பொது மன்னிப்பு வழங்கப்படலாம் எனவும், விரைவில் நடைபெறவிருக்கும் வடக்கு மாகாணசபைக்கான தேர்தலில் முதலமைச்சர் பதவிக்கான வேட்பாளராக அரசு சார்பில் நியமிக்கப்படலாம் என்று அரசு தரப்பு செய்திகள் கூறுகின்றன. அத்துடன் இவரே போர்க்காலகுற்றங்கள் தொடர்பான ஐக்கிய நாடுகள் சபையின் குழுக்களில் சிறீலங்கா அரசுக்கு சார்பாக சாட்சியமளிக்கப் போவதாகவும் கூறப்படுகிறது. அத்தோடு இவரது தலைமையில் வடமாகாணத்தில் போரினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களை அபிவிருத்தி செய்வதற்கான முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டுள்ளதுடன், அவருடன் சேர்ந்து செயற்படும் நோக்கில் பலர் கொழும்பிற்கு சென்று அவரை சந்தித்து வந்துள்ளார்கள். அத்தோடு கேபியும் நேரடியாக வடமாகாணத்தின் பல்வேறு பிரதேசங்களுக்கும், முன்னாள் போராளிகள் அடைத்து வைக்கப்பட்டுள்ள தடை முகாம்களுக்கும் சென்று வந்துள்ளார்.

கேபியை களத்தில் சிறீலங்கா அரசு இறக்கியதானது தமிழர் அரசியல் தலைமைகளில் பெருத்த குழப்பங்களை ஏற்படுத்தியுள்ளது. வடமாகாணத்தின் முதலமைச்சர் பதவியே இப்போது தமிழர் தரப்பில் உள்ள பல்வேறு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பிழைப்புவாதிகளதும் இறுதி இலக்காகிவிட்டுள்ளது. சிறீலங்கா அரசுகளுடன் நீண்ட காலமாகவே சேர்ந்து “விசுவாசமாக” செயற்பட்டு வருபவர் என்ற வகையில் தானே இதன் இயல்பான “வாரிசாக” டக்லஸ் நினைத்துக் கொண்டிருந்தார். ஆனால், கடந்த தேர்தலில் மகிந்த இவரை நடத்திய விதம் தொடர்பாகவும், தேர்தலில் தமிழர்தேசியகூட்டமைப்பு பெற்ற வெற்றியின் காரணமாகவும் நிலைமைகளில் மாற்றம் ஏற்பட்டது. இப்போது தமிழர்தேசியகூட்டமைப்பே வடக்கு - கிழக்கில் முதன்மையான அரசியல் சக்தியாக உருவெடுத்துள்ளது. இவர்களுக்கான குத்துவெட்டுகளுக்கிடையில் தமக்கும் ஏதாவது கிடைக்காதா என்ற ஏக்கத்தில் பலரும் களத்தில் குதித்துள்ளனர். இவர்களுள் முன்னாள் வடக்கு-கிழக்கு மாகாணசபையின் முதலமைச்சர் வரதராசப்பெருமாளும் ஒருவர். சிறீலங்கா அரசானது கேபியை களத்தில் இறக்கியதானது, இப்படிப்பட்ட பலரது கனவுகளையும் கலைக்கும் அதிர்ச்சியை கொடுத்துள்ளது. எனவே இதனை முறியடிக்கும் விதத்தில் புதிதாக தமிழர் தரப்பு ஒற்றுமை பற்றி பேச முற்பட்டுள்ளார்கள். இப்படிப்பட்ட பருக்கைகளையே இலக்காக வைத்து போர் நடந்து கொண்டிருந்த போதே சிறீலங்கா அரசுடன் நீண்டகாலமாக கூடிக்குலாவியவர்கள் கூட, தாம் நட்டப்பட்டுவிடக் கூடாது என்ற நோக்கில், விமர்சனங்களை தூக்கிப் பிடிக்காமல் நிபந்தனையற்று அரசுடன் ஒத்துழைப்பதற்கு முனைந்து வருகிறார்கள். ஆக மொத்தத்தில் எதிரியின் கால்களை இறுகப் பற்றிக் கொள்வதற்கு ஒட்டுமொத்தமான தமிழ்த்தலைமையும் போட்டி போட்டுக் கொண்டிருக்கிறது என்பதுதான் இன்றைய யதார்த்தமாக உள்ளது. இவற்கிடையில் கேபி அவர்கள் தனியே அபிவிருத்தி பணிகளில் மாத்திரம் ஈடுபடவிருப்பதாகவும், அரசியல் செய்யும் நோக்கம் எதுவும் அவரிடம் கிடையாது என்றும் அவர் தரப்பினரால் கூறப்படுகிறது. தமிழர் தேசியபிரச்சனையை, அபிவிருத்தி சார்ந்த பிரச்சனையாக குறுக்குவதே அரசியல்தானே! அதிலும் மகிந்த அரசாங்கம் பற்றி இவர் வழங்கும் நன்னடத்தைப் பத்திரத்தைவிட பெரிய அரசியல் வேறு என்னவாக இருக்க முடியும். அதிலும் யுத்தத்தின் இறுதிக்கட்டத்தில் சிறீலங்கா அரசிடம் சரணடைந்த போராளிகளான பாலகுமார் மற்றும் யோகி போன்றோர் படுகொலை செய்யப்பட்டதாக செய்திகள் வெளிவந்து கொண்டிருக்கும் அதேசமயம், கேபிக்கு அரசு வழங்கும் முக்கியத்துவமானது, கேபி அரசாங்கத்திற்கு விலை போய்விட்டமையை அப்பட்டமாக வெளிப்படுத்துகிறது.

இவற்றையெல்லாம் பார்க்கும்போது எமது சமூகமானது ஒரு முப்பது ஆண்டு கால உக்கிரமான போராட்டத்தினூடாக சென்ற ஒரு சமூகம் என்பதற்கான தடங்களே இல்லாமலிருப்பதாக தோன்றுகிறது. நாம் இப்பொழுதுதான் முதல் தடவையாக இந்த விடயங்களை முகம் கொடுப்பது போல ஒவ்வொருவரும் அரசாங்கம் எறியும் எலும்புத் துண்டுகளுக்காக போட்டியிடுகிறார்கள். இங்கு நடைபெறும் கருத்தாடல்களைப் பார்த்தால் ஏதோ எழுபதிற்கு முன்பு நடக்கும் சொல்லாடல்கள் போல் நிலைமைகள் இருக்கின்றன. அபிவிருத்தியா, சுதந்திரமா போன்ற அடிப்படையான விடயங்கள் பற்றிக் கூட நாம் திரும்பவும் பேசியாக வேண்டியிருப்பதே அவலமான நிலைமைதான். **தற்போது அரசின்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**கைதியாக இருக்கும் கேபி அவர்கள் தமிழ்மக்கள் சார்பில் அரசுடன் எந்தவிதமான உடன்பாடுகளும் செய்து கொள்ளும் உரிமையற்றவர். ஒரு தேசத்தை பிரதிநிதித்துவப்படுத்துவது, அதன் சார்பாக ஒப்பந்தங்கள் செய்வது போன்றவையெல்லாம் சுதந்திரமான மனிதர்களாலேயே செய்யப்படக் கூடியதாகும்.** இந்த இடைவெளியில் தனது நாற்காலிக்கனவிற்கு மீள உயிர்ப்பளிக்க முனையும் வரதர், ஈழம் என்ற அடையாளத்தை தனது கட்சியில் இருந்து உதிர்த்துவிட தயாராக இருக்கிறாராம். இவர் எத்தனை தடவைதான் அதனை உதிர்க்கவும், மீண்டும் முளைக்கவும் செய்வார் என்பதை பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும். ஆரம்பத்தில் ஏனைய அமைப்புக்கள் தமிழீழம் என்று கூறியபோது ஈழம் என்பது தமிழீழத்தையே குறிப்பதாக வாதிட்டார்கள். பின்பு வடக்கு - கிழக்கு மாகாணசபையில் முதல்வராக இருந்த போது ஈழம் என்பது முழு இலங்கையையும் குறிப்பதாக குத்துக்கரணம் அடித்தார். பின்பு இந்திய அரசின் தூண்டுதலில் ஈழப்பிரகடனம் செய்தார். இப்போது மீண்டும் ஈழம் என்ற பதத்தை கட்சியின் பெயரில் இருந்து உதிர்க்கப் போகிறார்களாம்.

உண்மையில் புலிகள் அரங்கில் இருந்து அகற்றப்பட்டதால் எழும் தலைமையின் வெற்றிடத்தைவிட, புலிகளினால் மறுக்கப்பட்ட அரசியலின் வெற்றிடமே பெரியதாக இருக்கிறது. தேசம், அதன் நலன்கள், அதை அடைவதற்கான வழிமுறைகள் போன்ற விடயங்கள் எதுவுமே கடந்த காலத்தில் அறிவார்ந்த தளத்தில், சமூக அளவில் விரிவாக விவாதிக்கப்படவில்லை. குறிப்பிட்ட ஒரு காலம் வரையில் மரபார்ந்த தலைமையானது உணர்ச்சிமயமாக தமிழ் தேசியத்தை பயன்படுத்தி தனது வாக்குவங்கியாக தமிழ் மக்களை ஆக்கி வைத்திருந்தது. பின்னர் குறிப்பிட்ட ஒரு காலம் தேசிய அரசியலை புலிகள் ஏகபோகப்படுத்தி வைத்திருந்து மக்களை வெறுமனே தமக்கு தேவையான வளங்களை வழங்குவதற்கான ஒரு தளமாக மட்டுமே பாவித்து வந்தனர். அதன் விளைவுதான் இந்த அரசியல் வெற்றிடமாகும். தேசியபிரச்சனையின் அடிப்படையான விடயங்கள் கூட வெறுமனே பொதுப்புத்தி மட்டத்திலும், உணர்ச்சிமயமாகவும் மாத்திரம் அணுகப்படுகிறது. தேசியபிரச்சனையின் தீர்வு நோக்கி எம்மால் எதுவுமே செய்ய முடியாது என்பதால், இப்போது சாத்தியமானது எதுவோ, அதனைச் செய்வதே புத்திசாலித்தனமானதாக இருக்க முடியும் என்றவிதத்தில் நியாயப்பாடுகள் முன்வைக்கப்படுகின்றன. **“சாத்தியமானது எதுவோ, அதுவே சரியானது” என்பது அப்பட்டமான சந்தர்ப்பவாதமே அன்றி வேறல்ல. இது முன்னேறிய பிரிவினர் முன்னுள்ள கடமைகளான ஒழுங்கமைப்பு, திட்டமிடல், தயாரிப்பு** போன்ற அனைத்தையும் நிராகரித்து விடுகிறது. நாம் ஒரு தேசத்தின் தலைவர்கள் என்றவிதத்தில் சிந்திப்பதற்கு இந்த முன்னேறிய பிரிவினர் தயாராக இருக்க வேண்டும். புலிகளின் மறைவினால் தலைமையில் ஏற்படும் வெற்றிடத்தை ஒப்பீட்டளவில் ஓரளவு சுலபமாக நிரப்பிவிடலாம். ஆனால் அரசியலே வெற்றிடமாக இருந்தால் அதனை அவ்வளவு இலகுவாக நிரப்பிவிட முடியாது. எல்லாவற்றையுமே முதலில் இருந்தே தொடங்கியாக வேண்டியுள்ளது.

www.tamilarangam.net



எமது தேசத்திற்கு இன்று தேவைப்படுவது எவை? **நடந்து முடிந்த போர்க்கு ற்றங்கள் பற்றிய ஒரு சர்வதேச விசாரணை: அனைத்து அரசியல் கைதிகள துும் விடுதலை: போரினால் இடம் பெயர்ந்த மக்களது மீள்குடியமர்வு: தேசிய பிரச்சனைக்கான ஒரு அரசியல் தீர்வு.** இவைதாம் இன்று தமிழ் மக்களது முன்னேறிய பிரிவினரது முதன்மையான அக்கறையாக இருந்தாக வேண்டியு ள்ளது. இவற்றில் ஐக்கிய நாடுகள் அமைப்பினால் போர்க்குற்றங்கள் தொடர் பாக விசாரிப்பதற்காக அமைக்கப்பட்ட குழு எனும் விடயம் ஒரு நல்ல தொடக்கமாக அமைய முடியும். ஆனால் இந்த பிரச்சனையை திசைதிருப்ப அரசு முனைகிறது. ஒரு தேசத்தின் உரிமை தொடர்பான பிரச்சனையை, வெறுமனே அபிவிருத்தி தொடர்பான சொல்லாடல்களாக குறுக்கிவிட அரசு முனைகிறது. அதனை நோக்கியே தனது காய் நகர்த்தல்களை செய்கிறது. வடமாகாண முதலமைச்சர் பதவி போன்ற எலும்புத் துண்டுகளுக்காக நாமும் சண்டை போடும்போது நாம் அதில் அரசுக்கு துணைபோவதாகவே அர்த்தப்படும். யுத்தம் முடிந்ததும், போரின் போது கைதான கைதிகள் விடுதலை செய்யப்பட வேண்டும் என்பது சர்வதேச போர்க்கால விதிகளின்படி கட்டாயமானது. இதனை செய்யாமல் அரசானது சாக்குபோக்குகளைக் கூறு கிறது. மக்களின் இடம் பெயர்வுகளுக்கு காரணமான அரசே, அந்த மக்களை மீள்குடியமர்வு செய்வதை தனது கடப்பாடாகக் கொண்டுள்ளது. வெற்றிவிழா க்களுக்கு, வீதிகளை அமைப்பதற்கு, இராணுவத்தின் தேவைகளை பெருக்கிச் செல்வதற்கு, பெருமளவிலான அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கெல்லாம் அரசி டம் பணம் இருக்கிறது. ஆனால் அடைத்து வைக்கப்பட்ட தமிழ் மக்களை மீள்குடியமர்த்தத்தான் பணமில்லை என்பது சுத்த அயோக்கியத்தனமாகும். அதனை புலம்பெயர்ந்த மக்களே வழங்க வேண்டும் என்று அரசு கோருவதும், அதனையே இன்னும் சில முற்போக்கு அமைப்புக்கள் மீளவும் ஒப்புவிப்பதும் அசட்டுத்தனமாகும். உண்மையான காரணம் என்னவென்றால் இதனை செய்வ தற்கான அரசியல் நோக்கம் அரசிடம் கிடையாது என்பதே. தமிழர் தாய கத்தை இராணுவமயப்படுத்துவது, சிங்களமயப்படுத்துவது போன்ற கார ணங்களினாலேயே இதனை சிறீலங்கா அரசானது புறக்கணித்து வருகிறது. இதனை செய்வதற்கு போதிய வளங்களோ, அல்லது அரசியல் விருப்போ இல்லையானால் அந்த பணியை சர்வதேசதொண்டர் அமைப்புக்களிடம் விட்டு விட வேண்டும் என்று நாம் வலியுறுத்த வேண்டும். இப்போது சிறியளவில் தொடங்கும் இந்த சர்வதேச விசாரணை போன்ற விடயங்கள், உடனடியாக வெற்றியளிக்காமல் போகலாம். ஆனால் இவைதாம் நீண்ட காலத்தில் தமிழ் மக்கள் மீது சிறீலங்கா அரசின் மனித உரிமை மீறல்களை மட்டுப்படுத்தவும், தொடர்ச்சியாக ஒரு அரசியல் தீர்வை முன்வைத்தாக வேண்டும் என்று சர்வ தேச சமூகம் நிர்ப்பந்தம் செய்யவும் நல்லதோர் தொடக்கமாக அமைய முடி யும். ஆதலால் இந்த முன்முயற்சிகளை நீர்த்துப் போகச் செய்யும் எந்த செயற்பாடும் தமிழ் மக்களது நீண்டகால தேசிய நலன்களுக்கு எதிரானவையா கவே இனம்காணப்பட வேண்டும்.

ராஜபக்ச குடும்பமானது தமிழ் மக்கள் மத்தியில் சுயமாக செயற்படக்கூடிய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அரசியல் தலைமை உருவாகவே விடுவதில்லை என்பதில் மிகவும் கண்ணும் கருத்துமாக இருக்கிறது. டக்லஸ் போன்ற அடிவருடிகள் கூட எந்தவொரு கட்டத்திலும் எந்தவிதமான தனித்துவ தன்மையையும் வெளிப்படுத்திவிடக் கூடாது என்பதில் குறியாக இருக்கிறார்கள். இதன் விளைவுதான் கடந்த பொதுத் தேர்தலில் ஈபிடிபி கட்சியானது தனது வீணை சின்னத்தில் போட்டியிட அனுமதிக்கப்படாமையும், டக்லசுக்கு எதிராக புதிய வேட்பாளர்களை களத்தில் இறக்கியமையுமாகும். அவ்வாறே பிள்ளையான் விடயத்திலும் இதுவே நடைபெற்றது. இப்போது இவர்கள் எல்லோரையும் விட முற்றிலும் தம்மிலேயே, தனது உயிருக்காக தங்கியிருக்கும் ஒரு கைதியான கேபியை களத்தில் இறக்குவதற்கும் இதுவே காரணமாகும். தமக்கு முற்றிலும் கீழ்படிவாக நடக்கும் ஒருவரை உருவாக்குவதன் மூலமாக, பழைய பெருச்சாளிகளை ஓரம் கட்டுவதற்கான முயற்சி இது. அதனைவிட முக்கியமானது என்னவெனில், புலிகளை இராணுவரீதியாக தோற்கடிக்க முடிந்துள்ள போதிலும் கூட, தமிழ் மக்களை அரசியல்ரீதியில் தோற்கடிக்க முடியவில்லை என்பதை இவர்கள் நன்கு அறிந்தே வைத்துள்ளார்கள். தமிழ் மக்களது இந்த கோபமானது, தேசிய விழிப்புணர்வானது ஏதோ ஒரு விதத்தில் திரும்பத் திரும்ப வெளிப்படவே செய்யும் என்பதை அறிவார்கள். மிகவும் குறைபாடுடையதும், அறவே செயல் திறன் அற்றதாயினும் கூட, 'நாடு கடந்த தமிழீழ அரசு' போன்ற முயற்சிகள் குறிப்பிட்ட காலத்திற்காவது, தமிழ் மக்களது இந்தவிதமான உணர்வுகளுக்கு தீனிபோடும் செயற்பாட்டை செய்ய வல்லது. அதனால், இந்த நாடு கடந்த அரசு பற்றிய திட்டத்தை முதன் முதலாக தமிழ் மக்களுக்கு முன்மொழிந்த கேபியை இந்த முயற்சிக்கு எதிராக நிறுத்துவதானது, இந்த முயற்சிகளை அதன் ஆரம்ப கட்டத்திலேயே காற்றைப் பிடுங்கிவிடுவதை போலாக்கிவிடும்.

சரி, அபிவிருத்திதான் தீர்வென்றால், கடந்த காலத்தில் மகேஸ்வரன் முதல் டக்லஸ், கருணா, பிள்ளையான் உட்பட பலர் இதே காரணங்களுக்காகத்தானே அரசுடன் இணைந்து செயற்பட்டதாக கூறினார்கள். அவர்களால் இவற்றை தொடர்ந்தும் முன்னெடுக்க முடியாதா? இப்போது ஏன் இந்த புதிய கூட்டம் ஒன்று தேவைப்படுகிறது. மக்களை மீள் குடியேற்றுவதற்கு போதிய நிதி அரசிடம் இல்லையெனவும், அதனை புலம்பெயர்ந்த தமிழர்களே வழங்க வேண்டும் எனவும் கூறப்படுகிறது. அவ்வாறே தமிழர் தாயகங்களின் அபிவிருத்திக்கும் புலம் பெயர்ந்தவர்களே உதவுவதானால், அதற்கு மேல் சிறீலங்கா அரசுக்கு அங்கு என்ன வேலை இருக்கிறது. தமிழர்கள் தாமே தமது மக்களதும், தமது பிரதேசத்தினதும் அபிவிருத்தியை செய்து கொள்வதற்காகத்தானே தமது சுயாட்சியை கோரி நிற்கிறார்கள். அதனை அரசியல்ரீதியில் மறுத்துவிட்டு, மீண்டும் அபிவிருத்தி என்ற பேரில் கேட்பதன் மூலமாக தேசிய பிரச்சனையை அரசியல் நீக்கம் (De Politicise) செய்யப் பார்க்கிறார்கள். இன்று அபிவிருத்தி என்ற பேரில் சிறீலங்கா அரசுடன் ஒத்துழைக்க வேண்டும் என்று கோருபவர்கள், உண்மையில் இந்த தேசிய பிரச்சனையை அரசியல் நீக்கம் செய்யும் சிறீலங்கா அரசின் முயற்சிகளுக்கு உதவுகிறார்களே அன்றி,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வேறு எந்த உருப்படியான காரியங்களையும் ஆற்றவில்லை.

ஒட்டு மொத்தத்தில் சிறீலங்காஅரசு, தமிழர்தேசியகூட்டமைப்பு, அரச கைக் கூலிகள், புதிய கேபியின் ஆதரவாளர்கள் உட்பட அனைவருமே நடிக்கிறார்கள். இவர்கள் அனைவருக்குமே தமிழர் தேசியபிரச்சனையை தீர்க்காமல் இந்த அபிவிருத்தி முயற்சி மூலமாக உருப்படியாக எதனையும் சாதிக்க முடியாது என்பது நன்றாகவே தெரிந்தே இருக்கிறது. இதனை அரசியல் நீக்கம் செய்ய அரசு முனைகிறது. அதற்கு ஏனையவர்கள் தமது சொந்த அரசியல் இயலாமை, மற்றும் பிழைப்புவாத நோக்கங்களுக்காக துணைபோகிறார்கள். இவர்கள் வேண்டுமானால் ஒரு குறுகிய காலத்திற்கு மக்களை ஏமாற்றலாம். ஆனால் தேசமும், அதன் எதிர்காலமும் இவ்வாறு விலைபேசப்பட முடியாதவை. சற்றே காலம் கடந்தாவது இந்த அரசியல் யதார்த்தத்தை நமது தேசம் முகம் கொடுத்தேயாக வேண்டியிருக்கும். இன்று அகதிகளான, கைதாகியுள்ள மக்களை விடுவிக்க முனைவதாக கூறிக் கொண்டு, எதிர்காலத்தில் இன்னும் இலட்சக்கணக்கானவர்களை இதேநிலைமையில் தள்ளிவிட நாமே காரணமாகிவிடக் கூடாது என்பதில் போதிய விழிப்புடன் நடந்து கொள்வது அவசியமானது. அரசு தனது பணியை சரிவர செய்யாவிட்டால், அதற்கான அழுத்தங்களை எவ்வாறு நாம் முறையாகவும், பலமாகவும் கொடுக்கலாம் என்று சிந்திக்க வேண்டுமே ஒழிய, தமிழ் மக்களது ஒட்டுமொத்த தேசியநலன்களையும் விலைபேசுவதன் மூலமாக இதனை செய்துவிடலாம் என்று நம்ப, அந்த போலியான நம்பிக்கையை மக்களுக்கு ஊட்ட நாம் முயலக்கூடாது. உண்மையில் இன்றுள்ள தமிழ் தலைமைகள் ஒன்றுபட்டு, ஒருமுகமாக முயற்சி செய்தாலே இந்த நோக்கில் குறிப்பிடத்தக்க தாக்கங்களை நிகழ்த்தக் கூடிய சக்தியாக தம்மை உருவாக்கிக் கொள்ளலாம். ஆனால், இந்த பிழைப்புவாத அரசியலானது, அந்த திசையில் சிந்திப்பதில் நின்றும் இவர்களை தடுக்கிறது. தமிழ் மக்களது இன்றைய கையறுநிலையை இதற்கு காரணமாக இவர்கள் காட்டிக் கொள்கிறார்கள்.

இப்போது உருவாகிவரும் போர்க்குற்ற விசாரணைகளை பலப்படுத்துவதன் மூலமாக, அடுத்தடுத்த கட்டமாக மீள் குடியமர்தல், அரசியல் கைதிகளின் விடுதலை, மற்றும் அரசியல்தீர்வு போன்றவை நோக்கியதாக எமது செயற்பாடுகளை பலப்படுத்தி செல்ல வேண்டும். இணக்க அரசியல் மூலமாக இதனை சாதித்துவிடலாம் என்றால் அதற்குத்தான் ஏற்கனவே ஒரு கூட்டம் செய்து கொண்டிருக்கிறதே. இதற்கு மேலும் நாம் இந்த கானல்நீரை மக்களை நம்ப வைப்பதன் மூலமாக தேசத்தின் நீண்டகால நலன்களுக்கு எதிராக செயற்படக் கூடாது. மக்களது உடனடி பிரச்சனைகள் மற்றும் போர்க்கைதிகள் பற்றிய விடயங்கள் முக்கியமாவைதாம், ஆனால் இந்த பிரச்சனையானது நீண்ட காலத்தில் இன்னும் பல ஆயிரக்கணக்கானவர்களை இடம்பெயர, கைதாக, படுகொலை செய்யப்படமாட்டார்கள் என்ற உத்தரவாதத்தின் மேல்தான் நிலைநாட்டப்பட வேண்டும். இதற்கு அரசியல்தீர்வு அவசியமானது. இதற்கு மாற்றாக முன்வைக்கப்படும் அபிவிருத்தி பற்றிய காட்சிப்படுத்தல்கள் எல்லாம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மக்களை இன்னமும் ஆழமான நெருக்கடியிலேயே நீண்டகால நோக்கில் தள்ளிவிடக் கூடியதாகும்.

**ஒரு தேசமானது இன்னொரு தேசத்தை ஒடுக்குவதே தேசிய பிரச்சனையின் சாராம்சமாகும்.** ஒடுக்கும் தேசமானது எப்போது தனது ஒடுக்குமுறையை கைவிடுகிறதோ, அப்போதே அந்த பிரச்சனைக்கான தீர்வும் உருவாகிவிடு கிறது. ஆகவே சிங்களதேசமானது தனது ஒடுக்குமுறையை கைவிடுவதே இப்போது செய்யப்பட வேண்டியதாகும். இதற்கு மாறாக, சிறீலங்காஅரசும், அதன் அடிவருடிகளும் ஒடுக்கப்பட்ட தேசத்திடம் தனது நியாயமான கோரிக் கைகளை விட்டுக்கொடுக்கும்படி கோரிக்கை விடுகிறார்கள். சரி, தமிழ் மக் கள் விட்டுக் கொடுப்பதன் மூலமாகத்தான், இணக்க அரசியல் மூலமாகத்தான் தீர்வு காணலாம் என்பதாக, ஒரு வாதத்திற்காக வைத்துக் கொள்வோம். அப் படியாயின் எதுவரையில் விட்டுக் கொடுப்பதாம்? தமிழர்கள் ஒரு தேசம் என்ப தை, தாயக கோட்பாட்டை, சுயநிர்ணய உரிமையை... போன்ற அனைத்தையும் விட்டுக் கொடுப்பதா? தமிழர்கள் தமது உரிமைகள் பற்றி வற்புறுத்துவதுதான் இன்றைய பிரச்சனைகளுக்கு காரணமா? இது பாதிக்கப்பட்டவரை குற்றங்கா ணும் (Blaming the victim!) நடவடிக்கையல்லவா? இதற்குள் தமிழ்மக்கள் சிங்களமொழியை படிப்பதால், பௌத்தர்களாக மதம் மாறுவதால் பிரச்சனை களை தீர்க்க முடியும் என்பதான கோமாளித்தனமான முன்மொழிவுகளும் சில அரசியல் அநாதைகளினால் முன்வைக்கப்படுகிறது. முன்பு பிரஜாஉரிமை பறிக்கப்பட்டவர்களில், நாடு கடத்தப்பட்டவர்கள் தவிர ஏனையவர்கள் மீண்டும் பிரஜாஉரிமைக்கு விண்ணப்பித்து இலங்கைப் பிரஜைகளாக நேரிட்டது. இவர் கள் யாருமே இலங்கைப் பிரஜைக்குரிய அத்தனை உரிமைகளையும் அப்ப டியே அனுபவித்துவிட முடியவில்லை. அரசாங்க விண்ணப்பப் படிவங்களில் பிரஜாஉரிமை பிறப்பின் மூலம் பெறப்பட்டதா அல்லது பதிவின் மூலம் பெறப்பட்டதா? என்று கேட்கப்பட்டது. பதிவுப்பிரஜைகள் கடவுச்சீட்டு பெறுவது மற்றும் பல்வேறு விடயங்களில் பாகுபாடு காட்டப்பட்டார்கள். அவ்வாறே அடையாளஅட்டை பற்றிய பிரச்சனையில் இது தமிழ் மக்களை அடையாளம் கண்டு பாகுபாடு காட்ட துணையாக அமையும் என்று அப்போதே பலரும் குறிப்பிட்டார்கள். பிற்காலத்தில் இந்த அடையாள அட்டைகளே தமிழ் மக்க ளை கடுமையாக பாரபட்சம் காட்டப்படுவதற்கு காரணமாக அமைந்தது. ஆகவே இங்கு அசட்டுத்தனமான முன்மொழிவுகளுக்கு இங்கு இடம் கிடை யாது. ஒரு தேசம் இன்னொரு தேசத்தை ஒடுக்குகிறது என்பதுதான் யதார்த் தமானது. இங்கு விட்டுக் கொடுக்க வேண்டியவர்கள் ஒடுக்கும் தேசத்தவ ரேயன்றி, ஒடுக்கப்படும் தேசத்தவர் அல்லர் என்பது வெளிப்படையானது.

ஆகவே தேசியபிரச்சனையை வெறுமனே அரசியலற்ற விதத்திலும், பொதுப்புத்தி மட்டத்திலும் அணுகுவதன் மூலமாக அற்பத்தனமான தீர்வுகளை முன்வைப்பதை தவிர்க்க வேண்டும். தேசிய பாகுபாடானது 'தான் - பிறர்' என்ற பாகுபாட்டை அடிப்படையாகக் கொண்டதாகும். இப்படிப்பட்ட ஒரு பாகுபாடு இருப்பதும், அதனை அடிப்படையாக கொண்டு நாட்டின்

www.tamilarangam.net



பிரஜைகளுக்குள் ஏற்றத்தாழ்வு காட்டலாம் என்பதும் ஏற்றுக் கொள்ளப்பட்ட அரசியல் நெறியாக இருக்கும் போது, இந்த மேற்பூச்சுத் தீர்வெல்லாம் எந்த அடிப்படையான மாற்றங்களையும் கொண்டுவந்துவிட மாட்டாது. இலங்கையில் இருப்பது ஒரு தேசியப் பிரச்சனையாகும். அதாவது சிங்கள தேசமானது ஏனைய தேசங்களை ஒடுக்குவதே இதன் சாராம்சமாகும். இந்த ஒடுக்கு முறையை சாத்தியமற்றதாக்கும் ஒரு அரசியல் பொறிமுறை மூலமாக மாத்திரமே இதற்கு தீர்வுகாணப்பட முடியும். சிங்களதேசம் தானாக முன்வந்து தனது ஒடுக்குமுறையை கைவிட்டு, பல்தேச சமூகத்திற்கு பொருத்தமான அரசியல் வடிவங்கள் பற்றி, கூட்டாட்சி, அல்லது சமஸ்டி முறைமை போன்ற வற்றை நடைமுறைப்படுத்துவதனால் மாத்திரமே இந்த பிரச்சனைக்கு இணக்க மான தீர்வை காணலாம். இது முடியாது போகும் பட்சத்தில் ஒடுக்கப்பட்ட தேசங்கள் தமது சொந்த அரசை அமைப்பதற்கு உரிமையுடையவை. இதுவே சுயநிர்ணய உரிமை என்பதன் தார்ப்பரியமாகும். இதில் எதனைத் தேர்ந்தெ டுப்பது என்பது சிங்களதேசத்தின் கைகளிலேயே உள்ளது. இதனை விடுத்து ஒடுக்கப்பட்ட தேசங்களை குறை கூறுவது எந்தவித்திலும் பிரச்சனையை தீர்வுகாண உதவமாட்டாது.

நாம் இலங்கையிலுள்ள இடதுசாரிகளது நடவடிக்கைகள் குறித்தும், இவர்களிடம் காணப்படும் கோட்பாட்டு வறுமை, வறட்டுச் சூத்திரங்கள் போன்றவற்றை விமர்சிக்கும் போது, எம்மை ஒருவித மார்க்சிய விரோதிகள் போல சிலர் சித்தரிக்க முனைவதை நாம் அறிவோம். இந்த விடயமானது விரிவாக பேசப்பட வேண்டியதொன்று என்றே நாம் கருதுகிறோம். எமது அபிப்பிராயத்தில் மார்க்சியத்திற்கு உண்மையான சேதமானது, எதிரிகளினால் அல்ல: மாறாக மார்க்சியவாதிகள் என்று கூறிக்கொண்டு, சாராம்சத்தில் அதன் ஆன்மாவை சிதைப்பவர்களினாலேயே வருகிறது என்பதை நாம் உறு தியாக நம்புகிறோம். ஆதலால் மார்க்சியத்தை, அதன் ஆன்மாவாகிய அதன் இயங்கியலை மீட்டெடுப்பதற்காக நாம் உறுதியாக போராட வேண்டியிருக் கிறது. இங்கு நாம் இந்த குறுங்குழுவாதிகளை எதிர்த்து போராடுவது தவிர் க்க முடியாததாகிவிடுகிறது. அடுத்ததாக, கடந்த காலத்தில் நடந்து முடிந்த தவறுகளுக்கு வெறுமனே வலதுசாரி தமிழ்கட்சிகளையும், விடுதலைப்புலிகள் அமைப்பையும் மாத்திரம் குறை கூறுவதால் ஏனையவர்கள் அனைவர்களும் புனிதர்கள் ஆகிவிட முடியாது. தமிழ் மக்களது தேசிய விடுதலைப் போரா ட்டம், மற்றும் அதன் தலைமைகள் போன்ற அனைத்தும் ஏதோ வானத்தில் இருந்து திடீரென குதித்தவையல்ல. இந்த தேசிய இயக்கமானது அந்த காலத்தில் வாழ்ந்த எங்கள் ஒவ்வொருவரையும் கடந்துதான் சென்றது. அந்த இயக்கத்தில் நாம் ஏற்படுத்திய பாதிப்புக்கள், அல்லது ஏற்படுத்தாமல் விட்ட தாக்கங்கள் பற்றி அந்த காலகட்டத்தில் வாழ்ந்த ஒவ்வொரு தனிநபர்களும், குறிப்பாக கட்சிகளும் பதில் சொல்லித்தான் ஆக வேண்டியிருக்கிறது. இதில் தான் இடதுசாரிகட்சிகளது கடந்தகால அரசியல் பற்றி நாம் விரிவாக பேசியாக வேண்டியுள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எழுபதுகளின் ஆரம்பத்திலேயே சிங்கள, தமிழ் மக்களை ஒருங்கே பிரதி நிதித்துவப்படுத்தும் எந்தவொரு நிறுவனமும் இலங்கையில் இல்லாமற் போனது. இதற்கு இடதுசாரிகட்சிகளும் விதிவிலக்காக அமையவில்லை. சண்முகதாசன் தலைமையிலான கட்சியானது யதார்த்தத்தில் ஒரு தமிழ் இடதுசாரி கட்சியா கவே இருந்தது. அப்படியிருந்தும் இவர்கள் தாம் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு சமூகத்தில் தீவிரப்பட்டுப் போயிருந்த, இலங்கையின் புரட்சியில் தவிர்க்க முடியாதபடி பிணைந்துவிட்டிருந்த தேசியப்பிரச்சனை குறித்து மிகவும் பாராமு கமாகவே இருந்தனர். தேசியப்பிரச்சனை பற்றி போதிய தெளிவை இவர்கள் கொண்டிருக்கவில்லை. உழைக்கும் வர்க்கத்தை ஏய்ப்பதற்காக முதலாளித் துவ தலைமைகள் நடத்தும் ஏமாற்று இது என்பதாகவே இவர்களது வியாக் கீனங்கள் அமைந்திருந்தன. இதற்கும் மேலாக, **ஒரு தேசம் இன்னொரு தேச த்தை ஒடுக்குவதை இனம் கண்டு கொள்ள, அதில் ஒடுக்கப்பட்ட தேசத்தின் சார்பாக குரல் கொடுக்கத் தவறினார்கள்.** தமிழ் மக்கள் ஒரு தேசமாக இருப் பதை கூட புரிந்து கொள்ள இவர்களுக்கு ஸ்டாலினது வரையறை தடையாக இருந்தது. இதனால் தமிழ்மக்கள் ஒரு தேசமே கிடையாது என்று சாதித்தா ர்கள். அவ்வாறே, **ஒடுக்கும் தேசத்தின் தேசியவாதத்திற்கும், ஒடுக்கப்படும் தேசத்தின் தேசியவாதத்திற்கும் இடையில் எந்த வேறுபாடுகளையும் இவர்க ளால் காண முடியவில்லை.** இது வெறுமனே தமிழ் இடதுசாரிகட்சிகளுக்கு மாத்திரம் உரிய பிரச்சனையாக இருக்கவில்லை. மாறாக, மரபார்ந்த மார்க்சிய த்திலேயே இப்படிப்பட்ட இரண்டகநிலைக்கு இட்டுச் செல்லும் பல புள்ளிகள் இருக்கவே செய்தன. ஆனால், பிற்காலத்தில் வந்த மார்க்சியர்கள் பலர் இவற்றை தைரியமாக முகம் கொடுத்து தீர்வு கண்டே உள்ளார்கள். ஆனால் மார்க்சியம் என்பதை ஒரு மதம் போலக் கருதி, அதனை குறிப்பிட்ட சில முன்னோடிகளது படைப்புக்களுடன் குறுக்கிக் கொண்டு, அதனைப் பிரயோகி ப்பதே தமது கடமை என்ற பாணியில் மார்க்சியவாதிகள் அணுகத் தொடங் கும் போது, இந்த விதமான தேடல்களுக்கு, சுயமான கோட்பாட்டு செயற்பா ட்டிற்கான அத்தனை கதவுகளும் மூடப்பட்டுவிடுகின்றன. இதனை சற்று விரிவாக பார்ப்போம்.

மகத்தான சர்வதேசியவாதி என்ற வகையில் கார்ல் மார்க்ஸ் அவர்கள், தொழிலாளர் வர்க்கத்திற்கு என்றொரு நாடு கிடையாது! உலகத் தொழிலாளர் களே ஒன்றுபடுங்கள்!! போன்ற பிரபல்யமான கோசங்களை முன்வைத்த போதிலும், அவர் தேசிய ஒடுக்குமுறை பற்றி போதியளவு விழிப்புணர்வுட னேயே நடந்து கொண்டார். குறிப்பாக ஐரிஸ் மக்களது தேசிய ஒடுக்குமுறை தொடர்பாக மிகவும் தீர்க்கமான நிலைப்பாடுகளை முன்வைத்தார். இவரது கருத்துக்களில் **ஒடுக்கப்படும் தேசத்தின் சுயநிர்ணய உரிமைக்கும், பாட்டாளி வர்க்கத்தின் சர்வதேசியத்திற்கும் இடையிலான இயங்கியல் உறவானது** தெளி வாக வெளிப்பட்டது. இது தொடர்பாக அவர் முன்வைத்த பின்வரும் கருத்து க்கள் முக்கியத்துவம் வாய்ந்தனவாகும்:

**(1) ஒடுக்கப்பட்ட தேசத்தின் விடுதலை மாத்திரமே, தேசிய பிளவு மற்றும் பகைமைகளைக் கடந்து இரண்டு தேசங்களையும் சேர்ந்த பாட்டாளி**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**வர்க்கமானது தமது பொதுவான எதிரிக்கு எதிராக ஒன்றுபட்டு போராடுவதை சாத்தியப்படுத்தும்.**
**(2) இன்னொரு தேசத்தை ஒடுக்கும் ஒரு தேசமானது தனது அடிமைச் சங்கிலியை தானே உருவாக்கிக் கொள்கிறது.**
**(3) ஒடுக்கப்படும் தேசத்தின் விடுதலையானது, ஒடுக்கும் தேசத்தின் ஆதிக்க வர்க்கத்தின் அரசியல், பொருளாதார, இராணுவ, சித்தாந்த அடித்தளங்களை பலவீனப்படுத்துகிறது. இதனால் அந்த தேசத்தின் பாட்டாளிவர்க்க புரட்சியை தீவிரப்படுத்துகிறது.**

இரண்டாம் அகிலத்தில் தேசியப்பிரச்சனை என்பது மிகவும் முக்கியத்துவம் பெறலாயிற்று. இதற்கு பிரதான காரணமாக அமைந்தது அப்போது ஐரோப்பாவில் இருந்த மூன்று பேரரசுகளாகும். ரஸ்ய பேரரசு, ஒஸ்ரிய-ஹங்கேரி பேரரசு, துருக்கிய உதுமான் பேரரசு ஆகிய மூன்று பேரரசுகளின் கீழ் பல தேசங்கள் ஒடுக்கப்பட்டனவாக இருந்தன. இதனால் இந்த **தேசங்களது தேசிய இயக்கங்களுக்கும், பாட்டாளி வர்க்க புரட்சிக்கும் இடையிலான உறவு பற்றியதாக இந்த பிரச்சனை வெளிப்பட்டது**. இதன்போது மாபெரும் இயங்கியல்வாதியான லெனின், தேசங்களின் சுயநிர்ணய உரிமை என்ற கோட்பாட்டை முன் வைத்தார். அத்துடன் இந்த சுயநிர்ணய உரிமை என்பது பிரிந்து போவது தவிர வேறொன்றையும் குறிப்பதில்லை என்பதையும் வலியுறுத்திக் கூறினார். ரஸ்ய பேரரசின் கீழ் இருந்த போலந்தானது பொருளாதாரரீதியில் ரஸ்யாவுடன் மிகவும் நெருக்கமாக பிணைந்து இருந்ததனால் அதன் பிரிவினை சாத்தியப்படாது என்ற வகையில் வாதிட்ட ரோசா லக்சம்பர்க் அவர்களுக்கு எதிராக, **பொருளாதாரத்தைவிட அரசியலுக்கே முதன்மை கொடுக்க வேண்டும்** என்று வாதிட்டவர் லெனின்.

**ரஸ்ய பேரரசில் இருந்த ஒடுக்கும் தேசமான ரஸ்ய தேசத்தைச் சேர்ந்தவர்களான போல்சேவிக்குகள் பலமாக விளங்கி, பாட்டாளி வர்க்க புரட்சியை தீவிரமாக முன்னெடுத்துக் கொண்டிருந்த நிலையில், ஒடுக்கப்படும் தேசங்களது நம்பிக்கையை பெறும் விதத்தில்தான், "ஒடுக்கும் தேசத்தைச் சேர்ந்த புரட்சியாளர்கள் பிரிந்து போகும் உரிமைக்காக குரல் கொடுக்க வேண்டும் என்றும், ஒடுக்கப்பட்ட தேசத்தைச் சேர்ந்த புரட்சியாளர்கள் ஐக்கியத்திற்காக குரல் கொடுக்க வேண்டும்" என்றும் முன்மொழிந்தார். இந்த முன்மொழிவானது அப்போது ரஸ்யாவில் காணப்பட்ட மிகவும் குறிப்பான நிலைமைகளுடன் தொடர்புடையது. அதாவது ஒடுக்கும் தேசத்தைச் சேர்ந்த புரட்சியாளர்கள் ஒரு தீவிரமான பாட்டாளி வர்க்க புரட்சியை முன்னெடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்ற நிபந்தனையுடன் சம்பந்தப்பட்டது.** இதற்கு மாறாக யதார்த்த நிலைமைகள் இருக்கும் பட்சத்தில், அதாவது ஒடுக்கும் தேசத்தில் புரட்சியாளர்கள் பலமாக இல்லை, அல்லது அவர்களும் ஒடுக்குமுறைக்கு துணை போகிறவர்களாக மாறிவிட்ட நிலையில் இந்த கோசத்தை ஒப்புவிப்பது மிகவும் அபத்தமாக ஆகிவிடும். அதாவது ஒரு இனப்படுகொலை நடந்து கொண்டு இருக்கும் தருணத்தில், ஒடுக்கும் தேசத்தைச் சேர்ந்த புரட்சிகர சக்திகள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அரங்கத்தில் அறவே காணப்படாத நிலையில், பிரிந்து போவதற்கு ஆதரவாக குரல் கொடுப்பதற்கு எந்த சக்திகளுமே ஒடுக்கும் தேசத்தில் இல்லாதபோது, ஒடுக்கப்படுபவர்கள் மத்தியில் இருந்து ஐக்கியத்திற்காக குரல் கொடுப்பது என்பது ஒருவிதத்தில் இனப்படுகொலையை சகித்துக் கொள்வது, அதற்கு துணைபோவது என்றே அர்த்தப்படும்.

இதிலும் மிகவும் அபத்தமானது என்னவென்றால், சுயநிர்ணய உரிமையை அங்கீகரிக்கிறோம்: ஆனால் பிரிந்து போவதை எதிர்க்கிறோம்: என்று சிங்கள இடதுசாரிகள் மத்தியில் இருந்து எழும் குரல்தான். சுயநிர்ணய உரிமை என்பது பிரிந்து போவதற்கான உரிமை என்றான பின்பு, அந்த உரிமைக்கு முன்னிபந்தனையிடும் உரிமை யாருக்கும் - குறிப்பாக ஒடுக்கும் தேசத்தைச் சேர்ந்தவர்களுக்கு - அறவே கிடையாது. இதில் மாற்றுக் கருத்திற்கு இடமிருக்க முடியாது. இப்போது பிரச்சனையெல்லாம் இந்த உரிமையை ஒடுக்கப்பட்ட தேசம் எவ்வாறு பயன்படுத்தப் போகிறது என்பதுதான். இதனை கண்டறிவதில் எந்த சிரமமும் இருக்க முடியாது. அதாவது, ஒடுக்கப்பட்ட மக்கள் மத்தியில் நடத்தப்படும் சர்வஜன வாக்கெடுப்புக்கள் இதனை அப்படியே, வெளிப்படையாக அனைவரும் தெரிந்து கொள்ளும் வண்ணம் காட்டிவிடும். இதனை விடுத்து, சுயநிர்ணய உரிமை என்பதற்கு வியாக்கீனங்கள் செய்வதும், ஒடுக்கப்பட்ட தேசத்தின் நலன்களுக்காக பேசுவதாக பாசாங்கு செய்வதும் அர்த்தமற்ற செயற்பாடுகளாகும். இதனை செய்பவர்கள் தேசிய ஒடுக்குமுறைக்கு துணை போகும் செயலைத்தான் செய்து கொண்டிருக்கிறார்கள்.

இந்த பிரச்சனையில் அடிக்கடி பயன்படுத்தப்படும் விவாகரத்து பற்றி உதாரணத்தை எடுத்துக் கொள்வோம். விவாகரத்திற்கான உரிமை கணவர் - மனைவி ஆகிய இருவருக்கும் இருக்கிறதா, இல்லையா? என்பதே இங்குள்ள பிரச்சனை. அப்படிப்பட்ட உரிமை இருக்குமாயின் அதனை பயன்படுத்திக் கொள்வதா இல்லையா? என்பது இந்த திருமண உறவினால் பாதிக்கப்பட்டதாக உணர்பவரின் உரிமை. இதனை விடுத்து பெண் பிரிந்து சென்று எவ்வாறு கஸ்டப்படுவார், குழந்தைகளின் எதிர்காலம் என்னாகும் போன்ற பிரச்சனைகளை எழுப்பி இந்த உரிமையை கணவன் மறுக்க முடியாது. அத்தனை அக்கறை கணவனுக்கு இருக்குமாயின் நிலைமைகள் விவாகரத்து கோரும் அளவிற்கு செல்லாமல் பார்த்துக் கொள்வது கணவரது கடமையாகும். ஆனால் அதனையும் மீறி, நிலைமைகள் விவாகரத்து பெறுமளவிற்கு வந்துவிட்ட பின்பு, மேலே கூறப்பட்ட காரணங்களைக் கூறி பெண்ணின் விவாகரத்து உரிமையை பயன்படுத்த முடியாமல் தடுப்பது என்பது, விவாகரத்து உரிமையை பெண்ணுக்கு மறுப்பதற்கு சமமானது. இந்த உறவில் சம்பந்தப்பட்ட கணவர், மனைவி ஆகிய இருவருமே வளர்ந்தவர்கள். அவர்களுக்கு திருமண உறவின் சாதக - பாதகங்கள் மற்றும் விவாகரத்து பெற்ற பின்பு முகம் கொடுக்க நேரும் நிலைமைகள் பற்றி சிந்தித்துப் பார்க்க முடியும். இதனால் **எப்போது சேர்ந்து வாழ்வது என்பது சகிக்கவொண்ணாமல் போகிறதோ,** அப்போதுதான் இவர்கள் விவாகரத்து என்ற முடிவை நோக்கி தள்ளப்படுகிறார்கள். இதற்கு மாறாக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அந்த பெண்ணின், குழந்தைகளின் எதிர்காலம் மற்றும் பாதுகாப்பு என்பதன் பேரில் அவரது விவாகரத்திற்காக உரிமையை மறுக்க முனைவதானது, அந்த பெண்ணை ஒரு சிறுமிபோல நடத்தவதற்கு சமனாகும் (patronizing).

தேசங்களுக்கு இடையிலான உறவைப் பொறுத்தவரையிலும் நிலைமைகள் இப்படிப்பட்டவையே! தேசங்கள் இணைந்து வாழ விரும்பும் எவரும் தேசங் களுக்கிடையில் சமத்துவத்தை வலியுறுத்துபவராகவும், தேசிய ஒடுக்குமுறை க்கு எதிராக விடாப்பிடியுடன் போராடுபவராகவும் இருக்க வேண்டும். ஒடுக்க ப்பட்ட தேசமும் கூட எடுத்த எடுப்பிலேயே பிரிந்து செல்வதற்கான முடிவை எடுப்பதில்லை. எப்போது சேர்ந்து வாழ்வது சகிக்கவொண்ணாததாக ஆகி விடுகிறதோ, அதற்கு மேலேயே ஒடுக்கப்பட்ட தேசமானது சுயநிர்ணய உரி மையை பயன்படுத்திக் கொள்ள முடிவு செய்கிறது. இதற்குமேல் இந்த உரிமையை பயன்படுத்திக் கொள்வதை தடுப்பது என்பது தேசிய ஒடுக்கு முறைக்கு துணைபோவதேயன்றி வேறாகாது. ஒரு தேசத்தை சிறுவர்கள் போல நடத்த முற்படும் பாசாங்குத்தனமான நடவடிக்கை இது.

இங்கு நாம் **ஒடுக்கும் தேசத்தின் தேசியவாதத்திற்கும், ஒடுக்கப்படும் தேசங்களின் தேசியவாதத்திற்கும் இடையிலான குறிப்பான வேறுபாடுகள் குறித்தும்** பேசியாக வேண்டியுள்ளது. ஒடுக்கும் தேசமானது தனது வசமுள்ள வளங்கள் அனைத்தையும் பயன்படுத்தி தன்னை அந்த சமூகத்தின் பிரதான நீரோட்டமாக (main stream) ஆக்கிக் கொள்கிறது. இதற்குமேல் அது பொதுவான அக்கறையில் பேசுவதாக கூறப்படும் பல்வேறு விடயங்களும் சாராம்சத்தில் ஒடுக்கும் தேசத்தின் நலன்களைக் குறிப்பதாகவே அர்த்த ப்படும். இதற்கு மேலும் தன்னை குறிப்பாக அடையாளம் காட்டிக் கொள்ள வேண்டிய அவசியம் அற்றதாக ஆகிவிட்டுள்ளது. உதாரணமாக, இலங்கை யில் அபிவிருத்தி, நிர்வாகம், மொழி போன்ற அனைத்துமே சிங்களதேசத்தை மையமாக கொண்டு கட்டமைக்கப்பட்டுள்ள நிலையில் சிங்களவர்கள் எவருமே முனைப்பாக தனது தேசிய அடையாளத்தை கொண்டுதான் இவற்றை பெற் றுக் கொள்ள வேண்டும் என்ற அவசியம் கிடையாது. ஆனால் இந்த பிரதான போக்கினால் முற்றாகவே புறக்கணிக்கப்பட்ட தமிழ் மக்களைப் பொறுத்த வரையில், அவர்கள் சிங்களவர்களுக்கு மிகவும் இயல்பானவையாகிவிட்ட உரி மைகளைப் பெறுவதற்காகவே ஒரு பெருத்த சண்டை போட்டாக வேண்டியு ள்ளது. அது தமிழ்தேசியவாதத்தின் வடிவத்தைப் பெறுகிறது. இதுதான் ஒடுக் கும் தேசத்தின் தேசியவாதத்திற்கும், ஒடுக்கப்படும் தேசத்தின் தேசியவாத த்திற்கும் இடையிலான வேறுபாடாகும். அதாவது **ஒடுக்கும் தேசத்தைப் பொறுத்தவரையில் இயல்பாகவே அவற்றிற்கு உரியவை கிடைக்கும் வகையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. இதற்கு மேலும் அது தன் அடையாளத்தை முனைப்பாக காட்ட முனைந்தால் அதன் நோக்கம் ஒடுக்குவதேயன்றி வேற ல்ல. மாறாக, ஒடுக்கப்படும் தேசமானது தனது ஒவ்வொரு உரிமையையும் போராடித்தான் பெற்றாக வேண்டியுள்ளது. இதனால் தேசியவாதமானது இதற்கு மிகவும் அத்தியாவசியமானது. அது இல்லாமல் ஒரு தேசம் என்ற**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**வகையில் அது தப்பிப்பிழைப்பதே சாத்தியமற்றது. ஒடுக்கும் - ஒடுக்கப்படும் தேசங்களது தேசியவாதங்களுக்கு இடையிலான இந்த வேறுபாடானது சரிவர புரிந்து கொள்ளப்படாத போது நாம் பல தவறுகளை இழைக்க நேர்கிறது.** இந்த வேறுபாடானது தனியே ஒடுக்கப்பட்ட தேசங்களுக்கு மாத்திரம் உரிய பிரச்சனை என்பதல்ல. மாறாக, எல்லா ஒடுக்கப்பட்ட பிரிவினரும் - பெண்கள், தலித்துக்கள், கறுப்பினத்தவர் போன்ற வெவ்வேறு ஒடுக்கப்பட்ட சமூகப்பிரி வினரும் கூட - இவ்வாறாக தமது அடையாளங்களை அழுத்தம் கொடுப்பதும், அவற்றின் அடிப்படையில் போராட்டங்களை முன்னெடுப்பதும் தவிர்க்க முடியாததாகிறது. இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில் ஒடுக்கப்பட்டவர்களைப் பார் த்து அவர்களது அடையாளங்களுக்கு அழுத்தம் கொடுப்பதை மறுப்பது, அவற்றின் அடிப்படையில் தமது போராட்டங்களை முன்னெடுப்பதை மறுப்பது என்பது, ஒடுக்குமுறைக்கு துணைபோவதாகவே அர்த்தப்படும்.

கடந்த காலத்தில் சிங்கள இடதுசாரிகள் தேசிய ஒடுக்கு முறைக்கு துணை போனதுடன், தமிழ் மக்களையே குறுந்தேசியவாதிகள் என்று குற்றஞ்சாட்டி வந்துள்ளனர். இதனால் தமிழ் முற்போக்கு சக்திகளிடையே “தாம் தேசிய வாதிகள் அல்லர்” என்று சிங்கள முற்போக்கு சக்திகளுக்கு நிரூபிப்பதிலேயே தமது சக்திகளின் பெரும்பான்மையை செலவிட்டாக வேண்டியிருந்தது. இதனால் தமது சமூகத்தில் நடைபெறும் சாதாரண உரிமை பற்றிய பிரச்சனைகளில் கூட திட்டவட்டமான நிலைப்பாடுகளை எடுத்து அதற்கு எதி ராக போராடும் திராணியற்றவர்களாக தமிழ் இடதுசாரிகள் ஆக்கப்பட்டிரு ந்தார்கள். இதனால் ஒரு இனமானது தமது கண்களுக்கு முன்னாலேயே ஒரு தேசமாக உருப்பெற்று எழுந்து தனது விடுதலைக்கா போராட முன்வந்த போதும் கூட வெறுமனே பார்வையாளர்களாக மாத்திரம் நடந்து கொண்டா ர்கள். இதனால் ஏற்கனவே போதியளவு அரசியல் தெளிவும், அமைப்புப்பல மும், ஆயுதபோராட்டம் பற்றிய சிந்தனையும் கொண்ட இந்த கட்சியின் கண்களுக்கு முன்னாலேயே ஒரு போராட்டமானது உருவாகி பலம் பெற்று தன்னியல்பாக முன்னேறிக் கொண்டிருந்தது: இதனால் பல்வேறு ஆதிக்க சித்தாந்தங்களின் பிடிகளுக்குள் சிக்கி தவறான வழியில் போய்க் கொண் டிருந்தது. இந்த போக்கில் அரசியல்ரீதியாக தலையீடு செய்யும் திராணியற்ற இந்த இடதுசாரிகள், அந்த இயக்கம் போகவிட்டு, பின்னால் சென்று வெறு மனே விமர்சனங்கள் மாத்திரம் செய்பவர்களாக ஆகிவிட்டிருந்தார்கள். இங்கு மார்க்சின் ஒரு கூற்று நினைவிற்கு வருவது தவிர்க்க முடியாததாகிறது. **“இதுவரை காலமும் வாழ்ந்த தத்துவஞானிகள் உலகை பலவாறும் விமர்சித் தார்கள். எமது பிரச்சனை என்னவோ அதனை எவ்வாறு மாற்றியமைப்பது என்பதுதான்”. அரசியல்ரீதியாக தலையீடு செய்யும் ஆற்றலை இழந்துவிட்டால் அதற்குமேல் அந்த கட்சியானது செத்துப் போன கட்சிதான். அதுதான் இறுதியில் நடந்து முடிந்தது.**

இப்போதும் கூட, **இத்தனை இனப்படுகொலைகளுக்கும் பின்னரும் கூட, சிலர் மீண்டும் இந்த சுயநிர்ணய உரிமை பற்றிய விடயத்தில் வார்த்தைஜாலம்**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**காட்ட முனைகிறார்கள்.** அவர்கள் சுயநிர்ணய உரிமையை அங்கிகரிப்பார்கள ளாம், ஆனால் பிரிந்து செல்லக் கூடாதாம். இதற்கு இவர்கள் முன்வைக்கும் காரணம், இந்த பிரிவினை போராட்டங்கள் இந்திய மேலாதிக்கத்திற்கும், ஏகாதிபத்திய தலையீட்டுக்கும்தான் வழிவகுக்குமாம். சரி, இவர்களது வாதம் உண்மையென்றே வைத்துக் கொள்வோம். அப்படியானால் இதே சாத்தியப் பாடு இவர்கள் முன்வைக்கும் வர்க்க போராட்டத்திற்கும் இருக்கச் செய்கிறது தானே? 1971 இல் சிறீலங்கா அரசிற்கு "உதவ" இந்திய அரசும், சீன அரசும் முன்வந்தனவே? அப்படியானால் இவர்கள் வர்க்கப்புரட்சியும் செய்ய மாட்டார் களா என்ன? அந்நியத் தலையீடு என்பது எல்லா போராட்டங்களிலும் இருக் கக் கூடிய ஒரு பிரச்சனைதான். அதனை இலகுவில் யாரும் புறக்கணித்துவிடக் கூடாது என்பது உண்மைதான். ஆனால் அதற்காக ஒரு நியாயமான போரா ட்டத்தை கைவிடுவதல்ல. மாறாக, இந்த தலையீடுகளை முகம் கொடுக்கக் கூடிய விதத்தில் எமது வியூகங்களை உருவாக்குவது எப்படி என்பதே எமது கவனமாக இருக்க வேண்டும். கடந்த காலத்தில் வெற்றி பெற்ற வர்க்க போராட்டங்களும் கூட இப்படிப்பட்ட தலையீடுகளை வெற்றிகரமாக முகம் கொடுப்பதன் மூலமாகவே தமது இலக்குகளை அடைந்தன. இது தமிழ்மக்க ளது விடுதலைப் போராட்டத்தை தட்டிக்கழிப்பதற்கு முன்வைக்கும் இன்னொரு காரணமாகவே கருதப்பட வேண்டியுள்ளது.

**இனப்படுகொலையை முகம்கொடுக்கும் ஒரு தேசத்தால் பயன்படுத்திக் கொள்ள முடியாவிட்டால், அதற்கு மேல் இந்த சுயநிர்ணய உரிமை என்ற கோட்பாடு எதற்காக.** இதனை வெறுமனே ஒரு சட்டகத்தில் அடைத்து சுவரில் தொங்கவிடுவதற்கே பயன்பட முடியும். அப்படி செய்வதற்கு பெயர்தான் வறட்டுச்சூத்திரமாக்குவது என்பதாகும். இப்படியாக **மார்க்சியத்தின் மிகவும் வளமான கோட்பாடுகளை, நடைமுறைக்கு பயன்படாதவாறு சிதைத்துவிடு வதே வறட்டுச் சூத்திரமாக்கல் என்பதால் குறிப்பிடப்படுவதாகும்.** இப்படியான பல பிரச்சனைகள் இன்றுள்ள மரபார்ந்த மார்க்சியவாதிகளிடமும், அவர்களது கட்சிகளிடமும் நாம் காணமுடியும். இப்படிப்பட்ட, மக்களது செயலுக்கான பாதைகளை அடைத்துவிடும் இந்த வறட்டுச்சூத்திரங்களுடன் கணக்குத் தீர்க்காமல் நாம் மேற்கொண்டு எமது புரட்சிகர, ஜனநாயக கடமைகளை ஆற்றிவிட முடியாது.

"தேசியம் என்பது எப்போதும் முதலாளித்துவ நலன்களையே பிரதிநிதித்து வப்படுத்துகிறது" என்பது இவர்களது இன்னொரு புனைவாக அமைகிறது. இந்த வாதத்தை முன்வைப்பவர்கள் எவருக்குமே போல்சேவிக் புரட்சிக்கு பிந்திய புரட்சிகள் ஒவ்வொன்றுமே ஏதோ ஒருவிதத்தில் தேசியவாதத்துடன் தொடர்புபட்டதாகவே நடந்து முடிந்தன என்ற உண்மையை அறியவில்லையோ என்னவோ! இரண்டாம் உலகயுத்தத்தில் நாசி படைகளினால் ஆக்கிரமிக்க ப்பட்ட சோவியத்யூனியன், தன்னை விடுவித்துக் கொள்ள நடத்திய போராட்ட த்தின் போது ஸ்டாலின் "பாட்டாளி வர்க்க சர்வதேசியம்" பற்றிய கோசங்களை முன்வைக்கவில்லை. மாறாக, ரஸ்ய தேசத்தின் பெருமிதம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பற்றித்தான் பேசினார். மாபெரும் ரஸ்ய தேசபக்த யுத்தமாகவே இதனை ஸ்டாலின் வர்ணித்தார். அத்தோடு பயிற்சி பெற்று போர்முனைக்குச் செல்லும் புதிய வீரர்களை வாழ்த்தி வழியனுப்பும் நிகழ்வுகளில் கலந்து கொண்டு, ரஸ்யாவின் முன்னோர்கள் பற்றிய சாதனைகள் எல்லாவற்றையும் நினைவு கூர்ந்து பேசினார். மகா பீற்றர் (ஜார் மன்னன்) மற்றும் இவான் போன்ற கொடு ங்கோன்மையாளர்களையும் விழித்து ரஸ்ய மக்களது தேசிய உணர்வை தட்டியெழுப்பியே இந்த போராட்டத்தை நடத்தினார்.

இதற்கு பின்பு நடந்த பல்வேறு புரட்சிகளும் ஏதோ ஒரு விதத்தில் ஏகாதிபத்திய எதிர்ப்பு என்ற அம்சத்துடன் தொடர்புடையாதாக இருந்தது. இது தவிர்க்கப்பட முடியாதவகையில் தேசியவாதத்தின் துணையுடனேயே இந்த புரட்சிகர போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டது தவிர்க்கப்பட முடியாததா கிறது. சீனப்புரட்சியானது ஜப்பானிய எதிர்ப்பு தேசபக்த யுத்தத்தினூடாக முன்னெடுக்கப்பட்டது. அவ்வாறே வியட்நாம் போராட்டமும், கியூபப் புரட்சியும் இவ்வாறே தேசியவாதத்தின் துணையுடனேயே முன்னெடுக்கப்பட்டன. இவற் றைவிட பல்வேறு நாடுகளும் தமது கொலனித்துவ ஆதிக்கத்திலிருந்து விடு வித்துக் கொள்வதில் இந்த தேசியவாதமானது மிகவும் முக்கியமான முற் போக்கான பாத்திரத்தை வகித்தது. வரலாற்று விபரங்கள் இப்படிப்பட்டதாக இருக்கத்தக்கதாக, அனைத்து தேசியவாதங்களும் முதலாளித்துவதன்மை கொண்டவை என்ற நிலைப்பாடு இன்று மார்க்சிய உலகில் பரவலாக அங்கி கரிக்கப்படாத, ஒருவித குறுங்குழுவாத நிலைப்பாடே அன்றி வேறல்ல.

இங்கே நாம் ஒரு திட்டவட்டமான கேள்விக்கு பதில் கூறியாக வேண்டி யுள்ளது. அதாவது, ஒரு தேசமானது மோசமான இனப்படுகொலையை முகம் கொடுக்கிறது: மக்கள் தன்னியல்பாக அதன் விடுதலைக்காக போராட முற் பட்டு கணிசமான தோல்விகளை அடைந்துள்ளார்கள். ஒடுக்கும் தேசத்தின் சார்பில் முற்போக்குசக்திகள் என்றவகையில் பலமான, தாக்கம் நிகழ்த்தக் கூடிய சக்திகள் அரங்கில் இல்லை. அப்படியிருக்கும் சிறிய அரைகுறையான கூறுகளும் கூட, ஒடுக்கப்பட்ட தேசத்தின் பிரிந்துபோகும் உரிமைக்காக குரல் கொடுக்கும் நேர்மையான புரட்சியாளர்களாக இல்லை. இப்படிப்பட்ட நிலை யில் நாம், **இல்லாத அந்த "நல்ல சக்திக்கா" காத்துக் கொண்டிருந்து வாழா திருப்பதா? அல்லது, குறிப்பிட்ட சமூகத்தின் முன்னணிப்பிரிவினர் என்றவகை யில் அனைத்து முற்போக்கு, ஜனநாயக, புரட்சிகர சக்திகளுடன் இணைந்து இந்த போராட்டத்திற்கு தலைமை கொடுக்கப் போகிறோமா?** முன்னேறிய பிரிவினராகிய நாம், தமிழ் தேசியஇயக்கத்தை தீவிரப்படுத்தாமல் விட்டுவிட்டா லேயே நிலைமைகள் சுமூகமாக ஆகிவிடும் என்றவகையில் பலர் கருத்து க்களை முன்வைக்கத் தலைப்படுகின்றனர். உண்மைதான், மரங்கள் ஓய்வை நாடத்தான் செய்கின்றன: ஆனால் காற்றுத்தான் அதனை அனுமதிப்பதாக இல்லை. அதாவது இங்கு தமிழ்தேசத்தைச் சேர்ந்த முன்னேறிய பிரிவினர்க ளது முன்முயற்சிகள் அல்ல பிரச்சனைக்கு காரணம். இந்த பிரச்சனைகள் சிங்களதேசமானது, தமிழ்தேசத்தை ஒடுக்குவதிலேயே அதன் வேரைக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கொண்டுள்ளது. இந்த மூலகாரணம் அப்படியே இருக்கும் வரையில் யார் விரும்பினால் என்ன, விரும்பாவிட்டால் என்ன, இன்னமும் ஒரு குறுகிய காலத்தினுள் இந்த அடக்குமுறைகள், அவற்றின் எதிர்விளைவாக தமிழ் இளைய தலைமுறையினர் மத்தியில் இருந்து புதிய எதிர்ப்பியங்கங்களைத் தோற்றுவிக்கவே செய்யும். இப்போது எம்முன் இருக்கும் கேள்வி என்னவென்றால், இந்த தடவையாவது முன்னேறியபிரிவினர் என்ற வகையில் நாம் அந்த போராட்டங்களில் எம்மை இணைத்துக் கொள்வதன் மூலமாக, எமது கடந்த கால அநுபவங்கள், படிப்பினைகள் மற்றும் எம்மிடம் உள்ள கோட்பாட்டு, அரசியல், அமைப்புத்துறை சார்ந்து வளங்களை அவர்களுடன் பகிர்ந்து கொள்வதன் மூலமாக, இந்த இயக்கத்தை இன்னும் சிறப்பான முறையில் செயற்படுமாறு வழிநடத்தப் போகிறோமா? இல்லை, இந்த தடவையும் வேறு சாக்குபோக்குகளைக் கூறி எமது பாத்திரத்தைத் தட்டிக் கழித்து மீண்டும் இந்த போராட்டமானது தன்னியல்பாக முன்னெடுக்கப்படவும், அது இன்னமும் பெரிய அழிவுகளையும் எமது தேசத்தின் மீது கொண்டுவருவதற்கு நாமே மறைமுக காரணமாக இருக்கப் போகிறோமா?

**அடித்தளம் - மேற்கட்டுமானம்** தொடர்பாக மரபார்ந்த இடதுசாரிகள் கொண்டுள்ள மிகவும் எளிமைப்படுத்திய பிரதிபலிப்புக் கோட்பாடானது, இலங்கையின் சிங்களதேசியவாதத்தின் பாத்திரத்தை புரிந்து கொள்வதில் கணிசமான பிரச்சனைகளை ஏற்படுத்துகிறது. இவர்களைப் பொறுத்தவரையில் பொருளாதாரமே அடித்தளம்: இந்த அடித்தளத்தின் மேல் கட்டுப்பட்டுள்ள மேற்கட்டுமானமாகிய அரசியல், சமயம், நீதி, சித்தாந்தம் ஆகியவை இந்த பொருளாதாரத்தை வெறுமனே பிரதிபலிப்பதால் இவை இரண்டாம் பட்சமானவை. ஆகவே பொருளாதார தளத்தில் எழும் வர்க்க முரண்பாடுகள் மிகவும் அடிப்படையானவையாக இருப்பதால், குறிப்பிட்ட காலம் சிங்கள, தமிழ் தேசியவாதிகளின் முயற்சிகளினால் வர்க்க போராட்டமானது திசை திருப்பப்பட்டாலும் கூட, மோசமடையும் பொருளாதார நிலைமைகள் மீண்டும் இந்த உழைக்கும் வர்க்கங்களை வீறு கொண்டு எழச் செய்யும். சிங்கள, தமிழ் பாட்டாளிவர்க்கமானது பொதுவான நலன்களைக் கொண்டவை என்றவகையில் இணைந்து போராடி இந்த முதலாளித்துவ அமைப்பை முடிவுக்கு கொண்டுவரும். இதனால் பிரதிபலிப்புகளில் அதிக கவனம் செலுத்தாமல், அடித்தளமான பொருளாதாரம், மற்றும் அதிலிருந்து பிறக்கும் வர்க்கப்போராட்டம் என்பவற்றிலேயே அக்கறை செலுத்த வேண்டும். இந்த காலகட்டத்தில் தமிழ்தேசியவிடுதலைப் போராட்டம் பற்றி வலியுறுத்துவது என்பது மீண்டும் தொழிலாளர் வர்க்கத்தை பிளவுபடுத்தும் வேலையைச் செய்வதால் இது முதலாளிவர்க்கத்திற்கே சேவை செய்யும் செயற்பாடாக புரிந்து கொள்ளப்பட வேண்டும். ஆதலால் நாம் “பிரிவினை” போராட்டங்களை முற்றாக நிராகரித்து, ஐக்கியப்பட்ட போராட்டத்திற்காக உழைக்க வேண்டும். இதுவே இந்த மரபார்ந்த இடதுசாரி அமைப்புகளது நிலைப்பாடாகவுள்ளது. இங்கு இவர்களது முடிவுகளில் ஒரு தர்க்கபூர்வமான தொடர்ச்சி இருப்பது உண்மையே ஆனால் இவர்களது பிரச்சனை எங்கு தோன்றுகிறது என்றால் இந்த ‘பிரதிபலிப்பு’ கோட்பாட்டில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தான். இது பற்றி விரிவாக பார்ப்போம்.

மார்க்சியமானது சில அடிப்படையான உண்மைகளை விளக்கும் போது சில **உருவகங்களையும், உவமைகளையும் எடுத்தாள்கிறது. இந்த உருவகங்களும், உவமைகளும் இந்த யதார்த்தங்களை ஒரு குறிப்பிட்ட சில அம்சங்களில் மாத்திரம் ஒத்தவை. இந்த குறிப்பிட்ட எல்லைக்குள் குறிப்பிட்டதொரு நிகழ்வை விளக்குவதற்கு இந்த உருவகங்களையும், உவமைகளையும் எடுத்தாள்வதானது எமது நோக்கத்திற்கு மிகவும் உதவிகரமாக இருக்கும். ஆனால் இந்த செல்லுபடியாகத்தக்க எல்லைகளுக்கு அப்பாலும் இவை நீட்டப்படும் நிலையில் அவை எதிர்மறையாக பாத்திரத்தை ஆற்றத் தொடங்கிவிடும்.** நாம் மேலே குறிப்பிட்ட அடித்தளம் - மேற்கட்டுமானம், மற்றும் பிரதிபலிப்பு போன்ற சொற்றொடர்கள் யாவும் இங்கு உருவகமாக பயன்படுத்தப்படுகின்றனவே அன்றி முற்றுமுழுதான உண்மைகளாக அல்ல. ஆனால் இவற்றை மிகவும் இறுக்கமாக, முற்றுமுழுதான உண்மைகள் போல கைக்கொள்ள முயலும் போது அவை நன்மையை விட தீமையையே ஏற்படுத்துகிறது. இங்குதான் அல்துாசரது கருத்துக்கள் சில முக்கியமான வெளிச்சங்களை தரக்கூடியதாக அமைகின்றன. அவரது கருத்துப்படி, பொருளாதாரம், அரசியல், கலை-இலக்கியம், மதம், சித்தாந்தம் போன்ற கட்டமைப்புக்கள் யாவும் வெறுமனே பொருளாதாரத்தின் பிரதிபலிப்புக்கள் அல்ல. மாறாக, அவை சுயமான, தனித்துவமான பண்புகளையும், தமக்கே உரிய இயங்குவிதிகளையும் - பொருளாதாரத்தின் விதிகளாக குறுக்கப்பட முடியாத தனித்துவமான இயங்குவிதிகளையும் - கொண்ட தனியான அம்சங்களாகும். இவை தம்மளவில் சார்பளவில் சுயாதீனத்தன்மை உடையவை. **பொருளாதாரம் நிர்ணயமான காரணியாக அமைவது உண்மையே: ஆனால் சில குறிப்பான சூழ்நிலைமைகளின் கீழ் ஏனைய ஏதாவது ஒரு கட்டமைப்பானது பொருளாதாரத்தை மேல்நிர்ணயம் செய்யக் கூடியதாக இருக்கும்.** இவ்வாறாக எந்த கட்டமைப்பானது மேல்நிர்ணயம் செய்வது என்பதையும் கூட பொருளாதாரமே நிர்ணயிக்கிறது.

இப்போது நாம் எமது சிங்கள தேசியவாதம் பற்றிய கட்டுரைக்கு வருவோம். கொலனித்துவ காலத்தில் மிசனரிமார் மேற்கொண்ட மதத்தைப்பரப்பும் குறிப்பான செயற்பாடுகளின் எதிர்வினையாகவே சிங்கள தேசியவாதமானது ஆரம்பத்தில் கருக்கொண்டது. ஆனால் அதன் வளர்ச்சியின் ஒரு கட்டத்தில், சிங்கள தேசியவாதத்தால் ஈர்க்கப்பட்டவர்கள் முகம் கொடுத்த குறிப்பான காரணங்களினால் - வர்த்தகம் மற்றும் நிபுணத்துவ பணிகள், அரச வேலைவாய்ப்புக்கள் என்பவற்றில் தமிழர்களுடனான போட்டி - சிங்களதேசியவாதமானது இலங்கையின் கொலனித்துவ எஜமானர்களுக்கு எதிராக செயற்படாமல், தமது நாட்டில் பல நூற்றாண்டாக வாழ்ந்துவந்த தமிழ் மக்கள் மீது திசை திரும்பியது. இதன் அடுத்த கட்டத்தில் சிங்களதேசியவாதமானது மேல்நிர்ணயம் செய்யும் அமைப்பாக மாறியபின்பு, அதுவே இந்த நாட்டின் அரசியல், பொருளாதார, கலை-இலக்கிய மற்றும் சித்தாந்த மட்டங்களை மேல்நிர்ணயம் செய்வதாக ஆகிவிட்டது. 1920 களில் இருந்து சிங்களதேசியவாதமே, அதுவும் தமிழ்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மக்களுக்கு எதிரான அதன் தாக்குதலே இலங்கையின் அரசியல், பொருளா தார, இராணுவ மற்றும் ஏனைய அம்சங்களையும் நிர்ணயிப்பதாக அமைந்து வந்துள்ளது. இதுவே தமிழ் மக்கள் மீதான தேசிய ஒடுக்கு முறையின் மூல காரணமாகும். இவ்வாறாக **சிங்கள தேசியவாதமானது மேல் நிர்ணயம் செய்யும் நிலைமையில் அடிப்படையான மாற்றம் ஏற்படாதவரையில், யார் விரும் பினாலும் இல்லாவிட்டாலும், சிங்கள தேசியவாதமே இலங்கையின் அரசியல், பொருளாதார, இராணுவ கட்டமைப்புகளை நிர்ணயிப்பதாக அமைந்திருக்கி றது. இதனால் எந்தவொரு அரசியல் தலைவரும் இந்த ஆதிக்க கட்டமைப்பை மீறி அரசியல் தீர்வுகளை முன்வைக்க தயாராக மாட்டார். அப்படி வைத்தாக வேண்டும் என்று அக மற்றும் புற காரணிகளின் நிர்ப்பந்தத்தினால் நிர்ப்ப ந்திக்கப்பட்டாலும் கூட, அடுத்த கணமே சிங்கள தேசிய வாதத்தின் எழுச்சிக்கு முகம்கொடுக்க முடியாதவராக அவற்றில் இருந்து பின்வாங்கி விடுவர்.** கடந்த காலத்தில் தமிழ் தலைமைகள் சிங்கள அரசியல் தலைமை களுடன் செய்து கொண்ட ஒப்பந்தங்கள் கிழித்தெறியப்பட்டதற்கும், இந்திய - இலங்கை ஒப்பந்தம் கூட குறிப்பிட்டத்தக்க பலன்களைக் கூட வழங்க முடியா மல் போனதிலும் இந்த சிங்கள தேசியவாதத்தின் மேல் நிர்ணய மாத்திரம் முக்கியமானது.

இப்போது யுத்தம் முடிந்து ஒரு வருடத்தின் பின்பும், ஒட்டுமொத்தமான சர்வ தேச அபிப்பிராயங்களையும் மீறி ஒரு குறைந்தபட்ச தீர்வு முன்மொழிவுக ளையும் சிங்கள அரசியல்வாதிகள் யாருமே முன்வைக்கத் தயாராக இல்லை யானால் அதன் சூட்சுமம் சிங்களதேசியவாதத்தின் மேல்நிர்ணய பாத்திரத்தில் தான் அடங்கியுள்ளது. இது மாறவே மாட்டாது என்பதல்ல. ஒரு நீண்டகால அனுபவம், சிங்கள முன்னேறியபிரிவினரின் விடாப்பிடியான செயற்பாடுகள் போன்றவை குறிப்பிட்ட சில சந்தர்ப்பங்களில் இதில் மாற்றங்களை ஏற்படுத் தவும் கூடும், சில வேளைகளில் அது முடியாமலும் போகலாம். அப்படிப்பட்ட நிலைமைகளில் தமிழ்தேசம் பிரிந்து போவதன் மூலமாக சிங்கள தேசியவாதம் செயற்படுவதற்கான செயற்தளத்தை இல்லாமற் செய்வதானது சிங்களதேச த்தின் ஒடுக்கப்பட்ட மக்கள் பிரிவினர் விழித்தெழவும், புரட்சிகர மாற்றத்திற்கு தயாராகவும் வழிவகுக்கலாம்.

இலங்கையில் தேசியமுரண்பாடுகளுக்கும், யுத்தத்திற்கும் காரணமான அம்ச ங்கள் அப்படியே இருக்க, வெறுமனே யுத்தத்தில் விடுதலைப்புலிகள் தோற்க டிக்கப்பட்டது மாத்திரம் அரசியல் தீர்வை கொண்டுவந்துவிட முடியாது. அப்படி முடியுமானால் சிங்களதேசமே அதனை முன்வைக்க வேண்டும். இத ற்கு மாறாக தமிழ் மக்களிடம் அவர்களது நியாயமான கோரிக்கைகளை கைவிட்டுவிட்டு, அபிவிருத்தி என்ற பெயரில் சிங்கள அரசியல் தலைமையிடம் மண்டியிடக் கேட்பது எமது தேசத்தை அவமதிப்பதாகவே அர்த்தப்படும். இத்தகைய அவமதிப்புக்களும், அத்துமீறல்களுமே தமிழ் மக்களின் புதிய தலைமுறை விழித்தெழ செய்வதற்கு போதுமானவையாகும்.

ரஸ்யாவில் தோல்வியுற்ற 1905 ம் ஆண்டு புரட்சி பற்றி லெனின் குறிப்பிடும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



போது, தோல்வியுற்ற 1905 ஆண்டு புரட்சியானது ஒரு ஒத்திகையாக இருந்தது. இப்படிப்பட்ட ஒரு ஒத்திகையின்றி நாம் 1917ம் ஆண்டின் புரட்சியை வெற்றிகரமாக நடத்தியிருக்க முடியாது என்றார். எம்மைப் பொறுத்தவரையில் நடந்து முடிந்த தோல்வி என்பது அடுத்துவரும் ஒரு வெற்றிக்கான ஒத்திகை மட்டுமே. இந்த தோல்வியில் இருந்துதான் நாம் மிகப்பல பாடங்களை கற்றுக் கொள்ள நேர்ந்தது. ஆயுத போராட்டத்தின் வரையறுக்கப்பட்ட பாத்திரம்: மக்கள் திரள் அமைப்பின் மிகப்பெரிய பாத்திரம்: சர்வதேச உறவுகளை மிகவும் திட்டமிட்ட விதத்தில் கட்டியெழுப்பவேண்டியதன் அவசியம்: போராட்டச்சூழலில் கருத்துப் பரிமாற்றங்களுக்கும், ஏனைய பல்வேறு குழுக்களது செயற்பாடுகளுக்கும் இடம் கொடுக்கக்கூடிய விரிவான ஜனநாயகத்தின் அவசியம்: சிவில்சமூகத்தின் முக்கியமான பாத்திரம்: அக ஒடுக்குமுறைகளுக்கு எதிரான போராட்டங்கள் தேசியவிடுதலையுடன் நெருக்கமாக பிணைக்கப்பட்டிருக்க வேண்டியதன் அவசியம்:... இப்படியாக பற்பல குறைபாடுகள் இந்த தோல்வியின் மூலமாகத்தான் நாம் கற்றுக் கொண்டோம். இது எமது போராட்டத்திற்கு மாத்திரம் உரியதல்ல. நாம் மேலே குறிப்பிட்ட ரஸ்ய புரட்சியின் அனுபவத்துடன், கூடவே சீனப் புரட்சியும், கியூபப் புரட்சியும் இப்படிப்பட்ட ஒத்திகைகளினூடாக செல்ல வேண்டியே ஏற்பட்டது. இப்படிப்பட்ட தோல்விகள் அந்தந்த சமூகங்களையும், குறிப்பாக அதன் முன்னேறிய பிரிவினரை தமது போராட்டம் பற்றி பல புதிய பிரச்சனைகளை முகம் கொடுக்கவும், அதனை முன்னெடுப்பதற்கான மாற்று வழிமுறைகள் பற்றி சிந்திக்கவும் வழி வகுக்கும். இதன் விளைவாக முக்கியமான கோட்பாட்டு, மூலோபாய-தந்திரோபாய மாற்றங்களைக் கூட இந்த புரட்சிகள் செய்ய வேண்டியேற்படுகிறது. சீனப்புரட்சியில் இது நகரங்களில் இருந்து கிராமங்களுக்கு தளப்பிரதேசங்களை மாற்றிச் செல்வதற்கான மூலோபாய மாற்றத்தை ஏற்படுத்தியது. கியூப் புரட்சியாளர்கள் நாட்டிற்கு வெளியில் ஒன்று திரண்டு தமது போராட்டத்தை ஒழுங்கமைத்தார்கள். அதாவது போராட்டத்தில் முதிர்ச்சி ஏற்படுவதே இப்படிப்பட்ட தோல்விகளின் படிப்பினைகளை சரிவர கிரகித்துக் கொள்வதனால் மாத்திரமே சாத்தியப்படும்.

புரட்சிகர போராட்டத்தில் ஏற்படும் தோல்விகள் தனியே படிப்பினை பெறுவது, மற்றும் நிலைப்பாடுகளை மாற்றியமைக்குமாறு நிர்ப்பந்திப்பது போன்ற நேர்மறை அநுபவங்களை மாத்திரம் கொண்டு வருவதில்லை. மாறாக, யுத்தம் ஏற்படுத்திய பேரழிவுகளின் காரணமாக மேற்கொண்டு போராட்டத்தின் வெற்றியில் ஏற்படும் நம்பிக்கையீனம், எதிர்காலம் பற்றிய அச்சம், கையறுநிலையில் ஏற்படும் விரக்தியுணர்வு போன்ற எதிர்மறை அம்சங்களும் இதனுடனேயே முன்னுக்கு வருகின்றன. இவையனைத்தின் வெளிப்பாடாக கலைப்புவாதம் உருவாகிறது. அதாவது இதற்குமேல் புரட்சியோ அல்லது போராட்டமோ சாத்தியமற்றது அல்லது வெற்றியளிக்கப் போவதில்லை. ஆதலால் இதுவரையில் செயற்பட்டுவந்த அமைப்புக்களை கலைத்துவிடுவது, எதிர்தரப்பாரிடம் சரணடைத்துவிடுவது போன்றவை இதன் குறிப்பான பண்புகளாகும். போராளிகளின் அணிகளுக்குள் எங்கும் சண்டைகளும், சச்சரவுகளும் பரவலாக நடைபெறும். இது பல ஆக்கபூர்வமான செயற்பாடுகளில் செலுத்தியாக வேண்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



டிய எமது அரிதான வளங்களை மிகவும் மோசமான விதத்தில் விரயப்ப டுத்தும். கடந்த காலத்தில் தாம் தாம் சம்பந்தப்பட்ட சம்பவங்கள், பிரச் சனைகள் போன்றவற்றை ஊதிப் பெருக்க வைத்து, அவையே முழுமை என்று காட்ட முனையும் இந்த அசட்டுத்தனங்களை கடந்துதான் எந்தவொரு புதிய முயற்சியும் சென்றாக வேண்டியிருக்கும். போராட்ட அலை வீசிய காலத்தில் அலை அலையாக திரண்டிருந்த போராளிகள் இப்போது அப்படியே விலகிச் சென்றுவிடுவார்கள். எங்கும் நம்பிக்கை வறட்சியும், சந்தேசங்களும், குழப்ப ங்களும் நிலவும் ஆரோக்கியமற்ற அரசியல் சூழ்நிலையில் எஞ்சியிருக்கும் ஒருசில நபர்கள் கூட தமது பணிகளை முன்னெடுப்பதற்கு போதிய வளங்க ளின்றியும், ஆதரவாக செயற்படக்கூடிய சிறியதொரு குழுவை அமைப்பதிலும் கூட அதிக சிரமத்தை எதிர் கொள்ள நேரும். ஆனால் இப்படியான, கிளர்ச்சி யூட்டாத, மிகவும் பாதகமான ஒரு அரசியல் சூழ்நிலையில் யார் யாரெல்லாம் மிகவும் பிடிவாதமாகவும், விடாப்பிடியாகவும் அன்றைய காலகட்டத்தில் செய் தாகவேண்டிய கோட்பாட்டு, அரசியல் மற்றும் அமைப்புத்துறை சார்ந்த பணி களை செய்து முடிக்கிறார்களோ, அவர்களால் மாத்திரமே அடுத்துவரும் எழுச்சிக் காலத்தில் உருவாகும் புதிய வாய்ப்புக்களை ஆரோக்கியமாக பயன்படுத்திக் கொள்வது, புதிய போராட்டத்தை வழிநடத்துவது சாத்தியமாக இருக்கும்.

நாம் ஏன் வேலைத்திட்டங்களை முன்வைக்கவில்லை என்ற கேள்விகள் எம் முன் வைக்கப்படுகின்றன. வேலைத்திட்டத்தை வரைவது என்பது வெறுமனே தனிநபர்கள் தன்னிச்சையாக வரைந்து வைத்துவிட்டு, அதனை ஏனையவர்கள் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று எதிர்பார்க்கும் ஒரு நிகழ்வல்ல. இப்படிப்ப ட்ட எந்தவொரு முயற்சியும், முதலில் எம்மிடையே உள்ள கோட்பாட்டு, அரசி யல் மற்றும் அமைப்புத்துறை சாந்த வேறுபாடுகளை இனம் கண்டு அவற்றுக்கு தீர்வு காண்பதில் இருந்துதான் தொடங்கப்பட முடியும். இப்போது தானே ஒரு நீண்ட இருண்ட காலத்தில் இருந்து சிறிது சிறிதாக வெளியே வந்து பலரும் புனைபெயர்களில்தான் என்றாலும் தமது கருத்துக்களை முன் வைக்கத் தொடங்கியிருக்கிறார்கள். இது சாதாரண விபரங்களை பேசுவது என்ற மட்டத்தில் இருந்து கோட்பாட்டு மட்டத்திற்கு நகரும்போதுதான், குறைந்தபட்சம் நாம் இணக்கம் காணவேண்டிய முக்கிய கோட்பாட்டு, அரசி யல், அமைப்புத்துறை சார்ந்த பிரச்சனைகளை இனங்கண்டு, அவற்றை தீர்வு காண்பதற்கான முயற்சிகளில் எமது அக்கறைகளை குவிப்பது சாத்தியப்படும். அப்படிப்பட்ட செயற்பாடுகளின் விளைவாகவே நாம் ஒரு நகல் திட்டத்தை முன்வைப்பதை நோக்கி முன்னேறிச் செல்ல முடியும். இன்றைய காலகட்ட த்தில், குறைந்த வளங்களுடன் செயற்பட்டாக வேண்டிய நிலையிலுள்ள நாம் அதனை எமது சக்திக்குட்பட்ட விதத்தில்தான், வேகத்தில்தான் முன்னெடு த்தாக வேண்டியுள்ளது. ஆனால் இந்த பணிகள் முக்கியமானவை என்பதில் தீவிரமான நம்பிக்கையும், அதில் பங்குபெற வேண்டும் என்பதில் உறுதியும் உள்ளவர்கள் இந்த பணிகளில் எம்மோடு இணைந்து செயற்படுவதன் மூலமாக இவற்றை தீவிரப்படுத்த உதவலாம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இன்றைய எமது அரசியலானது, நாம் மேலே குறிப்பிட்டது போல, முப்பது வருடமாக ஒரு தீவிரமான தேசிய விடுதலைப் போராட்டத்தினுடாக சென்ற ஒரு சமூகத்தின் அரசியலாக இல்லை. இப்படியாக இருக்க நேர்ந்ததில் நாம் புலிகளை மாத்திரம் குற்றம் சாட்ட முடியாது. நாமும், தமிழ்தேசத்தின் முன்னேறிய பிரிவினர் அனைவரும், எமது கடமைகளை தவற விட்டுள்ளதாகவே கருதுகிறோம். முழுத்தேசமும் இப்படிப்பட்ட நிலையில் இருக்கும்போது, நாம் மாத்திரம் அப்போதும் சரியாகவே இருந்தோம்! இப்போதும் சரியாகவே இருக்கிறோம்!! என்ற பாணியில் பேசுவது உண்மையில் சம்பந்தப்பட்டவர்களது இன்றைய பிரக்ஞை மட்டம் பற்றிய பிரச்சனையை எழுப்புகிறது.

அப்படியே சரியாக இருந்திருந்தால் இந்த போராட்டமும், அதன் தோல்வியின் பின்னான அரசியலும் இப்படியாக ஆனது ஏன் என்ற கேள்விக்கு இவர்கள் பதிலளித்தாக வேண்டியிருக்கிறது. இதற்கு மாறாக நாம் கடந்த காலத்தில் இழைத்த தவறுகளே தவறான சக்திகள் தலைமையை ஏற்க காரணமாக அமைந்தது என்பதை ஏற்றுக் கொண்டாக வேண்டும். இப்போதும் கூட பல கோட்பாட்டு, அரசியல், அமைப்புத்துறை சார்ந்த பிரச்சனைகளை தீர்வு காணாமலேயே உள்ளோம். இதனை ஏற்றுக் கொண்டு, இந்த பணிகளில் உழைப்பதற்கு முன்வருவது அவசியமானது. இந்த செயற்பாடுகள் ஒரு தேசத்தின் முன்னேறிய பிரவினரின் கூட்டான செயற்பாடுகள் என்ற வகையில், இந்த பணியில் ஈடுபடும் சக்திகள் தமக்குள் பரஸ்பரம் தோழமை உணர்வை வெளிப்படுத்திக் கொண்டு, ஆரோக்கியமான கலந்துரையாடல்களில் ஈடுபடுவதானது இந்த பணிகளை விரைவுபடுத்த உதவும். இதற்கு மாறாக பகைமை பாராட்டுவதும், அர்த்தமற்ற சர்ச்சைகளை ஏற்படுத்துவதும் சம்பந்தப்பட்டவர்களுக்கு வேண்டுமானால் மகிழ்ச்சியை தரலாம். ஆனால் இந்த போலிப் பெருமிதங்களை அறவே வெறுக்கும் நாம், இந்த பொற்கால கனவுப் போட்டிகளில் கலந்து கொள்வதாக அறவே உத்தேசமற்றவர்களாக இருக்கிறோம்.

**ஆசிரியர் குழு.**

www.tamilarangam.net



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# வரலாற்று பிரக்ஞையின் உருவாக்கம்: மகாவம்சத்திலிருந்து சிங்கள தேசியவாதத்தை நோக்கி

அர்ஜுன குணரத்ன
தமிழாக்கம்: மனோ

சிங்களவர் கொண்டுள்ள வரலாற்று பிரக்ஞை பற்றி பல்வேறு எழுத்தாளர்களும் சிலாகித்துப் பேசுவதுண்டு. சிங்களவர்களது கற்பிதத்தில் (imagination) பல்வேறுவிதமான "வரலாற்றுபூர்வமான ஐதீகங்கள்" ("historical myths") கொண்டுள்ள உறுதியான பிடிப்பை இதற்கு ஆதாரமாக காட்டுவர். விஜயன் மற்றும் துட்டகைமுனுவின் கதைகளும், இலங்கைக்கு புத்தர் மேற்கொண்டதாக கூறப்படும் மூன்று விஜயங்கள் பற்றிய புராணக் கதையும் இவற்றில் முக்கியமானவையாகும். இந்த ஐதீகங்களுக்கு முதன்மையான ஆதாரமாக அமைவது மகாவம்சம் எனப்படும் மாபெரும் வரலாற்றுக் காப்பியமாகும். இந்த காப்பியமானது கிறீஸ்த்துவுக்கு பின்னர் ஆறாவது நூற்றாண்டில் புனையப்பட்டதாகும். **மேற் கூறப்பட்ட எழுத்தாளர்களது கருத்தின் படி இந்த 'வரலாற்றுப் பிரக்ஞையானது' அதன் அடிப்படையான அம்சங்களில் அதிகம் மாற்றமுறாமலேயே இலங்கையின் பெரும்பாலான வரலாற்றுக் காலம் முழுவதும் தொடர்ந்து வந்துள்ளதாக உள்ளூர ஏற்றுக் கொள்ளப்படுகிறது.** ஆனால் வரலாற்று பிரக்ஞை என்பது மக்களது மரபணுவில் காணப்படும் ஒன்றல்ல. அது கலாச்சாரரீதியான ஒரு படைப்பாக்கமாகும்: இது வளர்த்தெடுக்கப்பட்டு மக்களது மனங்களில் நடப்பட வேண்டிய ஒரு விடயமாகும். இதுவொரு செயலற்ற (passive) நடைமுறை அல்ல: மாறாக மக்கள் கூட்டமானது, தமது சமுதாயத்தின் கடந்த காலத்தை கட்டமைப்பது தொடர்பான ஒரு செயலூக்கமான (active) நடவடிக்கையைக் குறிக்கிறது. இந்த பிரக்ஞையை கட்டமைக்கும் செயற்பாடானது ஒருவித கற்பித்தல் நடைமுறையையும் உள்ளடக்கியதாக அமைகிறது. குறிப்பிட்ட வரலாற்றுச் சூழலானது மக்களது பிரக்ஞையின் வடிவம் மற்றும் அதன் திசையமைவு (orintation) என்பவற்றை தீர்மானிப்பதாக அமைகிறது. **"வரலாற்றுபூர்வமான பிரக்ஞையை" கட்டமைப்பதற்கான மூலப் பொருட்களாக அமைவது எப்போதுமே சமகாலமேயாகும்:** ஏனைய உற்பத்தித் துறைகளில் போலவே இங்கும் இந்த மூலப் பொருளானது உற்பத்தியின் அடுத்த கட்ட செயற்பாட்டுக்காக காத்துக் கொண்டிருக்கிறது: ஆவணங்கள், எழுத்துக்கள், கிராமிய கதைகள் போன்றவை இப்படிப்பட்ட மூலப் பொருட்களாக அமைகின்றன. ஒரு குறிப்பிட்ட வரலாற்றுச் சூழலின் கீழ், தேசிய பிரக்ஞையை கட்டமைக்க முன்வருபவர்களான தலைமைகள், (இவர்கள் மதம் சார்ந்தவர்களாகவோ அல்லது மதச்சார்பற்றவர்களாகவோ இருக்கலாம்) **தமது நிகழ்ச்சித் திட்டங்களுக்கு (Agenda) அமைய இந்த மூலப் பொருட்களை பயன்படுத்தப்படவும், சூழ்ச்சித்திறனுடன் கையாளவுங்கூட (manipulate) செய்கின்றன.** இந்த வகையான சூழ்ச்சித்திறனுடன் கூடிய கையாளள்கள் மூலமாக, இவர்கள் தமது கலாச்சாரத்தின் வரலாற்றுரீதியான தொகுப்பிலிருந்து சிலவற்றை பொறுக்கியெடுத்து, 'இவைதாம் தமது இருத்தலுக்கு மிகவும் அத்தியாவசியமான கூறுகள்' எனும் வகையில் அழுத்தமாக மக்களின்முன் வைக்கிறார்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இவ்வாறு சொல்வதன் அர்த்தம் யாதெனில், வரலாற்றுரீதியான கலாச்சாரத் தொகுப்பில் மேலே கூறப்பட்ட அம்சங்கள் ஏதோ ஒரு வடிவில் இருக்கவே செய்கின்றன என்பதும், அப்படியாக இருப்பவற்றில் சிலவற்றைத்தான் இவர்கள் பொறுக்கியெடுத்து பயன்படுத்திக் கொண்டுள்ளார்கள் என்பதை வலியுறுத்துவ தாகும். ஆனால் இந்த தொகுப்பிலிருந்து ஏன் குறிப்பிட்ட சில கூறுகள் எடுத் துக் கொள்ளப்பட்டன, ஏன் சில புறக்கணிக்கப்பட்டன என்பதை புரிந்து கொள் வதற்கு நாம் இந்த சொல்லாடல்கள் உருவாக்கப்பட்ட வரலாற்றுப் பின்புல த்தை சரிவர புரிந்து கொள்ள வேண்டும். ஆனால், **ஒருக்கால் இந்த சொல்லா டல்கள் உருவாக்கப்பட்டு, அதன் கூறுகள் மக்களது பிரக்ஞையிலும் உள்வா ங்கப்பட்டுவிட்டாலோ, அதற்மேல், இந்த போக்கானது தனக்கென தனியான ஒரு இயக்கப் போக்கை** (dynamic) **பெற்றுவிடுகிறது.** கிறீஸ்தவம் மற்றும் மேற்கத்தையமயமாதல் போன்றவற்றின் ஊடுருவல் எனக் கருதப்பட்டவற்றிற்று எதிராக "சிங்கள பௌத்தர்களை" கிளர்ந்தெழச் செய்வதற்கான ஒரு செயல் முறையானது உருவாக்கப்பட்டுவிட்டால், மேலே குறிப்பிட்ட பிரச்சனைகள் ஆபத்தற்றனவாக மாறிய பின்பும் கூட, ஏனைய "பிரச்சனைகள்" தொடர்பா கவும் இதே வழிமுறைகள் பயன் படுத்தப்படலாம். பத்தொன்பதாம் நூற்றா ண்டில், "**பௌத்த மறுமலர்ச்சி**" என்று கூறப்படும் இப்படிப்பட்டதொரு ஆய்வுச் சட்டகம் (paradigm) உருவாக்கப்பட்டது. இந்த ஆய்வுச்சட்டகத்தின் பிரதான கர்த்தாவாகிய அநகாரிக தர்மபாலவின் எழுத்துக்களில், மேற்கு நாட்டவர்க ளான, அவர்களிலும் குறிப்பாக கீழைத்தேயம் பற்றிய ஆய்வாளர்களான (Orintalist scholars) கருதாக்கங்கள் பெருமளவில் எடுத்தாளப்பட்டிருப்பது கவனிக்கத்தக்கது. பௌத்த மறுமலர்ச்சியானது நவீன சிங்கள தேசியவா தத்திற்கான அடித்தளத்தையிட்டது. ஆனால் இந்த தேசியவாதத்தை புரிந்து கொள்வது என்பது குறிப்பிட்ட மக்கள் கூட்டத்தினர் பிரக்ஞைபூர்வமாக கொண்டுள்ள அரசியல் சித்தாந்தம் என்ற வகையில் முடியாது. மாறாக பெனடிக்ட் அன்டர்சன் (Benedict Anderson) வாதிப்பது போல, இதற்கு முன்பு இருந்த கலாச்சார முறைமை பற்றியும் நாம் புரிந்து கொள்ள வேண்டும். இந்த பழைய கலாச்சார முறைமையில் இருந்தும்: அவ்வாறே இந்த கலாச்சார முறைமைக்கு எதிராகவும் இந்த தேசியவாதமானது உருப்பெறுகிறது. சிங்கள வர்களது வரலாற்று பிரக்ஞையானது வரலாற்றினால் ஏற்கனவே தயாராக வைக்கப்பட்டிருந்து கையளிக்கப்பட்டதல்ல: மாறாக இலங்கையின் சமூக வரலாற்று கட்டமைப்புக்களில் அடிப்படையான மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டு இருந்த காலத்தில், ஏற்கனவே இருந்து வந்த அம்சங்களைக் பயன்படுத்தி கட்டமைக்கப்பட்டதே சிங்கள மக்களது இந்த வரலாற்று பிரக்ஞையாகும். இதுவே இந்த கட்டுரையின் பிரதான கருப்பொருளாக அமைகிறது.

## வரலாற்றுப் பிரக்ஞை பற்றிய சில பிரச்சனைகள்

இலங்கையின் நவீன வரலாற்றாசிரியர்கள் கணிசமான அளவிற்கு மகாவம்ச த்தில் தங்கியிருக்கிறார்கள். இதனை அடிப்படையாக வைத்தே இலங்கை வர லாறு தொடர்பான வெகுஜன மட்டத்திலான உரையாடல்களும் அமைகின்றன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பாடசாலையில் மாணாக்கர்களுக்கு போதிக்கப்படும் வரலாற்று பாடங்களும் இதனை அடிப்படையாகக் கொண்டிருக்கின்றன. வெகுஜன சொல்லாடல்க ளிலும், அரசியல் சொல்லாடல்களிலும் கூட மகாவம்சத்தின் தாக்கம் இருக்கி றது. மகாவம்சம் சித்தரிக்கும், இனவாத அடிப்படையிலான துட்டகைமுனுவின் கதையானது பாடசாலையில் பயன்படுத்தப்படும் சிங்களமொழிப் பாட நூல்க ளிலும், பௌத்த சமய பாட நூல்களிலும், சிங்கள் நாடகஅரங்கிலும், ஜனர ஞ்சக இலக்கியங்களிலும் மிக அண்மைக்காலம் வரையில் பயன்படுத்தப்பட்டு வந்ததை சிறிவீரா (Siriweera) என்பவர் சுட்டிக் காட்டுகிறார்.

இலங்கையை மற்றும் பிற நாடுகளையும் சேர்ந்த கல்வியாளர்கள் மகாவம்சம் என்பதை ஒரு நம்பகரமான வரலாற்று மூலமாக வேறுபட்ட அளவுகளில் ஏற்றுக் கொள்ளும் போக்கை கொண்டிருக்கிறார்கள். மகாவம்சத்தில் குறிப்பிடப்படும் கடந்த கால சம்பவங்கள் எனப்படுபவை, நிகழ்கால வகையினங்களின் அடிப்ப டையில் வியாக்கீனம் செய்யப்படுகிறது. மகாவம்சம் மற்றும் ஏனைய சிங்கள, பாளி செவ்வியல் இலக்கியங்களை அடிப்படையாகக் கொண்டு எழுதும் சிங் கள எழுத்தாளர்களது ஜனரஞ்சகமான வரலாற்று எழுத்துக்களைப் பொறுத்த வரையில் இது குறிப்பிடத்தக்க வகையில் உண்மையானதாகும். பத்தொன் பதாம் நூற்றாண்டில் ஒப்பியல் மொழி வரலாற்றியலாளர்களால் (comparative phiololgists) உருவாக்கப்பட்ட **'ஆரிய இனக் கோட்பாடானது'** (Aryan Theory of Race), கடந்த நூறு வருடத்திற்கு மேலாக இவர்களால் தமது வியாக்கீன ங்களுடன் நன்கு பிணைக்கப்பட்டுள்ளது. வட இந்தியாவில் இருந்து வந்து குடியேறிய ஆரியர்களது வழித்தோன்றல்களாக சிங்களவர்கள் இவர்களால் வர்ணிக்கப்பட்டுள்ளார்கள். இந்த கருத்தின் படி, இந்தோ-ஐரோப்பிய மொழி களைப் பேசுபவர்களான இந்தியா, பேர்சிய, மற்றும் ஐரோப்பியர் யாவரும் ஒரே கலாச்சாரத்தையும், இனத்தையும் சேர்ந்தவர்களாவர்: இவர்கள் அனை வருமே இந்துகுஸ் மலைத்தொடருக்கு வடக்கில் வசித்துவந்த ஒரு ஆதிக்குடி யின் வழித் தோன்றல்களாவர்: கி.மு.2000ம் ஆண்டின் பின்பு இவர்கள் தெற்கு மற்றும் மேற்கு நோக்கி படர்ந்து சென்று ஏனைய பிரதேசங்களை கைப்பற்றி குடியேறினார்கள். இந்த கோட்பாடானது பௌத்த மறுமலர்ச்சி இயக்கத்தின் முக்கிய பிரமுகரான அநகாரிக தர்மபாலாவினால் பத்தொன்பதாம் நூற்றா ண்டின் பிற்பகுதியிலும், இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் இலங்கையில் நன்கு பிரபல்யப்படுத்தப்பட்டது.

வட இந்தியாவில் இருந்து கி.மு 2500 ஆண்டளவில் படையெடுத்து வந்து இலங்கையில் குடியேறிய ஆரியர்களது வாரிசுகளாக சிங்களவர்கள் தம்மை இனம் காண்கிறார்கள். மகாவம்சமே இந்த ஐதீகத்தின் பிரதான ஊற்று மூல மாக இருக்கிறது. அடுத்து வந்தவர்களும் மகாவம்சத்தின் அடிப்டையான கரு த்துக்களை அப்படியே பின்பற்றி வந்ததானது, சிங்களவர்கள் 2500 வருடங்க ளுக்கு மேற்பட்ட எழுதப்பட்ட வரலாற்றை கொண்டிருப்பதாக உரிமை பாராட்டு வதற்கு வழிவகுத்தது. இந்த ஜனரஞ்சக வரலாற்றின் படி இலங்கைத் தீவின் முதலாவதாக குடியேறியவர்கள் சிங்களவரேயாவர். இந்த ஜனரஞ்சகமான



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கர்ணபரம்பரை கதையின்படி, பௌத்தமானது அதன் தூய்மையான வடிவில் இலங்கைத் தீவில் பேணப்படும்: இந்த பணிக்காக தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் சிங்கள மக்களாவர். மகாவம்சமும், பதின்மூன்றாம் நூற்றாண்டில் இருந்து எழுதப்பட்ட ஏனைய படைப்புகளும் பௌத்தத்தின் விதியானது சிங்களத்துடன் பிணைத்தே இனம் காட்டி வந்துள்ளன. எப்படியிருப்பினும் இந்த **பௌத்த, சிங்கள பிணைப்பானது மகாவம்சத்தின் மீது பிற்காலத்தில் போடப்பட்ட ஒரு உரைவிளக்கமாகவே தோன்றுகிறது. ஏனெனில் மகாவம்சத்தில் இரண்டே இரண்டு இடத்தில் மாத்திரமே "சிங்களம்" என்ற சொல் பயன்படுத்தப் பட்டிரு க்கிறது.** தென் இந்தியாவிலிருந்து படையெடுத்து வந்த தமிழர்கள், மகத்தான சிங்கள நாகரீகத்தின் அழிவுக்கு காரணமாக இருந்தார்கள் என்றும், இவர்க ளுக்கு எதிரான தொடர்ச்சியான போராட்டம் பற்றிய வரலாற்றுக் கருத்தா க்கத்தினாலேயே இவர்களது உலகக் கண்ணோட்டமானது கூர்மைப் படுத்த ப்பட்டுள்ளது. பேச்சுத் திறமையும், செயலாற்றலும் மிக்க அநகாரிக தர்மபாலா போன்ற நபர்களின் கரங்களில் இந்த ஆரிய மாயையானது இலகுவாக இந்த உலகக் கண்ணோட்டத்தினுள் புகுத்தப்பட்டது. அநகாரிக தர்மபாலாவின் கூற்றில் கூறுவதானால், "காட்டுமிராண்டித்தனமான நாசகாரர்களால் அழிவுக்கு கொண்டு வரப்படுவதற்கு முன்பு, இந்த பிரகாசமான, அழகிய தீவானது ஆரிய சிங்களவர்களால் சொர்க்கமாக ஆக்கப்பட்டிருந்தது".

நாம் மக்களது வரலாற்றுப் பிரக்ஞை பற்றி பேசும் போது, புத்திஜீவிகளான மேட்டுக்குடியின் சிந்தனையாளர்களது தாக்கம் பற்றித்தான் உண்மையில் பேசு கின்றோமே ஒழிய, மக்கள் திரளது கண்ணோட்டத்தைப் பற்றி குறிப்பிடுவ தில்லை. உண்மையில் நாம் மக்கள் திரளினது அபிப்பிராயம் தொடர்பாக ஒரு கருத்தினத்ததை (category) கொண்டிருக்க முடியாது, ஏனெனில் அது ஏகவி னமான முழுமை அல்ல. உள்ளூர் வரலாறு என்றும், தேசிய வரலாறு என்றும் இரண்டு வரலாறுகள் இருக்கின்றன. இதில் தேசிய வரலாறு என்பது சமூக த்தில் ஆதிக்கம் செலுத்தும் சக்திகளது படைப்பாகும். இதனை இன்னோர் விதத்தில் கூறுவதானால், "ஒரு சகாப்தத்தின் ஆதிக்கம் செலுத்தும் கருத்து க்கள் என்பவை அந்த சமுதாயத்தில் ஆதிக்க சக்திகளது கருத்துக்க ளேயாகும்" (கார்ல் மார்க்ஸ்). நவீன தேச அரசில் இந்த சிந்தனைகள், அந்த சமூகத்தின் கல்விமுறை மற்றும் தொடர்பு சாதனங்கள் மூலமாக மனதில் ஆழமாக பதிவிக்கப்படுகிறது. இந்த சாதனங்களை தமது கட்டுப்பாட்டில் வைத்திருப்பவர்களே இப்படிப்பட்ட சொல்லாடல்களை உருவாக்குகிறார்கள். நவீன இலங்கையில் இந்த குழுவில் அரசியல்வாதிகள், பௌத்த பிக்குகள், கிராமப்புற ஆசிரியர்கள் போன்றவர்கள் அடங்குகிறார்கள். அறிவார்ந்த தளத் தில் இவர்களது ஆய்வுச் சட்டகத்திற்கு அங்கீகாரத்தை வழங்குவதன் வாயி லாக ஆதிக்கத்தில் உள்ளவர்களும் இந்த செயற்பாட்டிற்கு துணைபோகிறா ர்கள். பிரிட்டிசாரின் ஆட்சியின் கீழ் கிடைக்கக் கூடிய அற்பமான பொருள் வகை முன்னேற்றத்திற்கு தமது பிரதான போட்டியாளர்களாக தமிழர்களை கண்ட சிங்கள குட்டிமுதலாளித்துவ வர்க்கத்தினருக்கு மேலே சொன்ன கருத் தியல் நிலைப்பாடுகள் தமக்கு சாதகமாக செயற்படுவதான உணர்வவை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கொடுத்தது. இந்த வர்க்கமே கிராம அளவில் கருத்துக்களை உருவாக்கு வதில் பிரதான பாத்திரம் வகிப்பவர்களாக இருந்ததனால், இவர்களே இந்த சொல்லாடல்களை பரப்பவும், ஜனரஞ்சகமயப்படுத்தவும் முக்கியமான பங்கா ற்றினார்கள். நவீன இலங்கையில் கல்வியறிவின் வீதம் எண்பத்தைந்து என்ற விபரத்தை நாம் கவனிக்கத் தவறிவிடக் கூடாது. மிகப் பெரும்பாலான தகவல் களும், அபிப்பிராயங்களும் அச்சுச் சாதனங்கள் வழியாகவே பரப்பப் படுகின் றன. ஆனால் ஆதிக்க சக்திகளது கருத்துக்கள் விரிவான அளவில் மக்கள் திரளினாலும் ஏற்றுக் கொள்ளப்பட்டனவாக இருக்கிறது என்பது திட்டவட்ட மானதாக நிரூபிக்கப்படாத வரையில், ஆவணப்படுத்தப்பட்டுள்ளதாக நாம் காணும் சிந்தனைகள் என்பவை, வரலாற்றுக் கண்ணோட்டத்தை பிரதிநிதித்து வப்படுத்துவதாக கூற முடியாது. நவீன இலங்கையில் முனைப்பாகத் தெரிகி ன்ற புத்திஜீவி மேட்டுக்குடியினது வரலாற்றுப் பிரக்ஞையானது, சிங்கள மக்க ளால் முழுவதுமாக பகிர்ந்து கொள்ளப்படுகிறது என்பது உண்மையே. ஆனால் இலங்கை வரலாற்றின் பண்டைய காலம் மற்றும் இடைக்காலம் ஆகியவற்றை கருத்திற் கொண்டால், அந்த காலத்தில் வரலாற்றுப் பிரக்ஞை எவ்வாறு இருந்திருக்கும் என்பதற்கு போதிய ஆதாரங்களை நாம் பெற முடியாதவர்க ளாகவே இருக்கிறோம். பண்டைய மற்றும் இடைக்காலத்தில் உருவான சிங் கள, பாளி எழுத்துக்கள் என்பவை புத்திஜீவி மேட்டுக்குடிகளின் படைப்புக் களாக அமைந்திருந்தன. இவை மக்கட்திரளின் அபிப்பிராயங்களை பிரதி நிதித்துவப் படுத்தியிருக்க வேண்டிய அவசியமில்லை. எப்படியிருப்பினும், **தொன்மையான இந்த பிரதிகளில் வெளிப்படுத்தப்படும் கருத்துக்கள் என்பவை மொழிவழி தேசியவாதத்தில் வெளிப்படுத்தப்படும் நவீன அர்த்த த்தில் "சிங்களவர்" என்பதைக் குறிக்கவில்லை.** மாறாக அதனை நாம் இன்று மதம் சார்ந்ததாகவே அர்த்தப்படுத்தலாம். பெனடிக்ட் அன்டர்சனின் வார்த்தை களை இரவல் வாங்குவோமானால், கற்பிதம் செய்யப்பட்ட சமூகமானது, குறை ந்த பட்சம் பத்தாம் நூற்றாண்டு வரையிலுமாவது, பௌத்தர்கள் பற்றியதான தாகவே இருந்தது. இதில் தமிழ், சிங்களம் பேசிய இரண்டு தரப்பினரும் உள்ளடக்கப்பட்டார்கள்.

சிங்கள மக்களது "வரலாற்றுப் பிரக்ஞை" பற்றி எழுத்து பூர்வமான ஆதாரங் களை முன்வைக்க முனையும் எழுத்தாளர்கள், நிகழ்காலத்தின் மதிப்பீடுகளை கடந்த காலத்தினுள் நீட்டிச் செல்ல முனைகிறார்கள். இலங்கையின் பண்டைய மற்றும் இடைக்காலத்தைச் சேர்ந்த பாளி, சிங்கள, சமஸ்கிருத இலக்கியங்கள் என்பவை, பௌத்த பிக்குகளையே முதன்மையாக கொண்ட மேட்டுக்குடியின் அறிவுத்துறை படைப்புக்களையே பிரதிநிதித்துவம் செய்கின்றன. இந்த படை ப்புக்கள் அந்த காலத்தின் கூட்டான பிரக்ஞையின் தொகுப்பு என்பது இதன் அர்த்தமாகாது. ஆயினும் இந்த படைப்புக்கள் அவ்வாறாகவே கருதப்படு கின்றன. மகாவம்சமானது அதுவரை காலமும் நிலவிவந்த வாய்மொழி மூல மான மரபார்ந்த கதைகளின் எழுத்துரீதியான பதிவு என்பது உண்மையே ஆயினும், இந்த வாய்மொழி மரபானது மக்கள் மத்தியில் பிரசித்தம் பெற்ற ஒன்றாக இருக்கவில்லை. இது பௌத்த துறவியரது மடாலயங்களில்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அவர்களது பயிற்சிக்கான பாடத்திட்டத்திற்குரிய ஒன்றாகவே விளங்கியது. பௌத்த பிரபந்தங்களுக்கான சிங்கள விளக்கவுரைகளுக்கான அறிமுகத் தையே மகாவம்சமானது அடிப்படையாக கொண்டிருந்தது. அந்த வகையில் இது **பௌத்த மதநிறுவனத்தை (சங்கத்தை) புனிதப்படுத்தும் நோக்கில் படை க்கப்பட்டதேயன்றி, இலங்கையின் வரலாறை எழுதும் நோக்கிலான ஒரு திட்டவட்டமான வரலாற்றுப் படைப்பாக தொகுக்கப்படவில்லை** (பெரேரா 1961:30). எமது வாதத்திற்கு பலம் சேர்க்கும் இன்னொரு விடயத்தையும் இங்கு நாம் கவனத்தில் கொள்வது பயனுடையதாக இருக்கும்: அதாவது **அந்தக் காலத்தில் பௌத்தமானது எந்தவொரு இன-மொழி குழுவுக்கும் தனியுரி மையாக இருக்கவும் இல்லை. பௌத்தத்திற்கு விளக்கவுரை செய்தவர்களுள் பெரும்பான்மையினர் சோழ துறவிகளாகவோ அல்லது தென்னிந்திய தொடர்பு கொண்டவர்களாகவே இருந்தார்கள்** (ஜெயவிக்கிரம 1969:68).

மக்கள்திரள் மத்தியில் இந்த மேட்டுக்குடிகளின் கருத்துக்கள் எந்தளவிற்கு பரம்பியிருந்தது? இங்கு நாம் ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தை பற்றி பேசவி ல்லை: முழுமையான ஒரு வரலாற்றுக் காலகட்டத்தைப் பற்றி பேசுகிறோம்.. இந்த கேள்விக்கு பதிலளிப்பது சாத்தியமில்லை என்பது தெளிவாகிறது: குறைந்த பட்சம் ஐரோப்பியரது கொலனித்துவத்தின் ஆரம்பத்திற்கு முந்திய கட்டம் குறித்துக் கூட தெளிவாக சொல்வதற்கில்லை. இந்த விடயமானது சிங்கள மக்களது வரலாற்று பிரக்ஞை பற்றி பொதுமைப்படுத்துவது தொடர் பாக அதிக எச்சரிக்கையாக இருப்பதற்கான காரணமாக அமைகிறது. சம கால சிங்களவர்கள் ஒருவிதமான வரலாற்று பிரக்ஞையை கொண்டிருப்பதாக கருத முடிகிறது: ஆனால் இந்த பிரக்ஞையானது 2500 வருடங்களுக்கு முந் திய வரலாற்று நினைவுகளில் இருந்து மரபாக பெறப்பட்டதாக வாதிட முடி யாது. சில எழுத்தாளர்கள் ஐதீகங்கள், வீரகாவியங்கள், சடங்குகள் மற்றும் இது போன்றவற்றை தமது ஆய்வுரைகளுக்கு ஆதரவாக கொண்டுவர முனைகிறார்கள். **சமகால நிகழ்வுகளில் இருந்து கடந்த காலத்தை உய்த்தறிய முனைவதை இங்கு உள்ளார்ந்து காண முடிகிறது. தற்காலத்தில் காணப்படும் இந்த வரலாற்று பிரக்ஞை என்பது மட்டுமே தன்னளவில், பண்டைய காலத்தில் இருந்தே இப்படிப்பட்ட ஒன்று தொடர்ந்து வருவதாக அர்த்தப்படுத்திவிட மாட்டாது.** முன்னைய தலைமுறைகளின் கலாச்சார அம்சங்கள் என்பவை, குறிப்பிட்ட மக்களது கலாச்சார மரபுகள் என்ற வகையில், வரலாற்றுபூர்வமான பிரக்ஞையின் மூலப்பொருட்களாக மனங்கொள்ளத் தக்கதாகும். இந்த கூறு கள் சொல்லாடல்களாக வடிவமைக்கப்பட வேண்டியுள்ளது: இந்த வடிவமை த்தலானது குறிப்பிட்ட வரலாற்றுக் கட்டத்தில் செயற்பட்டுக் கொண்டிருக்கும் செயற்பாட்டாளர்கள் (Agent) மூலமாக மட்டுமே நடைபெறுகிறது. இந்த பின் புலம்தான் சொல்லாடலுக்கான பொறுத்தப்பாட்டுத் தன்மையை வழங்குகிறது.

இலங்கையை ஆசியாவிலேயே கல்வி கற்றவர்கள் அதிகமாக உள்ள ஒரு நாடாக மாற்றியமைத்த, அனைவருக்குமான இலவச கல்வி என்ற முறைமை காரணமாகவே மகாவம்சத்தின் உள்ளடக்கமானது மக்களுக்கு பரிச்சயமான



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தாக இன்று மாறியுள்ளது. மேற்கத்திய பாணியை முன்மாதிரியாகக் கொண்ட கல்விமுறையின் வளர்ச்சியும், அதற்கு சமாந்தரமாக சிங்கள மக்களிடையே தேசியவாத பிரக்ஞை வளர்வதும் ஒன்றும் தற்செயலானது அல்ல: ஏனெனில் அண்டர்சன் அவர்கள் தெளிவாகவே சுட்டிக்காட்டியவாறு அச்சிடப்பட்ட தொட ர்பு சாதனங்களும் அவற்றின் பரவுகையும் தேசிய சமுதாயமானது தன்னை தேசமாக கற்பிதம் செய்து கொள்வதில் முதன்மையான வழிமுறையாக அமை கின்றன. இதற்கு இணையாக பிரித்தானியரின் கொலனிய காலத்தில் தொடர்பு சாதன வசதிகள் பெருகின: பெருந்தெருக்கள், புகையிரத மார்க்கங்கள் என் பன பெருகின: செய்திப்பத்திரிகை, சஞ்சிகைகள் என்பன பரவின: இந்த நூற்றாண்டில் இது வானொலியின் வருகையுடன் உச்ச நிலையை அடைந்தது. இந்த சாதனங்களின் வளர்ச்சியானது இதுவரை காலமும் தொலைவில் தனிமை ப்படுத்தப் பட்டிருந்த கிராமங்களை பிரதான அரசியல் நீரோட்டத்துடன் இணைப்பதில் உதவின.

## இலங்கை வரலாற்றை எழுதுதல்

1826ம் ஆண்டு வரையில் மகாவம்சமானது கற்றோர் குழாத்திற்கு வெளியில் இருந்து பெரும்பாலான சிங்களவர்களுக்கு அதிகம் அறியப்பட்டதாக இருக்க வில்லை. சேர் ஜேம்ஸ் ரென்னட் (Sir James Tennet) என்பவர் இந்த வரலாற்றுப் பதிவு பின்வருமாறு எழுதுகிறார்.

> இந்த நூலின் மூலமும், அதன் விளக்கவுரைகளும் அறவே கவனிப்பாரற்று சிதைந்து போகும் நிலையில் விடப்பட்டிருந்தன: ரேனர் (Turnour) (இவரே முதலில் மகாவம்சத்தை ஆங்கிலத்தில் மொழி பெயர்த்தவர்).1826 வரை யில் இவற்றில் ஏதாவது ஒன்றை விமர்சனபூர்வமாக படித்தவரையோ, அல்லது மற்றையதன் இருப்பு பற்றி மேலெழுந்த வாரியாகவாவது கேள்வி ப்பட்டிருந்த சிலரையோ அறிந்திருக்கவில்லை. சப்பரங்கம் (Saffragam) அமைப்பைச் சேர்ந்த உயர் மதகுருவினால் இவருக்கு தேடியெடுத்துக் கொடுக்கப்பட்ட பல்வேறு நூல்களினுள் ஒன்றாக, இந்த நீண்டகாலமாக கவனிப்பாரற்றுக் கிடந்த மகாவம்சத்தின் விளக்கவுரை இருந்தது: மகாவ ம்சமானது அதன் மூலவடிவில் புரிந்து கொள்ளப்பட முடியாக இறைபு திராக இருந்தது: இந்த கிடைத்தற்கரிய ஆவணத்தின் உதவியுடன் நீண்ட காலமாகவே தொலைந்து போயிருந்த வரவாற்றுரீதியான பதிவை ஆங்கில த்தில் மொழிபெயர்க்கும் பணியை செய்தார்: இந்த செயற்பாட்டின் மூல மாக இலங்கையானது மற்றெல்லா நாடுகளைவிட மிகவும் மேம்பட்ட, நம்ப த்தக்க வரலாற்றைக் கொண்டிருப்பதான ஒரு கருத்தானது நிலைநாட்டப் பெற்றது. (Tennent 1859: 314 – 315)

வேறு வார்த்தையில் கூறுவதானால், மக்களது சொல்லாடல் தளத்திற்கும், கருத்துப் பரிமாற்றத்திற்கும் மகாவம்சமானது ஆங்கிலேயராலும் அதனைத் தொடர்ந்து ஜேர்மனியராலுமே இழுத்துக் கொண்டு வந்து சேர்க்கப்பட்டது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



(கெய்கர் என்ற ஜேர்மனியர் மகாவம்சத்தை முழுமையாக மொழி பெயர்த்து 1912ம் ஆண்டில் பதிப்பிட்டார்). அதன் பின்பு ஆங்கிலேயராலும், ஆங்கிலம் கற்ற இலங்கையராலும், இலங்கை தொடர்பான விடயங்கள் எழுதப்படும் போது மேற்கூறிய நூல்கள் உசாத்துணையாக தொடர்ச்சியாக பயன்படுத்தப்ப டுத்தப்பட்டு வந்தன. உதாரணத்திற்கு நாம் சிலரை குறிப்பிடலாம்: ரென்னட் (Tennent) தானே 1859 இலும், சிர் (Sirr) 1850 இலும், வில்லியம் னைட்ரொன் (William Knighton), இவரது இலங்கையின் வரலாறு (1845) மகாவம்சத்தை அடிப்படையாகக் கொண்டாதாக அமைந்தது: லீசிங் (L.F. Liesching) 1861 இலும், பொன்னம்பலம் அருணாச்சலம் 1906 இலும், இப்படியாக இந்த நூல் களை பயன்படுத்தியிருந்தார்கள். யாஸ்மின் குணரத்ன (Yasmin Gooneratne) என்பவர் இது பற்றி குறிப்பிடும் போது, லீசிங் உடைய 'இலங்கையின் சுருக்க மான வரலாறு' என்பது ரென்னட் என்பவரால் முன்வைக்கப்பட்ட பொதுவான திட்டவரைவை பின்தொடர்ந்து சென்று ரென்னட் உடைய வாதங்களை எளிமை ப்படுத்தி, இலங்கையின் வரலாறு மற்றும் மரபுகள் பற்றி போதிய புலமைத் துவம் அற்ற இளைஞர்களை எட்டக் கூடியதாக அமைந்தது(1968:85). **பத்தொ ன்பதாம் நூற்றாண்டில் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட இலங்கை தொடர்பான வரலாறுகளானவை, உண்மையிலேயே, ஆங்கிலம் படித்த இலங்கையருக்கு இங்கிலாந்தின் அரசியல் கருத்துக்களை வழங்குவதற்காகவே பயன்படுத்தப்ப ட்டதாக** இவர் கூறுகிறார்: **"இந்த எழுத்துக்களானவை, அந்த காலத்தில் குறிப் பிட்ட எழுத்தாளர்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட கொள்கைகளும், நம்பிக்கை களும், பொதுவில் மனித குலம் முழுமைக்கும் பொதுவானதாக, குறிப்பாக கொலனித்துவ சமூகத்தை வழிநடத்தும் அறுதியான விதிகளாக சித்தரித்த ரித்தன"** (மேற்கண்ட நூல் பக்கம் 88). ஐவர் ஜென்னிங் (Ivor Jennings) சுட்டிக் காட்டுவது போல சுதந்திரத்திற்கு முந்திய இலங்கை மேட்டுக்குடிகளது "தேசியவாதமானது சாராம்சத்தில் மேற்கத்திய கல்வி மற்றும் சித்தாந்தத்தின் படைப்பாக இருந்தது: இதன் சித்தாந்தமானது பத்தொன்பதாம் நூற்றாண்டின் ஐரோப்பாவின் சித்தாந்தத்தில் இருந்து அடிப்படையில் வேறு பட்டதாக இருக்கவில்லை" (1953:76).

இலங்கையின் "பாரம்பரிய" இலக்கியங்களானவை, இன்று நாம் மத அம்ச ங்கள் என அழைக்கும் விடயங்கள் தொடர்பாக அக்கறையுடையனவாக இருந்தன. ரெய்னோல்ட் குறிப்பிடுவது போல "கவிதைகள் என்பவை கிட்ட த்தட்ட முழுக்க முழுக்க பௌத்தத்தால் உந்துவிக்கப்பட்டதாகவும், பௌத்த பின்னணியையும் கொண்டதாக அமைந்திருந்தன. இவை வரலாற்று அல்லது புராண சம்பவங்கள் தொடர்பான கதைகளின் தொகுப்பாகவோ அல்லது பௌத்த கோட்பாட்டின் விளக்கவுரை நூற்களாகவோ இருந்தன" (ரெய்னோ ல்ட் 1970:20). பதினான்காம் நூற்றாண்டில் ஒரு புதுவிதமான கவிதை உருவா கிய போதிலும், பொதுவில் கவிதைகள் பெரும்பான்மையான சந்தர்ப்பங்களில் பௌத்த கதைகளை அவற்றின் உந்தலுக்கான மூலங்களாக கொண்டிருந்தன (மே.நூ:21). புதிய கவிதையானது தூது விடும் பாடல்களாக அமைந்திருந்தன: செய்தியைக் காவிச் செல்லும் ஒரு பறவை, நாட்டின் இயற்கை பண்புகளை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



விபரித்துச் செல்வதாக இவற்றின் அமைப்பு வடிவங்கள் அமைந்திருந்தன: இவை சிந்தனையை தூண்டுவதற்கான எதனையும் கொடுக்கவில்லை. எல். எஸ். பெரேரோ குறிப்பிடுவது போல புத்தரது வாழ்வு மற்றும் அவரது கோட்பாடு தொடர்பானதும், வரிசைக் கிரமமாக அமைந்த மன்னர்களது பட்டியலை உள்ளடக்கியதுமான இந்த பாடல்கள் பௌத்தத்தின் முக்கிய படைப்புக்களையும், அவை தொடர்பான பாளிய விளக்கவுரைகளையுமே தமது பிரதான அக்கறைக்குரிய விடயமாக கொண்டிருந்தன. ஒரு மன்னரது தகுதியானது அவர் எந்தளவிற்கு பௌத்த மடத்திற்கும், பௌத்த மதத்திற்கும் தொண்டாற்றினார் என்பதைக் கொண்டு அளவிடப்பட்டது (பெரேரா 1961:29-30). பரணவிதான அவர்களது கூற்றுப்படி, “மதச்சார்பற்ற வரலாறு, தனியாக வரலாறு என்ற கண்ணோட்டத்தில் பேசப்பட்டவை வெறும் முப்பத்தியிரண்டு அத்தியாயங்களுக்குற்பட்டதாகவே இருக்கும்: இவை கூட பெரும்பாலானவை, நல்ல துறவியர் தவிர்க்க வேண்டிய ... மன்னர்களின் கதைகளில் தொடங்குவதாக இவை அமைந்திருக்கும்” (1969:53). பௌத்த அறநெறி தொடர்பான படிப்பினைகளை வழங்கும் விடயங்கள் மாத்திரமே பௌத்த துறவியர் கற்பதற்கு தகுந்தவையாக அக்காலகட்டத்தில் கருதப்பட்டன. பௌத்த ஆலயங்களும், பௌத்த துறவியருமே பண்டைக் கால கல்வியின் மையங்களாக அமைந்திருந்தன. சாதாரண மக்களது கல்வியானது “பௌத்த சித்தாந்தம், புத்தரின் வாழ்க்கை மற்றும் வாழ்க்கைமுறை பற்றிய மத சொல்லாடல்கள் மூலமாகவே நடைபெற்றன” (அபேவர்தன 1969:197: அதிகாரம் 1969:15-16).

ஆயினும் பதினேழாம் நூற்றாண்டு அளவிலிருந்து, நான் மேலே குறிப்பிட்ட சிங்கள இலக்கிய மரபில் இருந்து வேறுபட்ட இலக்கிய பாணிகள் (genres) தோன்றத் தொடங்கின. இவை “வரலாறு” தொடர்பான கதையாடல்களாகவும், பயணக் குறிப்புக்களாகவும், இலங்கையுடன் தொடர்புடைய ஐரோப்பியரது நினைவுக் குறிப்புகளாகவும் அமைந்தன. கொலனித்துவமானது ஐரோப்பிய இலக்கிய பாணிகளை ஒத்த சிங்கள இலக்கிய வகையினங்களை தோற்றுவித்தன: இவை முன்னைய இலக்கிய வகையினங்களை மாற்றீடு செய்தன. ஐரோப்பிய எழுத்தாளர்களது எழுத்துக்களை சற்று நுணுக்கமாக அணுகி, இவர்கள் எப்படிப்பட்ட பின்புலத்தில், எதை, ஏன் சொன்னார்கள் என்பவற்றை பரிசீலித்தோமானல், சிங்கள தேசியவாதத்தின் “வரலாற்றுத்தன்மை” பற்றிய சில வெளிச்சங்களைப் பெற்றுக் கொள்ளலாம். இவற்றுள் மிகவும் முக்கியமானதும், எமது விவாதத்திற்கு அதிக பயனுள்ளதாகவும் அமையக் கூடியது, ரொபர்ட் நொக்ஸ் (Robert Knox) எழுதிய ‘இலங்கையின் வரலாற்று உறவுகள்’ என்ற நூலாகும்.

நொக்ஸ் என்பவர் கிழக்கிந்திய கொம்பனியில் மாலுமியாக பணியாற்றியவர். இவரது கப்பல் கிழக்கிழங்கையின் கொட்டியாரக்குடாவில் கரை தட்டியபோது சிங்களவர்களால் 1660 இல் சிறை பிடிக்கப்பட்டார். இவர் கிட்டத்தட்ட இருபது வருடங்கள் கண்டிய மன்னனின் கைதியாக சிறை வைக்கப்பட்டிருந்தார். இதன்போது இவர் சிங்களத்தை நன்கு கற்று “கிட்டத்தட்ட சிங்களவர்களில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இருந்து வேறுபடுத்த முடியாதளவிற்கு" மொழியிலும், பழக்க வழக்கங்களிலும் தேர்ச்சி பெற்றிருந்தார். இவர் கண்டிய இராச்சியத்தில் பல்வேறு பிரதேசங்க ளிலும் வாழ்ந்திருந்தார். கண்டிய இராச்சியத்தின் சாதாரண விவசாயி போலவே வாழ்ந்த அவர், தனது வரையறுக்கப்பட்ட வாழ்க்கை நிலைமைகளுக்குள், ஊரூ ராக திரிந்து விற்பனை செய்யும் ஒரு வியாபாரியாக கணிசமானளவு பயணம் செய்திருந்தார். இவரது நூலானது கண்டிய இராச்சியத்தின் சமூக வரலாறு பற்றிய முதன்மையான மூலாதார நூலாக கருதப்படுகிறது. சப்ரமாது (Sapara madu) என்பவரது கருத்துப்படி, இலங்கை பற்றிய நூல்களுள் மிகவும் பக்க சார்பற்ற முறையில் எழுதப்பட்ட நூல் இதுவாகும். அலங்காரங்கள், உருவக ங்கள் போன்றவை அதிகம் இல்லாத உரைநடையில் இவரது நூல் எழுதப்ப ட்டிருந்தது. "இவரது எழுத்தானது வறட்சியான, விஞ்ஞான மனதின் தன்மையு டையதாகவும், தன்னிடம் இருந்த விடயங்களை இயன்ற வரையில் கவனமாக முன்வைக்க வேண்டும் என்ற அக்கறையில் எழுதப்பட்டதாகவும் இருந்தது" (லுடொவ்கி 1954:269). சிங்களவரது பூர்வீகம் பற்றி நொக்ஸ் பின்வருமாறு குறிப்பிடுகிறார்:

> **இவர்களது பூர்வீகம் என்னவென்று விசாரித்த போது, அதற்கான பதிலை கூற முடியாதவர்களாக அவர்கள் இருந்தார்கள். தமது பூமியில் முதலில் பிசாசுகள் குடியிருந்ததாகவும், அது பழங்கதையாகி நீண்டகாலம் ஆகிவி ட்டது என்றும் கூறினார்கள். (1966 (1681): 115).**

சில போர்த்துக்கேயரிடம் இருந்து நொக்ஸ் அவர்கள் விஜயனின் கதையின் சிறிது வேறுபட்ட ஒரு வடிவத்தில் ஏற்கனவே கேட்டிருந்தாலும் கூட, சிங்கள மக்களது பூர்வீகம் பற்றி இந்தளவு தகவலையே கண்டிய இராச்சியத்தில் அப்போது வாழ்ந்த குடியானவர்களிடம் இருந்து அவர் பெறக்கூடியதாக இருந் தது. இந்த கூற்றின் மூலமாக நொக்ஸ் அவர்கள், **கண்டிய சிங்கள மக்களிடம் பதினேழாம் நூற்றாண்டில் காணப்பட்ட "வரலாற்று பிரக்ஞை" பற்றி அதிகம் சொல்வதற்கு இருக்கவில்லை** என்றே படுகிறது. இந்த தகவலுடன் கூடவே, கண்டி இராச்சியம் தொடர்பாக நாமறிந்த ஏனைய தகவல்களையும் ஒப்பு நோக்கினால், இன்று குறிப்பிடப்படும் வரலாற்றுப் பிரக்ஞை என்பது அன்றைய சிங்களவர்களிடையே அறவே காணப்படவில்லை என்பது தெரிகிறது. தர்ம தாசா அவர்கள் குறிப்பிடுவது போல, பதினாறாம், பதினெட்டாம் நூற்றாண்டு களுக்கு இடைப்பட்ட காலத்தில் இலங்கையில் பௌத்த நிறுவனங்களும், பௌத்த இலக்கிய மரபும் பெரிதும் வீழ்ச்சி கண்டிருந்தது. கீர்த்தி சிறீ இராஜசிங்கன் அரியாசனம் ஏறிய பின்னரே இந்த நிலைமை சீர் செய்யப்பட் டன. (தர்மதாச 1972: 127: குமாரசாமி 1956 (1980): 12). கண்டிய மலைப்பிர தேசத்தில் இருந்த பௌத்த மடாலயங்களில் கற்பித்தல் நோக்கங்களுக்காக பயன்படுத்தப்பட்டதாக குமாரசாமி தரும் பட்டியலில் எந்தவொரு படைப்பு கூட "வரலாற்று" உள்ளடக்கத்தைக் கொண்டிருந்ததாக குறிப்பிட முடியாது (குமாரசுவாமி 1956 (1980): 50-51). நொக்ஸ் அவர்களுக்கு, படித்த பௌத்த துறவிகளையும் உள்ளடக்கியிருந்த கண்டிய மேட்டுக்குடியிடம் பெரிதாக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தொடர்பிருக்கவில்லை. ஒருவேளை அப்படிப்பட்ட தொடர்புகள் இருந்திருந்தால் இந்த படித்த பிரிவினரிடம் இருந்து சிங்களவரது கடந்த காலம் பற்றிய அவர் களது கருத்துக்களை பெற்றுக் கொண்டிருந்திருக்கலாம். நொக்ஸ் எழுதியதெ ல்லாம், அவர் பழகிய சூழலில், அவருக்கு கிடைத்த தகவல்களை அடிப்டை யாக கொண்டவையேயாகும்.

> நான் எழுதியதெல்லாம் நான் எனது சொந்த வாழக்கையில் உண்மை என்று உறுதிப்படுத்திக் கொண்டவையும், ... அல்லது உள்ளூர்வாசிகள மூலமாக பெற்றுக் கொண்ட, அவர்கள் தாம் உண்மை என்று உறுதியாக நம்பிய விடயங்கள் தொடர்பானவையும் ஆகும் (நொக்ஸ் 1966 (1681)).

நாம் இன்று குறிப்பிடும் அர்த்தத்தில் வரலாற்று பிரக்ஞையானது அந்த காலத்தில் சிங்கள மக்களிடையே இருந்திருக்குமாயின் நொக்ஸ் அவர்கள் தனது குறிப்புக்களில் சேர்த்துக் கொள்வதற்கான தகவல்களை அதிகளவில் பெற்றுக் கொண்டிருந்திருப்பார். ஆனால் வரலாற்று பிரக்ஞையானது, இன்று இருக்கும் கடுமையான எதிரெதிர் வடிவில் கண்டிய இராச்சியத்தில் இருக்க வில்லை (குணவர்தன 1984:29-32). கண்டிய இராச்சியமானது மன்னருக்கும், பிரதானிகளுக்கும் சேவை செய்வதை அடிப்படையாக கொண்ட சாதிய கட்ட மைப்பை கொண்ட சமூகமாக இருந்தது: பௌத்த மதத்தின்பால் இவர்கள் கொண்டிருந்த பற்றுறுதியானது இவர்கள் அனைவரையும் இணைக்கும் பொது வான அடையாளமாக இருந்தது. ஒரு நூற்றாண்டு காலம் தென்னிந்தியாவைச் சேர்ந்த நாயக்க அரச பரம்பரையினர் இந்த இராச்சியத்தை ஆண்டனர். இவர் களே நாட்டில் இருந்த ஒரேயொரு சத்திரிய சாதியைச் சேர்ந்தவர்கள் என்ப தால் இவர்களால் தொடர்ச்சியாக ஆட்சி செய்ய முடிந்தது. இங்கு அரசபதவி என்பது சடங்குரீதியிலான சாதிய அந்தஸ்தினால் நிர்ணயிக்கப்படுவதாக இருந் தது. ஆனால் பொது வாழ்வைப் பொறுத்தவரையில் இவர்கள் பௌத்தத்தை தழுவியவர்களாக இருந்தார்கள். இங்கு வலியுறுத்தப்பட வேண்டிய அம்சம் யாதெனில், கண்டியர்கள் **ஒரு தென்னிந்திய மன்னரை, அவர் பௌத்தம் என்ற பொது சமூக அடையாளத்திற்கு உட்பட்டவராக இருக்கும் வரையில், ஏற்றுக் கொள்ளத் தயாராகவே இருந்தார்கள். இப்படியான சந்தர்ப்பங்களில் ஒரு இந்து மன்னன், பௌத்த ஆட்சி அமைப்பு முறையை ஆட்சி செய்வது என்பது சகிக்க முடியாததாக இருந்திருக்கும்: ஆனால் ஒரு தமிழர் மன்னர் சிங்கள மக்களை ஆள்வதாக பிரச்சனை தோன்றியிராது.** நான் பின்வரும் பக்கங்களில் தொடர்ந்தும் விவாதிக்க இருப்பது போல, **பத்தொன்பதாம் நூற்றாண்டில்தான் இந்த அழுத்தமானது மதம் என்பதிலிருந்து மொழி தொடர்பானதாக மாறுகிறது.**

## சிங்கள அடையாளத்தின் வளர்ச்சி

"சிங்களம்" என்ற வகையினமானது (category) புறநிலை மற்றும் அகநிலை ஆகிய இரண்டையும் சார்ந்ததாகும். சிங்களவர்கள் தனியான கலாச்சார குழுமமாக இருப்பதனால் இது புறநிலையானதாக இருக்கிறது. இதன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எல்லைகளானவை பிரதானமாக மொழியினால் குறித்துக் காட்டப்படுகிறது. ஆனால் இந்த பிரச்சனையை சற்று ஆழமாக அணுகி, சிங்களவர் என்பது எவ்வாறு நிர்ணயிக்கப்படுகிறது என்பதற்கு விடைகாண முயன்றால், இங்குதான் பல்வேறு பிரச்சனைகள் தோன்றுகின்றன. இந்த பிரச்சனையானது கரவா சாதி யினர் தொடர்பான விடயத்தில் மிகவும் முனைப்பாகத் தெரிகிறது.

கரையார சாதியைச் சேர்ந்தவர்கள் சிங்களவர் மத்தியிலும் தமிழர் மத்தி யிலும் வாழ்கிறார்கள். இவர்களுள் ஒரு பிரிவினர் "சிங்களவர்கள்" ஆனமை இந்த விடயத்தின் அகநிலை மற்றும் புறநிலை சார்ந்த அம்சங்களின் முனைப் பான தன்மைகளை காட்டுவதாக அமைந்துள்ளது. இதில் புறநிலையான அம் சம் யாதெனில், சிங்கள தேசமாக நெய்யப்பட்ட பல்வேறு சமூகக் கூறுகளுள், கரையாரும் ஒரு பிரிவினராவர்: தம்மை சிங்களவர்களாக அடையாளப்படுத் தும் மக்கள் கூட்டமே இதுவாகும்: இதில் பொதிந்துள்ள அகநிலை அம்சம் யாதெனில், **ஆரம்பத்தில் தம்மை குறிப்பிட்ட ஒரு சமூகக் குழுவின் அங்கத்த வர்களாக இனம் காணாதவர்கள், ஒரு கட்டத்தில் குறிப்பிட்ட சமூகத்துடன் பகுதியாக இனம்காண தொடங்குகிறார்கள்.** அகநிலை என்பது 'நான்' என்ற பிரக்ஞையுடன் தொடர்புடையது: புறநிலை என்பது 'பிறர்' என்பதுடன் தொடர்பு டையது. ராகவனைப் (Raghavan) பொறுத்தவரையில் கரையார்கள் தென்னிந் திய கூலிப்படையினரின் வாரிசுகளாவர். இவர்கள் வரலாற்றின் முன்னைய காலங்களில் இருந்தே வரத்தொடங்கியவர்களாவர். கரையாரிடம் ஒரு மரபா ர்ந்த கதை இருக்கிறது. இதன்படி இவர்கள் மகாபாரதத்தில் காவியத்தில் வரும் கௌரவ குலத்தைச் சேர்ந்தவர்கள். பாரத யுத்தத்தில் பாண்டவர்க ளிடம் தோல்வியுற்ற பின்னர் இவர்கள் கலைந்து போய் எல்லா இடங்களுக்கும் பரவியதாக இது கூறும் (ராகவன் 1961:6) தற்போது பிரித்தானிய அருங்கா ட்சியகத்தில் வைக்கப்பட்டிருக்கும் 'முக்கர ஹட்டானா' என்ற பழைய சிங்கள குறிப்பின்படி, நீர்கொழும்பானது (தற்போதய கரவா மக்களின் பிரதான நகரம்) கோட்டையைச் சேர்ந்த மன்னன் நான்காவது பராக்கிரமபாகுவினால் (1412 - 1467) தென்னிந்தியாவில் இருந்து பணிக்கு அமர்த்தப்பட்ட கூலிப்படை வீரர்க ளுக்கு பரவேணி நிலமாக கொடுக்கப்பட்டுள்ளது. இந்த நாட்டில் குடியமர்த் தப்பட்ட இந்த கூலிப்படையினர் "படிப்படியாக தமது அயலவரின் மொழியை யும், கலாச்சாரத்தையும் ஏற்றுக் கொள்ளத் தொடங்கினார்கள்" (ராகவன் 1961:5). பத்தொன்பதாம் நூற்றாண்டில் இலங்கையில் புதிதாக மேலோங்கி வந்த புதிய மேட்டுக்குடியினரான கராவா சாதியைச் சேர்ந்த ஜெரொனிஸ் பீரிஸ் (Jeronis Peiris) என்பவர் பற்றி ரொபர்ட்ஸ் (Michael Roberts) அவர் கள் வாய்வழியாக வழங்கப்பட்டு வந்து ஒரு கதையை கூறுவார். இந்த குடும்பக் கதையின்படி ஜெரோனிஸ் பீரிஸ் உடைய தந்தையார் வட இந்தியா வைச் சேர்ந்த ராஜ்புட் மரவர் சாதியைச் சார்ந்தவர். இவர் கண்டிய அரசனான கீர்த்தி சிறீ இராஜசிங்கனது (1747 - 1782) கூலிப்படையினரின் தலைமை அதிகாரியாக இருந்தவராம். இவர் தனது பணிக்காலம் முடிந்த பின்பும் நாட்டி லேயே தங்கிவிட்டாராம்: கண்டிய உடை மற்றும் சிங்கள பெயர் போன்றவற் றையும் ஏற்றுக் கொண்டாராம் (ரொபர்ட்ஸ் 1975: 6). இது தொடர்பாக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ரொபர்ட்ஸ் குறிப்பிடும் போது "இவரது கதையானது, சிங்கள கரையாரிடையே பெருவழக்காக உள்ள இந்திய பூர்வீகம், சத்திரிய வம்சம் பற்றிய கருத்துக் களை மறுதலிப்பதாக இருப்பதாக சுட்டிக் காட்டுகிறார். **கரவா சாதியினர் தம்மை சத்திரியர்களாக இனம்காட்ட முனைவதானது, கொவிகம சிங்களவரது ஆதிக்க நிலைக்கு எதிரான கரவா சாதியினரின் எதிர்வினையாக குறிப்பி டுகிறார்.** இது தொடர்பாக நாம் இன்னமும் விரிவாக கீழே பார்க்கலாம். கரவா சாதியினரின் ஒன்றுகலத்தல் மற்றும் மாற்றமடைவது என்ற போக்கானது இப்போதும் தொடர்ந்து கொண்டே இருக்கிறது. கத்தோலிக்க மதத்தைச் சேர்ந்த மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் கராவா சாதியி னரிடையே ஆய்வை மேற்கொண்டு ஸ்டிரார்ட் (Stirret) என்பவரது அவதானி ப்பின்படி, இவர்கள் கடலிலும் வீட்டிலும் தமிழை பேசுகிறார்கள்: சந்தையிலும், அன்றாட பொது விடயங்களில் மற்றவர்களோடு தொடர்பாட சிங்களத்தை பயன்படுத்துகிறார்கள். ... அறுபதுகளின் ஆரம்பத்தில் இருந்து சிங்களம் அதிகளவு முக்கியத்தை பெற்று வருகிறது. ... இந்த போக்கை கத்தோலிக்க ஆலயங்கள் ஊக்கப்படுத்துகின்றன. பௌத்த கரையாரைப் பொறுத்தவரையில் அவர்கள் முற்றிலும் "சிங்களவர்கள் ஆகிவிட்டார்கள்".

மதம் என்ற அம்சமானது கரையாரது வகையினங்களின் வரையறைகளை இன்னமும் தெளிவற்றதாக ஆக்குகிறது. கரையார் என்ற பதமானது கத்தோ லிக்க, புரொடெஸ்தாந்த, இந்து, பௌத்த அனைத்து வகையினரையும் உள்ளட க்கக் கூடியதாகும். கத்தோலிக்க கரையார்கள் கொழும்பின் வடக்கே சிலாபம் வரையான கரையோரங்களில் பெரும்பாலும் செறிவாக வாழ்கிறார்கள். இவர் கள் போத்துக்கீசரினால் மதமாற்றம் செய்யப்பட்டவர்கள். பௌத்த கரையார் கள் தெற்கு, தென்மேற்கு கரையோரங்களில் செறிவாக வாழ்கிறார்கள். இந்து கரையார்கள் தமிழ் சமூகத்துடன் இணைந்து வாழ்கிறார்கள். நவீன இலங்கை யில் தமிழ் பௌத்தர்கள் மற்றும் சிங்கள இந்துக்கள் என்ற வகையினங்கள் காணப்படவில்லை. ராகவனது கருத்துப்படி, "பாதுகாக்கப்பட்ட போர்த்துக்கீச தோம்புகளில் (காணிப்பதிவு பத்திரங்கள் - tombo) புறச்சமயம் சார்ந்த ("Pagan") பெயர்கள் இருப்பதானது, நீர்கொழும்பிலும், ஏனைய பகுதிகளிலும் உள்ள கரையார்கள் மதமாற்றத்திற்கு முன்பு இந்துக்களாக இருந்திருக்கலாம் என்பதற்கு சான்றாக அமைகிறது" (ராகவன் 1961:31).

மைக்கல் ரொபர்ட்ஸ் உடைய கருத்தின் படி, பத்தொன்பதாம் நூற்றாண்டி லும் மற்றும் இருபதாம் நூற்றாண்டின் முன் பகுதியிலும் கரவா மற்றும் கொவி கம சாதியினருக்கு இடையில் தான் குழுக்கள் என்ற வகையில் பிரதான சமூக ஊடாட்டம் நடைபெற்றது. எண்ணிக்கையினாலும், அந்தஸ்த்தினாலும் கொவிகம சாதியினர் சிங்கள சாதிய படிநிலை அமைப்பில் மிகவும் பலமான நிலையில் இருந்தார்கள். "தனிச்சலுகை பெற்ற நிலையில் இருந்த கொவிகம சாதியினரை வெல்வதே வளர்ந்துவரும் புதிக கரவா மேட்டுக்குடியின் பிரதான இலக்காக இருந்தது" (ரொபர்ட்ஸ் 1982:290: ரயன் 1953:332-33). பிரித்தானியரது ஆட்சியின் கீழ் வழங்கப்பட்ட பொருளாதார வாய்ப்புக்களை பற்றிக் கொண்டே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கராவா சாதியினர், சாதி அடுக்கமைவில் உயர்வான அந்தஸ்த்து நிலையை வந்தடைந்தார்கள். பத்தொன்பதாம் நூற்றாண்டில் நடைபெற்ற பௌத்த மறு மலர்ச்சி இயக்கத்திலும் முக்கியமாக காரணியாக விளங்கினார்கள். வரலாற்று விபத்தாக, டச்சுக்காரரது வருகையானது இந்த கரையாரை, சிங்களவரது பக்க த்திற்கு கொண்டு வந்து சேர்த்திருக்கலாம் என்ற கருத்தொன்று ரொபர்ட்ஸ் வாதங்களில் உள்ளோட்டமாக காணப்படுகிறது:

> கரையோர பிரதேசங்களில் போர்த்துக்கீசர்களது ஆட்சியானது தொடர்தி ருக்குமானால், பெரும்பான்மையினரான கரையார்கள் கத்தோலிக்கர்க ளாகவே இருந்திருப்பார்கள்: இதனால் ஒருவித மைய நோக்குவிசை செயற்பட்டு இவர்களை மேல்நிலையாக்கத்திற்கு வழி வகுத்திருக்கலாம். பதினெட்டாம் நூற்றாண்டிலும் அதற்கு பிந்திய பகுதியிலும் சிங்கள மக்கள் ஒன்றாக இணைவதும், ஒன்று கலப்பதும் இப்படியாகவே நடந்தேறியது (ரொபர்ட்ஸ் 1982:285)

கரையார் எப்படிப்பட்ட நிகழ்வுப்போக்கினால் சிங்களவர்களானார்கள் என்பது தொடர்பாக விரிவாக விவாதிப்பதற்கு இங்கு போதிய சந்தர்ப்பம் இல்லை. ஆனால் நாம் இங்கு சில விடயங்களை குறித்துக் கொள்வது முக்கி யமானதாகிறது. சிங்கள மக்கள் வாழ்ந்த பிரதேசங்களில் வாழ்ந்த கரையா ர்கள் மட்டுமே "**சிங்களமயப்படுத்தப்பட்டார்கள்**" என்பது மிகவும் வெளிப்படை யானது. குறிப்பிட்ட ஒரு மொழியை ஏற்றுக் கொள்வதானது, காலப்போக்கில் ஏனைய கலாச்சார அம்சங்களையும் ஏற்றுக் கொள்வதற்கான ஒரு பாலமாக அமைந்துவிடுகிறது.

> சிங்கள மொழியானது மேல்நிலைக்கு வர, பல பழங்குடிகள் சார்ந்த (ஊர் வழக்கில் இருக்கும் - indigeneous) கலாச்சார நடைமுறைகள் (உதாரண மாக குணமளிக்கும் சடங்குகள்) விரிவாக பின்பற்றப்பட தொடங்கின. கத்தோலிக்கர்களின் பெரும்பான்மையானோர் கூட இந்த உள்ளூர்மயமாத லில் இருந்து தப்பிக்கவில்லை (ரொபர்ட்ஸ் 1982: 3).

இந்த போக்கானது இன்னமும் தொடர்வதாக ஸ்ரிராட் (Stirrat) என்பவர் காட்டுகிறார். இந்த கரையாரது ஒன்று கலத்தலானது, **சிங்கள அடையாளம் என்பதானது, ஒரே கல்லில் செதுக்கியது போல ஓரேவகையான, பிளவுகள், சேர்க்கைகளற்ற ஒன்றல்ல** என்பதைக் காட்டுகிறது. சிங்களவர்கள் ஒரு கலாச்சார, மொழி சார்ந்த சமூகம் என்பதையும், அது பல நூற்றாண்டு காலமாக குடிபெயர்ந்து வந்த பல்வேறு குழுக்களையும், இவர்களில் பெரும் பான்மையினரானவர் இந்தியாவில் இருந்து குடிபெயர்ந்தவர்கள், அதிலும் குறிப்பாக தென்னிந்தியாவில் இருந்து குடிபெயர்ந்தவர்கள் முதன்மையானவ ர்கள், இவர்களையும் உள்வாங்கி, ஒன்று கலந்துதான் இந்த சிங்கள அடையா ளம் உருப்பெற்று வந்துள்ளது என்பதையும் காண முடிகிறது. இந்த ஒன்றுகல க்கும் நிகழ்வுப்போக்கானது இப்போதும் தொடர்ந்த வண்ணமே இருக்கிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இப்போது ஒன்று கலத்தலுக்கான சாதனமாக மதத்திற்குப் பதிலாக மொழி அமைகிறது. சிங்களவர்கள் மாத்திரம் என்ற வரையறையானது மேற்கொண்டும் பௌத்தர்களை மாத்திரம் உள்ளடக்கும் ஒரு வரையறையாக அமையவில்லை. யாரெல்லாம் தமது தாய்மொழி சிங்களம் என்று தோறாயமாக (Putative) சொல்லக் கூடியவர்களாக இருக்கிறார்களோ, இவர்களையெல்லாம் உள்ளடக்கும் விதமாக இது அமைந்துள்ளது. சிங்களவர்களில் மிகப் பெரும்பாலானவர்கள் பௌத்தர்களாக இருப்பதனால் பௌத்தமானது சிங்கள அடையாளத்தை நிர்ணயிப்பதில் மிகவும் அடிப்படையானதும், முக்கியமானதுமான பாத்திரம் வகிக்கிறது என்பது உண்மையே. ஆனால் இது சிங்களவர்கள் என்ற வகையினத்தை நிர்ணயிப்பதில் ஆதிக்கம் செலுத்தும் வகையினமாக இல்லை என்று நான் வாதிடுவேன். இந்த விடயங்கள் மகாவம்சத்தால் முன்வைக்கப்படும் சம்பவங்களுடன் முரண்படுகின்றன. மகாவம்சத்தைப் பொறுத்தவரையில், அதில் நடைபெறும் போராட்டங்கள் பௌத்தர்களுக்கும், அதனை விசுவாசிக்காதவர்களுக்கும் இடைப்பட்டதாகும். நவீன இலங்கையில் நடைபெறுவதோ சிங்களவர்களுக்கும் தமிழர்களுக்கும் இடைப்பட்ட போராட்டமாகும். **ஆய்வுச் சட்டகத்திலேயே ஒரு மாற்றம்** (Paradigm shift) நடந்தேறியிருக்கிறது. அது எவ்வாறு நடந்தேறியது என்பதில்தான் நாம் இனிமேல் கவனத்தை குவிப்போம்.

## சிங்கள தேசியவாதமும், பௌத்தத்தில் மாற்றமும்

ஒரு குறிப்பிட்ட சமூகத்தின் கலாச்சாரப் பொதியிலுள்ள எந்தெந்த குறிப்பான அம்சங்கள் முன்னணிக்கு கொண்டு வரப்படுகின்றன என்பதை புரிந்து கொள்வதற்கு, அந்த முன்னணிக்கு கொண்டு வரப்படும் செயல் நடைபெற்ற சமூகச் சூழலை சரிவர புரிந்து கொள்வது அவசியம் என்று நான் இந்த கட்டுரையில் முன்னரே வாதிட்டுள்ளேன். ஒல்லாந்தர் காலத்திலிருந்து சமூக, பொருளாதார தளங்களில் இலங்கையில் நடைபெற்ற அடிப்படையான மாற்றங்கள் இந்த நோக்கில் கவனிக்கப்பட வேண்டிய முக்கியமான அம்சமாகும். இப்படிப்பட்ட மாற்றங்களினூடாக, அப்போது நடப்பிலிருந்த நிலப்பிரபுத்துவ உறவுகளானவை, புதிய முதலாளித்துவ உறவுகளினால் பிரதியீடு செய்யப்பட்டன: இதன் மூலமாக புதிய மேட்டுக்குடியொன்று உருப்பெற்று அரங்கிற்கு வந்தது. இந்த மாற்றமானது பௌத்தம் பற்றிய சிங்களவர்களது கருத்தோட்டத்தில் முக்கியமான மாற்றங்களை உருவாக்கியது. பத்தொன்பதாம், இருபதாம் நூற்றாண்டுகளில் **பொருள்வகை அடித்தளத்தில் நடைபெற்ற இந்த மாற்றமானது சிங்களம் பேசும் மக்களிடையே கூட்டான பிரக்ஞையை மறுவரையறை செய்வதில் முக்கிய பாத்திரம் வகித்ததாக** நான் இந்த பகுதியில் வாதிடப் போகிறேன். இந்த காலகட்டத்தில் சிங்களவர்களது சுய-அடையாளமானது பௌத்தர்கள் - மதத்தை முதன்மையாக கொண்டது - என்ற நிலையில் இருந்து, **சிங்களவர்கள் - மொழியை** முதன்மையாக கொள்ளும் அர்த்தத்தில் - என மாறியது. **இந்த அடையாளப்படுத்தலில் மதம் என்பதை தள்ளிவிட்டு மொழி என்பது முனைப்பான அம்சமாக மாறியது.** கடந்த பத்தாண்டுகளில் நடைபெற்றவை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இதே விடயத்தை இன்னும் பலப்படுத்த உதவியுள்ளது. 1950 களில் பிரய்ஸ் ரயன் (Bryce Ryan) என்பவர் சுட்டிக்காட்டிய நிலைமைகளில் இருந்து வேறுப ட்டதாக, அதாவது சாதிய, மதப் பிளவுகள் தற்காலிகமாகவாவது பின்தள்ளப் பட்டுள்ளன. சிங்களம் பேசும் பௌத்தர்கள் தங்களை தொடர்ந்தும் சிங்கள பௌத்தர்களாகவே கருதிவருகின்ற போதிலும் கூட, அவர்கள் பௌத்த மதத் தைச் சாராத சிங்களவர்களை சிங்கள மொழி பேசுபவர்களாக ஏற்றுக் கொண் டுள்ளார்கள். சிங்கள முதலாளி வர்க்கத்தில் கிறீஸ்தவர்களது விகிதாசாரம் அவர்களது குடிசன விகிதாசாரத்தை விட மிகவும் வேறுபடுவது ஒன்றும் தற்செயலான நிகழ்வல்ல. இன்றைய சொல்லாடலானது அகன்ற-சிங்கள அடை யாளத்தை (Pan-Sinhalese Identity) வலியுறுத்துகிறது.

பொருள்வகை அடித்தளம் என்பது வெறுமனே தொழில்நுட்பம் மற்றும் “பொருள்வகை” அம்சங்களை மாத்திரம் குறிப்பதல்ல. மனித செயற்பாடு என்பதே ஒருவித பொருள்வகை அம்சமேதான். மார்க்ஸ் அவர்கள் தனது ‘ஜெர்மன் சித்தாந்தம்’ என்ற நூலில் பின்வருமாறு குறிப்பிடுகிறார். **“செயலூக் கமுள்ள, யதார்த்தமான மனிதர்கள் என்பவர்கள் உற்பத்தி சக்திகளில் ஏற்ப டும் திட்டவட்டமான வளர்ச்சிகள் மற்றும் அவற்றுடனான உறவுகள் என்பவற் றால் வரையறுக்கப்படும் போதிலேயே, தமது சிந்தனைகள், கருத்துக்கள் ஆகி யவற்றின் படைப்பாளிகளும் ஆவர்”.** மார்க்சைப் பொறுத்தவரையில் “உற்பத்தி சக்திகள்” என்பவை “மனித பிரக்ஞைக்கு அப்பாற்பட்ட புறநிலையான உண் மைகள் அல்ல”, மாறாக, அவிநெரி (Avineri) என்பவரது வார்த்தைகளில் கூறுவதானால் **“மனித செயற்பாடு மற்றும் மனித பிரக்ஞையின் ஒழுங்கமைப்பு களும் பொருள்வகை அம்சங்களேயாகும். ... இதன் விளைவாக பொருள்வகை அடித்தளத்திற்கும், “மேற்கட்டுமானத்திற்கும்” இடையிலான வேறுபாடுகள் தெளிவற்றதாகின்றன. அதாவது, மனித வாழ்க்கை நிலைமைகளை உருவா க்குவதற்கும், அவற்றை தொடர்ந்து பேணுவதற்கும் அவசியமான மனிதரது பிரக்ஞைபூர்வமான செயற்பாட்டிற்கும், இந்த குறிப்பான வடிவிலமைந்த செயற் பாடுகளை நியாயப்படுத்துவதற்கும், முறைமைப்படுத்துவதற்கும் அவசியமான பகுத்தறிவு மற்றும் நியாயங்களை வழங்கும் மனித பிரக்ஞைக்கும் இடையி லான வேறுபாடுகள் மங்குகின்றன”** (அவிநெரி 1968:76). மார்க்சின் கருத்து ப்படி, ஒவ்வொரு தலைமுறையும் அதன் முன்னைய தலைமுறையிடம் இருந்து “பெருமளவிலான உற்பத்தி சக்திகள், மூலதனம், மற்றும் வாழ்க்கை நிலைமை களை கைவரப்பெறுகின்றன. ... புதிய தலைமுறையானது இவற்றை மாற்றிய மைக்கும் பொழுதிலேயே... வாழ்க்கையின் திட்டவட்டமான வளர்ச்சிக்கான நிலைமைகளையும், குறிப்பான பண்புகளையும் முன்மொழிகிறது. ... அதாவது **சூழ்நிலைகள் மனிதரை உருவாக்கும் அதே சமயத்தில் மனிதரும் தம்பங்கிற்கு சூழ்நிலைகளை உருவாக்குகிறார்கள்**” (in Tucker 1972 ˙ 128-129). ஒவ்வொரு தலைமுறையும் சமூக மறுஉற்பத்தியை ஒழுங்கமைக்கும்போதே, அது தொடர் பான குறிப்பிட்ட வடிவிலமைந்த அறிவார்ந்த புரிதலையும் உருவாக்கிக் கொள் கிறது: தான் எவற்றை கைவரப்பெற்றதோ அவற்றின் மேலேயே இந்த புரித லையும் கட்டிச் செல்கிறது. பழைய சிந்தனைகள் புதிய சிந்தனைகளால்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பிரதியீடு செய்யப்படும் போதிலேயே, பழைய சிந்தனைகள் புதிய சிந்தனைக ளின் வெளிச்சத்தில் மீள்-அர்த்தம் செய்யவும் படுகிறது. பல்வேறுதரப்பட்ட சிந்தனைகளுக்கு இடையிலான முரண்பாடானது சமூக, அரசியல் காரணிகளின் தாக்கத்தினால் அடிக்கடி தீர்வு காணப்படுகிறது. பத்தொன்பதாம் நூற்றா ண்டில் நடைபெற்ற சிங்கள தேசியவாதத்தின் வளர்ச்சியானது இந்த விதமான வளர்ச்சிப் போக்கிற்கு ஒரு வகைமாதிரியான உதாரணமாக அமைகிறது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பின் அரைப்பகுதியில் நிலப்பிரபுத்துவ சமூக த்திலிருந்து பண்ட உற்பத்தி அடிப்படையாகக் கொண்ட ஒரு சமூதாயத்தி ற்கான மாற்றமானது மிகவும் முன்னேறிய நிலையில் இருந்தது. பிரித்தானியா விலிருந்த இங்கு குடியேறியிருந்த முதலாளி வர்க்கத்துடன் உற்பத்தி சாதன ங்களின் கட்டுப்பாட்டை - முதன்மையாக பெருந்தோட்டத்துறையில் - பகிர்ந்து கொள்ளும் ஒரு உள்ளூர் முதலாளி வர்க்கமானது உருவாகியிருந்தது. இந்த மாற்றமானது குறைந்த பட்சம் ஒல்லாந்தர் காலத்திலிருந்தே தொடங்கியி ருந்தது (கொத்தலாவலை 1967). பத்தொன்பதாம் நூற்றாண்டில் கரையோரப் பிரதேசங்களில் இருந்த ஒல்லாந்தரது நிர்வாகமானது கடைப்பிடித்த கொள் கைகளின் விளைவாக வர்த்தக முதலாளித்துவத்தில் அனுபவமுள்ள உள் ளூர் மக்கள் பிரிவொன்று உருவாகியிருந்தது. அத்துடன் சில தனிநபர்க ளாலும், குடும்பங்களினாலுமான இந்த பிரிவானது இலகுவில் பணமாக மாற்ற ப்படக் கூடியதும், இலகுவில் பணமாக மாற்ற முடியாததுமான சொத்துக்க ளாலான பெருமளவு மூலதனத்தையும் கொண்டிருந்தது: இந்த மூலதனத்தை இந்த பிரிவானது புதிய வாய்ப்புகளை நோக்கி நகர்த்தக் கூடிய நிலையில் இருந்தது (ரொபர்ட்ஸ் 1979b: 159). பிரித்தானியரது காலகட்டமானது இந்த முதலாளி வர்க்கமும், அவர்களது மூலதனமும் வளர்ச்சியடைவதற்கான வாய்ப்புகளை வழங்கியது. ஆங்கிலக் கல்வியை கற்றவர்களாகவும், கிறீஸ்தவ மதத்திற்கு மாறியவர்களாகவும் பெரும்பாலும் இருந்த இந்த மேட்டுக்குடி பிரிவானது இன, சாதிய, மத பிரிவுகள் அனைத்தையும் ஊடறுத்து செல்வதாக இருந்தது.

இந்த வளர்ந்துவரும் மேட்டுக்குடியானது பெற்றுக் கொண்ட செல்வமானது, அது தன் அந்தஸ்தை திடப்படுத்திக் கொள்வதற்கான வழிமுறைகளுடன் நெருக்கமான தொடர்புடையதாக இருந்தது. கொலனித்துவ நிர்வாகத்தாலும், மிசனரியினராலும் நடத்தப்பட்ட ஆங்கில மொழி மூலமான கல்வியே அந்த சாதனமாகும். இந்த பாடசாலைகளில் கல்வி கற்றவர்கள் ஆங்கிலமொழி, ஆங்கில பழக்கவழக்கங்கள், ஆங்கில சிந்தனைகள், ஆங்கில நாகரீகம், ஆங் கில உடைகள் போன்ற அனைத்தையும் கடைப்பிடித்தார்கள். ஆனால் அவர்க ளால் ஒருபோதும் ஆங்கிலேயர்களாக மாறிவிட முடியவில்லை. இலங்கையில் இருந்த **பிரித்தானிய தரகுமுதலாளிகளுக்கு கீழ்ப்பட்டவர்களாகவே இவர்கள் தொடர்ந்தும் இருந்து வந்தார்கள்** (ரொபர்ட் 1979டி:153).

பத்தொன்பதாம் நூற்றாண்டில் கிறீஸ்தவ மிசனரிமார்களது தீவிரமான



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மதத்தைப் பரப்பும் நடவடிக்கைகள் உள்ளூர் மக்களது பிரக்ஞையை உருவாக்கும் முக்கிய காரணியாக இருந்தது இந்த கிறீஸ்தவ மிசனரிமாரின் நோக்கங்கள் பற்றி கொழும்பு பைபிள் சங்கத்தினரால் பின்வருமாறு இரத்தி னச் சுருக்கமாக கூறப்பட்டிருந்தது: "உருவ வழிபாட்டிற்கு பலியாகிப்போன அப்பாவிகளை மீட்டெடுப்பது, பெயரளவிலான கிறீஸ்த்தவர்களை தேவவாக் கிற்கு உண்மையான விசுவாசிகளாக மாற்றுவது, உண்மையான விசுவாசிக ளுக்கு அவர்களது வாழ்வின் பணிகளை அறிவுறுத்துவது" (மலாங்கொட என்பவரால் மேற்கோள் காட்டப்பட்டபடி). ஒல்லாந்தரே முதன்முதலாக 1736 இல் சிங்கள அச்சகத்தை முதலில் அமைத்திருந்த போதிலும், பிரித்தானிய மிசனரிமாரே அதனை மிகுந்த ஆவலுடன் பயன்படுத்தலானார்கள். இவர்கள் தமது விசுவாசிகள் வாசிப்பதற்கான விடயதானங்களை உருவாக்கியதுடன் நின்றுவிடாமல், பௌத்த மதத்தின் மீதான தாக்குதலை தொடுக்கலானார்கள்:

> மிசனரிமாரது பிரச்சார வெளியீடுகள் இலங்கையில் மிகவும் விரிவாக சுற்றுக்கு விடப்பட்டது: நாற்பது வருடங்களுக்கு மேலாக இவர்களுக்கு பௌத்தர்களிடம் இருந்து போட்டியே இருக்கவில்லை. இவர்களால் வெளி யிடப்பட்ட பிரசுரங்களது எண்ணிக்கைகள் பற்றி திட்டவட்டமான தகவல்கள் இல்லாத போதிலும், 1849-61 இடைக்காலத்தில் பதினைந்து இலட்சம் பிர திகள் அச்சிடப்பட்டிருப்பதாக மொர்டோக், நிக்கல்சன் (Murdoch and Nicholson) ஆகியோர் மதிப்பிட்டுள்ளார்கள். இந்த பிரசுரங்களது விரி வான பரவலானது கிறீஸ்தவ மிசனரிமாரது நோக்கத்தை - மதம் மாற்றத் திற்கு உதவுவது - நிறைவேற்றியதா என்பதைவிட, அது பௌத்தர்களை, உடனடியாக இல்லாவிட்டலும் கூட சற்று காலம் கடந்தாவது, செயற்படு மாறு தூண்டி விட்டது என்பதிலேயே இதன் முக்கியத்துவம் அடங்கியிரு க்கிறது. பௌத்தர்கள் மிசனரிமாரை அவர்களது தளத்திலேயே முகம் கொடுக்கலானார்கள் (மலகொட 1973:181).

தம்மீதான தாக்குதல்களை பௌத்தர்கள் மூன்று முனைகளில் முகம் கொடுக்கலானார்கள்: பிரசுரங்கள், பிரசங்கங்கள் மற்றும் விவாதங்கள் வாயிலாக, மற்றும் கல்வியின் மூலமாக இவர்கள் பதிலடி கொடுக்கத் தொடங்கினார்கள். கொழும்பில் முதலில் ஒரு அச்சகம் 1855 இல் நிறுவப் பட்டது. பின்பு காலியில் 1862 இல் இன்னொன்று தொடங்கப்பட்டது. இந்த அச்சகங்கள் பௌத்த மதம் தொடர்பான பிரசுரங்கள், விவாதங்கள், சஞ்சி கைகள் போன்றவற்றை வெளியிடுவதற்கென்றே முற்றாக செயற்பட்டன (மலகொட 1973:191-3). 1860 களில் நன்கு ஒழுங்கமைந்த **அச்சு சாதனங்கள்** மூலமாக பதில் கொடுப்பதுடன் நின்றுவிடாது, பௌத்த மறுமலர்ச்சியை முன்னெடுத்த பௌத்த பிக்குகள் மிசனரிமாருடன் பகிரங்கமான தொடர்விவா தங்களை ஏற்பாடு செய்து நடத்தினார்கள்: 1873 இல் கொழும்பிற்கு தெற்கே உள்ள பாணத்துறை நகரத்தில் நடைபெற்ற விவாதமானது மிகவும் பிரபல்ய மானது. இவற்றில் ஈடுபட்ட "துறவி புத்திஜீவிகளுள்" மிகட்டுவட்ட குணானந்த தேரரும் (Ven Migettuwatte Gunananda), ஹிக்கடுவ சிறீ சுமங்கல தேரரும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



(Ven Hikkaduve Sri Sumangala) மிகவும் முக்கியமானவர்கள். இவர்களே பிற்காலத்தில் அநகாரிக தர்மபாலாவின் வழிகாட்டிகளாக விளங்கினார்கள்.

கல்வி என்பதுதான் பௌத்தர்களது பலவீனமான பகுதியாக இருந்தது. பௌத்த கோயில்களில் அமைந்திருந்த சில பாடசாலைகள் பெரிய மிசனரி பாடசாலைகளுடன் அந்தஸ்த்து அளவில் போட்டியிட முடியாதனவாக இருந் தன. அக்காலத்தில் பலரும் தேடிச் சென்ற "விஞ்ஞானபூர்வமான" கல்வியை இவற்றால் வழங்கவும் முடியவில்லை. 1880 இல் பிரம்மஞான சமூகத்தைச் (Theosophical Society) சேர்ந்த கேர்ணல் ஒல்கொட் (Colonal Olcott) என்பவரும், மெடம் பிலாவட்ஸ்கி (Madame Blavatsky) என்பவரும் இலங்கை க்கு வரும் வரையில் இந்த நிலைமைகளில் அதிகம் மாற்றம் ஏற்படவில்லை. "1873 இல் பாணத்துறையில் நடைபெற்ற பிரபல்யமான பகிரங்க விவாதமே கேர்ணல் ஒல்கொட் அவர்களை பௌத்த மதத்தை தழுவும் படி ஆழமாக செல்வாக்கு செலுத்திய அம்சமாக இருந்து" என கிர்திசிங்க மற்றும் அமர சூரிய (Kirthisinghe and Amarasuriya) ஆகியோர் தெரிவிக்கின்றனர் (1981:3). ஒல்கொட் அவர்கள் இலங்கையில் பன்னிரண்டு கல்லூரிகளையும், நானூற்றி ற்கு அதிகமான பாடசாலைகளையும் நிறுவியதாக கூறப்படுகிறது (கிர்திசிங்க வும், அமரசூரியவும் 1981:11).

எப்படியிருப்பினும் பௌத்த மறுமலர்ச்சியில் மிகவும் முக்கிய பங்காற்றிய முதன்மையான நபர் அநாகரிக தர்மபால அவர்களேயாவார். இவர் கிராமப் புறத்திலிருந்து கொழும்பிற்கு நிரந்தரமாக குடிபெயர்ந்து, அங்கு வசதி வாய்ப் புக்களை பெருக்கிக் கொண்ட ஒரு தீவிர பௌத்த குடும்பத்தில் பிறந்தவர். தனது ஏனைய மேட்டுக்குடி சகாக்களைப் போலவே இவரும் மேற்கத்தைய கல்வியை பெற்று, பெரிதும் அதன் செல்வாக்கு உட்பட்டு, அதனால் வடிவா க்கம் செய்யப்பட்டவர். பௌத்த மறுமலர்ச்சியில் பெரிதும் பங்குகொண்ட ஒரு குடும்பத்தில் வளர்ந்த இவர், தனது இளமைப் பருவத்திலேயே மிகெட்டுவட்ட குணானந்த தேரர் மற்றும் ஹிக்கடுவ சிறீ சுமங்கள தேரர் ஆகியோரது செல்வாக்கிற்கு உட்பட்டவராக இருந்தார் (ஓபயசேகர 1976:229). இவரது வாழ்க்கை பற்றி நான் இங்கு அதிகம் விபரிக்கப் போவதில்லை. ஆயினும் சிங்கள சுய-அடையாளத்தை உருவாக்குவதில் இவரது பங்கு பற்றி இங்கு நான் பேசியாக வேண்டியுள்ளது.

தர்மபாலா அவர்கள் பௌத்த முதலாளித்துவ வர்க்கத்தினது மேல்நோக்கிய அசைவியக்கத்தால் மாத்திரமன்றி, **ஆசிரியர்கள், ஆயுர்வேத மருத்துவர்கள், கீழ்நிலை அரச அதிகாரிகள், பௌத்த பிக்குகள் ஆகியோரை உள்ளடக்கிய சிங்கள கிராம புத்திஜீவிகள்** என்போராலும் அதிகம் செல்வாக்குக்குட்படுத் தப்பட்டார் (ஒபேசேகர:1976:244). இந்த பிரிவினரே கிராம மட்டத்தில் சொல் லாடல்களை உருவாக்கி ஆதிக்கம் செலுத்துவதுடன், கிராம மக்களுக்கு தலைமையும் வழங்குபவர்களாவர். சிங்கள மக்களுக்கு அவர்களது சிங்கள அடையாளம் தொடர்பாக ஒரு பெருமித உணர்வை தர்மபால அவர்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வழங்கினார்: இதற்கு ஒபேசேகரா வழங்கும் உதாரணத்தை பார்ப்போம். தர்ம பாலவின் போதனைகளின் உடனடி விளைவாக "பெருமளவிலான பெயர் மாற்ற ங்கள் இடம் பெற்றன. ... 1930களில் கிறீஸ்தவர்கள் உட்பட எல்லா சிங்கள பெற்றோர்களும் தமது பிள்ளைகளுக்கு சிங்கள அல்லது பௌத்த பெயர் களை வைத்தனர்" (1976:245).

தர்மபாலவின் மீது இருந்த மேற்கத்தைய செல்வாக்கானது பௌத்த பண்பு களுடன் மேற்கத்தைய விழுமியங்களை இணைத்துக் கொண்டதில் மட்டு மல்லாமல், சிங்கள அடையாளப்படுத்தலில் மேற்கத்தைய சிந்தனைகளை இணைத்துக் கொண்டதில் அடங்கியிருந்தது. சிங்களவர்களது "ஆரிய மூலம்" பற்றிய நம்பிக்கையைப் பற்றி ஏற்கனவே பார்த்திருந்தோம். அவர் மேற்கத் தைய சிந்தனையான '**தேச-அரசு**' என்பதை ஏற்றுக் கொண்டிருந்தார். ஆனால் அதனை அவர் சிங்களவர்களுடன் மாத்திரம் அடையாளப்படுத்தினார். இவர் தனது வாதங்களிலும், எழுத்துக்களிலும் "**மண்ணின் மைந்தர்களான" "தூய சிங்கத்தின் வாரிசுகளான சிங்களவர்**" மாத்திரமே உரிமைக்குரியவர்களாக இருந்தார்கள். ஏனைய இதே மண்ணில் பிறந்த சிறுபான்மை சமூகத்தைச் சேர்ந்தவர்களுக்கு சமத்துவமான உரிமையை சில சந்தர்ப்பங்களில் பகிரங் கமாகவும், பல சந்தர்ப்பங்களில் அவ்வளவு வெளிப்படையாக இல்லாத முறையிலும் மறுத்தார் (தர்மபால 1965:483). இப்போது "ஆரிய கோட்பாடா னது" சிங்கள முதலாளித்துவ வர்க்கத்தின் பிரக்ஞையில் நன்கு பதிந்து விட்டிருக்கிறது. இத்தோடு சர்வதேச செய்தி ஊடகங்களிலும்தான் என்பதை நாம் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

கிறீஸ்தவர்களது தாக்குதல்களில் இருந்து பௌத்தத்தை பாதுகாப்பது என்ற நோக்கில் தொடங்கிய பௌத்த மறுமலர்ச்சி இயக்கமானது, சிங்கள வரது பிரக்ஞையை உருவாக்கும் ஒரு சாதனமாக மாற்றமடைந்து, அதன் ஆரம்பத்திலிருந்ததை விட மிகவும் வேறுபட்ட வடிவில் வந்து நிற்கிறது. பௌத்த மறுமலர்ச்சிக்கான கோரிக்கையானது, பௌத்த மக்களைக் கடந்து போய் அனைத்து சிங்களம் பேசுபவர்களையும் உள்ளடக்கும் விதத்தில் போய் முடிந்ததை அடுத்து வந்த இருபதாம் நூற்றாண்டின் வரலாறு எடுத்துக் காட்டுகிறது. நவீன சிங்கள சமூகத்தை உருவாக்கும் பிரதான பாத்திரத்தை இது ஆற்றியது. கிறீஸ்தவத்தின் பொதுவான செல்வாக்கானது இவர்களுக்கு ஒரு அமைப்புவடிவ மாதிரியை வழங்கியது: கூடவே தர்மபாலாவிடம் காணப் பட்ட வசீகரமுமாக சேர்ந்து, ஒபேசேகரவின் வார்த்தையில் கூறுவதானால், "**புரட்டஸ்தாந்து பௌத்தத்தை**", அதாவது மரபார்ந்த சிங்கள பௌத்தத்தி லிருந்து மிகவும் வேறுபட்ட ஒன்றை உருவாக்கி விட்டுள்ளது. மரபார்ந்த பௌத்தமானது தனிநபர்கள் தமது மீட்சிக்காக போராடுமாறு வழிகாட்டுவ தாகவும், உள்ளூர் மற்றும் இந்துக்களது பல தெய்வ வழிபாடுகளையும் உள்ளடக்கியதாகவும் இருந்தது. புதிய பௌத்தமானது அழுத்தக் குழுக்களது செயற்பாடுகளை நோக்கி தன்னை திசையமைவு கொண்டுள்ளதுடன், பௌத்த மதத்தை "பொய்யான கடவுள்களில் நின்றும்" தூய்மைபடுத்துவதையும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நோக்கமாக கொண்டது. இந்த மறுமலர்ச்சி இயக்கத்தின் விளைவாக மரபா ர்ந்த சிங்கள பௌத்தமானது (குறைந்த பட்சம் முதலாளித்துவ கண்ணோட்ட த்தைப் பொறுத்தவரையில் என்றாலும்) மேற்கத்தைய விழுமியங்களுக்குள் கட்டமைத்தது. முதலாளித்துவ வர்க்கமானது ஏற்கனவே தமது ஆங்கிலக் கல்வியின் ஊடாக இந்த விழுமியங்களை கைவரப்பெற்றதாகவே இருந்தது. இங்கு முக்கியமான ஒரு விடயத்தை கவனத்தில் கொள்ள வேண்டும். அதாவது, இந்த **மேற்கத்தைய விழுமியங்களானவை, அவற்றை ஏற்கனவே தம்வயப் படுத்திக் கொண்டுள்ளவர்களுக்கு மேற்கொண்டும் அவை மேற்கத்தைய விழுமியங்களாகவே தெரிவதில்லை.** இந்த விழுமியங்கள் முற்றாக உள்வாங்க ப்பட்டு, அவர்களது பிரக்ஞையில் மாற்றத்தை ஏற்படுத்தி சந்தேகத்திற்கு இடமற்ற வகையில் "சிங்களமயமாகி" விட்டுள்ளது.

இலங்கையில் முதலாளித்துவ உற்பத்தி உறவுகளின் வளர்ச்சியானது புதிய வர்க்கங்களது தோற்றத்திற்கு வழிவகுத்தது. ஆங்கிலம் கற்ற மேட்டுக்குடி தட்டும் இதில் அடங்கும். இந்த தட்டானது சிங்கள தேசியவாத சித்தாந்த த்தை வடிவமைத்தது. இலக்கியம் மற்றும் மரபு போன்றவற்றால் வரலாறானது சிங்கள மேட்டுக்குடிக்கு கையளித்த "அகன்ற கலாச்சார முறைமையானது" இவர்கள் தம்மை பௌத்தசமூகமாக இனம் காண்பதற்கான ஆய்வுச் சட்டக த்தை கொடுத்தது. கிறீஸ்தவ மிசனரிமாரின் செயற்பாடுகள் என்ற குறிப்பான வரலாற்று நிகழ்வானது இவர்கள் தமது கலாச்சார பொதியில் இருந்து சில குறிப்பான அம்சங்களை, தற்காப்பு நோக்கில் முன்தள்ளுவதை அவசியப்படு த்தியது. இவ்வாறு சில **குறிப்பான கலாச்சார அம்சங்களை முன்னே தள்ளும் போக்கிற்கும், அந்த காலகட்டத்தில் நிலவிய பொருள்வகை அடித்தளத்திற்கும் இடையிலான இயங்கியல் உறவானது சிங்களவர்களது சுய-அடையாளத்தின் தன்மையை மாற்றியமைத்தது. இங்கு முக்கியமான அம்சம் என்னவென்றால், ஒருக்கால் இந்த மாற்றமானது நடந்தேறிவிட்டால், அதற்கு மேல் அது எதிர்கா லத்தில் முகம் கொடுக்க நேரும் சூழ்நிலைகளுக்கு ஏற்ப வளர்ச்சியடைந்து செல்லும் என்பதாகும். இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் இந்த சிங்கள வர்களது பிரக்ஞையை நிர்ணயித்த பிரதான வரலாற்றுச் சூழ்நிலையாக அமைந்தது, தமிழ், மற்றும் சிங்கள முதலாளித்துவ பிரிவினரிடையே பொரு ளாதார மற்றும் அரசியல் தளங்களில் தமது மேலாதிக்கத்தை நிலைநாட்டு வதற்காக நடைபெற்ற போட்டியாகும்.** பௌத்த மறுமலர்ச்சியால் உருவாக் கப்பட்ட சிங்களவரது வரலாற்றுப் பிரக்ஞையானது சூழ்ச்சித்திரத்துடன் பயன்ப டுத்தப்பட்ட விதமானது, தமிழரை, சிங்களவரது "வரலாற்றுபூர்வமான எதிரி யாக" உருவகப்படுத்தும் நிலைமை தோற்றுவித்தது. இலங்கையின் வரலா ற்றை சமூகத்தில் இருந்த மேட்டுக்குடியினரிடையே பிரபல்யப்படுத்தியவர்கள் ஐரோப்பாவில் இருந்து வந்திருந்த ஆசிரியர்கள், கல்வியாளர்கள், மற்றும் எழுத்தாளர்கள் போன்றவர்களாவர். இவர்கள் **தமக்கு கிடைத்த முக்கியமான பிரதிகளை, தமது சொந்த சிந்தனைகளான தேசங்கள், தேசியவாதம் என்பவ ற்றின் வெளிச்சத்தின் ஊடாகவே அணுகினார்கள். இந்த சிந்தனைகள் இலங்கை முதலாளிகளிடையே பிரக்ஞையை உருவாக்குவதற்கு பயன்பட்டது.**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இந்த முதலாளித்துவ சக்திகள் இந்த கருத்துக்களை இலங்கையின் நவீன தேச-அரசில் நன்கு வளர்ச்சியடைந்திருந்த தொடர்புசாதனங்களின் வாயிலாக விரைவாக பரப்பினார்கள். ஒருவிதத்தில் பார்த்தால் இது இவர்கள் தாம் பெற்றதை திருப்பிக் கொடுக்கும் முறைமை போலவும் படுகிறது. ஒரு குறிப் பிட்ட சூழலில் உருவான சிந்தனைகளும், கருத்தாக்கங்களும், இன்னொரு சூழலில் அதில் செயற்படுபவர்களால் அவர்களது சொந்த அனுபவங்களின் அடிப்படையில் மாற்றப்படுகிறது. மாறிவிட்ட புதிய பொருள்வகை அடித்தள மானது, இந்த புதிய சிந்தனை மற்றும் கருத்தாக்க மாற்றங்களை இலகுவாக ஏற்றுக் கொள்ளக் கூடியவர்களாக மக்களை தயார்படுத்துகிறது. அதற்குமேல் இவர்கள் இந்த புதிய சிந்தனைகளை தமது சொந்த சிந்தனைகள் போல நன்கு உட்செறித்துக் கொள்கிறார்கள்.

நன்றி: Chicago Anthropology Exchange, Volume 16, Autumn 1987



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சூழலியலும் - நிலைத்து நிற்க கூடிய வளர்ச்சியும்

- அருந்ததி

எம்மை சூழவுள்ள உயிருள்ள மற்றும் உயிரற்றவைக்குமான தொடர்பை நாம் சூழல் சார்ந்த உறவு என மேலெழுந்தவாரியாக வரைவிலக்கணப்படுத்தினோமானால் இதில் சிந்திக்கும் சிறப்புக் கொண்ட ஓர் உயிரினமாக இருப்பது மனிதர்கள்தாம். நாம் கண்டங்களாகப் பிரிந்த கடல், ஆறு, மலை, நிலம் எனப் பல் வேறு வகைப்பட்ட புவியியல் கூறுகளை உள்ளடக்கிய பூமியில் வசிக்கிறோம். எமக்குள் ஆயிரம் வேறுபாடுகள் இருந்தாலும் நாம் வாழ்வது ஒரு பூமிப்பந்தில்தான். பூமியானது நீர், நிலம், காற்று போன்ற வளமிக்க ஆதாரமாக அமைந்திருப்பதுடன் உயிரினங்கள் வாழ்வதற்குகந்த தட்ப வெப்பநிலைகளை உள்ளடக்கியிருக்கின்றமையால் பல கோடி உயிரினங்கள் இங்கு வாழக் கூடியதாக இருக்கிறது. ஆனால் கைத்தொழில் புரட்சியை அடுத்துவந்த முதலாளித்துவதின் அபரிமித உற்பத்தியை அடிப்டையாகக் கொண்ட, கடந்த ஒரு குறுகிய காலத்தினுள் மனிதர்கள் ஏற்படுத்திய தாக்கங்கள் காரணமாக பூமியானது தனது சமநிலையை இழந்து போகும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர். இது ஒன்றும் உலகம் அழிந்து விடும் என மத நம்பிக்கை கொண்ட குழுவினர் கூறுவது போன்ற பீதியூட்டும் பிரச்சாரமல்ல. பல ஆண்டுகளாக சேகரிக்கப்பட்ட தகவல்கள், புள்ளிவிபரங்கள், தென்படும் அறிகுறிகள், மற்றும் சூழலியல் ஆய்வாளர்களின் தரவுகள் என்பன இதனை முன் வைக்கின்றது.

உலகில் வசிக்கும் எல்லா உயிரினங்களுக்கும் பொதுவாக இருக்கும் ஒரே ஒரு பூமிபந்தை காப்பாற்ற வேண்டுமானால் நாம் எல்லோரும் ஒத்துழைக்க வேண்டும் என நாம் உற்சாகமாக புறப்படலாம் ஆனால் இங்கு தான் சிக்கலே ஆரம்பிக்கிறது. பூமிப்பந்து எல்லோருக்கும் பொதுவானதாக இருந்தாலும் இந்த பூமியில் மனிதர்கள் ஏற்படுத்திய பாதிப்புக்களினால் ஏற்படும் பின்விளைவுகளுக்கு முகம் கொடுப்பவர்களும், இதனால் உண்டான அழிவுகளையும், இடம் பெயர வேண்டிய அவலத்தையும் நடைமுறையில் சந்திப்பவர்கள் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளும், வறுமைக் கோட்டிற்கு கீழே வாழும் மக்களும், மற்றும் கரையோர பகுதியில் வசிப்பவர்களுமேயாகும்.

சுற்றுச்சூழல் பாதிக்கப்படுகிறது என்றதும் எமது நினைவுக்கு வருவது தொழிற்சாலைக் கழிவும், துளையிடப்படும் ஓசோன்படலமுமே ஆனால் இவைகளைத் தாண்டி சுற்றுச்சூழல் மாசடைதல் என்பது ஓர் பன்முகத்தன்மை உடையதுமாகும். பூமி வெப்பமடைவது: நிலம், நீர், காற்று போன்றவை உயிரினங்கள் பயன்படுத்த முடியாதபடி மாசடைவது: மீளவும் புதுப்பிக்க முடியாத வளங்களை (non renewable resources) அபரிமிதமாகப் பயன்படுத்தி இல்லாமற் செய்வது: உயிரினங்களின் பன்முகதன்மையை (bio diversity) இல்லாமற் செய்வது: போன்ற பலவிடயங்கள் இங்கு முக்கியத்துவம் பெறுகின்றன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சுற்றுச்சூழலுக்கான பிரதானமானதும், உடனடியானதுமான அச்சுறுத்தலானது புவி வெப்பமடைதல் தொடர்பானதாக அமைகிறது. முதலில் புவி வெப்ப மடைதல் எவ்வாறு நடைபெறுகிறது என்று பார்ப்போம். பூமி சூரியனிலிருந்து சுமார் 15 கோடி கிலோ மீற்றர் தூரத்தில் வலம் வந்து கொண்டிருக்கிறது. பூமியின் புவியியல் அமைப்பானது கடல், தரை, பனிப்பாறைகள் என வெவ் வேறு பிரிவுகளை உள்ளடக்கியுள்ளது. இப்பகுதிகள் பூமத்திய இரேகை யிலிருந்து கணிப்பிடும் போது எப்பாகத்தில் அமைந்திருக்கிறதோ அதற்கேற்ப வேறுபட்ட வெப்ப தட்பநிலைமைகளைக் கொண்டுள்ளன. சூரியனில் இருந்து புவியை வந்தடையும் வெப்பக் கதிர்கள் பூமியை வெப்பமாக்குகின்றன. ஆனால் பூமியை தாக்கும் அத்தனை வெப்பக் கதிர்களும் அப்படியே பூமியி லேயே இருந்துவிடுவதில்லை. அவற்றில் கணிசமானவை மீண்டும் விண்வெ ளிக்கு மீள்தெறிப்பு செய்யப்படுகின்றன. எமது வளி மண்டலத்தில் காணப்படும் குறிப்பிட்ட சில விதமான வாயுக்கள் இவ்வாறு வெப்ப அலைகள் மீள்தெறிப்பு றுவதை தடுக்கின்றன. இவ்வாயுக்களினால் ஏற்படுத்தப்படும் தாக்கம் பசுமைக்குடில் விளைவு (Green house effect) என அழைக்கப்படுகிறது.

பசுமைக்குடில் என்பது சாதாரணமாக எமது நாடுகள் போன்ற அயனமண்டல காலநிலையைக் கொண்டிராத மற்றும் குறுகிய கால கோடைகாலத்தை கொண்டுள்ள துருவப்பகுதியை அண்டிய நாடுகளில், குளிர்காலங்களில் கண்ணாடியினால் அமைக்கப்பட்ட பாரிய கொட்டகைகளில் விவசாயம் மேற் கொள்ளும் ஒரு முறையாகும். இந்த கண்ணாடி கொட்டகைகள் குளிரையோ வெப்பத்தையோ உள்ளேயோ வெளியேயோ விடாது தடுக்கிறது, இதன் மூலம் கொட்டகையினுள் பயிர்ச்செய்கைக்கு உகந்த ஒளி மற்றும் வெப்பநிலையைப் பேண வழிவகுக்கிறது. வளிமண்டலத்தில் காணப்படும் காபனீரொட்சைட்டு மற்றும் மீதேன் போன்ற வாயுக்கள் பசுமைக்குடில் விளைவுகளை பூமிக்கு இயற்கையாகவே வழங்கக்கூடிய வாயுக்களாகும். இயற்கையில் காணப்படும் இந்த பசுமைகுடில் கட்டமைப்பின் தாக்கமானது பூமியை அழிக்கும் தன்மை கொண்டதல்ல. பூமியைச் சுற்றி வளிமண்டலம் காணப்படுகிறது. சூரியனை வலம் வரும் பூமியை கண்ணுக்குப்புலப்படாத சக்தி வாய்ந்த சூரியக் கதிர்க ளில் தாக்குகின்றன. இவற்றின் ஒரு பகுதி வளிமண்டலத்தை நோக்கி தெறிப்ப டைகின்றது. பூமியின் வெப்பத்தின் கணிசமானவை வளிமண்டலத்தில் காண ப்படும் காபனீரொட்சையிட்டு மற்றும் மீதேன் வாயுக்கள் பிடித்து வைத்துக் கொள்கின்றன, இது பூமியைச் சுற்றி கவசமாக பாதுகாப்பை வழங்குகிறது. இவ்வாறாக சூரியனில் இருந்து வெப்பக் கதிர்கள் பூமியை தாக்குவதும், அவற்றின் ஒரு பகுதி மீளவும் தெறிக்கப்படுவதும் ஒரு குறிப்பிட்ட விகிதத்தில் நடைபெறுவதனால் பூமியின் வெப்பநிலையானது மிகையாக சூடாகாமலும், அதீதமான குளிராகாமலும் ஒரு மிதமான வெப்பநிலையுடன் இருக்கிறது. இதன் மூலம் பூமி போதியளவு வெப்பத்தையும் தண்ணீரையும் பெறவும் வாய்ப்பு ஏற்படுவதுடன் உயிரினங்களின் தோற்றமும் வளர்ச்சியும் சாத்தியமா கிறது. பூமியைச் சுற்றி இந்த பாதுகாப்பான படலம் காணப்படாவிடின் இந்த பூமி உயிரினங்கள் வாழ்வதற்கு உகந்த கிரகமாக அமைந்திருக்காது. இந்த



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வெப்பநிலையானது பெரிதும் மாறாமல் இருப்பதானது, இந்த உலகம், அதன் உயிரினங்கள் அனைத்தும் தொடர்ந்தும் வாழ்வதற்கு பெரிதும் அவசியமான தாகும்.

கைத்தொழில்மயமாதல் ஐரோப்பிய நாடுகளில் ஏற்பட்டபோது முதலில் இந்த நாடுகளில் கணிசமான காபனீரொட்சைட்டு, கந்தகவீரொட்சைட்டு மற்றும் நைத ரசன் ஒட்சைட்டு போன்ற வாயுக்கள் இந்த நாடுகளின் வளிமண்டலத்தை அதிகளவில் மாசுபடுத்தின. இது அமில மழையானது இந்த நாடுகளில் பெய்வதற்கு காரணமாகியது. இப்போது உலகலாவிய அளவில் நடைபெறும் கைத்தொழில்மயமாக்கல் மற்றும் பெருமளவிலான விவசாயமயமாக்கல் போன் றவை உலகலாவிய அளவில் காற்றில் இந்த பசுமைக்குடில் வாயுக்களின் அளவை அதிகரித்து விட்டுள்ளது. இதனால் பூமியின் வெப்பநிலையானது படிப்படியாக அதிகரிப்பது அண்மைக்காலத்தில் தீவிரப்பட்டுள்ளது. பூமியின் சராசரி வெப்பநிலை 15 பாகை செல்சியஸ் என இணக்கம் காணப்பட்டுள்ளது. அமெரிக்க கடல் மற்றும் வளிமண்டல நிர்வாகம் 1880 ஆண்டிலிருந்து பூமியின் வெப்பநிலை பற்றிய தரவுகளை சேகரித்து வருகிறது. இத்தரவுகளின் அடிப் படையாக் கொண்டு 2005 ஆண்டு பூமியின் வெப்பநிலை அதி கூடிய ஆண்டாக இருந்ததாக தெரிவித்துள்ளது. உலக மக்கள் எதிர் நோக்கும் பிரச்சனைகளுக்கு பிரதான காரணிகளாக முதலாளித்துவ பொருளாதார கட்ட மைப்பு, இதன் முனைப்பு மிக்க தொழிநுட்ப வளர்ச்சி, அபரிமித உற்பத்தி, நகரமையமாக்கல் இதன் மூலம் ஏற்படுத்தப்பட்ட நுகர்வுக்கலாச்சாரமும் அமை ந்துள்ளன. முதலாளித்துவம் என்பது தனியான ஒரு பொருளாதாரத் திட்டமல்ல, இது ஒரு வளம் மிக்கதும் மற்றும் அதனை விஸ்தரிப்பதை ஆதரிப்பதற்குமான அரசியல், நீதித்துவ மற்றும் சமூக ரீதியான அமைப்பை வடிவத்தையும் உடையது.

இப்போது நாம் எதிர் நோக்கும் பிரச்சனை இந்த வளிமண்டலத்தில் சஞ்சரிக்கும் காபனீரொட்சையிட்டு மற்றும் மீதேன் வாயுக்களின் அதிகரிப்பா கும். இயற்கையானது, தனது சமநிலையைப் பேணுவதற்கான பொறிமுறை களை தன்னகத்தே கொண்டுள்ளது. உதாரணமாக காட்டுப்பகுதிகளில் காப னீரொட்சையிட்டு தாவரங்களால் உறிஞ்சப்பட்டு, தண்டுகளில் சேமிக்கப்ப டுகின்றன, கடலில் கரையும் காபனீரொட்சையிட்டுகள் முருகைக்கற்களில் வசிக்கும் பிராணிகளால் சேமிக்கப்படுகிறது. வளியில் காபனீரொட்சையிட்டா னது முகில்களில் சேமிக்கப்படுகிறது. மரங்களில் சேமிக்கப்படும் காபன் பல நூறு ஆண்டுகளுக்குப் பின் நிலக்கரியாக, எண்ணையாகவும் மாறுகின்றது. கடலில் சேமிக்கப்பட்ட காபன் இரசாயன மாற்றங்களுக்குட்பட்டு சுண்ணாம்பு க்கற்களாகப் படிகின்றன.

தொழிற்புரட்சியின் பின் வளிமண்டலத்தில் சேரும் காபனீரொட்சையிட்டின் அளவு கணிசமாக அதிகரித்து வந்துள்ளது. இப்போது அகழ்ந்தெடுக்கப்படும் நிலக்கரியின் அளவும் உறிஞ்சி எடுக்கப்படும் மசகெண்ணையும் தாவரங்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பல கோடி வருடங்களாக சேமித்த காபனாகும். மரங்கள் காபனீரொட்சை யிட்டை உள்ளெடுத்துக் காபன் வட்டத்தில் பங்கு கொள்கின்றன. மக்கள் தொகை அதிகரிப்பின் காரணமாக காடுகள் அழிக்கப்பட்டு குடிமனைகளுக் கான நிலம் தயார் செய்யப்படும் போது இயற்கையின் சமநிலைப் பொறி முறையின் ஒரு பகுதி பாதிக்கப்படுகிறது. காடழிப்பினால் வருடத்திற்கு 1.5 கோடி மெற்றிக் தொன் காபனீரொட்சைட்டும், எரிபொருள் பாவனையின் மூலம் 6.5 கோடி மெற்றிக் தொன் காபன் வளிமண்டலத்தை சென்றடைகின்றது. இவற்றைவிட, சனத்தொகைப்பெருக்கத்தினால் இறைச்சிக்காகவும் பால் மற்றும் பாற் பொருட்களுக்காக விலங்குப்பண்ணைகள் உருவாக்கப்படுகின்றன. இவ் விலங்குகளின் சமீபாட்டிற்கான நுண்ணங்கிகள் இரைப்பையில் காணப்படு கின்றன. நுண்ணங்கிகளின் செயற்பாட்டின் போது கணிசமானளவு மீதேன் வாயு வெளியேற்றப்படுகிறது. விலங்குப்பண்ணைகளில் உருவாகும் கழிவுகளில் இயற்கையில் காணப்படும் பற்றீரியாக்களும் உயிரங்கிகளும் தாக்கத்தை ஏற்படுத்துகின்றன, இதனாலும் கணிசமானளவு மெதேன் வாயு வளிமண்டல த்தை சென்றடைகிறது. அதிகரித்த இந்த பசுமைக்குடில் வாயுக்கள் பூமியில் இருந்து தெறிக்கும் வெப்பக் கதிர்களின் அளவை கட்டுப்படுத்துவதனால், பூமியின் வெப்பநிலையானது படிப்படியாக அதிகரிக்கத் தொடங்குகிறது. இதனையே பூமி வெப்பமடைகிறது எனக் கூறுகிறோம்.

பூமியின் வெப்பநிலை உயர்வினால் வட மற்றும் தென் துருவங்களான ஆர்டிக்கும் அந்தாட்டிக்கிலும் பல்லாயிரம் ஆண்டுகளாக படிந்து கிடந்த பனிப் பாறைகள் உருக ஆரம்பிக்கின்றன. 1970 இலிருந்து 2000 ஆண்டு காலப்ப குதியில் தென்துருவப்பனிப்பாறை உருகி தனது பரப்பளவில் குறைந்துள்ள தாகவும் 2030 ஆண்டளவில் ஆர்டிக் பகுதியில் பனிப்பாறைகள் யாவும் உருகி விடும் அபாயம் நிலவுவதாக ஐநாவின் சுற்றுச்சூழல் அறிக்கை தெரிவிக்கிறது.

இந்த பனிப்பாறைகள் பூமிக்கு ஓர் பாதுகாப்பு போர்வையாகவே இதுவரை இருந்து வந்துள்ளது. அத்துடன் அதிகுளிர் பிரதேசத்தில் உயிர் வாழக்கூடிய பல அரிதான விலங்குகள், பறவைகளையும் கொண்டதாக இருக்கின்றன. இப்பனிப்பாறைகள் மீது பனிப்படலங்கள் தொடர்ச்சியாக படிந்து இறுகுவதால் இப்பாறைகளின் மேற்பரப்பு பளபளப்பு மிக்கதாக காணப்படுகிறது. இதனால் இப்பனிப்பாறைகள் மீது சூரியக்கதிர்கள் படும் போது இவை பனிப்பாறைகளை ஊடுருவாது மீள தெறிப்படைய உதவுகின்றன, ஆனால் சுமார் 18ஆம் நூற்றா ண்டு மத்தியில் ஆரம்பிக்கப்பட்ட மேலைத்தேய நாடுகளின் தொழிற்புரட்சி மற்றும் நவீனமயமாதல் நடவடிக்கைகளாலும் வெளியேற்றப்படும் காபன் கலந்த கழிவுகள் மற்றும் ஏனைய அழுக்குகள் இந்த பனிப்பாறைகள் மீது படிந்துள்ளன, இதன் காரணமாக இந்த பனிப்பாறைகள் தமது தெறிப்படையும் இயல்பை இழந்து விடுவதால் சூரியக் கதிர்கள் இப்பாறைகளை ஊடுரு வுகின்றன. இதனால் இப்பாறைகள் உருக ஆரம்பிக்கின்றன. இது தனியாக வட மற்றும் தென் துருவப்பகுதிகளுக்குரியதாக நாம் கொள்ளமுடியாது, இமயத்தைச் சூழவுள்ள பனிப்பாறைகளும் தாக்கத்திற்குள்ளாகியுள்ளன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இமயத்தின் உயர்ந்த சிகரமான எவரெஸ்ற்றானது தனது உயரத்தில் 1.3 மீற்ற ர்ளை இழந்துள்ளதாக தெரிய வந்துள்ளது. இந்தியாவின் பெரும்பாலான நதிகளின் மூல ஊற்று பனிச்சிகரங்களாகவே அமைந்துள்ளன. வடதுருவத்தில் இப்பனிப்பாறைகள் கடலின் காணப்படுகின்றன. இப்பாறைகள் உருகுவதானால் கடல் நீரின் அளவு அதிகரிக்கிறது. தென்துருவத்தில் காணப்படும் பனிப்பாறை கள் நிலத்தை அடித்தளமாக கொண்ட அமைந்திருக்கின்றன. இப்பாறைகள் உருகும் போது உருவாகும் நீரானது கடலினுள் கலக்கிறது இதனால் கடலின் நீர்மட்டம் உயரும் வாய்ப்பு இங்கு ஏற்படுகிறது. இந்த நூற்றாண்டில் கடலின் மட்டம் 25 செ.மீற்றர்களால் அதிகரித்துள்ளது.

காலநிலை மற்றும் சுற்றுச்சூழல் மாசடைவினால் எதிர்வரும் 40 ஆண்டுக ளில் 100 கோடி முதல் 250 கோடி வரையிலான மக்கள் இடம்பெயரலாம் என சர்வதேச குடியேற்ற அமைப்பு கணிப்பிட்டுள்ளது. நீண்ட காலமாக நேபாளுடன் இந்தியா ஒரு தீவு தொடர்பான தகராற்றைக் கொண்டிருந்தது. ஆனால் இந்த ஆண்டு இந்த தீவு காணாமல் போய் விட்டது, மாலைதீவைச் சேர்ந்த 20 ஆயிரம் அகதிகள் சூழலியல் பிரச்சனைகள் காரணமாக இலங்கை யில் குடியேறியுள்ளனர் எனவும் எதிர்வரும் நாற்பது ஆண்டுகளில், அதாவது இந்நூற்றாண்டின் நடுப்பகுதியில் சுமார் 20 மில்லியனுக்கு மேற்பட்ட பங்களா தேசிய மக்கள் இடம் பெயரவேண்டி ஏற்படும். காலநிலை மற்றும் சுற்றுச்சூழல் மாசடைதலால் ஆப்கானிஸ்தான், பங்களாதேஸ், மேற்கு ஆபிரிக்காவில் சில நாடுகள், மற்றும் தென்கிழக்காசியாவிலும் பெருந்தொகையான மக்கள் இடம் பெயர வேண்டியேற்படும் எனவும் பல சிறிய தீவுகள் கடலில் மூழ்கும் அபாய மும் காணப்படுகிறது.

மாலைதீவு என்பது ஆயிரத்து நூறு தீவுகளைக் தொண்ட ஒரு தொகுதி யாகும். உலகின் மிகச் சிறிய தீவுக் கூட்டமென இது வர்ணிக்கப்படுகிறது. இவற்றில் 80 வீதமான தீவுகள் கடல் மட்டத்திலிருந்து இரண்டு மீற்றர்கள் உயரத்தில் அமைந்துள்ளன. இந்த தீவுகள் மிக விரைவில் கடலில் அமிழ்ந்து விடும். மாலைதீவின் சுமார் மூன்று இலட்சம் மக்களை வேறு ஒரு நாட்டிற்கு "நாடுகடத்த" வேண்டி ஏற்படும்.

இந்த நூற்றாண்டின் இறுதிக் காலாண்டில் பூமியின் வெப்பநிலை 2 இலிருந்து 5 பாகை வரை அதிகரிக்கலாம் என ஐநாவின் அறிக்கையொன்று சுட்டிக் காட்டுகிறது. பூமியைப் பங்கு போடும் எல்லா நாடுகளுமே சுற்றுச்சூழலில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றன. இவ்வாறு சூழலியல் காரணிகளால் தமது சொந்த இடங்களை, நாடுகளை விட்டு வெளியேறும் இம்மக்களுக்கு சூழலியல் அகதிகள் என்ற அந்தஸ்து வழங்கப்ப ட்டு அவர்களுக்கான உரிமைகள் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற கோரிக் கையும் மற்றும் பிரித்தானியா மற்றும் ஏனைய செல்வந்த நாடுகள் இடம் பெயரும் மக்களை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்ற கோரிக்கை அண்மையில் முன் வைக்கப்பட்டது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எதிர் வரும் ஐம்பது ஆண்டுகளில் கடல் மட்டம் சுமார் ஒரு மீற்றர் அதாவது 100 செ.மீற்றரிகள் வரை உயரலாம் எனவும் 1.5 கோடி மக்கள் தமது வாழ்விடங்களை இழக்கவும் நேரிடும். IPCC கருத்துப்படி 2050 ஆண்டளவில் சுமார் 200 மில்லியன் மக்கள் சூழலியல் மாற்றங்களால் இடம் பெயர வேண்டி ஏற்படும் எனவும் தெரிவிக்கிறது.

மழையை நம்பி வாழும் பிரதேசங்களில் வெப்பநிலை அதிகரிப்பதன் காரண மாக இங்கு பெய்யும் மழையின் விகிதங்களில் குறிப்பிடத்தக்க அளவில் மாற்றங்கள் ஏற்படும் என்று எதிர்வுகூறப்படுகிறது. இவர்களது நிலங்கள் பாலைவனமாக மாறுவதனால் மழையைப் பெறும் இடங்களை நோக்கி மக்கள் இடம் பெயர வேண்டி ஏற்படுகிறது. பெருமளவு மழை பெய்யும் பிரதேசங்களில் வாழும் மக்கள் அடிக்கடி ஏற்படும் பாரிய வெள்ளப்பெருக்குகளினாலும், கடல் நீர் கிராமங்களுக்குள் புகுதல் மற்றும் நன்னீர் ஊற்றுக்கள் உப்பு நீராக மாறுவதாலும், விளைநிலங்கள் பாதிக்கப்படுவதனால் தமது இருப்பிடங்களை விட்டு இடம் பெயர நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். இந்தியா, பங்களாதேஸ் மற்றும் தாழ்நிலங்களில் அமைந்திருக்கும் நாடுகளின் கடல் மட்டம் சாரசரியாக வருடத்திற்கு 1.3 மிமீற்றர் வருடத்திற்கு உயர்வதுண்டு. கங்கை கழிமுகம் மற் றும் வங்காள குடாவில் தற்போது வருடத்திற்கு 5.5 மி.மீற்றர் உயர்ந்துள்ளது.

பங்களாதேசில் நூற்றுக்கணக்கான கரையோரக்கிராமங்களில் மக்கள் உவர்த ன்மையுள்ள நீரை அருந்துவதற்கு நிர்பந்திக்கப்பட்டுள்ளதுடன் கடலானது நன் னீரோட்ட மூலங்களில் மிகவிரைவில் கலந்துவிடும் அபாயமும் காணப்படுகி றது. உலகின் ஏனைய பகுதிகளை விட பங்களாதேசில் பயிர்நிலங்கள் பெரு மளவு பாதிப்புக்குள்ளாகும் வாய்ப்பு காணப்படுகிறது. 2050 ஆண்டளவில் நெல் உற்பத்தி 10 வீத வீழ்ச்சியையும், கோதுமை உற்பத்தி 30 வீதம் வீழ்ச்சி யடையும் எனவும் மதிப்பிடப்படுகிறது. இந்த நூற்றாண்டில் பங்களாதேசில் மட்டும் சுமார் 15 கோடி மக்கள் புலம் பெயர வேண்டி ஏற்படலாம் எனவும் இதனால் உலகின் இனப்பரம்பல் தொடர்பான தோற்றங்கள் கூட மாற்றங்கள் கூட ஏற்படலாம் எனவும் இவ்வாறான புலப்பெயர்வு வரலாறு காணாத மாபெ ரும் புலப்பெயர்வாக அமையும்.

தென் பங்களாதேசின் பல கிராமங்கள் வெள்ளம் மற்றும் புயலினால் பாதிக்கப்பட்டுள்ளன. மக்கள் தமது கிராமங்களை விட்டு இடம் பெயர்ந்த வண்ணம் இருக்கின்றனர், முன்னொரு காலத்தில் நெல், கரும்பு, கடுகு மற்றும் முள்ளங்கிவகைகளை போன்றவற்றை விளைச்சலில் ஈடுபடுத்தும் வளமான நிலங்கள் தண்ணீரால் கழுவிச் செல்லப்பட்டுள்ளன. 1960 இல் சிறிய நீந்திக் கடக்க கூடியதாக இருந்த ஆறுகள் இப்போது பெருமளவு நீரைக் தன்னகத்தே கொண்டு பெரிதாகியுள்ளது. பங்களாதேசின் தாழ்ந்த பிரதேசங்களில் தொடர்ந்தும் மக்கள் வாழமுடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது. பங்களாதேசின் தலைநகரமான டாக்கா ஒரு கோடி இடம் பெயர்ந்தவர்களை உள்வாங்கியுள்ளது. இதற்கு மேலும் இந்த நகரம் தாக்குப்பிடிக்குமா என்பது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கேள்விக்குறியாகவுள்ளது.

சூழலியல் பாதிப்பினால் புலம் பெயர்வினை எதிர்நோக்கும் மக்கள் ஐரோப்பிய நாடுகளில் வேண்டப்படாதவர்கள். இவர்கள் நாளொன்றுக்கு ஒரு டொலருக்கும் குறைவான ஊதியத்தையும் செலவையும் கொண்டவர்கள். கூர்ரைல் சேரி பகுதியில் வாழும் மக்களில் 90 வீதமானவர்கள் இடம் பெயர்வதற்கான பொருளாதார வளமற்றவர்களாகவும் காணப்படுகின்றனர். மக்கள் முதல் கட்டமாக நாட்டின் உயரமான பகுதிகளை நோக்கியும் பின்பு தொழில் வாய்ப்பு மற்றும் உணவுக்காகவும் இவர்கள் தமது நாட்டின் எல்லையையும் கடக்க வேண்டிய ஏற்படலாம். இந்தியாவின் கடல்பகுதியில் வருடத்திற்கு 20 சென்றி மீற்றர்கள் கடலின் நீர் மட்டம் அதிகரிப்பதாக ஐநாவின் பிறிதொரு அறிக்கை வெளிப்படுத்துகிறது. சீனாவில் பெரும் ஆறும் சீனாவின் கணிசமானளவு நீர் தேவையைப் பூர்த்தி செய்யும் மஞ்சள் ஆற்றில் நீரின் மட்டம் குறைந்து வருகிறது. இதன் நீர்மூலமாக பனிப்பாறைகளே. இந்நிலை தொடர்ந்து நீடிக்கும் பட்சத்தில் 2050 ஆண்டளவில் சீனாவிற்கு நீர்வளத்தை வழங்கும் பனிப்பாறைகளில் சுமார் 64 வீதமானவை உருகிப்போய்விடலாம் என சீன அறிவியல் விஞ்ஞான நிபுணர்கள் கருதுகின்றனர். இவ்வாறான நிலைமை ஏற்படின் சீனாவில் 300 கோடி மக்கள் குடிநீர் தட்டுப்பாட்டை எதிர்நோக்க வேண்டி ஏற்படும். பனிப்பாறைகள் உருகி உருமாறுவதனால் பூமியின் கடற்பரப்பு அதிகரிப்பதனால் மக்கள் தாம் வசித்த கரையோப் பகுதிகளையும் நாடுகளையும் இழப்பதுடன் நன்னீர் மற்றும் குடிநீருக்கான தட்டுப்பாட்டை எதிர்நோக்குகின்றனர்.

IPCC இன் அறிக்கையின் படி குறைந்தது 207 கோடி இலத்தீன் அமெரிக்கர்கள் மற்றும் ஆபிரிக்க கண்டத்தைச் சேர்ந்தவர்கள் இன்னும் பத்தாண்டுகளில் குடிநீருக்கான தட்டுப்பாட்டை எதிர்நோக்கவுள்ளனர் என தெரிவிக்கிறது. இதுமட்டுமல்லாது இந்த பனிப்பாறைகள் தம்மகத்தே சேமித்து வைத்திருக்கும் காபனீரொட்சையிட்டு மற்றும் மீதேன் போன்ற சூழலுக்கு குந்தகம் ஏற்படுத்தும் வாயுக்களையும் வளிமண்டலத்தில் சேர்கின்றன. உலகில் மிக மோசமாக சுற்றுச்சூழலுக்கு அச்சுறுத்தல் ஏற்படும் வண்ணம் நடந்து கொள்ளும் நாடுகளின் வரிசையில் அமெரிக்கா முதலிடத்தையும் அவுஸ்திரேலியா, ஜப்பான், கனடா, பிரான்ஸ் ஜேர்மன், ஐக்கிய இராச்சியம் ரஸ்யா, சவுதி அரேபியா, இத்தாலி, சீனா, இந்தியா ஆகிய நாடுகள் மிகக் கணிசமான பாத்திரத்தையும் வகிக்கின்றன.

உலகசூழல் பாதுகாப்பு இயக்கம் 1997 இல் சர்வதேச ஒப்பந்தங்கள் தொடர்பான ஒரு மதிப்பீட்டை வெளியிட்டிருந்தது. இதன்படி, உலகின் சனத்தொகையின் சுமார் 4.73 வீதத்தை அமெரிக்கா கொண்டுள்ளது. இது உலகின் மொத்தமாக வெளியேற்றப்படும் காபனீரொட்சையிட்டில் 26 சதவீதத்தையும் 20 சதவீத மெதேன் வாயுவையும் வெளியேற்றுவதன் மூலம் உலகின் சுற்றுச்சூழலியல் பாதிப்பில் முதலிடத்தை வகிக்கிறது. ஐரோப்பாவின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தொழிற்சாலைகள் வெளியேற்றும் காபனீரொட்சையிட்டின் அளவு 19.6 வீதமாக இருப்பதாகவும் வளிமண்டலத்தை மாசுபடுத்துவதில் இரண்டாவது இடத்தையும் ஜப்பான் ஐந்தாவது இடத்தையும் வகிக்கிறது. இதன் வரிசையில் இரஸ்யாவும் தனக்குரிய இடத்தைக் கொண்டுள்ளது.

## Peak Oil எனும் பிரச்சனை குறித்து

நாம் பூமியில் இருந்து இயற்கையாகப் பெறும் நிலக்கரி, இயற்கை வாயு, மற்றும் எண்ணைப் பெருட்கள் என்பவை வரையறையற்ற அளவில் காண ப்படும், எமது பாவனைக்கு என்றென்றைக்கும் தொடர்ந்தும் கிடைக்கப்போகும் வற்றாத வளமுடைய அல்லது மீளவும் புதுப்பிக்கக்கூடிய வளமுமல்ல. இவை பூமியின் ஒரு நீண்ட கால வரலாற்றின் பயனாக, பல இலட்சக்கணக்கான வருடங்களுக்கு முன்பு வாழ்ந்த மரங்கள் ஒரு குறிப்பான நிலைமைகளின் கீழ், ஒரு நீண்ட கால செயற்பாட்டின் ஊடாகவே இந்த நிலத்தடி எரிபொருட்களாக மாறின. இவற்றை நாம் அதிகரித்த அளவில் பாவித்துக்கொண்டு செல்லும் போது ஒரு குறிப்பிட்ட கட்டத்தில் அவை தமது வரையறைகளை - 'உச்ச புள்ளி' - எட்டத்தொடங்குகின்றன. இது தொடர்பாக Peak Oil எனும் பதமா னது பயன்படுத்தப்படுகிறது. இதன் அர்த்தமாவது, நாம் பூமியில் வரைய றுக்கப்பட்ட அளவில் உள்ள இந்த எரிபொருட்களை எமது பாவனைக்காக எடுத்துக் கொண்டே இருப்போமானால், ஒரு கட்டத்தில் அந்த மூலங்களில் இருந்து பெறக்கூடிய அதியுயர் அளவின் எல்லையை நாம் தொட்டுவிடுவோம் என்பதாகும். இதனையே 'உச்சபுள்ளி' என்ற கருத்தாக்கம் கருதுகிறது.

எண்ணைப் பாவனையின் உச்சக்கட்டத்தை அடைந்து விட்டது என்றதும் நாளைக்கே வாகனங்களுக்கான பெற்றோல் கிடைக்காது என நாம் முடிவிற்கு வர வேண்டியதில்லை. எண்ணை உற்பத்தியின் போது இலகுவாக கிடைக்க கூடிய அதாவது குறைந்த தொழிநுட்பத்துடனும் குறைந்தளவு முதலீட்டுடன், மற்றும் குறைந்த சக்தி செலவீட்டுடன் பெறக்கூடியதாக எண்ணை இதுவரை இருந்து வந்தது ஆனால் இலகுவில் வெளியே உறிஞ்சி பாவனைப்படுத்தக் கூடிய அதாவது குறைந்த உற்பத்தி செலவுடன் உற்பத்தி செய்யக்கூடிய எண்ணையின் பெருமளவை நாம் பயன்படுத்தி முடித்து விட்டோம், இதன் விளைவாக நாம் உயர்ந்த வாழ்க்கை தரம் மற்றும் நுகர்வுக் கலாச்சாரத்திற்கு எம்மைப் பழக்கப்படுத்திக் கொண்டுள்ளோம். இதனால் இனி வரும் காலங்க ளில் வருடாந்த எண்ணைப் பாவனையின் அளவு அதிகரிப்பதுடன் உற்பத்தி க்கான செலவும் அதிகரிக்கிறது. இங்கு உச்சபுள்ளி எனும் பதமானது சிறந்த தரம் மற்றும் இலகுவில் பெறும் தன்மைக்குமான தொடர்பு சம்பந்தமான வரை பில் உச்ச புள்ளியாகும். உலகில் இலகுவில் பெறக் கூடிய வளங்கள் யாவும் பயன்படுத்தப்பட்டு முடிந்த பின் தரம் குறைந்ததும் மற்றும் அதிக செலவுடைய மற்றும் இரண்டாம் படிநிலைகளின் மூலம் எண்ணையைப் பெறக்கூடிய வேறு வளங்களில் தங்கியிருக்க வேண்டி ஏற்படும். பாவனைக்குகந்த எண்ணையை தயாரிப்பதற்கு அதிகளவு சக்தியைப் பயன்படுத்த வேண்டியும் ஏற்படும்.

www.tamilarangam.net



# சக்தி

சகலவற்றையும் அளவிடுவது சக்தியாகும். இதுவே சகலவிதமான பௌதீக மற்றும் இரசாயன செயற்முறைகளுக்குமான தோற்றுவாயாகும். சக்தி தன்னை தொடர்ச்சியான இயக்கமாக வெளிப்படுத்துகிறது. இச் சக்தியை அணுவிலிரு ந்தும், மூலக்கூற்றின் பரிமாணத்திலிருந்து, அதிர்விலிருந்து மற்றும் அசைவிலிரு ந்தும் நாம் பெற்றுக் கொள்ளலாம். உலகிலுள்ள ஜீவராசிகள் தம்மகத்தே ஒரு வித சக்தியைக் கொண்டுள்ளன. சக்தியானது வெவ்வேறு வடிவங்களில் வெளியிடப்படுகிறது. சூரியனில் இருந்து கிடைக்கும் சக்தியைப் பயன்படுத்தி பௌதீக, இரசாயன மற்றும் உயிரியல் மாற்றங்கள் நடைபெறுகின்றது. வெப்ப சக்தி விதிகளின் படி சக்தியை நாம் ஆக்கவும் முடியாது அழிக்கவும் முடியாது ஆனால் சக்தியை வெவ்வேறு நிலைகளுக்கு மாற்றமுடியும்.

மனித சமூகம் வெவ்வேறான சமூக நிலைகளுக்கூடான பரிணாமத்தை அடைந்துள்ளது. சக்திப்பாவனையானது வெவ்வேறு அபிவிருத்தி நிலைமைக ளுக்கேற்ப அதிகரிக்கிறது. சக்தி இல்லையெனில் எதுவும் இயங்க முடியாது, ஆரம்ப காலத்தில் இறைச்சியை அடிப்படையாக் கொண்ட உணவும், நெருப் பின் கண்டு பிடிப்பானதும் அதன் பாவனையும் அதனை உபயோகப்படுத்தும், சக்தியானது மீள் பாவனைக்குட்படுத்தப்படும் சக்தி மூலங்கள் மூலம் வெப்ப மும் வெளிச்சமும் கிடைத்துள்ளது. இதன் மூலம் மனிதர்கள் வெவ்வேறு இட ங்களில் தங்களை தக்க வைத்துக் கொள்ள உதவுகிறது. இதன்பின் மிருக ங்களை விவசாய உற்பத்திக்கு பயன்படுத்துதல் இவ்வாறே மனிதர்களின் சமூக மற்றும் பௌதீகவியல் பரிணாம வளர்ச்சியானது அதிகரித்துச் செல்கிறது.

சமூக உறவுகளின் ஒட்டுமொத்தமான சேர்க்கையை மார்க்சிய தத்துவமானது சமூகமாக பார்க்கிறது. இந்த சமூக உறவுகள் உழைப்பிலிருந்தே தோன்றி வளர்கின்றன. இந்த உழைப்பே மனிதனை தனது மூதாதைகளாகக் கூறப்படும் குரங்கிலிருந்து வேறுபடுத்துவதாகவும், கருவிகளின் தயாரிப்பே உழைப்பிற் கான ஆரம்பம் எனவும் வலியுறுத்துகிறது. இவ்விரு விடயங்களும் மனிதர் இயற்கை மீது ஆதிக்கத்தை ஏற்படுத்தவும் மற்றும் இவர்கள் தமது அறிவெல் லையை விரிவாக்கவும் வழி வகுப்பதாக கருதப்படுகிறது (Marx and Engels, Collected works, Vol. 41.p 232)

கைத்தொழில் புரட்சியின் ஆரம்பகாலத்தில் மனித உழைப்பே பிரதான சக்தி மூலமாக விளங்கியது. கூடவே விலங்கின் உழைப்பும் பயன்படுத்தப்பட்டு வந்தன. அடுத்த கட்டத்தில் நீரை தேக்கிவைத்து, நீரோட்டத்தில் இருந்து பெறப்படும் சக்தியானது பயன்படுத்தப்பட்டது. இதனை அடுத்து நீராவி இயந்திரம் கண்டுபிடிக்கப்பட்டது. அப்போது பிரித்தானியாவில் கண்டுபிடிக்க ப்பட்டிருந்த நிலக்கரி இதில் பிரதான எரிபொருளாக அமைந்தது. கைத்தொ ழில் புரட்சியின் மிக முக்கியமான மாற்றங்கள் யாவும் இந்த நீராவி இயந்தி ரத்துடனேயே பெருமளவு நடந்தேறின. தொழிற்சாலைகள் மற்றும் புகையிரத



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மார்க்கங்கள் போன்ற முக்கியமான செயற்பாடுகள் அனைத்தும் நிலக்கரியை பயன்படுத்தியே நடந்துவந்தன. அமெரிக்காவில் பழங்குடியினர் ஒருவித நில எண்ணையை தமது வீடுகளுக்கு வெளிச்சமூட்ட பயன்படுத்துவதைக் கண்ட குடியேற்றவாசிகள் அதனை தாமும் பயன்படுத்தியதுடன், அதனை எண்ணைக் கிணறுகளை தோண்டுவதன் மூலமாக பெருமளவில் பெற்றுக்கொள்ளலாம் என்பதை கண்டறிந்து கொண்டனர். ஆயினும் அப்போதும் கூட இந்த எண்ணையானது வெறுமனே விளக்கேற்றுவதற்காக மாத்திரமே பயன்படுத்தப்பட்டது. ஆனால் இது பெரிய அளவிலும், உலகளாவிய ரீதியில் ஏற்றுமதி செய்வதாகவும் அமைந்திருந்தது.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பாதியிலேயே எண்ணையை பயன்படுத்தும் Internal Combustion Engines கண்டுபிடிக்கப்பட்டது. இது இயந்திர பாவனையில் மிகப்பெரிய அளவிலான மாற்றங்களைக் கொண்டுவந்தன. இது பல்வேறு தொழிற்சாலை இயந்திரங்களில் பயன்படுத்தப்பட்டது. ஆனால் முக்கிய மாற்றமானது வாகனங்களை இந்த பொறிமுறையினால் இயக்கவைத்தது மனித வரலாற்றில் மனிதரது வாழ்க்கை முறைகளில் தீவிரமான மாற்றங்களை உருவாக்கி விட்டது. அடுத்ததாக ஹென்றி போர்ட் தனது அசம்பிளி லைன் முறையினூடாக உற்பத்தியை மிகவும் தீவிரப்படுத்தி, காரின் விலையையும் குறைத்துவிட்டதானது, படிப்படியாக காரானது முதலாளித்துவ நாடுகளில் உள்ள கிட்டத்தட்ட ஒவ்வொருவருமே வாங்கும் ஒரு துய்ப்புப் பொருளாக மாற்றியது. இது அமெரிக்க பொருளாதாரத்தில் ஒரு பெரிய பாய்ச்சலை உண்டு பண்ணியது. ஆரம்பத்தில் அமெரிக்காவிலும், ஐரோப்பிய நாடுகளிலும் காணப்பட்ட எண்ணையானது இந்த செயற்பாடுகளுக்கு போதிய எண்ணையை வழங்கப் போதியதாக இருந்தது. ஆனால் இந்த வளங்களின் வரையறுக்கப்பட்ட தன்மை பற்றிய பிரச்சனைகள் எழத் தொடங்கின.

எரிபொருள் உற்பத்தியும் பாவனையும் Peak Oil எனும் பதம் 1940 இல் மற்றும் 50 ஆம் ஆண்டுகளில் பெற்றோலிய புவியியலாளரான எம். கிங் கூபேட் (King Hubbert) இனால் உருவாக்கப்பட்டது. 1956 இல் அமெரிக்க எண்ணை உற்பத்தி நிபுணத்துவக்குழு இவரின் உதவியை நாடிய போது அமெரிக்காவின் தேசிய எண்ணை உற்பத்தி 1970 ஆம் ஆண்டளவில் உச்சபுள்ளியை அடையும் எனவும் இதன் பின் எண்ணை உற்பத்தி வீழ்ச்சியடையும் என கூறியிருந்தார். இந்த கவலையானது முதலாளித்துவ சக்திகளை நிலத்தடி எண்ணை பெருமளவில் காணப்படும் ஏனைய பிரதேசங்கள் பற்றிய கரிசனையை தீவிரப்படுத்தியது. அப்போது மத்திய கிழக்கில் கண்டறியப்பட்ட எண்ணெய் வளம் பற்றி இந்த ஏகாதிபத்திய நாடுகள் காட்டிய தீவிரத்தின் வெளிப்பாடுதான் இஸ்ரேல் என்ற புதிய நாட்டின் தோற்றத்துடன் நெருங்கிய தொடர்புடையதாக அமைந்தது. இரண்டாம் உலக யுத்தம் வரையிலான காலகட்டத்தில் நிலவிய யுத்தங்களும், கொலனித்துவ வேட்டைகளும் முக்கியமாக சந்தைகள் மற்றும் மூலப்பொருட்களை இலக்காகக் கொண்டிருந்தன. ஆனால் இரண்டாம் உலக யுத்தத்திற்கு பின்பு மத்திய கிழக்கை போர்க்களமாக இந்த



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஏகாதிபத்திய நாடுகள் தொடர்ந்தும் பேணிவந்தன. இந்த ஏகாதிபத்திய நாடுகளின் நிரந்தர அடியாளாக இஸ்ரேல் நிலவிவருகிறது. இன்று வரையில் ஈராக் ஆக்கிரமிப்பு, ஈரானின் மீதான நெருக்குதல்கள், சவூதி அரச குடும்ப த்துடன் இவர்கள் கொண்டுள்ள விசேட உறவுகள் ..... போன்ற பல சர்ச்சைகள் இந்த எண்ணை மூலங்களை அடிப்படையாக கொண்டனவே அன்றி வேறல்ல.

உலகின் எண்ணையின் பயன்பாடானது 1950களில் 10 மில்லியன் பீப்பாய்க ளிலிருந்து 2005 இல் நாளொன்றிற்கு 85 மில்லியன் பீப்பாய்களாக அதிக ரித்துள்ளது. அமெரிக்காவின் சக்தி பயன்பாட்டு நிலையங்களின் கருத்துப்படி 2025 ஆம் ஆண்டளவில் நாளொன்றிக்கான பாவனை 118 பீப்பாய்களை எட்டலாம் எனக்கருதப்படுகிறது. தேவை அதிகரிக்கும் போது அதற்கான விலையும் அதிகரித்து வந்துள்ளது. அண்மையில் ஒரு பீப்பாய் எண்ணையின் விலை 70 டொலர்களை எட்டியிருந்தது. இது விரைவில் 100 டொலர்களையும் 2015 இல் 380 டொலர்கள் வரை அதிகரிக்கலாம் எனவும் எதிர்பார்க்கப்படு கிறது. இங்கு மதிப்பீடுகள் அபிவிருத்தியடைந்த நாடுகளின் தேவையை அடிப்படையாகக் கொண்டு செய்யப்பட்டவையாகும். இவ்வேளையில் நாம் அபிவிருத்தி அடைந்து வரும் நாடுகளில் முன்னணி இடத்தினைப் பெற்றுள்ள சீனா மற்றும் இந்தியாவையும் கவனத்தில் கொள்ள வேண்டும். இவ்விரு நாடுகளும் உற்பத்தியை அதிகரிக்கும்.

உலகளாவிய அளவில் எண்ணையின் உச்ச பயன்பாடானது (peak oil) 2010 அல்லது 2015 அளவில் ஏற்படும் என்ற கருத்து எண்ணெய் நிபுணர்களிடையே காணப்படுகிறது. இத்துடன் சீனா மற்றும் இந்தியா போன்ற நாடுகளின் தொழில் வளர்ச்சி, அது கொண்டுவரும் புதிய வாகனங்களின் எண்ணை பாவனை போன்ற அனைத்துமே இதனை இன்னமும் தீவிரப்படுத்தும் நட வடிக்கைகளேயாகும். இதனைவிட எண்ணையானது வெறுமனே சக்திக்கான மூலப்பொருளாக மாத்திரம் பயன்படுத்தப்படவில்லை. மாறாக, பலவிதமான இரசாயன பொருட்களைத் தயாரிப்பதற்காக மூலப்பொருளாகவும் அமைகிறது. பலவிதமான பிளாஸ்ரிக்கள், செயற்கை இரப்பர், செயற்கை இழைகள், மருத் துவ மற்றும் ஏனைய தேவைகளுக்கான இரசாயனப் பொருட்கள், பசளைகள், கிருமிகொல்லிகள் போன்றவற்றின் தயாரிப்பிலும் இதே எண்ணைப் பொருட் களே பயன்படுத்தப்படுகின்றன. இதனால் எண்ணை வளங்கள் தமது உச்ச நிலையை அடைவது என்பது வெறுமனே சக்தி மூலம் பற்றிய பிரச்சனை மாத்திரம் அல்ல. மாறாக இன்னும் பல அத்தியாவசிய பொருட்களின் மூலப் பொருட்கள் சம்பந்தப்பட்ட பிரச்சனையாகும். கூடவே சீனா மற்றும் இந்தியா போன்ற நாடுகளது எழுச்சியும் இந்த பற்றாக்குறையை தீவிரப்படுத்தவும், கடு மையான போட்டி மற்றும் மோதலுக்கு வழிவகுக்கும் என்பது எதிர்பார்க்கக் கூடியதே. அடுத்த இரண்டு தசாப்தங்களும் இந்த விடயத்தில் தீவிர நெருக்க டிகளை உருவாக்கிவிடக் கூடியதாக அமையக் கூடும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மாற்று சக்தி மூலங்களைக் கண்டறிவதற்கான முயற்சிகள் கடந்த காலங்களில் இந்த முதலாளித்துவ சக்திகளினால் திட்டமிட்ட முறையில் கிடப்பில் இடப்பட்டன. இப்போது உலகளாவிய ரீதியில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிகள் என்பது, அரசு மானியங்களை மாற்று சக்தி மூலங்களைத் தேடுவதற்கான முயற்சிகளுக்கு புதிய உந்துதலைக் கொடுத்து வருகிறது என்பது உண்மையே. மின்சார கார்கள், சக்திச் செலவு குறைவான சாதனங்கள், சூரிய ஒளி, காற்று, நீரோட்டம் போன்ற மாற்று சக்தி மூலங்கள் போன்றவை நோக்கி ஓரளவு கவனம் செலுத்தப்படுகிறது. இவற்றில் நாம் போதியளவு வெற்றி பெறக்கூடும் என்ற போதிலும் மேற்கு உலகைச் சேர்ந்தவர்கள் தமது வாழ்க்கை முறைகளை மாற்றிக் கொள்ளாதவரையில், வளர்ந்துவரும் நாடுகளைச் சேர்ந்தவர்களும், மேற்கு நாட்டைச் சேர்ந்தவர்களது நடவடிக்கைககளை தமக்கு முன்மாதிரியாகக் கருதும் வரையில் இந்த புதிய மாற்று வழிமுறைகள் கூட நெருங்கிவரும் பெருவிபத்தில் இருந்து மனித குலத்தை காத்துவிட முடியுமா என்பது சந்தேகத்திற்குரியதே.

## பசுமைப் புரட்சி

பல்வேறு நாடுகளையும் சேர்ந்த போராளிகள் இரசாயன உரங்களை தமது வெடிகுண்டுகளைத் தயாரிப்பதற்கு பயன்படுத்துவதைக் காணும் ஒரு சாதாரண குடிமகள், சாதாரண விவாசாய இடுபொருட்களை இவர்கள் தமது தவறான நோக்கங்களுக்காக பயன்படுத்துவதாக எண்ணக் கூடும். ஆனால் உண்மை என்னவென்றால், இவர்கள் கருதுவதற்கு தலைகீழானதாகும். எப்படி என்று பார்ப்போம்.

இரண்டாம் உலக யுத்தத்தின் முடிவில் அமெரிக்க ஆயுதக் கொம்பனிகளிடம் பெருமளவில் கையிருப்பில் இருந்த முக்கிய இராணுவ இரசாயன பொருளான அமோனியம் நைத்திரேற் என்பதனை விவசாயத்திற்கு உரமாக பாவிக்கலாம் என்ற நோக்கத்துடனேயே 'பசுமைப் புரட்சி' ஆரம்பமாகியது. இதனை மேற்கொண்டு மேற்கத்திய நாடுகள், இந்த முயற்சியை தமது நாடுகளில் மாத்திரம் மேற்கொள்ளாமல், மூன்றாம் உலக நாடுகளுக்கும் இந்த செயல்முறையை ஏற்றுமதி செய்தன. இதனை செய்து முடிப்பதில் அமெரிக்க பல்கலைக்கழகங்கள் மூன்றாம் உலக நாட்டு மாணாக்கர்களுக்கு வழங்கிய புலமைப்பரிசில்கள் தொடக்கம், கடுமையான அரசியல் அழுத்தம் வரையில் அனைத்தும் பயன்படுத்தப்பட்டன.

பசுமைப் புரட்சியானது ஆரம்பத்தில் சாதரண விவசாயிகள் மத்தியில் அவதானிக்கத்தக்க உயர் விளைச்சலைத் தந்தது என்னவோ உண்மைதான். ஆனால் படிப்படியாக விவசாயத்திற்கான இடுபொருட்களாக உரங்கள், கிருமிநாசினி, களைநாசினி போன்றவற்றின் செலவுகள் அதிகரித்து கடைசியில் உள்ளூர் விவசாயிகளினால் கட்டுபடியாகாததாக இவை ஏறிச்சென்றன. இதனால் பல விவசாயிகள் தற்கொலை செய்வதில் இது கொண்டுபோய்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



முடித்தது. அத்தோடு முன்னைய வழிமுறைகளில் பயிர் செய்யும் போது விளைச்சல்கள் சற்று குறைவாக இருந்த போதிலும், அதற்கான உள்ளீடுகள் மிகவும் குறைவானவையாக இருந்தன. இதனால் நிகர இலாபமாக அதிகம் விவசாயிக்கு போய்ச் சேர்ந்தது. புதிய முறையின் கீழ் அதிகரித்த இடு பொடுட்களுக்கான செலவுகள் யாவும் நேரடியாக இந்த உரம், கிருமிநாசினி, களைநாசினி போன்றவற்றை உற்பத்தி செய்யும் வெளிநாட்டுக் கொம்பனி களுக்கே போய் சேர்ந்தன. அத்தோடு இந்த செயற்கையான உரங்கள் மற்றும் கிருமி மற்றும் களைநாசினிகள் பயிர்கள் மத்தியில் காணப்படும், பயிரின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு உதவி செய்யும் பல பூச்சிகளையும் அழித்து விட்டதனால் விவசாயிகள் இன்னமும் இன்னமும் இந்த இரசாயனப் பொரு ட்களிலேயே தங்கியிருக்கும் நிலை தோன்றியது. இது விவசாயம் என்பது பொருளாதாரரீதியில் சாதாரண விவசாயிகளுக்கு கட்டுபடியாக மாட்டாததாக மாறியது. விவசாயிகளுக்கான போதிய கடன் வசதிகளை அரசு செய்து கொடுக்காததனால் இவர்கள் உள்ளூர் கந்துவட்டிக் காரர்களிடம் வட்டிக்கு பணம் வாங்கி, அதனை கட்ட முடியாமல் தமது மானம், நிலம் போன்ற அனை த்தையும் இழந்து பல இலட்சக்கணக்கானவர்களின் தற்கொலைகளுக்கு கார ணமாக இது அமைந்தது.

இப்படியாக இடுபொருட்களின் விலைகளை சமாளிக்கும் விதத்தில் சில அரசாங்கங்கள் தமது விவசாயிகளுக்கு இவற்றிற்கான மானியங்களை வழங்கி வருகின்றன. ஆனால் உலகவங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியம் போன்ற வற்றின் ஊடாக இந்த மேற்கு நாடுகள் பெரியளவில் அழுத்தங்களைக் கொடு த்து, இந்த மானியங்களை வறிய விவசாயிகளுக்கு கொடுப்பதை இரத்து செய்யுமாறு இந்த வறிய நாடுகளுக்கு நிர்ப்பந்தம் செய்கின்றன. அதே வேளை இதே மேற்கு நாடுகள், தமது நாட்டில் உள்ள விவசாயிகளுக்கு பெருமளவில் மானியங்களைக் கொடுக்கிறது. இந்த மானியங்கள் என்பவை அங்குள்ள சிறிய, குடும்ப அளவில் தொழில் செய்யும் சாதாரண சிறிய அல்லது நடுத்தர விவசாயிகளுக்காக அல்லாமல் பெரிய பல்தேசிய விவசாய நிறுவனங்களுக்கே சாதகமாக அமைகின்றன. இதனால் இந்த நாடுகளிலும் கூட, சிறிய நடுத்தர விவசாயிகள் போண்டியாகும் போதே, பெரிய பல்தேசிய கொம்பனிகள் பெரும் இலாபத்தை சம்பாதித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இதனைவிட இன்னொரு விடயம் முக்கியமானது. அதாவது, தன்னிறைவு விவசாயிகள் அனைவரும் சந்தைக்கான உற்பத்தியில் ஈடுபடுமாறு இதன் போது வலியுறுத்தப்பட்டார்கள். இதனால் ஒரு விவசாயி தனது நிலத்தில் பல்வேறு விதமான பயிர்களையும் ஊடுபயிராகவும், சுழற்சி முறையிலும் செய்வதற்குப் பதிலான ஒரேவிதாமான பயிரை பெரிய அளவிலும், தொடர்ச் சியாகவும் செய்துவரும்படி ஊக்குவிக்கப்பட்டார். இதனால் மன்னின் வளங்கள் திருத்தப்பட முடியாத அளவிற்கு பாழாகிப்போனதுடன், விவசாயிக்கு துணை செய்யக் கூடிய ஏனைய வண்டினங்கள் மற்றும் புழுக்கள் போன்றவையும் இல்லாமற் போனதாகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இதிலும் மோசடியானது என்னவென்றால், மேற்கு நாடுகளில் அரசுகள் மூன்றாம் உலக நாடுகள் தமது விவசாயிகளுக்கு வழங்கும் மானியங்களை இரத்து செய்யும்படி நிர்ப்பந்திக்கும் அதே சமயத்தில், தமது நாடுகளில் பெருமளவு மானியம் கொடுப்பதன் மூலமாக உற்பத்தி செய்யப்பட்ட அதே பொருட்களை இந்த மூன்றாம் உலக நாடுகளின் சந்தைகளில் விற்பதற்கான உரிமையையும் போராடிப் பெற்றுக் கொள்வதாகும். இதன் மூலமாக வறிய விவசாயிகள் பெரும் செலவுடன் தாம் உற்பத்தி செய்த விளைபொருட்களுக்கு சந்தையில் நியாயமான விலைகளைப் பெற முடியாமலும் தவிக்கின்றனர். இது ஒட்டு மொத்தத்தில் ஒரு பெரிய மோசடியாகும். ஆனால் இதனை அம்பலப்படுத்தும் விதத்தில் இந்த மூன்றாம் உலக நாடுகளின் தரகுமுதலாளித்துவ அரசுகளும் உருப்படியாக எதுவும் செய்வதில்லை. அந்த வகையில் வந்தனா சிவா போன்ற செயற்பாட்டாளர்களது நடவடிக்கைகள் முக்கியத்துவம் பெறுகின்றன. இவர்கள் முன்வைக்கும் 'உணவு ஜனநாயகம்' (food democracy) போன்ற கருத்தாக்கங்கள் முக்கியத்துவம் பெற்றனவாக விளங்குகின்றன.

## பண்ணைத்துறை

கைத்தொழில் நாடுகளில் ஏற்படும் பொருளாதார வளர்ச்சியுடன் கூடவே, அவர்களது வாழ்க்கை, பழக்கவழக்கங்கள் மற்றும் நுகர்வுத்தரம் போன்றவற்றிலும் பாரிய அளவிலான மாற்றங்கள் நடைபெற்று வருகின்றன. கைத்தொழில் புரட்சியின் ஆரம்ப கட்டத்தில் தொழிலாளர்கள் பசுப்பால் அருந்த வசதியில்லாததால் வெறும் தேனீரை அருந்தினார்கள். ஆனால் பொருளாதார வளர்ச்சியானது கைத்தொழில்மய நாடுகளது உழைக்கும் மக்களது வாழ்க்கைத் தரங்களையும் அதிகளவு உயர்த்தியுள்ளது. வீடு, வாகனங்கள், உடை, பழக்க வழக்கங்கள், நுகர்வுகள் என்பவற்றுடன் கூடவே உணவுப் பழக்கவழக்கங்களிலும் கணிசமான மாற்றங்களை இது ஏற்படுத்தியுள்ளது. அதிகளவு மாமிச உணவுப் பொருட்களை இவர்கள் தமது உணவுகளில் சேர்க்கத் தொடங்கியுள்ளார்கள். உதாரணத்திற்கு இந்தியாவில் வசிக்கும் ஒருவர் சாராசரியாக ஆண்டொன்றிற் 5.2 கிலோகிராம் மாமிச உணவை உட்கொள்கிறார். இலங்கையில் வசிக்கும் ஒருவர் சராசரியாக ஆண்டொன்றிற்கு 6.6 கிலோவும், அமெரிக்காவில் ஒருவர் 124.8 கிலோவும் உட்கொள்கின்றனர். இது முட்டை, பால் மற்றும் பாற்பொருட்கள் போன்ற விடயங்களிலும் இப்படியே தொடர்கின்றன.

கைத்தொழில்மய நாடுகளில் தேவைப்படும் இந்தளவு பெருமளவிலான மாமிச கொள்வனவை முன்னைய மாதிரியான திறந்த வெளியில், மாடுகளை வெளியில் மேயவிட்டும், புற்களை உணவாகக் கொடுத்தும் பெற்றுக் கொள்வது சாத்தியமானதாக இருப்பதில்லை. இதனால் ஒரு புதிய வகையான விலங்குப் பண்ணைகளை, தொழிற்சாலைகளை ஒத்த முறையில் இந்த விலங்குகளை வளர்க்க முனைகிறார்கள். இதனால் மூடப்பட்ட கட்டடங்களுக்கும், மிகவும் நெருக்கமான முறையில், விலங்குகள் நடப்பதற்கோ, போதிய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



காற்றோட்டத்தை பெறுவதற்கோ வசதிகள் ஏதுமற்ற நிலையில் மிகவும் செயற்கையான முறைகளில் வளர்க்கப்படுகின்றன. தானிய உணவுகள் வழங்கப்படுகின்றன. மிக அதிகளவில் உற்பத்தியை பெருக்கும் விதத்தில் வளர்ச்சி ஓமோன்கள் ஊசி மூலமாக செலுத்தப்படுகின்றன. ஒரு கோழி சராசரியாக 300 முட்டைகள் இடும் நிலையில் உள்ளது. இது அந்த கோழி யின் உயிரியல் எல்லைகளை தாண்டும் ஒரு நிலைமையை தோற்றுவிக்கின்றன. உடலில் உள்ள எலும்புகளில் உள்ள கல்சியத்தை எடுத்து முட்டைக்கு பயன்படுத்தும் நிலையில் இந்த கோழிகள் மிகவும் ஆரோக்கியமற்றவையா கவும், இலகுவில் கால்கள் முறிதல் மற்றும் பல உடல் உபாதைகளை எதிர் கொள்ளும் நிலையிலும் உள்ளன. இப்படிப்பட்ட வளர்ப்பு முறைகள் பல சுகா தாரம் மற்றும் அறநெறி பற்றிய பிரச்சனைகளை எழுப்புகின்றன. பல விலங்கு களின் உரிமைகளுக்கு போராடும் அமைப்புக்களை உருவாக்கி விடுகின்றன.

இப்படியாக பெரியளவிலான பண்ணைகளில் பல இலட்சக்கணக்கான மிருக ங்கள் மற்றும் பறவைகளை ஒன்றாக வைத்து வளர்ப்பதானது இதன் கழிவுக ளை எவ்வாறு அகற்றுவது என்பது தொடர்பான பிரச்சனைகளையும் உருவா க்கிவிடுகிறது. இவை முறையாக கையாளப்படாதவிடத்து பசுமைகுடில் வாயு வான மீதேனை அதிகளவில் உற்பத்தி செய்வதில் இது போய்முடிகிறது. அத் தோடு அந்த பிரதேசங்களில் ஏற்படுத்தும் மோசமான துர்நாற்றம் என்பவை பல சுகாதாரக் கேடுகளை மனிதருக்கு மாத்திரமன்றி, அந்த விலங்குகளு க்குமே உருவாக்கக் கூடியவை. இத்தனையிலும் காணப்படும் அவலம் யாதெ னில் இந்த விலங்குகளை வளர்க்கும் சிறு விவசாயிகள் மீண்டும் மீண்டும் பெரிய பல்தேசிய நிறுவனங்களுக்கு பலியாகும் நிலையில் இருப்பதுதான். இப்படியாக தொழிற்சாலைகள் போன்ற முறைகளினால் விலங்குகளை வளர்ப் பது சுற்றுச் சூழல்ரீதியிலும் தீங்கானதாகவே அமைகிறது. உதாரணமாக ஒரு கிலோ விலங்குணவை உருவாக்குவதற்காக ஆறு தொடக்கம் பத்து கிலோ தானியங்களை இந்த விலங்குகளுக்கு உணவாக வழங்கியாக வேண்டியு ள்ளது. இது சக்தியைப் பொறுத்தவரையில் மிகவும் நட்டமானது. அத்தோடு இந்த அளவு மாமிச உணவானது ஒரு மனிதருக்கு அவசியமானது அல்ல. இதனால் மிகுந்தளவில் சுகாதாரப் பிரச்சனைகள் ஏற்படுகின்றன. அதீத உடல் நிறை, இதய கோளாறு, நீரிழிவு நோய் போன்றவை மிக அதிகளவில் உருவாகி சுகாதாரத்துறைக்கு பெரிய சுமையாக ஆகிவிடுகின்றன.

ரிச்சார்ட் மானிங் (Ricard Manning) இன் கருத்துப்படி வட அமெரிக்கா வைச் சேரந்தவர்கள் உணவாகப் பயன்படுத்தும் ஒரு கலோரி உணவைத் தயாரிக்க குறைந்தது பத்து மடங்கு சக்தி தேவைப்படுகிறது. 1940 களில் சராசரியாக அமெரிக்க பண்ணை ஒன்றில் ஒரு கலோரி எரிபொருளில் இருந்து பெறப்படும் சக்தி மூலம் 2.3 கலோரியை உற்பத்தி செய்ய முடிந்தது 1974 இல் இவ் விகிதமானது அதாவது ஒரு கலோரி உணவைத் தயாரிக்க பத்து மடங்கு எரிபொருள் சக்தி தேவைப்படுகிறது. இப்போதுள்ள விவசாய உற்ப த்தியானது நேரடியாக உண்ணுவதற்கான உணவுகளைத் தயாரிப்பதில்லை,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அமெரிக்காவில் உற்பத்தி செய்யப்படும் தானியங்கள் சுவையற்றவை. இது ஒரு தொழிற்சாலையின் அமெரிக்க உற்பத்தி பற்றிப் பார்க்கையில் சோயா போன்ற 82 வீதமான தானியங்கள் நேரடியாக உண்ணக் கூடியவை அல்ல. தற்போதுள்ள விவசாயத்துறை நேரடியாக உண்ணக்கூடிய உணவுடன் தொடர்புடையதல்ல, இதனை உண்ணக்கூடிய உணவாக மாற்றுவதற்கு சுமார் 35 கலோரி எரிபொருள் சக்தி தேவைப்படுகிறது. 1 கலோரியை வழங்கும் இறைச்சியை உற்பத்தி செய்வதற்கு 68 கலோரி சக்தி செலவிடப்படுகிறது. இவ்வாறான உற்பத்தியானது எரிபொருளின் அதாவது எண்ணையின் விலை யில் தங்கியிருக்கிறது. எண்ணையின் விலை அதிகரிக்க உற்பத்தி செலவு அதிகிரக்கிறது இதனால் பொருளின் விலை அதிகரிக்கிறது மக்கள் இந்த விலைவாசி உயர்வை சமாளிக்க மேலதிக உழைப்பு சக்தியை விற்க வேண்டி ஏற்படுகிறது அல்லது பஞ்சத்தையும் எதிர்நோக்க வேண்டி ஏற்படுகிறது. எண்ணை விலை அதிகரிப்பினால் கிழக்கு ஆபிரிக்க நாடுகள் பெற்றோலுக்கு பதிலாக டீசலை பாவிக்க முற்பட்டனர். உலகில் 100 மில்லியன் மக்கள் விலை வாசி உயர்வால் வறுமை நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர். தெற்காசியாவில் 22 வீதமானோர் பட்டினியில் வாடுவதாக ஆசிய அபிவிருத்தி வங்கியின் அறிக்கை ஒன்று தெரிவிக்கிறது. IPCC இன் அறிக்கையொன்று இந்த நூற்றாண்டின் நடுப்பகுதியில் ஆசியாவில் மேலும் 130 கோடி மக்கள் பஞ்ச த்தை எதிர்நோக்க வேண்டி ஏற்படும் எனவும் தெரிவிக்கிறது.

பல்வேறு வறிய நாடுகளிலும் உள்ள உழைக்கும் மக்கள் பெரும்பாலான சந்தர்ப்பங்களில் மூன்று வேளை உணவருந்துவது அரிது. ஆனால் இப்படி ப்பட்ட நாடுகளில் வாழ்க்கைத் தரமானது சற்றே உயரும் போது இந்த பிரிவினர் மூன்று வேளை முறையாக உணவு உண்ணத் தொடங்குவதே உலக உணவுப் பொருற்களின் சந்தையில் விலை அதிகரிப்பிற்கு போதியளவு காரணமாகிவிடும். அதுவும் இந்த நாடுகளில் புதிதாக உருவாகிவரும் மேட்டுக் குடியினர் மேற்கத்தைய உணவு பழக்க வழக்கங்களை கைக்கொள்ளத் தொடங்கினால் உண்மையிலேயே பலமான நெருக்கடியொன்று உலகலாவிய அளவில் உருவாவது தவிர்க்க முடியாததாகிவிடும். ஆகவே நாம் இப்போது கைத்தொழில்மய நாடுகளில் காணப்படும் துய்ப்பு முறைகள் அந்த நாட்டைப் பொறுத்தவரையிலேயே நீண்ட காலத்தில் தொடர்ந்தும் பேணப்பட முடியாத னவாக இருக்கின்றன. அத்தோடு புதிதாக வளர்ச்சியுற்றுவரும் நாடுகளும் இவற்றை பின்பற்ற முயன்றால் அது ஒருபோதும் சாத்தியமற்றதாகவே இருக் கும். இது தவிர்க்க முடியாதவாறு பெரிய அளவில் கலகங்களை அடுத்திர ண்டு பத்தாண்டுகளில் ஏற்படுத்தக் கூடியவையாகும்.

## மரபணு மாற்ற உணவுப் பொருட்கள்

அண்மைக் காலத்தில் உயிரினங்களின் நிறமூர்த்தங்களைக் கண்டறியும் தொழில் நுட்பமானது பெரியளவில் வளர்ந்து வந்துள்ளது. இதன் காரணமாக பல்வேறு பெரிய நிறுவனங்களும் வெவ்வேறு உயிரினங்களின் நிறமூர்த்த



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அமைப்பை கண்டறிவதற்கான போட்டி போட்டுக் கொண்டு அலைகின்றன. அத்தோடு வெவ்வேறு உயிரினங்களின் நிறமூர்த்தங்களைக் கலந்து உயிரினங் களை உருவாக்கி, அவற்றில் குறிப்பிட்ட சில சிறப்பான பண்புகள் இருப்பதாக பிரச்சாரப்படுத்தும் இந்த நிறுவனங்கள் அந்த புதிய உயிரினத்திற்கு தாமே காப்புரிமம் உடையவர்களாக வேறு பதிவு செய்து கொண்டுள்ளார்கள். அதனால் அதன் விதைகளை பயன்படுத்துவதற்கு விவசாயிகள் தம்மிடம் அனுமதி பெறவேண்டும் என்ற பெயரில் மிக அதிகளவான பணத்தை மீண்டும் சாதாரண விவசாயிகளிடம் இருந்து கொள்ளையடிக்கத் தொடங்கியிருக்கிறா ர்கள். இந்த துறையானது ஆரம்பத்தில் இருந்தே பல பிரச்சனைகளை முகம் கொடுக்க நேர்கிறது.

- முதலாவதாக, இன்றுள்ள பல்வேறு பயிர்களும், பண்ணை விலங்கி னங்களும் யாருடைய படைப்பும் அல்ல. மாறாக எமது முன்னோர்கள் பல தலைமுறை தலைமுறையாக செய்துவந்த பரிசோதனைகளின் பலன்களால் உருவானவையாகும். இதனை தேர்ந்த இன வளர்ப்பு (selective breeding) என்பார்கள். அதாவது தாங்கள் ஆரம்பத்தில் பயன்படுத்த முனைந்த விலங்கினங்கள் மற்றும் பயிரினங்களை மிகவும் கூர்மையாக கவனித்து, அவற்றுள் நல்ல குணவியல்புகளைக் கொண்ட சந்ததியினரை மாத்திரம் தேர்ந்தெடுத்து மறு உற்பத்தி செய்வதன் மூலமாக, படிப்படியாக, ஒரு நீண்ட காலகட்டத்தின் ஊடாக, பல தலைமுறைகளின் கூட்டு உழைப்பின் விளைவே இந்த நவீன உயிரினங்கள். இவற்றை தனியார் படைக்கவும் இல்லை, அதற்கு உரிமை பாராட்டுவதும் அனுமதிக்கத்தக்கதும் முடியாது. ஆயினும் மொன்சன்ரானோ போன்ற கொம்பனிகள் இந்தியாவின் பாஸ்மதி அரிசி, மஞ்சள், வேம்பு போன்றவற்றிற்கும் கூட காப்புரிமை வாங்க முனைந்தது. பல்வேறு சுற்றுச் சூழல் செயற்பாட்டாளர்களினாலும், மூன்றாம் உலக நாடுகளது கூட்டுச் செயற்பாடுகளினாலும் இந்த முயற்சியானது தோற்கடிக்கப்பட்டது.
- இரண்டாவதாக, இந்த மரபணு விஞ்ஞானமானது ஒப்பீட்டளவில் அதன் ஆரம்ப நிலையிலேயே இருக்கிறது. அதாவது நாம் சில குறிப்பிட்ட குணாதிசயங்களுக்கு பொறுப்பான சில மரபணுக்களை கண்டு பிடித்துள்ளோம் என்பது மகிழ்ச்சியான செய்தியே. ஆனால் அதுவே முழு வெற்றியாகிவிடாது. ஏனெனில், அந்த மரபணுவானது வேறு என்ன குணாதிசயங்களையும் கட்டுப்படுத்தும் என்பது இன்னமும் சந்தேகத்திற்கு இடமில்லாதவகையில் தெளிவுபடுத்தப்படாத நிலைமையே நிலவுகிறது. இப்படிப்பட்ட நிலையில் இப்படிப்பட்ட ஒரு மரபணுவை, முற்றிலும் மாறான ஒரு உயிரினத்தினுள் செலுத்துவது என்பது நீண்ட காலத்தில் எவ்விதமான விளைவுகளை உருவாக்கலாம் என்று இதுவரை யாருமே உறுதியாக கூறமுடியாத நிலையில் உள்ளோம். அப்படிப்பட்ட நிலையில் இதனை அவசர அவசரமாக சந்தையேற்றி அதன் மூலமாக பெருந்தொகையான பணத்தை சம்பாதிக்க இந்த பலதேசிய நிறுவனங்கள் முயல்கின்றன. இது மக்களது நலன்கள் என்றவகையில் வரவேற்கத் தக்கதல்ல.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



- அடுத்ததாக, வேறு ஒரு உயிரின் மரபணுவானது இன்னொரு இனத்தினுள் புகுத்திய பின்பு, அந்த புதிய மாதிரியானது, தனது இனத்தைச் சேர்ந்த இயற்கையான வகையினங்களுடன் மிகவும் இயல்பாகவே இனப்பெருக்கத்தில் ஈடுபட முடியும். இதனால் படிப்படியாக குறிப்பிட்ட இனத்தின் அத்தனை விலங்குகள் அல்லது தாவரங்களுமே புதிய இனத்தினால் மாசுற்றுப் போய்விடும். பின்பு ஏதாவது ஒரு காரணத்தினால் அந்த குறிப்பிட்ட இனத்தின் தூய்மையான மாதிரிகள் தேவைப்பட்டால் அது கிடைக்காமற் போய்விடும். இது உயிரியல் பன்முகதன்மைக்கு எதிரானது.

- மரபணு மாற்றம் செய்த புதிய மாதிரியை விற்பளை செய்யும் நிறுவனமானது அதன் விதைகளை விற்பனை செய்யும் போது, அந்த விதைகளை குறிப்பிட்ட விவசாயி ஒரு தடவை மாத்திரமே பாவிப்பார் என்று உத்தரவாதம் பெற்றுக் கொண்டே விற்பனை செய்கிறது. ஏதாவது ஒரு காரணத்தால் குறிப்பிட்ட ஒரு விவசாயி, தனது பயிரில் விளைந்த விதைகளை அடுத்த போகத்திற்கு பாவித்தால் அது கடுமையான குற்றமாக கருதப்படும். இதனால் விவசாயிகள் தமது விதைகளை சேமித்து வைக்கும் உரிமைகளை இழந்து விடுகிறார்கள். இப்போது குறிப்பிட்ட விலைக்கு விதைகளை விற்கும் இந்த நிறுவனம் எதிர்காலத்தில் விலைகளை கூட்டிக் கொண்டே சென்றால், அதற்கு எதிராக போராடும் பலம் விவசாயிகளுக்கு மாத்திரம் அன்றி அந்த நாடுகளுக்கும் கூட கிடையாது. இப்படியாக உணவுக்கான இறைமையை (food soverinity) பராகசுரக் கொம்பனிகளிடம் ஒப்படைத்த பின்பு நாம் ஏகாதிபத்தியத்தின் பிடியில் சிக்குவதாகவே அர்த்தப்படும்.

## முடிவாக...

மேலே கூறிய பலதரப்பட்ட சூழலியல் சார்ந்த பிரச்சனைகளையும் முகம் கொடுக்கும் விதத்தில் பல்வேறு நாடுகளையும் சேர்ந்த செயற்பாட்டாளர்கள் பலவிதமான நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளார்கள்.

- மிகையான துய்ப்பை கட்டுப்படுத்துவது. குறைவாக பாவிப்பது, மீண்டும் மீண்டும் பாவிப்பது, முடியாதபோது மீள்சுழற்சிக்கு உற்படுத்துவது. (reduce, reuse, recycle)
- சக்திப் பாவனை கூடிய பொருட்களை தவிர்ப்பது: அப்படி பாவிப்பின் குறைந்த நேரத்திற்கே பாவிப்பது.
- அதிக சக்தியை உட்கொள்ளும் மாமிச உணவுகளை குறைப்பது, தவிர்ப்பது, முற்றாக கைவிடுவது.
- சேதன பசளை, நாசினிகளை பயன்படுத்தும் உணவுகளை பயன்படுத்துவது.
- எமது நாடுகளில் விரிவான அளவில் இயற்கையின் பசளை, கிருமி கொல்லிகள் போன்றவற்றைப் பயன்படுத்துவது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



- பல்வேறு பயிர்களையும் கலந்து செய்வது, சுழற்சி முறையில் பயிர் களை மாற்றுவதன் மூலமாக மண்ணின் வளங்களை காப்பாற்றுவது.

மேலே கூறியவை தனிநபர்கள் என்ற வகையில் ஒவ்வொருவரும் தமது அன்றாட வாழ்வில் கடைப்பிடிக்கக் கூடிய எளிமையான வழிமுறைகள் ஆகும். ஆனால் இவற்றைவிட தீவிரமான செயற்பாட்டு முறைகள் முன்னேறிய பிரிவி னரும் அமைப்புக்களும் மேற்கொள்ள வேண்டியது அவசியமானதாகிறது. அது வும் எமது தாயகமே நேரடியாக இந்தவிதமான சுற்றுச்சூழல் தாக்கங்களுக்கு உட்படும் நிலையில் எமது அக்கறைகளை தீவிரப்படுத்துவது அவசியமான தாகிறது. உலகலாவிய அளவில் ஏற்படும் புவி வெப்பமடையும் செயற்பாடு எமது தாயகத்தின் பெரும்பகுதியை அழித்துவிடக் கூடியது என்ற வகையில் எமது அக்கறைகளை நாம் வெளிப்படுத்தியாக வேண்டும். அத்தோடு எமது தாயகத்தின் எமது அனுமதியின்றி நிர்மாணிக்கப்படும் அனல் மின்நிலையம், சீமந்து தொழிற்சாலை விஸ்தரிப்பு, இந்திய மொன்சன்ரானோ முகவரின் விவ சாய முயற்சிகளையும் நாம் எதிர்த்தாக வேண்டும். இதற்கு மேல் ஒடுக்கப்பட்ட வர்க்கங்கள் மற்றும் ஏனைய ஒடுக்கப்பட்ட சமூகப்பிரவினரது நலன்களில் இருந்து சுற்றுச்சூழல் பற்றிய அக்கறைகள் பிரிக்கப்பட முடியாதவையாகிறது.

காலனித்துவம் அந்தந்த நாடுகளில் அரசியல், சமூக, பண்பாட்டு மற்றும் கலாச்சாரக் கட்டமைப்புக்களில் மட்டும் தாக்கத்தை ஏற்படுத்தவில்லை, அத்து டன் சூழலியல் சிதைவுகளுக்கும் வழிவகுத்துள்ளன. ஐரோப்பிய காலனித்து நாடுகள் தாம் ஆண்ட நாடுகளில் காணப்பட்ட காலநிலைக்குகந்த உற்பத்திப் பொருட்களை விடுத்து தமது தேவைக்கும், சந்தைக்கும், நுகர்வு கலாச்சார த்தை நோக்காக கொண்டும் உற்பத்திப் பொருட்களை அந்த நாடுகளில் அறிமுகப்படுத்தினர் எனவும் இதனால் இந்த நாடுகளின் சுயமான வாணிப , வர்த்தக மற்றும் உணவுத்தன்னிறைவில் சீர்குலைவை ஏற்படுத்தியுள்ளன. இதனை சூழலியல் ஏகாதிபத்தியம் என்கிறோம். இந்த சூழலியல் ஏகாதிபத் தியம் எவ்வாறு செயற்படுகிறது எனவும் காலனித்துவத்தின் ஒட்டு மொத்த சுரண்டலுக்கு காரணமாக உயிரியல் மற்றும் சூழலியல் அம்சங்கள் இருந்தமையையும் முதன் முதல் விளக்கியவர் அல்பிரட் குரஸ்பி (Alfred Crosby). இதுவே தற்போது காலனியாதிக்கதிற்குட்பட்ட நாடுகள் எதிர்நோ க்கும் பாரிய சுற்றுச்சூழல் அச்சுறுத்தலாகும். எமக்கு தெரிந்த வகையில் சில நாடுகள் எப்போதும் நிவாரணம் வழங்கும் நாடுகளாகவும், சில நாடுகள் எப்போதும் நிவாரண உதவிகளைப் பெறும் நாடுகளாகவும், பஞ்சம், பசி, பட்டினி, வறண்டு போன, தரிசாக்கப்பட்ட விளைநிலங்களையுடைய வனங்க ளாக மாறிக் கொண்டிருக்கின்றன. இதற்கான காரணத்தைக் கண்டறியவும், இத் தொடர்பு வலைப்பின்னலைக் கண்டறியவும் எமக்கு கலாநிதிப் பட்டம் தேவையில்லை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

## வீட்டுவேலைக்களுக்கான ஊதிய இயக்கமும் சல்மா ஜேம்ஸ்சும்

- ஷீமோன் சலாம் (தமிழாக்கம்: அருந்ததி)

வீட்டை சுத்தம் செய்யும் இயந்திரத்தின் (Vacuum Cleaner) உறுமல், குழந்தைகளின் அழுகை, குளியலறையின் சத்தம், சமயலறையில் பொரிக்கும் ஓசை: இந்த ஒலிகள் யாவும் **அரசியல்** தன்மை மற்றும் **தார்மீகம்** ஆகியவற்று டன் தொடர்புடைய மிக முக்கிய பணிகளாகும். வர்க்கப் போராட்டத்தை நாளாந்தம் வெளிப்படுத்தப்படும் ஓரிடம் வீடாகும். இந்த வாதத்தையே **'வீட்டுவேலைக்கு ஊதியத்திற்கான இயக்கம்'** (Wages for House work Campign) மற்றும் 'உலகப் பெண்களின் வேலைநிறுத்த இயக்கம்' (Global Women's Strike Campaign) ஆகியவற்றின் ஒருங்கிணைப்பாளர் **சல்மா ஜேம்ஸ்** (Selma James) முன் வைக்கிறார். பெண்களின் உழைப்பானது, பாத்திரங்களை கழுவுதல், நிலத்தை சுத்தப்படுத்துவது, பிள்ளைகளை தயார்ப டுத்தி அனுப்புதல், கூப்பன் அட்டைகளை வெட்டுதல், அடுத்த வேலையை ஆரம்பிக்கும் முன் அவசர அவசரமாக ஒரு கப் கோப்பியை அருந்துவது போன்ற விதத்தில் அமைகிறது. நாள் முழுவதும் ஒரே மாதிரியான சலிப்பூட் டும் வேலைகளை, திருப்பத் திரும்ப செய்தபடியே பெண்களின் நாட்கள் கழிகின்றன. கோடிக்கணக்கான பெண்களின் நாளாந்த வாழ்க்கை இவ்வா றாகவே அமைந்துவிடுகிறது. இது ஒன்றும் ஆச்சரியமானதல்ல. இதனை நாம் பெரும்பாலும் "இல்லாள்" என்றோ "இல்லத்துணை" என்ற சொற்பதங்களுடன் மட்டுமே தொடர்புபடுத்திக் கொள்கிறோம். ஆனால் இவர்களை நாங்கள் "தொழிலாளர்" என கணிப்பிடுவதில்லை. பற்பல சந்தர்ப்பங்களில் வீட்டில் செய்யப்படும் வேலை சமூக ரீதியில் முக்கியமானவை என்பதையோ, இது உழைக்கும் மக்களின் வாழ்வுடனும், போராட்டங்களுடனும் நேரடியாக தொடர் புடையது என்பதையோ நாம் காணத் தவறி விடுகிறோம்.

பெண்களின் உரிமை பற்றி உரையாடும் சிந்தனையாளர்கள் பலர் தமது வாதங்களிலும், முன்வைக்கும் தீர்வுகளிலும் பெண்கள் வீட்டில் செய்யும் வேலை கள் விலைமதிப்பிட முடியாதவை என்பதை குறிப்பிடத் தவறிவிடுகின்றனர். இது எண்ணிலடங்கா சந்ததிகளாக குடும்பங்களை ஒன்றிணைக்க வைத்து ள்ளது என்பது மட்டுமல்ல, ஒரு பிரத்தியேக வகையான குடும்பங்களை இணைத்து வைத்துள்ளது. பெண்களின் தியாகங்களானது தொழிலாளர் குடும்பங்களை இணைக்கும் கருவியாக அமைந்துள்ளது. பல பழமைவாதிகள் செய்வது போல வெறும் புகழ்ச்சி வார்த்தைகளுடன் நின்று விடாது, பெண்க ளின் உழைப்பிற்கு ஊதியம் வழங்க வேண்டும் என்று சல்மா ஜேம்ஸ் வலியு றுத்துகிறார். நாம் பிள்ளைகளை வளர்க்க வேண்டுமானால், வாழ்வதற்கு தகு ந்த ஊதியம் எங்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்பது அவரது வாதமாகும். இங்கு இவர் தொழில்ரீதியான பிள்ளை பராமரிப்பாளர்கள் மற்றும் வீட்டுப் பணிப்பெண்கள் போன்றவர்களை குறிப்பிடவில்லை. (இவர்களும் தமது உரிமை களுக்காகவும் தமது மேம்பாட்டிற்காகவும் போராட வேண்டிய கடமையைக் கொண்டிருந்த போதிலும் இவர்களைப் பற்றி இந்த சந்தர்ப்பத்தில் அவர்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பேசவில்லை.) இவர் வீட்டில் உதவியாளர்களாக அல்லது இல்லத்துணைவர்களாக வீட்டு வேலை செய்யும் பெண்களின் போராட்டங்களையும், வேலை தலங்களில் பணிபுரியும் பெண்களதும் போராட்டங்களையும் தொடர்புபடுத்த விரும்புகிறார்.

இடது மற்றும் வலது ஆகிய இரண்டு தரப்பு அரசியல்வாதிகளுக்கு மாறாக, பல கோடிக்கணக்கான பெண்கள் செய்யும் பராமரிப்பு மற்றும் தார்மீகம் சார்ந்த இந்த வேலைகளானவை, தொழிலாளிவர்க்க அல்லது மத்தியதர வர்க்க ஆண்களும் பெண்களும் தமது வேலைத்தளங்களில் செய்யும் "மிக முக்கியமான வேலை"களை விட ஒன்றும் இரண்டாம் பட்சமானதல்ல எனும் கருத்தை சல்மா வலியுறுத்துகிறார். வகுப்பறையில் பிள்ளைகளுக்கு கல்வியூட்டுவதற்காக ஆசிரியர்களுக்கு ஆயிரக்கணக்கான டொலர்களை ஊதியமாக வழங்கிறோம், ஆனால் பிள்ளைகளுக்கு முதன்முதலாக வாசிக்க கற்றுக் கொடுப்பவர்கள், நன்னெறிகளைப் போதிக்கும் இறையியலாளர்கள் மற்றும் சமூகவியல் ஆசிரியர்களும் தாய்மார்களே. இதுவரை சமூகமானது கல்வி தொடர்பாக வீட்டில் மேற்கொள்ளப்படும் குறிப்பிடத்தக்கதும் மற்றும் சிரமமான ஊதியமற்ற வேலையை கண்டுகொள்ளத் தவறியுள்ளது.

பெண்கள் வீட்டில் செய்யும் வேலைகள் விலை மதிப்பிட முடியாதவை: இவை சமூகத்திற்கு இன்றியமையாதவையாகவும், சமூகத்தை தாங்கிப்பிடிப்பவையாகவும் இருக்கின்றன. இந்த அடிப்படையிலேயே சல்மா ஜேம்ஸ் உடன் இணைந்து 'பெண்களின் வீட்டுவேலைகளுக்கு ஊதிய இயக்கம்' அமைப்பு மற்றும் 'சர்வதேச பெண்களது வேலைநிறுத்த இயக்கம்' ஆகியன மேற்சொன்ன கோரிக்கைகளை முன்வைக்கின்றன. முதலாளித்துவத்தின் கீழ் உழைக்கும் வர்க்கத்தைச் சேர்ந்த இல்லத்துணைவிகள் என்ன பாத்திரத்தை வகித்தனர்? இந்த முதலாளித்துவ உழைப்பு முறைக்கு எதிரான பெண்களின் எழுச்சியை எவ்வாறு கருத்தாக்கம் செய்யலாம்? உழைப்பு சக்திக்கு ஊதியம் வழங்குவது பெண்களின் விடுதலைக்கு ஒரு முன்னேற்றமான படியாக இருக்குமா? பெண்களுக்கு இடையிலான, குறிப்பாக இல்லத் துணைவிகளுக்கு இடையிலான சர்வதேச ஒருமைப்பாடு எவ்வாறு செயற்படுகிறது?

வீட்டில் ஊதியமின்றி வேலை செய்யும் பெண்களின் தேவைகளை புரிந்து கொள்ளும் நுட்பமான பார்வையையும், பல சகாப்தகால ஈடுபாட்டையும் நாம் சல்மாவினுடைய எழுத்துக்களில் காணலாம். இவருடைய எழுத்துக்களை பகுப்பாய்வு செய்யும் போது இந்த பிரச்சனைக்கான பதில்களைப் பெறக்கூடியதாக இருப்பதுடன், வீட்டு வேலைக்கு ஊதியம் வழங்குவது தொடர்பான இயக்கத்திற்கு அவை எவ்வாறு உயிரூட்டுகின்றன என்பதையும் காணலாம். முக்கியமாக, சல்மாவினுடைய ஆய்வானது பெண்களின் விடுதலை பற்றிய விரிவான பார்வையை அளிக்கிறது. அத்துடன் பொதுவாக உழைக்கும் வர்க்கத்திற்கு, ஒரு நிறவெறிக்கு எதிரானதும், சுய-நிர்வாகத்துடன் கூடிய (Self Management) பரந்த பார்வையை வழங்குவதன் மூலமாக தொழிலாளர்களின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தலைமையானது, தனியே வீட்டுக்கு வெளியே வேலை செய்யும் ஒரு குறிப்பிட்டவகையிலான "நவீன" பெண்களை மாத்திரம் உள்ளடக்கியதாக அல்லாமல், உலகெங்கும் பரந்துவாழும் பெண்களின் போராட்டங்களையும் அநுபவங்களையும் கருத்திற் கொள்வனவாக இவை அமைகின்றன. சல்மாவின் எழுத்துக்கள் வீட்டுவேலைகளுக்கான ஊதியம் எனும் விவாதத்தை மட்டு மல்லாமல் இன்னும் அதிகமான விடயங்களையும் உள்ளடக்கியுள்ளது. மார்க்சியம் அல்லது தொழிற்சங்கங்கள் பற்றி இவரது கருத்துக்கள் அதிகளவு காணப்பட்டாலும் கூட இந்தக் கட்டுரையில் எடுத்துக் கொண்ட விடயம் தொடர்பான கருத்துக்கள் பற்றி மட்டுமே இங்கு கவனத்தில் கொள்ளப் படுகிறது. (மேலதிக விபரங்களுக்கு பார்க்க. The Power of Women and the Subversion of the Community).

கடந்தகால சுமைகள்: உழைப்பு மற்றும் பெண்ணியம் தொடர்பாக மரபார்ந்த கருத்தாக்கங்களை நாம் கடந்து செல்லவேண்டியது ஏன்? **"...யதார்த்தத்தில் தொழிலாளர் வர்க்கம் என்பது வெள்ளையின, முப்பது வயதிற்கு மேற்பட்ட ஆண்களை கருதுவதாகவே உள்ளது..."**

தொழிலாளர்களை அமைப்பாகுவது தொடர்பான மரபார்ந்த வரையறைக ளானவை, முதலாளித்து சமூக உறவுகளுக்கு எதிரான அல்லது அவற்றை சீர்படுத்தும் போராட்டத்தில், வீட்டில் வேலை செய்யும் பெண்களை இவற்றி லிருந்து முற்றிலும் வேறுபட்டவர்களாக கருதி, இவற்றில் ஈடுபடுவதிலிருந்து பெண்களை முற்றிலும் விலக்கி வைத்துள்ளது. முதலாளித்து உற்பத்தி உறவு தொடர்பான பெண்களின் அநுபவங்களானவை, தொழிற்சாலை, சுரங்கங்கள் மற்றும் வேலை தலங்களில் பணிபுரியும் தொழிலாளரது அநுப வங்களை ஒத்தவையே. 'பெண்கள், தொழிற்சங்கங்கள், வேலை' என்ற படைப்பில், **"முழுநேரமும் வேலை செய்யும் எமது உழைப்பு சூறையாடப் பட்டுள்ளது. தொழிற்சங்களுக்கு நாம் இருப்பதாகவே தெரியாது. முதலாளிகள் கணவர்மாருக்கு ஊதியத்தை வழங்கும் போது இவர்கள் இரு தொழிலா ளர்களின் உழைப்பைப் பெறுகின்றனர் ஒருவருடையதை மட்டுமல்ல"** என்று சல்மா குறிப்பிடுகிறார்.

இங்கு நிலைநாட்டப்பட வேண்டியிருப்பது முதலாளித்து சமூகத்தில் பெண்க ளின் வீட்டு வேலைகள் என்ற ஒன்றிணைக்கப்பட்ட கருத்தாக்கம் மட்டுமல்ல, பெண்கள் வீட்டில் இருந்து கொண்டே முழுபெறுமதிமிக்கவர்களாக வர்க்கப் போராட்டத்தில் ஈடுபடலாம் என்ற கூற்றுமே. காலாதிகாலமாக இருந்து வந்த முற்போக்கு சிந்தனைகளுக்கு முரணாக சல்மா ஜேம்ஸ், வேலை மற்றும் வீட்டுவேலை என்பவை என்ன? மற்றும் முதலாளித்துவத்திற்கு எதிரான போரா ட்டத்தில் பெண்களின் பங்கு என்ன? எனும் வினாக்களை எழுப்புகிறார், **"ஆண்களின் ஒவ்வொரு வேலைநிறுத்தமும் எவ்வளவு தூரம் பெண்களின் ஆதரவில் தங்கியிருந்தது என்பதை யாராவது சுட்டிக்காட்டியுள்ளார்களா?"** தமது மூலோபாயங்களையும், கோரிக்கைகளையும் அவற்றிற்கே உரிய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சரியான பின்புலத்தில், அர்த்தமுள்ள விதத்தில் வைப்பதற்காக சல்மாவும் அவரை ஒத்த சிந்தனையாளர்களும் பல **தப்பெண்ணங்களுக்கு** (prejudices) எதிராக போராட வேண்டியிருந்தது.

'பெண்கள், தொழிற்சங்கங்கள், மற்றும் வேலை', 'பெண்களது ஆற்றலும் சமூக கிளர்ச்சியும்', 'பால், இனம், மற்றும் வர்க்கம் (Women, The Unions and Work; The Power of Women and the Subversion of the Community; and Sex, Race and Class) போன்ற படைப்புகளில் சல்மா அவர்கள் இடது சாரிகள் மற்றும் தொழிற்சங்கங்கள் தொடர்பான விமர்சனங்களை முன்வை க்கிறார். இவற்றில், வீட்டு வேலைகள் மற்றும் பிள்ளைகளை வளர்ப்பது போன்றவை சமூகரீதியிலும், அறநெறி ரீதியிலும் பெறுமதிமிக்கவை எனும் ஒரு பார்வையை முன்வைக்கின்றார். சல்மாவும் இவரது தோழர்களும், இந்த கருத்தினை இடதுசாரித்துவ மற்றும் பல்வேறுபட்ட பெண்ணிய நோக்குகளின் பின்னணியில் முன்வைக்கின்றனர். 'பெண்கள், தொழிற்சங்கங்கள், மற்றும் தொழில்' என்ற படைப்பின் முதல் பக்கங்களில், தொழிற்சங்கங்கள் மற்றும் தொழிற்சாலைகளில் எவ்வாறு இடதுசாரிகள் பெண்கள் போராட்டத்தை மட்டுப்படுத்தியுள்ளனர் என விபரித்துள்ளார்.

"நாம் உழைக்கும் வர்க்க பெண்களிடம் செல்வதாயின் ஒன்றில் அவர்கள் மூலமாகவோ, அல்லது எங்கும் நீக்கமற நிறைந்துள்ள, வர்க்கம் பற்றிய அவர்களின் விளக்கம், அவர்களுடைய மரபுகள் மற்றும் அவர்களுடைய நடவடிக்கைகள் மூலமாகவே செல்ல வேண்டும் என இவர்கள் எம்மில் பலரை நம்ப வைத்துள்ளனர். இது ஒரு திறந்திருக்கும் பாதையை அடைத்து நிற்பது போன்றதாகும். இவர்கள் சுயாதீன பெண்கள் அமைப்பின் நியாயமான தன்மையை நேரடியாகவோ அல்லது - பெண்களை வர்க்கத்தின் குறிப்பாக சுரண்டப்பட்ட, விளிம்புநிலை பிரிவாக நடத்துவதன் மூலமாக - மறைமுக மாகவோ கேள்விக்குள்ளாக்குகிறார்கள்.. இவர்களைப் பொறுத்த வரையில் 'உண்மையான' தொழிலாளர் வர்க்கம் என்பது வெள்ளையின முப்பது வய திற்கு மேற்பட்ட ஆண்களையே குறிக்கிறது. இங்கு **இனவாதம், ஆணாதிக்கம் மற்றும் வயது ஆதிக்கம் ஆகியன ஒரு பொது மரபைக் கொண்டுள்ளன.**

தொழிற்சங்கங்கள் தொடர்பாக நீண்ட மனக்குறைகளின் பட்டியலை சல்மா முன்வைக்கிறார். இவர்கள் "**தனிப்பட்ட பெண்களின் (மற்றும் சில ஆண்க ளதும்) தொடர்ந்த கடுமையான போராட்டங்களின் பின்னும் சமமற்ற ஊதிய விகிதங்களைத் தொடர்ந்து பேணுவதற்கு துணைபோயுள்ளனர்". மேலும் "தொழிற்சங்கங்களானவை வேலைகளின் வகைப்படுத்தல்களை (ஆண்களு க்குரியவை மற்றும் பெண்களுக்குரியவை இவை இவைதாம் என்று பால் ரீதியான வேலைப் பாகுபாடுகளை, மற்றும் அதன் அடிப்படையிலான ஊதிய பாகுபாடுகளை மொ-ர்) அப்படியே ஏற்றுக்கொள்வதன் மூலமாக பெண்க ளுக்கு குறைந்த ஊதியம் வழங்குவதை தொடர்ந்து பேணுகிறது**" எனவும் இது "சமவேலைக்கு சமசம்பளம் என்ற உடன்பாடுகளின் பின்பும் கூட தொடர்கிறது"



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



எனவும் கூறுகிறார். இதனைவிட பெண்களுக்கான சமசம்பளமானது, வெவ் வேறு தரத்திலுள்ள ஆண்களுக்கிடையே காணப்படும் சம்பள வேறுபாடுகளின் தரப்படுத்தலில் "குழப்பத்தை" ஏற்படுத்தலாம் என இவர்கள் கவலை கொள் கின்றனர் எனவும், அத்துடன் தொழிற்சங்கங்களின் செயற்பாடுகளானவை, அமைப்பு ரீதியில் மூலதனம் ஒழுங்கமைக்கப்பட்டுள்ள முறையை அப்படியே தொடர்வதாக, ஒருவித பிளவுண்ட வர்க்கங்களாக, ஊதியமுடையவர்கள் மற் றும் ஊதியம் பெறாதவர்கள் என்ற வேறுபாடுகளை தாமும் பலப்படுத்தும் விதத்தில் அமைந்திருப்பதாக விமர்சிக்கிறார். வேலை இல்லாதோர், வயோ திபர், நோயுற்றோர், சிறார்கள் போன்றவர்களை தொழிற்சங்கங்கள் அலட்சிய ப்படுத்துவதுடன், இவர்களை ஊதியம் பெறுபவர்களிடமிருந்தும், போராட்டத்தி லிருந்தும் பிரிக்கின்றன எனக் குறிப்பிடுகிறார்.

சல்மா ஜேம்ஸூம், **மரியரோசா டலா கோஸ்ரா** (Mariarosa Dalla Costa) வும் இணைந்து எழுதிய 'பெண்களது பலமும், சமூக கிளர்ச்சியும்' எனும் நூலில் பெண்ணுரிமைச் செயற்பாட்டாளர்களுடன் உரையாடலில் ஈடுபடுகின்ற னர். இவர்களுடைய தலைமுறையைச் சார்ந்த பெண்ணியலாளர்களுடனும், வீட்டிலிருக்கும் பெண்களுடனும் உரையாடுகையில், தமக்கிடையே வர்க்கம் தொடர்பான வரையறைகளில் மாத்திரமன்றி, பெண்ணியம் தொடர்பான அர்த்தப்படுத்தல்களிலும் முரண்பாடுகள் காணப்படுவதை உணர்கின்றனர். பெண்ணியம் தொடர்பான அக்கறைகளுடன் முதலாளித்துவத்தை அணுகுவ திலும் வேறுபட்ட போக்குகளைக் காண்கின்றனர். இங்கு பெண்களது விடுதலை என்பது, சமத்துவமான சம்பளம் மற்றும் இன்னும் சற்று கூடியளவு நியாயமானதும், திறமையானதுமான சமூகநல அரசு (Welfare State) என்றள வில் மரபார்ந்த பார்வையானது குறுக்கப்பட்டுள்ளதைக் காண்கின்றனர். இந்தப் பெண்களுக்கு **மூலதனம் தன்னளவிலேயே ஒரு பிரதான எதிரியாக காணப்படவில்லை** மாறாக அதன் பின்தங்கிய தன்மைகளே இந்த பகை மைக்கு காரணமாக அமைகிறது. இவர்கள் **முதலாளித்துவ சமூக உறவுகளை அழிப்பதை** நோக்காக கொள்ளவில்லை, மாறாக, இதனை மேலும் அறிவு பூர்வமான வழியில் ஒழுங்கமைப்பதையே நோக்கமாக கொண்டுள்ளார்கள்.

பெண்ணுரிமை அமைப்புக்களில் வெவ்வேறுபட்ட எதிரெதிரான நிலைப்பா டுகள் காணப்படுகின்றன என்பதை சல்மா உணர்கிறார். பெண்களது அமைப்பு வடிவம் மற்றும் பெண்விடுதலை தொடர்பான வாதங்கள் ஆகியவற்றிலுள்ள இந்த பலதரப்பட்ட வேறுபாடுகளானவை, பல்வேறு பிரிவினரும் கொண்டுள்ள கலாச்சார வேறுபாடுகள் பற்றிய உணர்வுத்தரம், பெண்களது சுய-ஆட்சி க்கான ஆற்றல் பற்றிய புரிதல்கள், மற்றும் பெண்களின் விடுதலைக்கான இலக்குகள் என்பதில் காணப்படும் வேறுபாடுகள் என்பவற்றின் விளைவாக தோன்றுபவையாகும். 'பெண்களது ஆற்றலும் சமூகத்திற்கு எதிரான கிளர்ச்சி யும்' எழுதப்பட்ட காலகட்டத்தில் அமெரிக்க பெண்ணியவாதிகள் என்ன கூறியி ருந்தார்கள்? யார் "இந்தப் பெண்கள்"? என்ற கேள்வியை எழுப்பினர். பெண்கள் அமைப்பினுள், தனித்துவமான, வெளிப்படையாக தெரியக்கூடிய இரண்டு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அரசியல் போக்குகள் தோன்றியுள்ளன. இவை அரசியல்ரீதியில் முற்றிலும் எதிரெதிரான முனைகளில் இருப்பவையாகும். இவற்றில் உள்ள தாராளவாத போக்கு பற்றி சல்மா விபரிக்கையில்:

> இந்த அரசியலின் எதிர்கால போக்குகள் பலவேறுபட்டனவாக இருக்க லாம். பெண்களின் எந்த சமூகப்பிரிவானது இந்த கருத்தின் ஆளுமைக்கு உள்ளாகிறார்களோ என்பதில் இது தங்கியுள்ளது. இதன் செல்வாக்கு க்கு உட்படும் ஒரு மேட்டுக்குடி சங்கமானது தனிமைப்படுத்தப்பட்ட, தமக் குள் மாத்திரம் தமது செயற்பாடுகளை முடக்கிக் கொள்ளும் ஒரு அமை ப்பாக முடியலாம். இவர்கள் பொதுவில் பெண்ணியக்கத்திற்கு அவப்பெ யரை பெற்றுக் கொடுப்பது என்பதற்கு மேலாக நடப்பு ஒழுங்கமைப்பிற்கு எந்தவிதமான தீங்கையும் ஏற்படுத்த மாட்டாதவர்களாக இருப்பார்கள். அல்லாவிட்டால், இவர்கள் அதிகாரத்திலுள்ள ஒரு ஆளும் வர்க்கத் தட்டைச் சேர்ந்த பெண்களால் உள்வாங்கப்படலாம். அப்படியான சந்தர்ப்பங்களில் இது கிளர்ச்சி செய்யும் பெண்களை மாத்திரமன்றி ஆண்களையும் கட்டுப் படுத்தும் பணிக்கு துணையாகலாம்.

தாராளவாத பெண்ணியவாதத்தால் ஏற்படக்கூடிய தாக்கங்கள் பற்றி சல்மா கவலை கொண்டிருந்தார். Financial Times பத்திரிகையில் ஒரு கட்டுரைக்கான மேலதிக விளக்க குறிப்பில், “பல முதலாளிகள் நிர்வாகத்தில் தலைமைப்பதவி களில் பெண்களை “பயன்படுத்தவதற்கான” வாய்ப்புக்களை இழக்கின்றனர். நன்றிமிக்க இந்த வெளியாட்களான பெண்கள், ஊதிய கட்டமைப்பை கீழ்நோக் கி நகர்த்துவதற்கு உதவியாக அமைவார்கள்” என்று இவர் குறிப்பிட்டிருந்தார்.

பெண்விடுதலை அமைப்பின் நோக்கம் தொடர்பான சல்மாவினது பார்வை க்கும் தாரளவாத பெண்ணியவாதிகளது கருத்துக்களுக்கும் இடையில் கூர்மை யான முரண்பாடுகள் இருந்தன. பெண் என்ற அடையாளத்தைக் கொண்டிரு ப்பதானது இந்த தாராளவாத பெண்ணியவாதிகளை, ஆண்கள் மற்றும் சமூ கம் தொடர்பாக பெண்ணியவாதிகள் முன்வைக்கும் அனைத்து விமர்ச னங்களிலிருந்தும் விலக்குப்பெறச் செய்துவிடும் என இவர் நம்பவில்லை.

> “பெண்கள் இயக்கமானது உருவாக்கிய உத்வேகத்தை - தமக்கென ஒதுக்கப்பட்ட பாராம்பரிய இடத்தை பல இலட்சக்கணக்கான பெண்கள் நிராகரித்ததை - மூலதனமானது பற்றிக் கொண்டது. பெண்களை உள்வா ங்குவதன் மூலமாக உழைப்பாளர் படையை மீள ஒழுங்கமைத்தது. இப்ப டிப்பட்ட மூல தனத்தின் செயற்பாட்டை எதிர்த்துச் செயற்படுவதன் மூலமா கத்தான் இப்போது பெண்கள் இயக்கமானது வளர முடியும். உழைப்பா ளர் படையில் இணைவதன் மூலமாக பெண்கள் விடுதலை பெறலாம் என்ற ஐதீகத்தை தீவிரமாக எதிர்த்து செயற்படுவதன் மூலமாகவே பெண்கள் அமைப்பானது உருவாகவும், போராடவும் முடியும்.”



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



'பெண்களுக்கான தேசிய அமைப்பின்' (National Organization of Women - NOW) கொள்கைத் திட்டத்துடன் ஒப்பிடுவதானது **"அங்கீகரிக்கப்பட்ட", "பண்பான" (polite) பெண்ணியத்தின் வரம்புகளை அம்பலப்படுத்திவிடுகிறது.** "அமெரிக்க சமூகத்தின் பிரதான போக்கிற்குள் (main stream) பெண்களை உடனடியாகவும் முழுமையாகவும் பங்குபற்றச் செய்வதே இந்த அமைப்பின் (NOW) நோக்கமாகும். இதன் மூலமாக ஆண்களுக்கு இருக்கும் அத்தனை சலுகைகளையும், பொறுப்புக்களையும் பெண்களும் பெற்றுக் கொள்வதை இது குறிக்கிறது".

பெண்களுக்கான வீட்டு வேலைகள் பற்றி எப்படிப்பட்ட கண்ணோட்டத்தை NOW அமைப்பு கொண்டுள்ளது? நிபுணத்துவ துறையில் பணியாற்றும் பெண்கள் பதவி உயர்வு பெறுவதை வீட்டு வேலைகள் எவ்வாறான தாக்கங்களை ஏற்படுத்துகிறது என்பதை மட்டுமே இவர்கள் கருத்திற் கொள் கிறார்கள். "குழந்தை பெறுவது, பராமரிப்பது போன்றன, பெண்களின் வாழ் வில் மிகவும் முக்கியத்துவம் பெறும் செயற்பாடுகள், பெண்களது பொரு ளாதார பங்குபற்றல் மற்றும் முன்னேற்றம் ஆகியவற்றிற்கு எதிரான தடைக ளாக நியாயப்படுத்தப்படுகிறது". இந்த வாதமானது, NOW அமைப்பின் கொள் கை விளக்கத்தில் வெளிப்படும் சித்தாந்தம் மற்றும் வேலைத்திட்டம் ஆகிய வற்றுடன் நெருங்கியதாகவே இருக்கிறது. இந்த அமைப்பினது கோரிக்கைகள், மற்றும் அவை அணிதிரட்ட முனையும் மக்கள்திரள் ஆகியவற்றில் இருந்து மிகவும் வேறுபட்டனவாக சல்மா ஜேம்சுடைய கரிசனைகள் இருக்கின்றன. NOW அமைப்பானது மத்தியதர பெண்களை இலக்காக கொண்டுள்ளது. சல் மாவுடைய ஒருமைப்பாடானது தொழிலாளர் வர்க்கத்துடனானது. "தொழிலாளர் வர்க்கத்தைச் சேர்ந்த வீட்டிலிருக்கும் பெண்கள் முதலாளித்துவ உற்பத்தியில் மிகவும் முக்கியமான பாத்திரத்தை ஆற்றுவதாக நம்புகிறோம்: ஆனால் இவர் களது நிலைமையானது ஏனைய எல்லாப் பெண்களுக்கும் பாதகமானதாக அமைகிறது.'' ஆனால் அதேவேளை NOW அமைப்பின் கவலையானது "சமூகத்தைப் பொறுத்தவரையில் முக்கியத்துவம் பெற்ற துறைகள் அனைத்திலும், தொழிற்துறை மற்றும் அரசாங்கத்தின் உயர்பதவிகளிலும் பெண்கள் பின்தங்கிப்போக நேர்கிறது" எனக் கவலை கொள்கிறது.

NOW அமைப்பின் ஸ்தாபகர்களில் **பெற்றி பிரைடன்** (Betty Friedan) என்பவரும் ஒருவர் என்பதைக் கருத்தில் கொள்ளும்போது இது ஒன்றும் ஆச்சரியமானதல்ல. தனது ஆய்வில், The Feminine Mystique (பெண் தொடர்பான புனைவுகள்) வீட்டு வேலைகள் தொடர்பாக பெண்கள் "எல்லாமே இவ்வளவுதானா?" ("Is this all?") என்ற கேள்வி எழுப்புகிறார்கள். பிரைடன் தனது நூலின் முதலாவது அத்தியாயத்திற்கு 'பெயரில்லாத பிரச்சனை' என்று தலைப்பிட்டு தொடங்குகிறார். "எனக்கு கணவன், குழந்தைகள், வீடு என்பவ ற்றிற்கும் மேலாக இன்னும் சிலவிடயங்கள் தேவைப்படுகின்றன" என்று பிரச்சனைக்கான பெயரை இடுகிறார். பிரைடனுடைய கருத்துடன் சல்மா முற்று முழுதாக முரண்படாவிட்டாலுங்கூட, பிரைடனுடைய தீர்வானது வீட்டு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வேலைகள் தொடர்பாக நிலவும் தாழ்ந்த அப்பிப்பிராயத்தின் வெளிப்பாடாக அமைவதுடன், பெண்களுக்கு பிரைடன் நிபுணத்துவம் சார்ந்த வேலைகளை முன்மொழிவதில் போய்முடிகிறார்.

பிரைடன் மற்றும் NOW வினதும் தாராளவாத உணர்வுகள் அலுவலகத்தில் அல்லது கல்விசார்ந்த தொழில்களில், அல்லது கலைத்துறையில் "சொர்க்கத்தைக்" காண்பதாக தென்படுகிறது. இதன்மூலமான இவர்கள் வர்க்க போராட்டம் மற்றும் நிறவெறிக்கு எதிரான போராட்டம் ஆகியவற்றிற்கு அப்பாலான ஒரு உலகில் தமது சுதந்திரத்தை காணமுனைகிறார்கள். இன்னொரு புறத்தில், தீவிர பெண்ணியவாதிகளோ புரட்சிக்கான தமது பயணத்தில் வர்க்கப்போராட்டம் மற்றும் நிறவெறிக்கு எதிரான போரட்டங்கள் என்பவற்றுடன் நேரெதிராகவே முட்டிமோதுவதன் மூலமாக தமது சொர்க்கத்தை காண்கிறார்கள். சோசலிச பெண்ணியவாதிகள் என தங்களை அழைத்துக் கொள்ள விரும்புவவர்களுங்கூட, 'பெண்கள் பிரச்சனைக்கு' முகம்கொடுப்பதையோ, அவற்றிற்கான தீர்வுகளை முன்மொழிவதலிருந்தோ தப்பித்துக் கொள்ள முடியவில்லை.

Radical America வில் **ஷீலா றோபோதன்** (Shiela Rowbothan) எழுதிய The Carrot, The Stick, And the Movement ஆக்கமானது, வீட்டில் பெண்களின் அதிகாரம் தொடர்பான சல்மாவின் பல கூற்றுக்களை கேள்விக் குள்ளாக்குகிறது. "பெண்கள் தாம் வேலை செய்யும் இடங்களிலேயே அமைப்பாக வேண்டும் என்று கூறினால், வேலை நிறுத்தத்தில் ஈடுபடும் பெண்கள் எவ்வாறு ஏனைய தொழிலாளர்களின் ஆதரவைப் பெறுவார்கள்? வேலை நிறுத்தத்தின் போது வேலைநிறுத்த நிதியை எவ்வாறு பெறலாம்?" றோபோதன், மூலோபாயரீதியிலான கேள்வியை எழுப்புவதன் மூலமாக, இயக்கத்தின் நடவடிக்கைகளின்போது இலகுவில் விலக்கிவிட முடியாத விதத்தில் பிரச்சனையை முன்வைக்கிறார். வேலைக்கு போவதற்குப் பதிலாக வீட்டில் இருப்பதை ஊக்குவிக்கும் வகையில் இரகசியமாக ஆதரவு வழங்கப்படுகிறதா? சல்மாவின் அணுகுமுறையானது வீட்டில் இருக்கும் பெண்களுக்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்படுவதாக றோபோதன் வாதிடுகிறார். "உழைப்புச் சக்தியானது அதன் உற்பத்தித் தளத்தில் ஒழுங்கமைக்கப்படுவதை விலையாகக் கொடுத்து, அதன் மறுஉற்பத்தி செய்யப்படும் இடத்தில் ஒழுங்கமைக்கப்படுகிறது" என்று விமர்சிக்கப்படுகிறது. ஆனால் இந்த வாதமானது சல்மாவின் கருத்துக்களை, அதன் பின்புலத்திலிருந்து பிரித்தெடுத்து அணுகுவதிலிருந்து உருவாவதாகும். அவர் சமையலறையையோ, படுக்கையறையோ அல்லது பண்ணையையோ பெண்ணுக்குரிய இடமாக கருதவில்லை. உண்மையில் அவர் செய்ய விரும்புவதெல்லாம், தொழிற்சாலை, சுரங்கம், பண்ணைகள் மற்றும் அலுவலகங்கள் போன்ற உற்பத்தி மையங்களில் நடைபெறும் போராட்டங்களை, வீட்டில் மறுஉற்பத்தி நடைபெறும் இடத்தில் நடக்கும் போராட்டத்துடன் இணைப்பதுதான்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ரோபோதனுடைய கட்டுரையில் பிரதான குறைபாடுயாதெனில், அவர் உற்பத்தியில் வீடு ஒரு முக்கிய பகுதியாக அமைவதை கவனிக்கத் தவறுவதாகும். ரோபோதன் தனது விமர்சனத்தில், “வீட்டு வேலைகளை செய்வதற்கு ஊதியம் வழங்குவது தொடர்பான கோரிக்கையை முன்வைப்பது நல்லதல்ல எனவும், இது வீட்டு வேலைகளை சமூகமயமாக்காது, மாறாக, வீட்டில் வேலை செய்பவர்களை மேலும் பெண்ணுடைய அல்லது ஆணுடைய குறுகிய கருக் குடும்ப வட்டத்திற்குள் தனிமைப்படுத்துகிறது: அத்துடன் இந்த ஏற்பாடானது உழைப்புச் சக்தியை வீட்டில் மறுஉற்பத்தி செய்பவர்களையும், பண்ட உற்பத்தியில் கூலிக்காக வேலை செய்பவர்களையும் இணைக்க மாட்டாது”, என்று குறிப்பிடுகிறார்.

சில காலத்தின் பின், The Politics of Housework எனும் நூலுக்கான அறிமுகத்தில் **எலன் மாலோஸ்** (Ellen Mallos) வீட்டு வேலைகளுக்காக பெண்களுக்கு ஊதியம் வழங்கப்படக் கூடாது என்பதற்கான மூன்று காரணங்களைச் சுட்டிக்காட்டுகின்றார்:

1) இது வீட்டு வேலைகள் பெண்களுக்கானவை என்ற தந்தைவழி சமூக அநுமானங்களை பேணுகிறது
2) வீட்டு வேலைகளினால் ஏற்படுத்தப்படும் தனிமைப்படுத்தலை நிறுத்தவில்லை
3) எந்த ஒரு சமூகமும் அது சோசலிச சமூகமாகவோ அல்லது முதலாளித்துவ சமூகமாகவோ இருந்தாலுங்கூட, வீட்டு வேலைக்கு சரியான சம்பளத்தை வழங்க கூடியதல்ல.

இந்த விமர்சனங்கள் எதனை பொதுவாக கொண்டுள்ளன என்று பார்த்தால் இவர்கள், வீட்டு வேலைக்கான ஊதியம் தொடர்பான போராட்டத்தை, ஒரு சமூகஜனநாயகத்தின் சமூகநலம் சார்ந்த திட்டமாகப் (social democratic welfare framework) பார்க்கிறார்கள் என்பதாகும். இந்தக் கோரிக்கையானது பெண்கள் சிறு தொகையை ஊதியமாக பெறுவதை சாத்தியமாக்கும். ஆனால் இதற்கும் மேலாக இவர்களது கோட்பாட்டு அக்கறையானது, பெண்களது தற்போதைய நிலைமை என்பதை மையமாகவைத்து எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து அக்கறை கொள்கிறதேயொழிய, பெண்கள் எதிர்காலத்தில் அடைய விரும்பும் இலக்கு தொடர்பாக கவலை கொள்வதாக இல்லை.

சல்மா ஒரு கடினமான கேள்வியைக் கையாள முனைகிறார். இலட்சக்கணக்கான பெண்கள் தினமும் எவ்வித ஊதியத்தையும் பெறாமல் வீட்டு வேலைகளில் ஈடுபடுகிறார்கள். இவர்கள் தொழிற்சாலையில் வேலைக்கு செல்லும் போது, முதலாளித்துவத்தின் இயல்பானது, (ஏற்படுத்தப்படும் அதிகரித்த தொழிலாளரின் வளங்கள் காரணமாக) ஊதியத்தை குறைத்து ஏற்கனவே தொழிற்சாலைகளில் வேலை செய்துகொண்டிருக்கும் ஆண்கள் மற்றும் பெண்கள் ஆகியவர்களுக்கு எதிராக இந்த புதிதாக வேலைதேடிவரும் பெண்களை நிறுத்தும். தொழிலாளர் வர்க்கத்தின் ஐக்கியத்திற்காக தொடர்ச்சியாக பாடுபடும் சல்மா அவர்கள், பெண்களது சுயமான



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



செயற்பாட்டை இதற்கு முதன்மையானதாக கருதுகிறார். இதன்மூலமாக முதலாளித்துவத்தை அனைத்து உழைக்கும் மக்களதும் தெளிவான இலக் காக திட்டவட்டமாக குறித்துக் காட்டுகிறார்.

சல்மாவின் நிகழ்ச்சித்திட்டமானது முதலாளித்துவத்திற்கான தீர்வாக தெரிய வில்லை: மாறாக, வேலைத்தளத்திலும், வீட்டிலும் நிகழும் பெண்கள் மீதான ஒடுக்குமுறை மற்றும், கூலி உழைப்பு ஆகியவற்றை இல்லாமற் செய்வது என்ற இலக்கின் இடைக்கால வேலைத்திட்டமாக இது புரிந்து கொள்ளப்பட வேண் டும். பெண்களது யதார்த்த வாழ்க்கை எங்கே இருக்கிறதோ, அதனை தொட க்க புள்ளியாகக் கொண்டு தனது அரசியல் மற்றும் மூலோபாயம் என்பவ ற்றிற்கான கோட்பாட்டாக்கம் செய்வதன் மூலமாக ஒரு துணிச்சலான செயற்பா ட்டை செய்கிறார். பெருந்தொகையான பெண்களின் உற்பத்தி நிலையம் ஒரு கார் தொழிற்சாலையோ அன்றி அலுவலகமோ அன்றி, வீடுதான் என்ற உண்மையை எத்தனைதான் கோட்பாடுகள் வந்தாலும், என்னதான் தீர்க்கதரிசனங்கள் கூறப்பட்டாலுங்கூட, இந்த உண்மையை மாற்றிவிட முடியாது. யாராவது ஒருவர் மாணவர்களைப் பார்த்து ஒரு வேலை தேடிக் கொள்ளுங்கள் என்றோ, விவசாயிகளை நீங்கள் தொழிலாளர் வர்க்கமாகு ங்கள் என்றோ, தொழிலாளர்களை நீங்கள் அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபட முன் புரட்சியாளர்களாக ஆகுங்கள் என்று கூறுவதில்லை. ஏன் இது வீட்டில் பணிபுரியும் பெண்களுக்கு மட்டும் மாறுபட்டதாக அமைய வேண்டும்?

முதலாளித்துவ சமூகமானது உழைக்கும் மக்களின் உழைப்பு சக்தியை சுரண்டுவதற்கான பல வழிகளை கொண்டுள்ளது. இதில் ஒன்றுதான் ஊதியம் வழங்கப்படாத பெண்களின் உழைப்பாகும். உழைக்கும் வர்க்கத்தைச் சார்ந்த குடும்பங்கள் முறையாக தொழிற்படுவதற்கு, பெண்கள் வீட்டில் செய்யும் வேலைகள் மிகவும் முக்கியமானவை. இவ்வளவு காலமும், அது அங்கீகரிக்க ப்படாததாகவும் மற்றும் முதலாளிகளுக்கு எந்தவித செலவும் அற்றதாகவும் இருந்து வந்துள்ளது. வீட்டில் செய்யப்படும் வேலைகளின் பெறுமதியை அங்கீ கரிக்காது விடுவதன் மூலமாக முதலாளித்துவமானது மிகப்பாரிய அளவிலான நன்மைகளைப் பெற்றுள்ளது. இந்த 'இலவச இணைப்பை' முடிவுக்கு கொண்டு வர சல்மா விரும்புகிறார். இது முதலாளித்துவம் இன்னும் அதிகளவில் பதில் சொல்ல கடமைப்பட்டுள்ளது என்பதற்காக அல்ல: மாறாக, வீட்டில் உள்ள பெண்களதும், பொதுவில் தொழிலாளர் வர்க்கத்தினதும் மூலோபாயரீதியான தேவைகளுக்காக செய்யப்படுகிறது.

கேள்வி எழுப்பப்பட வேண்டிய இன்னும்பல விடயங்களும் உள்ளன. சல்மா இலக்காக கொள்ளும் ஊதியமற்ற உலகத்திற்கு செல்வதற்கான இடைக்கால நிகழ்வாக, பெண்களின் வீட்டு வேலைகளுக்கான ஊதியம் வழங்குவது என்பது எவ்வாறு திகழும்? வீட்டு வேலைகளுக்கான ஊதியத்தை அரசாங்கம் வழங்கு வதானது, உழைக்கும் வர்க்கப் பெண்கள் அரசில் மேலும் தங்கியிருக்க வேண்டிய நிலைமையை உருவாக்காதா? இது எவ்வாறு பொதுவில் தொழி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



லாளர் வர்க்கத்திற்கு நன்மையாக அமையும்? வீட்டில் வேலை செய்யும் பெண்களதும், தொழிலாளர் வர்க்கத்தினதும் தேவைகளை எப்படிப்பட்ட அமைப்பானது கையாளும்? எந்த அடிப்படையில் இவர்கள் அனைவரும் இணைந்து செயற்படுவர்?

தொழிலாளர் சேமப்படையானது, தொழிலாளர்களது கேந்திரரீதியான எதிரி என்று கருதும் கோட்பாட்டின் வெளிச்சத்திலும், வர்க்க போராட்டத்தில், தொழிலாளர் வர்க்கத்தின் மனைவியர் தொழிலாளர்களது முதன்மையான பங்காளர்கள் என்பது பற்றி எதுவுமே குறிப்பிடாதவர்களுமான மரபார்ந்த தொழிற்சங்கவாதிகளது நிலைப்பாடுகளுடன் ஒப்பிடும் போது, சல்மாவுடைய இந்த நிலைப்பாடானது பகைமையானதாக தோன்றக்கூடும். யதார்த்தத்தில் இந்த விதமான சிந்தனைச் சட்டகத்தை உடைப்பதற்காகத்தான் சல்மா அவர்கள் முயல்கிறார். தொழிலாளர் வர்க்கத்தை உற்பத்தியின் தளத்தில் மாத்திரம் தேடாமல், மூலதனமும், தொழிலாளர் வர்க்கமும் செயற்பட அத்தியாவசியமான ஏனைய தளங்களிலும் தேடவேண்டும் என்கிறார். “வீட்டு வேலைக்கான ஊதியத்தை பெறுவதற்கான போராட்டத்தில் எந்தளவிற்கு நாம் வெற்றி பெறுகிறோமோ, அந்தளவிற்கு நாம் ஊதியமற்ற தொழிலாளர் சேமப்படையாக இருந்துகொண்டு, தொழிற்சாலைக்குள் வேலை நேரத்தை குறைப்பதற்காகவும், ஊதியத்தை அதிகரித்துக் கொள்வதற்காகவும் போராடிக்கொண்டிருக்கும் பெண்களுக்கு (மற்றும் ஆண்களுக்கும்) அச்சமூட்டுபவர்களாக இருப்பதை மறுதலிக்கமுடியும்”. உற்பத்திச் செயற்பாடு நடைபெறும் கணத்தில் இருக்கும் தொழிலாளர்கள் மாத்திரம், தனித்து தமது போராட்டத்தை முன்னெடுக்க முடியாது என்று சல்மா நம்புகிறார். வேலையற்றவர்கள் இந்த வேலைநிறுத்தங்களை முறியடிப்பதில் வகிக்கும் பாத்திரத்தை சல்மா ஏற்றுக் கொள்கிறார். வீட்டு வேலைக்கான ஊதியத்திற்கான கோரிக்கையானது, பெண்களுக்கு போதிய பலத்தைக் கொடுக்கிறது. இதனால் இவர்கள் தாம் தொழிற்சாலைக்குச் சென்று, தொழிலாளர்களது பேரம்பேசும் ஆற்றலை முறியடிப்பதற்கான தூண்டுதலை எதிர்த்துப் போராடமுடிகிறது.

வீட்டு வேலைகளில் ஈடுபடும் பெண்களை தனிமைப்படுத்தும் நோக்கம் எதுவும் அவருக்கு இல்லை. உண்மையில் இந்த கட்டுரையில் முன்பகுதியில் குறிப்பிட்டது போல, வீட்டு வேலைகள் முதலாளித்துவ சமூகத்தில் முக்கியமானதொரு சமூக செயற்பாட்டைக் கொண்டுள்ளதாக இவர் பார்க்கிறார். வீட்டுவேலைகள் மூலமாக பெண்கள் அமைப்பாவதும், இந்த அமைப்பாதல் மூலமாக சமூக ஊடாட்டத்தில் பங்குபற்றுவதும் சாத்தியமாகும் என்கிறார். பெண்கள் தாம் வீட்டில் செய்யும் வேலைகளுக்கு ஊதியம் பெறுவதற்காக அணிதிரளலாம். “நாம் பெண்களுக்கு வேறு ஒரு வேலை வழங்குவதைவிட, சமூகத்தில் செயல்படுவதற்கான ஒரு நிலைமையை ஏற்படுத்தலாம். அமைப்பின் பலத்தையும், போராட்டத்தையுமே இவர்களுக்கு நாம் வழங்கலாம்”.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# ஆழமான பரிசீலனை

சல்மா ஜேம்ஸ் உடைய வாதங்கள் புரிந்து கொள்வதற்கு சிக்கலானதும், மிகவும் நுட்பமானதுமாகும். இவரது கண்ணோட்டங்களை நாம் தெளிவாகப் புரிந்து கொள்வதற்கு, நாம் இவர் ஒரு பகுதியாக இருந்த அரசியல் இயக்கத்தின் அசைவியக்கத்துடன் தொடர்புபடுத்தி பார்க்க வேண்டும். குறிப்பாக, இவருடைய வழிகாட்டியும் இணை சிந்தனையாளருமான சி.எல்.ஆர். ஜேம்ஸின் (C.L.R. James) கண்ணோட்டம் மற்றும் அவரது முன்மொழிவுகள் போன்றவற்றுடன் இணைத்து பார்ப்பது பயனுள்ளதாக இருக்கும். சி.எல்.ஆர். ஜேம்ஸ் உடன் சல்மா ஜேம்ஸ் இணைந்து American Civilization உடைய 1956 ஆண்டு பதிப்பை வெளியிட்டார்கள். இன்னும் சி.எல்.ஆர் உடைய ஊக்குவிப்புடன் சல்மா ஜேம்ஸ் 'ஒரு பெண்ணின் இடம்' (A Woman's Place) எனும் ஒரு சிறிய கையேடு ஒன்றையும் வெளியிட்டிருந்தார். இது 1953 இல் வெளிவந்தது. சி.எல்.ஆர் அவர்கள் **'ஒவ்வொரு சமையற்காரரும் ஆட்சி செய்யக்கூடியவரே'** *(Every Cook Can Govern)* எனும் தலையங்கமுடைய கையேட்டினை வெளியிட்டார். இது இவருடைய தத்துவத்திற்கு அடிப்படையாகவும் இருந்தது. இது நிபுணர்கள் மற்றும் அதிகாரவர்க்க சமூகம் ஆகியவற்றிற்கு எதிரான வலிமை மிக்க அறிக்கையாக அமைந்தது. அத்துடன் நேரடியான ஜனநாயகம் எனும் கொள்கை மூலம் நிர்வகிக்கும் ஒரு உலகத்திற்கு அழைப்பு விடுத்தது. புராதனகால ஏதென்சின் உதாரணங்களைப் பயன்படுத்தி, நேரடியான ஜனநாயகம் என்பது ஒருவித நிர்வாக வடிவம் என்பதையும், இங்கு சகல சமூக, பொருளாதார மற்றும் நீதி தொடர்பான விடயங்கள் யாவும் சமூக அங்கத்தவர்கள் அனைவரின் பங்கு பற்றுதல்களினாலும், மற்றும் அவர்களால் நடாத்தப்படும் ஆலோசனை சபைகளினாலும் மற்றும் செயற்குழுக்களினாலும் தீர்மானிக்கப்பட்டன என்றும் விளக்குகிறார். அதிகாரவர்க்கம் அல்லது மேட்டுக்குடியினர் சமூகத்தை நிர்வகிக்க வேண்டியதாக இருக்க வேண்டியதில்லை என சி.எல்.ஆர் வாதிடுகிறார்.

அப்படியானால், சி.எல்.ஆரின் 'ஒவ்வொரு சமையற்காரரும் ஆட்சி செய்யலாம்' என்ற பிரசுரத்திற்கும் சல்மா ஜேம்ஸ் அவர்களின் வீட்டு வேலைகளுக்கான ஊதிய இயக்கத்திற்கும் என்ன உறவு? சி.எல்.ஆரின் நேரடியான ஜனநாயகம் எனும் தத்துவம், சல்மா ஜேம்ஸின் பல கருத்துக்களை மிக நுட்பமாக தெளிவு படுத்துகின்றன. உழைக்கும் பெண்களும் மற்றும் வீட்டில் பணிபுரியும் பெண்களும் எதிர்நோக்கும் போராட்டங்களை முனைப்பாக பார்க்கும் போது, இந்த பெண்கள் இப்போதே சுய-ஆட்சியாளர்களாக (self-governing) ஆகலாம். இதற்காக நீண்டகாலம் காத்திருக்க வேண்டியதில்லை என்று சல்மா கூறுகிறார். வீட்டில் பணிபுரியும் பெண்களை "முன்னேற்றம்" அல்லது விடுதலைக்கு நோக்கி வழிநடத்திச் செல்லப்பட வேண்டும் என அவர் வாதிடவில்லை. மாறாக, இவர்கள் ஏற்கனவே தமது விடுதலையை வென்றெடுப்பதற்கான பலமான நிலையிலேயே உள்ளனர் என்ற கருத்தை முன்வைக்கிறார்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சுய-ஆட்சியாளர்கள் என்றவகையில், பெண்களது உள்ளார்ந்த உணர்வுகள் வெளிப்படுவதை நிரூபிக்கும் ஆதாரங்களை பெருமளவில் சல்மா முன்வைக்கிறார். இப்படியான சந்தர்ப்பங்களில், பெண்கள் தம்மை இரண்டாம்தர பிரசைகளாக்க எடுக்கப்படும் செயற்பாடுகளை பல்வேறுவிதங்களிலும் ஏற்கனவே முறியடித்துள்ளார்கள்: வீட்டில் கணவனுடனான உறவிலாகட்டும், வீட்டிற்கு வெளியே முதலாளிகள், தொழிற்சங்க தலைமைகளுடன், மற்றும் சமுதாயத்தில் அதிகாரவர்க்கத்துடனான உறவிலாகட்டும் இது ஏற்கனவே நடந்து கொண்டேதான் இருக்கிறது.

'பெண்கள், தொழிற்சங்கம், வேலை' என்ற படைப்பில், பெரிய பிரித்தானியாவில் நடைபெற்ற ஒரு சுரங்க தொழிலாளர்களின் வேலை நிறுத்தப்போராட்டத்தின்போது, வேலை நிறுத்தத்தின் அர்த்தம் என்ன? என்பது தொடர்பாக கூறும் போது சல்மா ஜேம்சின் எழுத்துக்களில், நாம் சி.எல்.ஆரின் செல்வாக்கினை காணக் கூடியதாக இருக்கிறது. "இங்கு சுரங்க தொழிலாளர்களை வேறுபடுத்திக் காட்டுவது என்னவெனில், இவர்கள் தமது தொழிற்சங்கங்களில் தங்கியிருக்கவில்லை. மாறாக, இவர்கள் தமது சுய-அமைப்புக்கள் மற்றும் தமது சுயமான போராட்ட வழிமுறைகளில் தங்கியிருந்தனர். வேலை நிறுத்த காலத்தில் ஒன்றிற்கு மேற்பட்ட தடவைகள், தொழிற்சங்கமானது போராட்டத்தின் எல்லைகளை நிர்ணயிக்க முனைந்தது. உதாரணமாக தொழிற்சங்கமானது தொழிலாளர்களை பாதுகாப்பு பணிகளில் ஈடுபடுமாறு கேட்டபோது, அல்லது முனைப்பாக மறியல் போராட்டத்தில் ஈடுபடுவதை உற்சாகப்படுத்தாது இருக்க முயற்சித்தபோது, அல்லது பெண்கள் சுயமாக அமைப்பாக்கம் செய்வதை தடுக்க முனைந்தபோது, சுரங்க தொழிலாளர் சமூகமானது தமது சொந்த சுயாதீனமான வழிமுறைகளைக் கையாண்டது".

நேரடி ஜனநாயகம் எனும் சி.எல்.ஆர் உடைய கருத்துடன் தொடர்புபடுத்திப் பார்க்கும்போது, சல்மாவின் செயல் திட்டங்கள் இரண்டு குணாதிசயங்களை வெளிப்படுத்துகிறது. முதலாவதாக, வீட்டு வேலைகளுக்கான ஊதியம் எனும் இயக்கமானது, வெறுமனே சீர்திருத்திற்கான இயக்கமல்ல. இது ஆண்களிடமிருந்தும், மூலதனத்திலிருந்தும் பெண்களது சுயாதீனத்தை அதிகரிப்பதற்கான போராட்டமாக அமைகிறது. "நாம் எந்தளவிற்கு எமது கோரிக்கையான வீட்டுவேலைக்கு ஊதியம் என்பதை வலியுறுத்தி, எமது வலிமையையும் வெளிப்படுத்துகிறோமோ, அந்தளவிற்கு, முதல்தடவையாக, நாம் எமது கோரிக்கைகளுக்கு ஆண்களது ஆதரவை பெருமளவில் பெற்றுக்கொள்ளக் கூடியதாக இருக்கும்". இன்னொரு சந்தர்ப்பத்தில், "நாம் வீட்டில், அவர்களில் தங்கியிருந்து ஊதியமற்று பணியாற்றுவதால்தான் ஆண்கள் தாம் ஊதியம் பெறும் வேலையில் மிகுந்த கட்டுப்பாட்டுடன் செயற்படுகிறார்கள்", என்று குறிப்பிடுகிறார்.

மேலே உள்ள பந்தியில் சல்மா அவர்கள் பெண்களின் விடுதலைக்கான போராட்டத்தின் பன்முகப்பட்ட தளங்களை எடுத்துக் காட்டுகின்றார்:



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஆணாதிக்கத்திற்கும், மூலதனத்திற்கும் எதிரான போராட்டம். முதலாவது பகுதியில், ஆண்கள் கட்டாயம் ஆதரித்தாக வேண்டிய வகையில் தனது நிகழ்ச்சிநிரலை முன்வைக்கிறார். இரண்டாவது பகுதியில், வீட்டுவேலைக்கு ஊதியம் என்ற குறிப்பான கோரிக்கையை, வர்க்க போராட்டம் என்ற விரிவான பின்புலத்தில் வைக்கிறார். ஒருவரே ஊதியம் பெறுபவராக இருப்பது, தொழிலாளர் வர்க்கத்திற்கு சிக்கலானதாக இருப்பதை இனம்காணும் சல்மா, ஒரு குடும்பத்தில் இருவர் ஊதியம் பெறுபவர்களாக இருப்பதானது, மூலதனத்திற்கு எதிரான போராட்டத்தில் வெற்றிக்கான வாய்ப்புகளை அதிகரிப்பதை காண்கிறார்.

இதனால் கிடைக்கும் நன்மைகள் சல்மாவிற்கு தெளிவாக தெரிகின்றன. “நாம் எந்தளவிற்கு எமது பலத்தை அணிதிரட்டுகிறோமோ, அந்தளவிற்கு நாம் எமக்கு எதிராக ஆணாதிக்க சித்தாந்தத்தை உருவாக்கும், மற்றும் அதற்கு ஆண்களை கீழ்ப்படியவைக்கும் அதிகார உறவுகளை பலவீனப்படுத்துகிறோம்”. பெண்கள் ஊதியத்தை கோரும்போது, அவர்கள் மூலதனத்தின் கட்டுப்பாட்டில் இருந்து தமது உடலை மீட்டெடுப்பதற்காக போராடுகிறார்கள். இந்த செயற்பாடானது, பெண்கள் தொழிலாளர் சேமப்படையில் அங்கத்தவர்களாக இருப்பதில் இருந்தும் அவர்களை விடுவிக்கிறது, என்று சல்மா விளக்குகிறார்.

இரண்டாவது, இவர் “கிராம” மற்றும் “நகர” பெண்களின் பொதுவான அனுபவங்களை இணைப்பதுடன், பெண்களின் சுயாதீனத்தன்மை தொடர்பான மூலோபாயத்தில் காணப்படும், “நவீன” முதலாம் உலக நாடுகள், மற்றும் “பின்தங்கிய” மூன்றாம் உலக நாடுகள் ஆகியவற்றுக்கிடையிலான பிளவுகளையும் தகர்க்கிறார். “நாம் மூன்றாம் உலக நாடுகளது குறைவிருத்திக்கும், மைய நாடுகளது, குறிப்பாக அவற்றின் சமையலறைகளின், குறைவிருத்திக்கும், இடையிலான வேற்றுமைகளில் ஒற்றுமையை காணவேண்டும்”. வீட்டுவேலைக்கான ஊதிய இயக்கமானது, இவற்றிடையே ஒருமைப்பாட்டை உருவாக்கும் தனித்துவமான அம்சமாகும்: ஆதலால் இது இன்னமும் விரிவாக ஆராயப்படத்தக்கது. இந்த அம்சமானது, சிறிய கிராம பெண்களது அனுபவங்களை, பெரும் நகரங்களில் வசிக்கும் பெண்களது அனுபவங்களில் இருந்து வேறுபடுத்த மறுக்கிறது. அத்தோடு முதலாம் உலக நாடுகளில் வசிக்கும் “விடுதலை பெற்ற” பெண்களது நிலைமையை, மூன்றாம் உலக நாடுகளில் வசிக்கும் “பின்தங்கிய” பெண்களின் நிலைமைகளில் இருந்து பெரியளவில் வேறுபடுத்திப் பார்க்க மறுக்கிறது. இது பெண்களது ஒருமைப்பாட்டிற்கான புதுமையான அணுகுமுறையாக அமைகிறது.

நகரமும் கிராமமும், முன்னேற்றம், நவீனத்துவம், மற்றும் நாகரீகம் போன்றவற்றில் வேறுபாடுகளையே பெரும்பாலும் பிரதிநிதித்துவப்படுத்துகின்றன: மேலும் இவை வாழ்க்கையின் இரு எதிரெதிரான வாழ்க்கை முறைகளை சுட்டிக்காட்டுவனவாக இருக்கின்றனவாகவும், பொதுவான விடயங்களைச் சிறிதளவே கொண்டதாகவும் சித்தரிக்கப்படுகிறது. ஆனால் இந்த கண்ணோட்டமானது இவற்றிற்கிடையே, அதாவது நவீன மற்றும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வரலாற்றுரீதியாக "பின்தங்கிய" வற்றிற்கிடையே, காணப்படும் ஒருமைப்பாடு களைப் பார்க்க மறுக்கிறது. இந்த சார்பளவில் முற்போக்கானது எனும் ஒப்பீ டானது பல முற்போக்கு மற்றும் தீவிர பெண்ணிய அமைப்புக்களினாலும் பயன்படுத்தப்படுகிறது: இந்த ஒப்பீடானது பெண்ணொடுக்குமுறை தொடர் பாக ஒரு முழுமையான, நிறவெறி எதிர்ப்பையும் (anti-racist) உள்ளடக்கிய ஒரு புரிதலை உருவாக்குவதில் முரண்பாடுகளை தோற்றுவிக்கிறது. இந்த கண்ணோட்டமானது, மூன்றாம் உலக நாடுகளில் வாழும் வெள்ளையினத்தவ ரல்லாத (colour) பெண்கள், தம்மை விடுவித்துக் கொள்வதற்காக, முதலாம் உலகநாடுகளில் வாழும் "விடுதலை" பெற்ற தமது சகோதரிகளது வாழ்க்கை முறைகளை பின்பற்றுமாறு அறிவுறுத்தும் அபத்தங்களுக்கு இட்டுச் செல்கிறது. அபிவிருத்தி அடைந்த நாடுகளிலுள்ள வெள்ளையின மத்தியதர வர்க்க பெண்ணியவாதிகளது இவ்வாறான "கற்றுக்கொடுக்கும்" நடவடிக்கை கள், இவர்களை கொலனித்துவ காலத்து மிசனரிகள் பின்தங்கிய நாட்டு மக்க ளது மீட்சிக்காக செயற்பட்டது போன்றதொரு பாத்திரத்தை வகிக்குமாறு ஆக்கிவிடுகிறது. இறுதியில் இவர்கள், ஆப்கானிஸ்தானில் உள்ள பெண்களை விடுவிப்பதற்காகவே சென்றதாக ஆக்கிரமிப்பை நியாயப்படுத்தும் ஜோர்ஜ் புஸ் போன்ற பிற்போக்கான நிறவெறி பிடித்த ஆணாதிக்கவாதிகளது கரங் களில் கருவிகளாக செயற்பட வைத்துவிடுகிறது.

மக்கள் கற்பனை செய்வது போல நகர்புற மற்றும் கிராமப்புற பெண்கள் சுதந்திரமாக இல்லை என வீட்டுவேலைக்கான ஊதியத்திற்காக போராடும் இயக்கம் வாதிடுகிறது. சூட்சுமப்படுத்தப்பட்டதும், முன்னேற்றகரமானதும், விடு தலை பெற்றதுமான பட்டினத்து பெண்களுக்கும், பின்தங்கிய, ஒடுக்கப்பட்ட பழங்குடி பெண்களுக்கும் இடையில் இருப்பதாக கூறப்படும் போலியான வேறுபாடுகளைக் கடப்பதற்கு இந்த இயக்கமானது முயல்கிறது. இவற்றை தெளிவாக காணும் சல்மா அவர்கள், முதலாளித்துவம் வழங்கும் போலியான அபிவிருத்தி பற்றிய சிந்தனைகளை அப்பலப்படுத்த தயங்குவதில்லை.

"மூன்றாம் உலக நாடுகளை 'அபிவிருத்தி' செய்வதற்கான முன்மொழி வுகளை முதலாளித்துவ திட்டமிடலாளர்கள் வைக்கிறார்கள். அந்த நாடுகள் தற்போது முகம்கொடுக்கும் வேதனைகளுடன், தொழில்துறை எதிர்-புரட்சியின் வேதனைகளையும் சேர்த்து அது அநுபவித்தாக வேண்டியிருக்கிறது. மேற்கு நாடுகளைச் சேர்ந்த பெண்களும் இதேவிதமான 'உதவிகளையே' வழங்கு கிறார்கள். ஆனால் ஏற்கனவே வீட்டை விட்டு வெளியே வேலைக்கு வந்து விட்ட பெண்களாகிய நாம் ஏனைய பெண்களை எச்சரிக்கிறோம்: பணவீக்க மானது எம்மை இந்த அலுவலக காரியதரிசி வேலையிலும், தொழிற்சாலை அசெம்பிளி லைனிலும் இறுக்கமாக பிணைத்துவிட்டுள்ளது. ஆனால் இங்கு எந்தவிதமான விமோசனமும் உங்களுக்காக காத்திருக்கவில்லை"

முதலாளித்துவ அல்லது நிலபிரபுத்துவ வேலை உறவுகளோ - அது வீட்டிலோ, தொழிற்சாலையிலோ, அலுவலகத்திலோ - பெண்களது விடுதலைக்கான



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வழியாகாது. "உழைக்கும் பெண்கள் வீட்டிற்கு திரும்பி தனிமைப்பட்டுப் போகாமல் இருப்பதே (திங்கட்கிழமை காலையில் அது நல்லதொரு மாற்றாக தோன்றினாலுங்கூட) ஒரு போராட்டம்தான்! அவ்வாறேதான், வீட்டுவேலை களை செய்யும் ஒரு பெண், வீட்டில் தான் தனிமைப்படுத்தப்பட்டிருப்பதற்கு மாற்றாக அலுவலக மேசைகள் மற்றும் இயந்திரங்களுடன் மாரடிப்பதற்கு செல்லாமல் இருப்பதும் ஒரு போராட்டம்தான்"!

கிராமப்புறம் மற்றும் நகர்புறம் என்பவற்றிற்கிடையிலான பிரிவு பற்றி நாம் விவாதிக்கும் போது கலாச்சாரம், மதம் மற்றும் இனத்துவ அம்சங்களும் சேர்ந்து எது முன்னோற்றமானது, எது பிற்போக்கானது என்பதை நிர்ணயிப்பதில் பங்கு வகிக்கின்றன. சில அறிவிப்புப்பலகைகள், முன்னேற்றம் மற்றும் பெண்விடுதலைக்கான சாத்தியப்பாடு பற்றி குறிப்பிடுகின்றன. இன்னும் சில அறிவிப்புப்பலகைகள் குறிப்பிட்ட ஒரு சமுதாயம், குறிப்பிட்ட ஒரு வளர்ச்சிக் கட்டங்களை அடையும் வரையில் காத்திருக்குமாறு குறிப்பிடுகி ன்றன. நவீனத்துவம் மற்றும் முன்னேற்றம் ஆகியவற்றில் ஒரு குறிப்பிட்ட மட்டத்தை எட்டியுள்ள நகரங்களே அபிவிருத்தியின் தரத்தை நிர்ணயம் செய்வ தாக கருதப்படுகிறது. இப்படிப்பட்ட நகர்ப்புற சமூகத்தில் தொழிற்சங்கம், நிர்வாகம், வர்க்கம் போன்ற அனைத்தும் பெண்ணின் விடுதலைக்காக இணை ந்து செயற்பட முடியும் என்று கருதப்படுகிறது. முற்போக்குவாதிகள் கூட நவீனத்துவத்தை பெண்விடுதலையை சாத்தியப்படுத்தும் ஒரு முக்கிய காரணி யாக காண்கின்றனர். சல்மா அவர்கள் இதற்கு எதிர்நிலையில் வாதிடுகிறார். ஏனைய பெண்ணியவாதிகள் இந்த பிரச்சனையை எவ்வாறு கையாண்டு உள் ளார்கள்? இவர்கள் பற்றிய ஒரு மேலெழுந்தவாரியான பார்வையானது, நகரம் மற்றும் கிராமம் ஆகியவற்றிற் கிடையில் உள்ள பிளவுகளை தகர்ப்பதில் சல்மாவின் முயற்சியின் முக்கியத்துவத்தை வெளிப்படுத்திக் காட்டவல்லது.

பெண்களின் விடுதலை எங்கே சாத்தியமாகலாம் என்பது தொடர்பாக **ஜூலியற் மிஷேல்** (Juliet Mitchell) கருத்து தெரிவிக்கையில்: "அநேகமாக நன்கு விருத்தியடைந்த மேற்கிலுள்ள சமுகங்களிலேயே, இன்று ஒரு உண்மை யான பெண்களின் விடுதலை குறித்து சிந்திக்க கூடியதாக இருக்கிறது" என்று கூறுகிறார். தனியே மிஷேல் மட்டும் இக்கருத்தைக் கொண்டிருக்கவில்லை. 1968 இல் 'பாலியல் அரசியல்' (Sexual Politics) என்ற கட்டுரையில் **கேற் மிலேற்** (Kate Millet) சர்வதேச அளவில் நடக்கும் பெண்கள் மீதான அடக்கு முறைகளை வகைப்படுத்துகிறார். இந்த முயற்சியானது பிராந்திய எல்லைக ளைக் கடந்ததாக, மத்திய கிழக்கையும் உள்ளடக்கியதாக அமைகிறது. "...இஸ்லாத்தின் முகத்திரையானது (அல்லது பலவீனப்படுத்தப்பட்ட மனித ஆத்மாவானது, தனது வாழ்க்கையின் பாதியை துணியால் ஆன சாக்கினால் மூடியிருக்குமாறு தண்டிக்கப்பட்டுள்ளது)". பழைய சீனாவில் நடைமுறையில் இருந்த பெண்களது கால்களை கட்டிவைக்கும் பழக்கம், மற்றும் பழங்குடி சமூ கங்கள் பற்றிய ஆய்வுகள் காட்டும் ஏனைய இப்படிப்பட்ட நடவடிக்கைகள் போன்றவற்றால்ஆன, பெண்கள்மீதான கொடுங்கோன்மை குறித்து ஒரு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



விரிவான பட்டியலை இவர் முன்வைக்கிறார்.

நகர்ப்புறம் மற்றும் கிராமப்புறம் பற்றிய இந்த பிளவை கடந்து வராத வரையில், பெண்விடுதலையானது அதனால் விமர்சிக்கப்படும் தொழிற்ச ங்கங்கள் மற்றும் ஆண்கள் முன்னெடுக்கும் 'போலிப்பெருந்தன்மை' (paternal-ism) நடைமுறையிலேயே சிக்கியிருக்கும். குறைவிருத்தியடைந்த நாடுகளை யும், நவீனமான நாடுகளையும் சேர்ந்த பெண்களை ஒரு பொதுவான வேலைத் திட்டத்தில் இணைப்பதற்கான இழையை சல்மா இங்கு காண்கிறார்.

பெண்களது அமைப்புரீதியான செயற்பாடுகள் எவை?, மற்றும் அவர்க ளுடைய சாத்தியமான கோரிக்கைகள் எவையாக அமையலாம்? என்பவை பற்றி சல்மா சில ஆரம்ப வரைபுகளை உருவாக்கியுள்ளார். இவற்றில் எவற் றை பெண்கள் செய்ய வேண்டும் என்று அவர் எதிர்பார்க்கிறார்? இந்த கேள்வியை நாம் இரண்டு கண்ணோட்டங்களில் இருந்து நாம் பார்க்கலாம்: அமைப்புரீதியானது ஒன்று, அரசியல்ரீதியானது மற்றயது. சல்மாவின் கருத்து ப்படி, **"பெண்கள் இயக்கத்திற்கு இன்று இருக்கும் சவாலானது சரியான போராட்ட வழிமுறையை கண்டுபிடிப்பதாகவும்: இந்த வழிமுறையானது பெண்களை வீட்டில் இருந்து விடுவிப்பதாக இருக்க வேண்டும்: அதே வேளை ஒரு புறம் இரட்டை அடிமைத்தனத்தை தவிர்ப்பதாகவும் இருக்க வேண்டும்: மறுபுறமாக, முதலாளித்துவத்தின் கட்டுப்பாடுகள் மற்றும் அதன் கெடு பிடிகளுக்குள் (regimentation) சிக்க வைக்காததாகவும் இருக்கவேண்டும்".** தொழிலாளர் வர்க்க நிறுவனங்கள் தொடர்பாக நிலவும் கடந்தகால கருத்து க்ளை தகர்த்தெறியக் கூடிய புதிய அமைப்பு வடிவங்களை உருவாக்கிக் கொள்வதற்கான ஆற்றல் பெண்களிடம் இருப்பதாக சல்மா நம்புகிறார். அவர் தற்போதய அமைப்பு வளர்ச்சிநிலையை மதிப்பிடுகிறார், "பெண்களது தற் போதய அமைப்புரீதியான வளர்ச்சியானது மிகவும் குறைவானதாக இருக் கிறது"... என்கிறார்.

தொழிற்சங்கங்களில் தங்கியிருப்பதற்கு பதிலாக, மரபுடன் முறித்துக்கொ ள்ளும் புதிய அமைப்புக்களை சல்மா மாற்றாக கருத்தாக்கம் செய்கிறார். அவர் இந்த அமைப்புக்களை சுதந்திரமான - நடப்பிலுள்ள எல்லா அதிகார அமைப்புகளில் இருந்தும் சுதந்திரமான - அமைப்புக்கள் என்று விபரிக்கிறார். வாசகர்களுக்கு இதனை சரிவர புரிந்துகொள்வது கடினமாகத்தான் இருக்கும் என்பதை சல்மா ஏற்றுக்கொள்கிறார். "ஆயிரக்கணக்கான பெண்கள அமைப்புக் களில் இயங்காமல் இருக்கும்போது, இதனை உருவாக்குவது மாத்திரம் அல்ல, கருதிப்பார்ப்பது என்பதுகூட கடினமாகத்தான் இருக்கும்". சல்மாவின் கருத்து ப்படி, இப்படிப்பட்ட ஒரு அமைப்பின் தோற்றமானது பெண்கள் வேலைத்த ளத்திற்கு போகாமல் மட்டம்போடுவதில் (absenteeism) அடங்கியிருக்கிறது. பெண்கள் வேலைக்கு மட்டம்போடுவது என்பது வேலைத்தளத்தில் உள்ள உறவுகளின் சிக்கலான பிரச்சனையின் குறியீடாக அமைகிறது: இந்த பிரச்சனைக்கு எதிராக பெண்கள் எப்போதும் கலகம் செய்துகொண்டிருக்கிறார்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கள். அடுத்த கட்டமானது, இந்த தனிப்பட்ட கலகத்தை அமைப்புரீதியாக ஒருங்கிணைப்பதில் தங்கியிருக்கிறது.

'பெண்கள், தொழிற்சங்கம், வேலை' எனும் படைப்பில் சல்மா அவர்கள், பெண்கள் எவ்வாறான வழிமுறைகளை முன்னெடுக்க வேண்டும் என்பதை அரசியல் ரீதியாக தெளிவுபடுத்தியுள்ளார். அவர் பின்வரும் கோரிக்கைகளை பட்டியல் இட்டுள்ளார்:

1. குறைந்தளவு வேலைநேரம்.
2. வேலை செய்தாலும் செய்யாவிட்டாலும் திருமணம் செய்தாலும் செய்யாவிட்டாலும் பெண்களுக்கும் ஆண்களுக்கும் வருமான உத்தர வாதம்.
3. இதன் அடிப்படையில் எமது உடல்மீதான கட்டுப்பாடு.
4. அனைவருக்கும் சமமான சம்பளம்.
5. விலை அதிகரிப்புக்களை நிறுத்தல்.
6. சமூக நிறுவனங்களின் கட்டுப்பாட்டில் இயங்கும் இலவச சிறுவர் பராமரிப்பகங்கள் மற்றும் மழலையர் கல்வி கூடங்கள் (nurseries and child care)

இந்த அரசியல் அடிப்படையிலேதான் சல்மா வீட்டிலும் மற்றும் தொழில்சா லைகளிலும் வேலை செய்யும் பெண்களை ஒன்றிணைக்க விரும்புகிறார். இந்த கோரிக்கைகள் தொழிலாளர் வர்க்க பெண்களின் வாழ்க்கையுடன் பின்னிப்பி ணைந்தவை - உண்மையிலே இங்கு தான் பெண்களின் விடுதலையை தெளிவாக வரையறுக்கலாம் எனக் இவர் கருதுகிறார்.

அரசியல் திட்டம் மற்றும் அமைப்பு கோட்பாடு ஆகியவற்றை ஒன்றிணைப்ப தன் மூலமாக இவர் பெண்களின் விடுதலைக்கு தடையாக உள்ள அம்சங்க ளை தகர்த்துக்கொண்டு வெளியேவர முயல்கிறார். இதன்மூலமாக ஒரு வேலை த்திட்டத்தை உருவாக்கி முன்வைக்கிறார். "நாம் பெண்களை எல்லா இடங்களி லும் அமைப்பாக்கம் செய்யலாம்: அவர்கள் ஊதியத்திற்கு பணியாற்றும் இடமாக இருக்கட்டும், அவர்கள் செல்லும் இடங்களாக இருக்கட்டும், எங்கே வாழ்ந்து, உழைத்துக்கொண்டு இருக்கிறார்களோ, அங்கெல்லாம் அமைப்பாக்கம் செய் வோம். பல தொழிற்பேட்டைகளில் வாழும் பெண்கள் தமது வேலைத்தளங்க ளுக்கு அருகிலேயே கடைகளுக்கு வருகிறார்கள். அங்கேதான் அவர்கள் தமது இரவு உணவுக்கான நேரத்தில் பொருட்களை கொள்வனவு செய்கிறார் கள். இவற்றிற்கு அருகிலேயே இவர்கள் வாழ்கிறார்கள். நாம் இந்த இடங்கள் எல்லாவற்றிலும் துண்டுப்பிரசுரங்களை வழங்கலாம். மிகவும் அழுத்தம் தரும் பிரச்சனைகளை இலக்காகக் கொண்டு அணிதிரட்டலைச் செய்யலாம்". **எந்த வொரு எதிர்கால அமைப்பிலும் பெண்கள், ஆண்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபடும் வரை காத்திருக்க தேவையில்லை. மாறாக, பெண்கள் செய்வதற்கு ஆதரவாக ஆண்களை வேலை நிறுத்தத்தில் ஈடுபடும்படி நாம் அவர்களைக் கேட்கலாம்** என்கிறார் சல்மா.

www.tamilarangam.net



## தற்போதைய நிகழ்வுகளுக்கு: பெண்களின் விடுதலை மேலிருந்தா அல்லது கீழிருந்தா?

ஒரு பக்கத்தில், சல்மா ஜேம்ஸ் பெண்களின் சுயாதீனம், சுயமான செயற்பாடு மற்றும் சமூக ரீதியான அதிகாரம் ஆகியவற்றை முதன்மைப்படுத்துகிறார். ஆனால் அதேவேளை இங்கு சுவாரசியமான முரண் உண்மையொன்று உருவாகிறது. அண்மையில் வெனிசுவேலா அரசாங்கத்திற்கு ஆதரவான இவரது இயக்கத்தின் குறிப்புக்களை பார்க்கும்போது இது ஏற்படுகிறது. 'கார்டியன்' பத்திரிகையில் சல்மா இவ்வாறு எழுகிறார். "வெனிசுவேலாவின் ஜனநாயக மானது பங்குபற்றுதலுடன் கூடியது, இது கீழிலிருந்து மேல் நோக்கியதாக அமைந்துள்ளது. வாக்குச்சீட்டு என்பது ஓர் முதல்படி மட்டுமே". இவருடைய இறுதி சொற்கள் வெனிசுவேலாவின் புரட்சியானது எதை நோக்கிச் செல்கிறது என்பது பற்றி விளக்குவதாக அமைகிறது. இந்த "முதல்படி" என்பது ஜனநா யகம் மற்றும் பெண்களின் சுயாதீனத்தை பரப்புவதை உள்ளடக்கியதாகும். தேர்தல்கள் நடைபெறும் போது மக்கள் வெளிப்படுத்தும் நம்பிக்கையீனமான மனப்பான்மையைப் பார்க்கும் போது, தமக்கான முடிவுகளை எடுப்பதற்காக யாராவது ஒருவரை தெரிவு செய்வது என்பது உண்மையான அரசியல் அதிகா ரத்தை வழங்காது என்பதை உள்ளூார உணர்வதை காட்டுகிறது. இந்த நம்பிக்கையீனமும், அதற்கான காரணங்களும், சாவேஸ் அதிகாரத்திற்கு வருவதற்கு காரணமாக இருந்த கடந்த கால யதார்த்தத்துடன் தொடர்புடை யதாக அமைந்திருப்பதாக சல்மா கூறுகிறார்.

இவர் சாவேஸினால் நடைமுறைப்படுத்தப்பட்ட சமூகநல திட்டங்களை பாரா ட்டுகின்றார். ஆனால் உண்மையிலேயே சாவேஸ் அரசியல் நம்பிக்கையீனங்க ளுக்கான காரணங்களை சாதாரண மக்களிடையே இல்லாதொழித்து விட் டாரா? தமது பொருளாதார மற்றும் அரசியல் பிரச்சனைகள் தொடர்பாக வெனிசுவேலா மக்கள் சுயமாக முடிவுகளை எடுப்பதற்கு முடியாதவர்களாக இருப்பார்களாயின், தாம் நிர்வகிக்காத ஒரு திட்டத்திற்கு - அவரது திட்ட த்திற்கு - கீழ்ப்படிவாக மக்கள் நடந்துகொள்ளும் வரையில், மக்களை பாது காப்பவர் போல காட்டிக்கொள்ளும் ஒரு சராசரி அரசியல்வாதிதான் சாவேசும் என்று மக்கள் உணரும்போது, இந்த நம்பிக்கையீனம் மீண்டும் தோன்ற மாட்டாது என்பது எமக்கு எப்படி தெரியும்?

சல்மாவின் முன்னைய எழுத்துக்களுடன் இந்த ஆய்வைப் ஒப்பிட்டுப் பார்க்கும்போது இதில் திடீரென தந்திரோபாய மாற்றம் ஒன்று ஏற்படுவது போல தென்படுகிறது. இது தொடர்பாக வேறு பலரும் கேள்வி எழுப்பியுள்ளனர். Mute என்ற சஞ்சிகைக்காக **லோரா சல்லிவன்** (Laura Sullivan) என்பவர் அளித்த பேட்டியில் பின்வருமாறு கேட்கிறார்.

"... மக்கள்திரள் அரசியலை மீள்உயிர்ப்பிப்பதை வலியுறுத்தும், பெண்களது பாத்திரத்திற்கு அழுத்தம் கொடுக்கும் சல்மா அவர்கள், மேலிருந்து கீழ்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நோக்கிய அதிகார முறைமையை கொண்டுள்ள ஜனாதிபதிக்கு முக்கியத்துவம் கொடுப்பதை எவ்வாறு சமரசம் செய்யப் போகிறார்? வேறு விதமாக கூறுவ தானால், வெனிசுவேலாவில் பெண்கள் புரட்சிகர போக்கின் நெம்புகோல்க ளாக இருப்பதாக அடையாளம் காணப்படுகிறார்கள். ஆனால் எந்த இலக்கி ற்காக? தொடர்ந்தும் பதவியில் இருப்பதற்காக முயல்வதுடன் மட்டுமல்லாமல், அதிகரித்த அளவில் நவ-தாராண்மைவாதத்துடன் சமரசம் செய்து கொள்ள முனையும் (இராணுவ சதிப்புரட்சியின் பின்பு அவர் காட்டிய சலுகைகள்) சாவேஸினுடைய இலக்கும், சல்மாவின் இலக்கும் ஒன்றிற்கொன்று நேரெதிரா னவை அல்லவா? மக்களுடன் நெருங்கிய தொடர்பைக் கொண்டுள்ளவர் என்ற வகையில் சாவேஸ் அவர்கள் ஒரு தனித்துவமான தலைவர் என்பதில் ஐய மில்லைதான். பெண்களது முன்னேற்றத்திற்கு மாத்திரமன்றி, ஏனைய எல்லா ஒடுக்கப்பட்ட மக்களது முன்னேற்றத்திற்கும் சாவேஸ் பதவியில் இருப்பது மிகவும் அத்தியாவசியமானதும்தான். ஆயினும், ஒரு அதிகாரப்படிநிலை அமை ப்பில் வசீகரமான தலைவராக சாவேஸ் இருப்பது என்பதற்கும், அதிகா ரப்படிநிலை அமைப்புமுறையையே தகர்த்துவிடும் 'வீட்டு வேலைக்கான ஊதிய அமைப்பின்' இலக்குகளுக்கும் இடையில் முரண்பாடு இருக்கிறதல்லவா?"

வெனிசுவேலாவின் சமூகஅமைப்புக்கள் மீதான சல்மாவின் ஆய்வுகளில், சாவேஸ் பிரதிநிதித்துவப்படுத்தும் அரச அதிகாரத்திற்கும், பெண்களின் சுயமான-செயற்பாட்டிற்கும் இடையில் விநோதமான இணக்கம் இருக்கிறதா என்ன? முதலாளித்துவ உறவுகள் என்பவை இயல்பிலேயே சுரண்டலும், காட்டுமிராண்டித்தனமும் மிக்கதாக புரிந்து கொள்ளமால், முதலாளித்துவத்தில் முற்போக்கானதும், பின்தங்கியதுமான இரண்டு வகைகள் இருப்பதாக நம்பும் ஏனைய பெண்ணியவாதிகளை விமர்சிக்கும் சல்மா, அரசில் இதேபோன்ற முற்போக்கானதும், பின்தங்கியதுமான போக்குகள் இருப்பதாக கருதுகிறாரா? சாவேஸ் உழைக்கும் வர்க்க பெண்களுக்கு முன்னேற்றத்தை பிரதிநிதித்துவப்படுத்துகிறாரா?

வெனிசுவேலாவின் அரசியல் அமைப்புச்சட்டத்தின் 88 வது சரத்தை அமுல் படுத்த சாவேஷ் முனைந்தபோதுதான் இவ்வாறான பல கரிசனைகளும், கேள் விகளும் முன்வருகின்றன. 88 வது சரத்தானது, ஊதியமற்ற வீட்டு வேலை களை பொருளாதாரரீதியில் பயன்மிக்கதாக ஏற்றுக் கொள்கிறது. எண்ணை மூலமாக நாட்டினுள் பெருந்தொகையான பணம் வந்து குவிவதால், சல்மாவின் நீண்டகால கனவான இத்திட்டத்தை அமுல் படுத்துவதற்கான பொருளாதார பலத்தை சாவேஷ் கொண்டிருக்கிறார். சல்மாவின் நீண்டகால ஆய்வுகளில் இருந்து நாம் சாவாஸின் இப்புதிய முன்முயற்சி பற்றி என்ன முடிவுக்கு வர லாம்? புதிய சமுதாயமானது அரசுகள் மற்றும் ஆளும் வர்க்கங்களுடன் ஒத்து ழைப்பதன் மூலம் அமைக்கப்பட வேண்டுமா? இந்த இயக்கத்தாரின் இலக்காகிய அதிகாரப்படிநிலையற்ற சமுதாயம் பற்றிய சிந்தனையானது, எவ்வாறு இந்த அதிகாரப்படிநிலை அரசுடன் ஒத்துழைப்பது என்பதுடன் இணங்கிப் போகிறது? வீட்டு வேலைக்கு ஊதியம் வழங்குவதற்கான நிதியை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**எங்கிருந்து பெறுவது? அரசானது கொடுக்கப் போகிறதா? நவீன சமுதாயத்தின் அடிப்படையான நெருக்கடிகளுடன் ஈடுகொடுப்பதற்கு ஆற்றல் இல்லாத நலன்புரி அரசைவிட (welfare-state) இது எவ்விதத்தில் வேறுபட்டதாக இருக்கும்?**

சரத்து 88 இன் வெற்றியை அளவிடுதல் அல்லது வீட்டு வேலைகளுக்கான ஊதியம் என்பன தனியே அமுல் படுத்துவதில் மட்டுமல்ல, அதனை உருவாக்கும் அரசியல் பின்புலத்திலும் தங்கியுள்ளது. இதில் எப்போதும் உள்ள ஆபத்து என்னவென்றால், சமூகநல அரசு மற்றும் முதலாளித்துவ சமூகத்தின் அடிப்படையான பிரச்சனைகளை நியாயப்படுத்துவதில் இந்த திட்டங்கள் போய்முடியலாம் என்பதுதான். இதனால்தான் இந்த இயக்கத்திற்கான சல்மாவின் நுண்நோக்கு மற்றும் மூலோபாயம் போன்றவை முக்கியமானவையாக அமைகின்றன. வர்க்க உணர்வை உயர்த்தி, கூர்மைப்படுத்தி விடுதலைக்கான திசையில் இட்டுச் செல்வது என்றவகையில் இந்த இயக்கமானது பெண்களுக்கும், ஆண்களுக்கும் வேலைத்தளத்திலும், வீட்டிலும் அதிக சுயாதீனத்தை பெறுவதை நோக்கி இட்டுச் செல்லும் கருவியாக அமைகிறது. இந்த விடயமானது மனதில் இருத்தப்படவில்லையானால், இந்த திட்டமானது அன்பான, மிதமான முதலாளித்துவத்திற்கான போராட்டமாக குறுகிவிடும். இப்படிப்பட்ட சீர்திருத்த மூலோபாயம் பற்றி மிகவும் கடுமையான விமர்சனங்களை சல்மாவின் சொந்த எழுத்துக்களிலேயே நாம் காணமுடியும். **“மூலதனம் அல்ல, முதலாளிகளே தவறானவர்கள் என்கிறார்கள். முதலாளித்துவ உற்பத்திமுறை அல்ல, நாம் எதனை உற்பத்தி செய்கிறோம் என்பதே பிரச்சனை என்கிறார்கள். வர்க்கம் அல்ல தனிநபர்கள் என்கிறார்கள். இதன் அர்த்தம் என்னவென்றால் அரசியல் அல்ல தார்மீக போராட்டம் என்கிறார்கள். ஆயுதம் தாங்கிய புரட்சி அல்ல, தார்மீகரீதியான மீள் ஒழுங்குபடுத்தல் என்கிறார்கள். நல்ல, அதிகம் திருப்தியான அடிமைகளது கூட்டத்தை உருவாக்குவதற்கான சிறந்த திட்டமிடுவது என்றாகிறது”.**

சாவேஸ் அமுல் செய்த சரத்து 88 இன் வெற்றியை எவ்வாறு அளவிடுவது என்பது தொடர்பாக சல்மா எழுத்துக்களிலேயே கராறான அளவுகோல்களை தந்துள்ளார். சாவேஸ் மற்றும் வெனிசுவேலாவின் சமூக இயக்கம் பற்றி சல்மாவின் கூற்றுக்கள் எப்படிப்பட்டனவாக இருப்பினும், இவை பற்றிய மதிப்பீடானது ‘பெண்கள், தொழிற்சங்கங்கள், மற்றும் வேலைகள்’, ‘பெண்களின் ஆற்றலும், சமூக கிளர்ச்சியும்’, ‘பால், இனம், வர்க்கம்’ ஆகிய படைப்புக்களின் அடிப்படையிலேயே மேற்கொள்ளப்பட வேண்டியனவாகும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# முடிவான எண்ணங்கள்

பெண்கள் மற்றும் உழைக்கும் வர்க்கம் ஆகியன எதிர்நோக்கும் கடினமான பிரச்சனைகள் தொடர்பாக சில இலகுவான பதில்களை முன்வைக்கும் ஒரு அற்புதமான சிந்தனையாளர் சல்மா ஜேம்ஸ் அவர்களாவர். ஒருமைப்பாடு, சுயமான செயற்பாடு மற்றும் சர்வதேசியம் ஆகிய அடிப்படைக் கொள்கை களைப் பேணிக்கொண்டே ஒரு புதிய மூலோபாயத்தை உருவாக்க இவர் முனைகிறார். பழைய மற்றும் புதுமையான சிந்தனைகளை கையாள்வதில் இவரிடம் காணப்படும் மரபைமீறிய திறமையானது முதலாளிகளை மாத்திரம் அச்சுறுத்தவில்லை. உழைக்கும் வர்க்கத்தின் போராட்டம் இவ்வாறுதான் அமைய வேண்டும் என்பது தொடர்பாக மிகவும் இறுக்கமான சிந்தனைகளை உடையவர்களுக்கும் இவர் அச்சுறுத்தலாகத்தான் விளங்குகிறார்.

உழைக்கும் வர்க்கம் மற்றும் வீட்டில் இருந்து வேலை செய்யும் பெண்கள் ஆகிய இரண்டு பிரிவினரதும் விடுதலைக்கான மூலோபாயங்கள் பிரிக்கப்பட முடியாதனவாகும். கூலி அடிமைத்தனம் மற்றும் ஏனைய எல்லாவிதமான அடக் குமுறைகளையும் ஒழிப்பதில் நலன்களைக் கொண்டுள்ள அனைவரையும் உள் ளடக்கியதாக வர்க்க போராட்டத்திற்கான மூலோபாய, சித்தாந்த சாதனங் களை சல்மா ஜேம்ஸ் தந்துள்ளார். **வேதனமற்ற உழைப்பின் கேந்திரமானதும், தார்மீகரீதியானதும் முக்கியத்துவத்தை வலியுறுத்துவதன் மூலமாக, வேலை செய்பவர்களும், வீட்டிலிருப்பவர்களும் இணைந்து போராடுவதற்கான வழிமு றைகளை சல்மா சுட்டிக் காட்டுகிறார்.** இந்த இயக்கமானது பெரிய அளவில் வெற்றி பெறமுடியுமா என்பது தெளிவற்றதாகவே உள்ளது. எனினும் சல்மாவின் கருத்துப்படி நாம் இதனை முயன்று பார்த்தால்தானே அது பற்றி தெரிந்து கொள்ளலாம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பாராளுமன்றமும் புரட்சியாளரும்

வர்க்கம், அரசு, அதிகாரம் மற்றும் மேலாண்மை பற்றிய பிரச்சனைகள் குறித்து..

**- ஏகலைவன்**

## 1

கடந்த வருடம் மே மாதம் 18ம் திகதி விடுதலைப்புலிகள் அமைப்பானது சிறீலங்கா படைகளினால் தோற்கடிக்கப்பட்ட பின்பு அடுத்தடுத்ததாக மூன்று தேர்தல்கள் தமிழ் மக்கள் மீது திணிக்கப்பட்டுள்ளன. இவை தொடர்பாக எப்படிப்பட்ட நிலைப்பாடுகளை மேற்கொள்வது என்பது தொடர்பாக தமிழ் முற்போக்கு, ஜனநாயக சக்திகளிடையே பலத்த கருத்து வேறுபாடுகளும், விவாதங்களும் நடைபெற்றன. ஒரு தரப்பினர் இந்த தேர்தல்களை நாம் மக்களை அணுகுவதற்கான சாதனங்களாக பயன்படுத்திக் கொள்ள வேண் டும் என்ற ரீதியில் அணுகினார்கள். மற்றொரு பகுதியினரோ இந்த அணுகு முறையை விமர்சித்து பாராளுமன்ற நிராகரிப்பை வலியுறுத்தினார்கள். அரசு மற்றும் பாராளுமன்றம் பற்றிய விவாதங்கள் ஒன்றும் மார்க்சியத்திற்கு புதிய வையல்ல. ஆனாலும் தமிழ் சூழலில் இப்படியானதொரு ஆரோக்கியமான விவாதம் நடைபெற்றதாக யாரும் கூறமுடியாது. மிகவும் எளிமைப்படுத்தப்பட்ட சுலோகங்களை முன்வைப்பதும், மாற்று கருத்துக்களை உடையவர்களை திட் டித் தீர்ப்பதும் ஒரு போதும் ஆரோக்கியமான விவாதமாக கருதப்பட முடியா து. ஆதலாம் நாம் விரும்பினாலும் இல்லாவிட்டாலும், இன்றைய தமிழ் சூழலில் இந்த விவாதத்தை முதலில் இருந்தே தொடங்கியாக வேண்டியுள்ளது. அரசு, வர்க்கம், அதிகாரம், என்பவற்றில் தொடங்கி, அரச இயந்திரம், அரசாங்கம், பாராளுமன்றம் என்று தொடர்ந்து, எமது நாட்டில் உள்ள அரச அமைப்புமுறை மற்றும் வர்க்க, தேசிய முரண்பாடுகள் எனத் தொடர்ந்து, புரட்சியாளர்களது மூலோபாயம் வரையில் இந்த விவாதமானது விரித்துச் செல்லப்பட வேண்டிய தாக உள்ளது. இத்தனை பெரிய ஒரு களத்தை ஒரே கட்டுரையில் தாண்டிவிட முனைவது ஒரு பேரவாவின் பாற்பட்ட முயற்சியாகவே தென்படுகிறது. அத னால் இப்போதைக்கு **பாராளுமன்றமும் புரட்சியாளரும்** என்ற எல்லைக்குள் ளேயே விவாதங்களை நாம் மட்டுப்படுத்தியாக வேண்டியுள்ளது. எனினும் ஒரு முழுமையான மூலோபாயம் பற்றிய விவாதத்தை நாம் இந்த விவாதத்தை அதன் விரிபடு எல்லைகளை நோக்கி நகர்த்தாமல் பூர்த்தி செய்ய முடியாது என்பதனால், இது தொடர்பான விரிவான விவாதங்களை இன்னொரு சமயத் திற்கு ஒத்தி வைத்துவிட்டு இப்போது நாம் பாராளுமன்றம் பற்றி தொடர் வோம்.

## 2

முதலாளித்துவ சமூகத்தில், சமூக உறவுகளை மையப்படுத்தி ஒழுங்கமை த்து நிர்வகிப்பதில் அரசானது மிக முக்கிய பங்கு வகிக்கிறது. சமுகத்தை புரட்சிகரமாக மாற்றியமைக்க விழையும் புரட்சிகர சக்திகள் இந்த அரச



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



திகாரத்தை கைப்பற்றாமல் தான் விரும்பும் சமூக மாற்றத்தை நிகழ்த்திவிட முடியாது. இதனால் அரசதிகாரம் பற்றிய பிரச்சனையானது மார்க்சியத்தில் மிகவும் மையமான பிரச்சனையாக அமைகிறது. அப்படியிருந்தும் கார்ல் மார்க்ஸ் அவர்கள் முதலாளித்துவ அரசு பற்றி ஒரு முழுமையான கோட்பாட்டை வகுத்து முன்வைக்கவில்லை என்பது கவனிக்கத்தக்கது. பிற்காலத்தில் அவர் தனது பணிகள் தொடர்பாக வகுத்த விரிவான திட்டத்தின் படி முதலாளித்துவ அரசு பற்றிய பிரச்சனைகள் முக்கிய இடத்தை பெற்றிருந்த போதிலும் கூட, நாம் அனைவரும் அறிந்துள்ளது போல அவர் மூலதனத்தின் முதலாவது அத்தியாயம் வெளியிட்டதன் பின்பு, முதலாளித்துவ பொருளாதார அமைப்பு பற்றிய ஆய்விலேயே தனது இறுதிக்காலம் வரையில் உழைத்துக் கொண்டிருந்தார். இந்த படைப்புக்கள் கூட பிற்காலத்தில் ஏங்கெல்சாலும், கோட்ஸ்கியினாலுமே வெளியிடப்பட்டன. இப்படியாக அரசு பற்றிய ஒரு முழுமையான கோட்பாட்டை வகுத்து முன்வைக்காத போதிலும், மார்க்சின் வாழ்நாள் முழுவதும் அரசு பற்றிய பிரச்சனை முதன்மையான அக்கறைக்குரியதாக இருந்தே வந்தது. 'உரிமை பற்றிய ஹெகலின் தத்துவம் பற்றிய விமர்சனங்கள்' என்ற கட்டுரையினூடாக மார்க்ஸ் அரசு தொடர்பான தனது ஆரம்ப கருத்துக்களை 1843 இல் முன்வைத்தார். இந்த கருத்தானது அதே ஆண்டில் அவர் எழுதிய 'யூத மக்களது பிரச்சனை குறித்து' என்ற கட்டுரையில் இன்னும் விரிவு பெறுகிறது. 1844 இல் மார்க்ஸ் அவர்கள் ஹெகல் தொடர்பான தனது மேலே குறிப்பிட்ட கட்டுரைக்கு எழுதிய முன்னுரையில், பாட்டாளி வர்க்கத்தின் புரட்சிகரமான பாத்திரம் குறித்த தனது கருத்தை முன்வைக்கிறார். 1845 இல் ஏங்கெல்ஸ் உடன் இணைந்து எழுதிய 'ஜேர்மன் சித்தாந்தம்' என்ற நூலில் அரசின் வர்க்கத் தன்மை பற்றி வலியுறுத்தத் தொடங்கினார். 1848 இல் மார்க்சும் ஏங்கெல்சும் இணைந்து எழுதிய 'கொம்யூனிஸ்ட்டு கட்சி அறிக்கை' யில் அரசு முதலாளித்துவ வர்க்கத்தின் கருவி என்ற கருத்து அழுத்தம் பெறுகிறது. இவற்றை விட 'பிரான்சில் வர்க்க போராட்டம்' (1850), 'பதினெட்டாம் புரூமர்' (1850) போன்றவற்றிலும் முதலாளித்துவ அரசு பற்றிய கருத்துக்களை முன்வைக்கிறார். புரூதோனை விமர்சித்து மார்க்ஸ் எழுதிய 'மெய்யறிவின் வறுமை', டூரிங்கை விமர்சித்து ஏங்கெல்ஸ் எழுதிய 'டூரிங் மறுப்பு' போன்றவற்றிலும் அரசு பற்றிய பிரச்சனைகள் அலசப்படுகின்றன. அழிக்கப்படப் போகும் முதலாளித்துவ அரசிற்கு பதிலாக அமையப்போவது எது என்பதை சரிவர 'கொம்யூனிஸ்ட்டு கட்சி அறிக்கை' யில் குறிப்பிட முடியாமல் இருந்த மார்க்ஸ் அவர்கள் 1872 இல் எழுதிய 'பிரான்சில் உள்நாட்டு யுத்தம்' என்ற பாரிஸ் கொம்யூன் பற்றிய நூலில் திட்டவட்டமான பதிலை முன்வைத்தார்: "பாட்டாளிவர்க்க சர்வாதிகாரம்தான் அது" என்றார். 'கோத்தா வேலைத்திட்டம் பற்றிய விமர்சனம்' என்ற நூலிலும் பாட்டாளிவர்க்க சர்வாதிகாரம் என்பதை வலியுறுத்துகிறார். மார்க்சின் மறைவிற்கு பின்பு ஏங்கெல்ஸ் எழுதிய 'குடும்பம் தனிச்சொத்து அரசு ஆகியவற்றின் தோற்றம்' என்ற நூலும் கூட அரசின் தோற்றம் மற்றும் பாத்திரம் குறித்து முக்கியமான கருத்துக்களை முன்வைக்கிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



1917 இல் ஒகஸ்ட்டு - செப்டம்பரில் ரஸ்யாவில் பாட்டாளி வர்க்க புரட்சி நெருங்கி வந்த நிலையில் லெனின் அவர்கள் 'அரசும் புரட்சியும்' என்ற நூலை எழுதினார். இதில் கார்ல் மார்க்சும், ஏங்கெல்சும் முன்வைத்திருந்த கருத்துக்களை தொகுத்து முன்வைத்ததுடன், அவற்றை வளர்க்கவும் செய்தார். இதில் வன்முறையுடன் கூடிய புரட்சியில்லாமல் ஒடுக்கப்பட்ட வர்க்கங்கள் தமது விடுதலையை அடைவது சாத்தியம் இல்லை, என்ற கருத்தை வலியுறுத்தினார். அத்தோடு முதலாளித்துவ அரச இயந்திரத்தை அடித்து நொருக்காமல் பாட்டாளி வர்க்கம் தனது விடுதலையை அடைய முடியாது என்பதையும் வலியுறுத்தினார். அரசு பற்றிய மார்க்சிய கோட்பாட்டில் இந்த நூல் மிகவும் வரலாற்று முக்கியத்துவம் மிக்கதொரு நூலாகும்.

இதுவரையில் நாம் பார்த்த மார்க்ஸ், ஏங்கல்ஸ் மற்றும் லெனின் ஆகியோரது கருத்துக்களை தொகுத்து நோக்குகையில் அரசு தொடர்பாக நாம் பின்வரும் முக்கிய நிலைப்பாடுகளை குறித்துக் கொள்ளலாம்.

- அரசு என்பது நடுநிலையானதல்ல. ஒரு வர்க்கம் இன்னொரு வர்க்கத்தை அடக்குவதற்கான கருவியாகும். முதலாளித்துவ சமூகத்தில் முதலாளி வர்க்கத்தின் கரங்களிலுள்ள அரசானது, தொழிலாளி வர்க்கத்தை அடக்கவே பயன்படுகிறது.
- அரசானது வரலாற்றில் என்றென்றும் நிலையாக இருந்துவரும் ஒரு அமைப்பல்ல. சமுதாயம் வர்க்கங்களாக பிரிந்து, பகைமையுடன் ஒன்றுடன் ஒன்று முட்டி மோதும் நிலைமை தோன்றிபோதே அரசும் தோன்றியது. அவ்வாறே சமூதாயத்தில் வர்க்கங்களும், அவற்றிடையேயான மோதல்களும் முடிவுக்கு வரும் போது இந்த அரசு என்பதும் மறைந்துவிடும்.
- எந்தவொரு புரட்சியிலும் அரசதிகாரம் என்பது தீர்க்கமான பிரச்சனையாகிறது. அரசதிகாரத்தை கைப்பற்றி அதன் மூலமாக சுரண்டும் வர்க்கங்களை ஒடுக்கமால் பாட்டாளி வர்க்கமானது தனது இலக்குகளை அடைய முடியாது.
- புரட்சி மூலமாக அதிகாரத்திற்கு வரும் பாட்டாளி வர்க்கமானது, ஏற்கனவே தயாராக உள்ள முதலாளித்துவ அரசை அப்படியே தனது நோக்கங்களுக்காக பயன்படுத்திக் கொள்ள முடியாது. பழைய அரச இயந்திரத்தை அடித்து நொறுக்கிவிட்டு அந்த இடத்தில் புதிய பாட்டாளி வர்க்க அரச இயந்திரத்தை நிறுவிக்கொள்வது அவசியமானது. இந்த காலகட்டத்திற்கான அரசின் வடிவம் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரமேயாகும்.
- வர்க்கங்களும் வர்க்க முரண்பாடுகளும் முடிவுக்கு வரும்போது, அடக்குமுறை வடிவமான அரசின் தேவையும் அற்றுப் போகிறது. இதனால் அரசானது உலர்ந்து உதிர்ந்து போகிறது.

ஆனால் இத்தனைக்குப் பின்பும் இன்னமும் சில கேள்விகள் தொடரவே செய்கின்றன. அவை பின்வருமாறு...

- அரசியலுக்கும் பொருளாதாரத்திற்கும் உள்ள உறவு நேரடியானதா,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அல்லது இவற்றுக்கு சார்பளவில் சுயாதீனதன்மை இருக்கிறதா?

- அரசு வர்க்கத்தின் கருவி என்றால் அரசானது வெறுமனே ஆளும் வர்க்கம் சொன்னபடியெல்லாம் அடிமைத்தனமாக (Behest) செயற்படு கிறதா? அல்லது இறுதி ஆய்வில், முதலாளித்துவ வர்க்கத்தின் நலன்க ளை நீண்டகால அடிப்படையில் காப்பனவாக (Behalf) அமைகின்றனவா?
- அரசானது ஆளும் வர்க்கத்தின் கருவி என்றால் இந்த அரசானது ஏன் தொழிலாளர் நல சட்டங்களை உருவாக்குகிறது? தொழிற்சாலைச் சட்டங்கள், குறைந்த பட்ச ஊதியம், ஓய்வுகால படிகள், உயர்ந்த பட்ச வேலை நேரம் போன்ற சட்டங்களை அது உருவாக்கியதேன்? அப்படி யானால் ஒடுக்கப்பட்ட வர்க்கங்களுக்கும் அரசுக்குமான உறவு எப்படிப்ப ட்டது?
- அப்படியானால் அரசுக்கும் வர்க்கத்திற்கும் இடையிலான உறவு எப்ப டிப்பட்டது? நடைமுறையில் ஆளும் வர்க்கம் அரசை எவ்வாறு கட்டுப்படு த்துகிறது? இதற்கான பொறிமுறைகள் என்ன?

## 3

முசோலினியின் காலத்தில் சிறையில் அடைக்கப்பட்டிருந்த இத்தாலிய கொம்யூனிஸ்ட்டுக் கட்சியின் முக்கிய தலைவர்களுள் ஒருவரான அன்தோ னியோ கிராம்சி (Antonio Gramsci) அவர்கள் தனது 'சிறைக் குறிப்புகளில்' அரசு தொடர்பான சில முக்கியமான கோட்பாட்டுப் பிரச்சனைகளை எழுப்பு கிறார். அரசை நாம் ஆளும் வர்க்கத்தின் கரங்களில் உள்ள ஒடுக்குமுறையின் கருவி எனக் கொண்டால், இந்த ஆளும் வர்க்கமானது ஐந்து வருடங்களுக்கு ஒரு தடவை ஒடுக்கப்படும் வர்க்கங்களிடம் இருந்து இந்த ஒடுக்குமுறைக்கான சம்மதத்தையும் பெற்றுக் கொள்ள முடிவது எவ்வாறு? என்று கேள்வி எழுப்பு கிறார். அதாவது ஆளும் வர்க்கமானது தனது அதிகாரத்தை தக்க வைப்பத ற்காக வெறுமனே **பலப்பிரயோகத்தை** (Coercion) மாத்திரம் நம்பியிராது, ஒடுக்கப்பட்ட வர்க்கங்களது **சம்மதத்தையும்** (Concent) பெற்றுக் கொள்வதை சுட்டிக்காட்டும் கிராம்சி, இதில் ஆதிக்க வர்க்கங்களது சித்தாந்த மேலாண் மையயின் பாத்திரத்தை சுட்டிக் காட்டுகிறார். இதனால் அரசு என்பதை **ஆதிக்கம்** (Dominance), மற்றும் **மேலாண்மை** (Hegemony) ஆகியவற்றின் இணைவாக புரிந்து கொள்வதன் அவசியத்தை வலியுறுத்துகிறார். கிராம்சியின் இந்த கருத்தானது, அரசு பற்றிய மார்க்சிய கோட்பாட்டின் ஒரு முக்கிய பங்களிப்பாகவே மார்க்கியவாதிகளால் கருதப்படுகிறது. இவரை தொடர்ந்து வந்த அல்தூசர் (Louis Althusser) அவர்கள் இந்த கருத்தை மேலும் வளர் த்துச் செல்லும் விதமாக **'சித்தாந்த அரச இயந்திரம்'** (Ideological State apparatus)எனும் கருத்தாக்கத்தை முன்வைக்கிறார். அதாவது முதலாளி த்துவ வர்க்கமானது தனது நிலையை தக்க வைப்பதற்காக வெறுமனே வன் முறை வடிவங்களை மாத்திரம் நம்பியிராமல், சித்தாந்த வழிமுறைகளையும் சார்ந்திருப்பதை சுட்டிக்காட்டும் இவர், இவை தம் பங்கிற்கு ஒருவித அரச இயந்திரங்கள் போலவே செயற்படுவதாகவும் குறிப்பிடுகிறார். கல்விமுறை,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மத ஸ்தாபனங்கள், அரசியல் கட்சிகள், குடும்பம் போன்ற பலவும் இப்படிப்பட்ட பாத்திரத்தை ஆற்றுவதன் மூலமாக முதலாளித்துவ சமுதாயத்தை மறு உற்பத்தி செய்வதை விளக்குகிறார். இதனைத் தொடர்ந்து வந்த மார்க்சிய அறிஞர்களான பௌலன்தாஸ் (Nicos Poulantzas) மற்றும் ரால்ப் மிலிபண்ட் (Ralph Miliband) ஆகியோருக்கு இடையில் நடைபெற்ற விவாதங்கள் அரசு தொடர்பான மார்க்சிய கோட்பாட்டின் வளர்ச்சியில் மிகவும் முக்கியமாக பங்கு வகிக்கின்றன. இந்த விவாதத்தின் ஆரம்பத்தில் பௌலன்தாஸ் அரசு தொடர்பான தனது நிலைப்பாட்டை அமைப்பியல்வாத அடிப்படையில், அரச கட்டமைப்பின் நிலையில் இருந்து அணுகினார். மிலிபாண்ட் அவர்கள் அரச இயந்திரத்தில் செயற்படும் மனிதர்களது தன்னிலை (Subjectivity) என்ற கோணத்தில் விடயங்களை பார்த்தார். விவாதத்தின் பிற்கட்டத்தில் அமைப்பியில் மற்றும் தன்னிலை ஆகியவற்றிற்கு இடையிலான இயங்கியல் உறவு பற்றியதான ஒரு பொதுவான இணக்கப்பாடு தோன்றியது. இதற்கு பின்னர் அரசு தொடர்பான கோட்பாட்டு பிரச்சனையை அணுகிய மார்க்சியர்களுள் அன்தோனியோ நாகிரி (Antonio Negri) என்பவர் முக்கியம் வாய்ந்தவர் ஆவார். இவர்களது கருத்துக்களும், இதனை ஒட்டியும் வெட்டியும் தொடரும் விவாதங்கள் பற்றி பேசுவதற்கு இந்த ஒரு கட்டுரை போதாது என்பதாலும், நாம் விவாதிக்க எடுத்துக் கொண்டு பாராளுமன்றமும் புரட்சியாளரும் என்ற விடயத்துடன் நேரடியாகவும், உடனடியாகவும் சம்பந்தப்படாததால் இப்போதைக்கு இதனை விட்டு நகர்வோம். எப்படியிருப்பினும், நாம் எடுத்துக் கொண்டு விடயம் தொடர்பாக ஒரு விரிவான விளக்கத்தை எட்டுவதற்கு இந்த பகுதிகளை நாம் விரிவாக அலசுவது தவிர்க்க முடியாததாகிறது. அப்படியான ஒரு விரிவான பயணத்தை முடிக்கும் வரையில் நாம் எட்டும் எந்த முடிவுகளும் இடைக்காலத்திற்கு உரிய, தற்காலிக முடிவுகளாகவே கருதப்பட வேண்டும் என்ற நிதானத்துடன் விவாதத்தை தொடர்வோம்.

முதலாளித்துவ சக்திகளின் தோற்றத்துடன் அதுவரை காலமும் நிலவி வந்த எதேச்சாதிகார மன்னராட்சி முறைமை கேள்விக்குள்ளாகத் தொடங்கியது. பொருளாதாரரீதியாக பலம் பெற்று முதலில் வந்த வர்த்தக முதலாளிகளும், பின்னர் அவர்களுடன் இணைந்து கொண்ட தொழிற்துறை முதலாளிகளும் தாம் பெற்ற பொருளாதார பலத்திற்கு இணையாக அரசியல் பலத்தை பெறுவதற்கு முனைந்தார்கள். இதனால் மன்னராட்சிக்கும், அவர்களால் இதுவரை காலமும் பயனடைந்து வந்த நிலப்பிரபுத்துவ வர்க்கத்திற்கும், புதிதாக உருவாகி வந்து முதலாளி வர்க்கத்திற்கும் இடையில் கடுமையான மோதல்கள் தோன்றின. இவற்றின் விளைவாக இப்படிப்பட்ட சக்திகளை பிரதிநிதித்துவப் படுத்தும் விதத்தில் பாராளுமற்ற அமைப்புக்கள் தோற்றம் பெற்றன. ஆரம்பத்தில் இவை வெறுமனே மன்னருக்கு ஆலோசனை சொல்லும் அமைப்புக்களாகவே இருந்தன. காலப்போக்கில் இவை தமது ஆலோசனையின்றி மன்னர் வரிவிதிக்கக் கூடாது என்பது போன்ற உரிமைகளை போராடிப் பெற்றுக் கொண்டன. முதலாளித்துவ வர்க்கம் இன்னும் பலம் பெறவே அவை ஏனைய ஒடுக்கப்பட்ட வர்க்கங்களுடன் இணைந்து போராடி முடியாட்சியை முற்றாக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இல்லாதொழித்தன, அல்லது வரம்பிற்கு உட்படுத்தின.

நிலப்பிரபுத்துவ சமூகத்தில் பொருளாதாரமும் அரசியலும் பிரிக்க முடியா தபடி இணைந்து இருந்தன. நிலப்பிரபுத்துவ சமூகத்தில் பண்ணையடிமைகளை தமது நிலத்தில் பலவந்தமாக வைத்திருந்து உழைப்பை சுரண்டுவது ஒருவித அரசியல் அதிகாரம் இன்றி சாத்தியமற்றதாக இருந்தது. உழைக்கும் வர்க்கமா னது உடமை நீக்கம் செய்வதனால் உருவான முதலாளித்துவ சமுதாயத்தில், உழைக்கும் மக்கள் தமது உற்பத்தி சாதனங்களில் இருந்து முற்றாக அந்நியப் படுத்தப்பட்டிருந்தமையால், புதிதாக உருவாகி வந்த பாட்டாளி வர்க்கமானது தமது உழைப்புச் சக்தியை விற்பதனால் மாத்திரமே உயிர்வாழ முடியும் என்ற நிலையில் இருந்தது. இங்கு உழைப்பும் ஊதியமும் ஒருவித சமத்துவ நிலையில் இருந்ததாக கருதப்பட்டது. இதனால் இவர்களது உழைப்புச் சக்தியை பெறுவதற்கு வன்முறை தேவைப்படவில்லை. பொருளாதாரமும் அரசியலும் ஓரளவு சுதந்திரமாக, தனித்தனியாக செயற்படக் கூடியதாக இரு ந்தன. இதனால் சொத்துடைய வர்க்கமானது தானே நேரடியாக அரசியலில் ஈடுபடாமல், தனியான ஒரு பிரிவை அதற்கென உருவாக்கிக் கொண்டது. பெரும்பாலும் சட்டத்துறையில் பணியாற்றியவர்களே முதலில் அரசியல்வாதிக ளானார்கள். உண்மையில் இவர்கள் அதுவரை காலமும் இதே முதலாளிகளை அவர்களது சொத்துடமை பற்றிய விவகாரங்களில் நீதிமன்றங்களில் பிரதி நிதித்துவம் செய்தவர்களாக இருந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இப் போது அதே சட்டத்தரணிகள் இந்த முதலாளிகளை பாராளுமன்றங்களில் பிரதி நிதித்துவம் செய்யத் தொடங்கினார்கள். இந்த பிரதிநிதிகளை உடமை வர்க்கங்களானவை, பல்வேறு சிக்கலான பொறிமுறைகள் மூலமாக கட்டுப்படுத்தி, இவர்கள் தமது நலன்களை பிரதிநிதித்துவம் செய்வதை உத்த ரவாதப்படுத்திக் கொண்டார்கள். அந்த காலகட்டத்தில் பலமாக விளங்கிய உடமை வர்க்கப் பிரிவுகள் தத்தமது நலன்களை பிரதிநிதித்துவப் படுத்துவதற் காக தனித்தனியான குழுக்களை உருவாக்கிக் கொண்டார்கள். இந்த குழுக்க ளே காலப்போக்கில் தனியான அரசியல் கட்சிகளாக பரிணாமம் பெற்றன.

ஆரம்பத்தில் உடமை வர்க்கங்கள் மாத்திரம் பாராளுமன்றங்களில் பிரதி நிதித்துவம் பெற்றன. வாக்குரிமை என்பது சொத்துடைய ஆண்களுக்கு மாத் திரம் உரியனவாக இருந்தன. அந்தவகையில் இந்த பாராளுமன்ற ஆட்சி யானது ஒருவிதத்தில் பிரமுகர்கள் ஆட்சியாவே இருந்தது. ஆனால் காலப் போக்கில் ஒடுக்கப்பட்ட வர்க்கங்களும் தமது அரசியல் உரிமைக்காக தீவிர மாக போராடத்தலைப்பட்டன. பிரித்தானியாவில் சார்ட்டிஸ்ட்டு அமைப்பு இதில் முதன்மையான அமைப்பாக விளங்கியது. இதன் உறுதியான போராட்டத்தின் மூலமாக உழைக்கும் ஆண்கள் தமது வாக்குரிமையை பெற்றனர். இதே உரிமைக்காக பெண்கள் இன்னும் பல பத்தாண்டுகள் காத்திருக்க வேண்டி ஏற்பட்டது. பல நீண்ட போராட்டங்களின் பின்னர் பெண்கள் இந்த உரிமையை இருபதாம் நூற்றாண்டின் முற்பகுதியிலேயே பெற்றுக் கொண்டனர். இதே போராட்டத்தை ஏனைய ஒடுக்கப்பட்ட மக்கள் பிரிவினரும் மேற்கொள்ள



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நேரிட்டது. அமெரிக்காவில் கறுப்பினத்தவருக்கு சட்டரீதியாக வாக்குரிமையானது அமெரிக்க அரசியல் சட்டத்திற்கு மேற்கொள்ளப்பட்ட பதினைந்தாவது திருத்தம் மூலமாக 1869 இல் வழங்கப்பட்ட போதிலும் கூட, நடைமுறையில் இந்த உரிமையை கறுப்பினத்தவர் அனுபவிப்பதற்கு பல காலம் எடுத்தது. 1960ல் நடைபெற்ற நீண்டதும் விடாப்பிடியானதுமான சிவில் உரிமைக்கான போராட்டத்தின் விளைவாகவே கறுப்பின மக்கள் தமது வாக்குரிமையை நடைமுறையில் பெற்றுக் கொண்டார்கள். கொலனிய நாடுகளிலும் கூட நீண்ட போராட்டங்களின் பின்பே அரசியல் சுதந்திரம், வாக்குரிமை என்பன பெறப்பட்டன.

ஆரம்பத்தில் வெறுமனே சுரண்டும் வர்க்கங்கள் மாத்திரம் வாக்குரிமை பெற்றிருந்த காலத்தில் இவர்களை பிரதிநிதித்துவம் செய்வது மாத்திரமே அரசின் கடமையாக இருந்தது. ஆனால் படிப்படியாக ஒடுக்கப்பட்ட மக்கள் பிரிவினரும் வாக்குரிமை பெற்றுக் கொண்ட பின்பு இந்த மக்கள் பிரிவினரின் சம்மதத்தைப் பெறுவது என்பது இங்கு முக்கியத்துவம் பெறத் தொடங்குகிறது. இதனால் முதலாளித்துவ அரசாங்கம் மாத்திரம் அல்ல, அதன் அரசும் கூட இந்த ஒடுக்கப்பட்ட மக்கள் பிரிவினருடன் ஒருவித சமரசம் செய்து கொண்டே தமது ஆட்சியதிகாரத்தை தக்க வைத்துக் கொள்ள முடிகிறது. இது தவிர்க்க முடியாதவாறு முதலாளித்துவ அரசின் பாத்திரத்தை இன்னமும் சிக்கலானதாக்குகிறது. அதாவது சுரண்டும் வர்க்கத்தை பிரதிநிதித்துவம் செய்யும் அதே சமயத்தில் சுரண்டப்படும் மக்கள் பிரிவினரையும் திருப்தி செய்தாக வேண்டும். இது இலகுவான செயற்பாடல்ல. மாறாக பல சிக்கலான பொருள்வகை, மற்றும் சித்தாந்த செயற்பாடுகள் மூலமாகவே இது நடை பெறுகிறது. இது எவ்வாறு நடைபெறுகிறது என்பதை விரிவாக பார்ப்போம்.

## 4

முதலாளித்துவ அரசியல் அறிஞர்கள் அரசை மூன்று கூறுகளாக பிரிப்பர். **சட்டவாக்கம், நீதி, நிர்வாகம்** ஆகியனவே அவையாகும். இப்படியாக அதிகாரமானது பிரிக்கப்பட்டிருப்பதனால் முதலாளித்துவ அரசானது மிகவும் நடுநிலைத் தன்மை கொண்டதாக இருப்பதாக வாதிடுவர். நிலப்பிரபுத்துவ சமூகத்தில் நிலவிய முடியரசின் வரம்பற்ற அதிகாரத்துடன் ஒப்பிடும் போது முதலாளித்துவ அரசானது முற்போக்கானதாக தோன்றினாலும் கூட, அது ஒரு வர்க்க அரசாக இருப்பதை இது மாற்றிவிடுவதில்லை. மார்க்சியமானது முதலாளித்துவ அரசை, **அரச இயந்திரம் மற்றும் அரசாங்கம்** என்று பிரித்துப் பார்க்கிறது. அரச இயந்திரம் என்பது இராணுவம், பொலிஸ், நீதிமன்றம், சிறைச்சாலை மற்றும் சிவில் சேவையாளர்களைக் கொண்ட அதிகாரவர்க்கம் ஆகியவற்றை உள்ளடக்கியதாகும். இதுவே கொள்கைவகுப்பு, நிர்வாகம், நிறைவேற்றம், சட்டம்-ஒழுங்கு ஆகியவற்றை உள்ளடக்கியதாக, உண்மையிலேயே அரசின் பணிகளை செய்து முடிக்கிறது. மாறாக வெளிப்படையாக, பகட்டாகத் தெரியும் பாராளுமன்றம், அமைச்சரவை, பிரதமர் அல்லது ஜனாதிபதி ஆகியோரை உள்ளடக்கிய அரசாங்கமானது மக்களது கவனத்தை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



திசை திருப்பும் பணியையே செய்து வருகிறது. அரசாங்கமானது சட்டங்களை உருவாக்குவதாக கூறப்பட்டாலுங்கூட, அரச இயந்திரத்தின் சிவில் சேவை யாளர்களைக் கொண்ட அதிகாரவர்க்கமே இந்த துறையிலும் இவர்களை முற்றிலும் வழிநடத்துகிறது. ஐந்து வருடங்களுக்கு ஒரு தடவை வரும் தேர்தல் களினால் அரசாங்கங்கள் மாறும் போதிலும், அரச இயந்திரமானது தொடர் ந்தும் நிலைத்து வருவதனால் முதலாளித்துவ நலன்கள் புதிதாக வரும் அரசாங்கத்திலும் அப்படியே தொடர்ந்தும் காக்கப்படுவதை இந்த அரச இயந் திரமானது உத்தரவாதப்படுத்திக் கொள்கிறது. ஆகவே புரட்சியாளர்களின் இலக்கா அமைய வேண்டியது அரச இயந்திரமே அன்றி அரசாங்கமல்ல.

> அமெரிக்கா முதல் சுவிட்சர்லாந்து வரை, பிரான்ஸ் முதல் பிரிட்டன், நோர்வே வரை இவ்வாறு எந்த நாடாளுமன்ற நாட்டை வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளுங்கள். இந்நாடுகளில் எல்லாம் "அரசுக்குரிய" மெய்யான வேலை திரைக்குப் பின்னால் நடத்தப்படுகிறது: இலாக்காக்களும், அமைச் சகச் செயலகங்களும், படைத் தலைமையகங்களும் இதை நடத்துகின்றன. "பொது மக்களை" ஏய்ப்பதற்கென வாய்ப்பேச்சு பேசுவதே நாடாளுமன்ற த்துக்கு அளிக்கப்பட்டிருக்கும் பணி. இதுவே உண்மை என்பதை முதலாளித்துவ ஜனநாயக குடியரசாகியுள்ள ரஸ்யக் குடியரசுங்கூட புலப்ப டுத்துகிறது - மெய்யான நாடாளுமன்றம் ஒன்றை இக்குடியரசு நிறுவிக் கொள்ளும் முன்னரேகூட நாடாளுமன்ற முறையின் இந்தக் கேடுகள் யாவும் உடனடியாகவே வெளிப்பட்டுவிட்டன (லெனின் - அரசும் புரட்சியும்).

அப்படியானால் இந்த பாராளுமன்ற வாக்குரிமையை பெறுவதற்காக, அதனை பயன்படுவதற்காக உழைக்கும் வர்க்கங்கள் ஏன் இத்தனை பிரயாசை மேற்கொண்டிருக்க வேண்டும் என்ற கேள்வி எழுவது நியாயமானது அல்லவா? இது பற்றி ஏங்கெல்ஸ் குறிப்பிடும் போது பின்வருமாறு கூறுகிறார்.

> "அனைத்து மக்களின் வாக்குரிமை என்பது தொழிலாளி வர்க்கத்தின் முதிர்ச்சியின் அளவுகோலாகும். தற்கால அரசியலில் இதற்குமேல் எதுவாகவும் இருக்காது, இருக்கவும் முடியாது."

இப்படிப்பட்டதொரு வரையறுக்கப்பட்ட பாத்திரத்தையே பாராளுமன்றமும் அதன் தேர்தல்களும் ஆற்றினாலும் கூட, இவற்றில் கலந்து கொள்வதற்கான உரிமைகள் கூட மறுக்கப்பட்ட மக்கள் இந்த அரசியல் சுதந்திரத்திற்காக போராடி அதனை பெற்றுக் கொள்வது அவசியமானது. ஏனெனில் அரசியல் விடுதலை இல்லாத ஒரு சமூகப் பிரிவானது தனது சமூகவிடுதலை பற்றி சிந்தித்துப் பார்க்கவும் முடியாது. இதனால் தான் ஒடுக்கப்பட்ட மக்கள் பிரிவினர் தமது வாக்குரிமையை பெறுவதற்காக நடத்திய போராட்டங்களை அந்தந்த காலத்தில் வாழ்ந்து புரட்சியாளர்கள் தீவிரமாக ஆதரித்தார்கள். அந்த உரிமை வென்றெடுக்கப்பட்ட போது அதற்காக உண்மையிலேயே மகிழ்ச்சி கொண்டார்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



> “ஜேர்மன் தொழிலாளர்கள் அனைவருக்குமான வாக்கெடுப்பை புத்திசாலி த்தனத்துடன் பயன்படுத்திக் கொண்டார்கள். இதனால் கட்சியானது வியக் கத்தக்க வளர்ச்சி அடைந்துள்ளது உலகத்திற்கே வெளிப்படையாக தெரி கிறது. சமூக ஜனநாயககட்சி பெற்ற வாக்குகள் தொடர்ச்சியாக கூடிச் செல்வதை நாம் காணமுடியும்: 1871 இல் 102,000: 1874 இல் 352.000: 1877 இல் 493,000. இந்த வளர்ச்சியை அதிகாரத்தில் உள்ளவர்கள் இனம் கண்டு கொண்டதன் விளைவே சோசலிச எதிர்ப்புச் சட்டம் வலிமை யாக வெளிப்பட்டதாகும். இது கட்சியை தற்காலிகமாக நிலைகுலைத்தது: வாக்குகளின் எண்ணிக்கை தற்காலிகமான 312,000 இற்கு வீழ்ச்சியுற்றது. இந்த நெருக்கடியானது விரைவிலேயே முறியடிக்கப்பட்டது. வாக்குகளின் எண்ணிக்கை மீண்டும் அதிகரிக்கத் தொடங்கின. 1884 இல் 550,000: 1887 இல் 763,000: 1890 இல் 1,427,000: இதற்குமேல் அரசின் கரம் செயலிழந்து போயின. சோசலிச எதிர்ப்புச் சட்டம் காணாமற் போனது. சோசலிஸ்ட்டுகளின் வாக்குகள் 1,787,000 ஆக, அதாவது மொத்த வாக் கின் கால்பங்காக உயர்ந்தது. ஆளும் வர்க்கமும், அரசும் தம் கைவச முள்ள அத்தனை சாதனங்களை - பயனற்ற, அர்த்தமற்ற, தோல்வியுற்ற சாதனங்களை - பயன்படுத்தியும் தோற்றுப்போனது. அரசானது தனது இறுதிக்கட்டத்தில் இருக்கிறது: தொழிலாளர்களோ தமது தொடக்க நிலையில் உள்ளார்கள்” (Engels, Quoted By Lucio Colletti).

இதற்காக நடந்த போராட்டங்கள் யாவும் இப்போது, பல வருடங்கள் கழித்துப் பார்க்கும் போது அத்தனை முக்கியத்துவமற்றதாக பலருக்கும் தோன்றக் கூடும். ஆனால் அந்தந்த வரலாற்றுக் கால கட்டத்தில் இவைதாம் அப்போதிருந்த மிகப் பெரிய ஜனநாயகத்திற்கான போராட்டமாக இருந்தன. சார்ட்டிஸ்ட்டுகளது போராட்டம் இரண்டு தசாப்தங்களுக்கு மேலாக பிரித்தானி யாவை ஆட்டிப்படைத்தது. தொழிலாளர்கள் அலையலையாக வீதிகளில் இற ங்கி போராடினார்கள். தொழிலாளர் வர்க்கத்தின் முதல் அரசியல் பிரக்ஞை இந்த இயக்கத்தினூடாகவே தோன்றியது. இந்த போராட்டங்களில் பல்வேறு தலைவர்கள் கைதாகவும், சிறை செல்லவும் நேர்ந்தது. பலர் கடுமையான அடக்குமுறை வடிவங்களை முகம் கொண்டு விட்டுக் கொடாது போராடி னார்கள். இப்படிப்பட்டதொரு தயாரிப்பின்றி, பாட்டாளி வர்க்கமானது பிற்கால த்தில் அமைப்பாவது, புரட்சிகர இலக்குகளுக்காக போராடுவது, தனியான கட்சிகளை உருவாக்குவது என்பவற்றை எண்ணியும் பார்த்திருக்க முடியாது. இவ்வாறே பெண்களது வாக்குரிமைக்கான போராட்டமானது இன்னும் சில பத்தாண்டுகள் நீடித்தன. இது பெண்ணியத்தின் முதலாவது அலையாக கருதப்படுகிறது. அவ்வாறே கறுப்பினமக்கள் அமெரிக்காவில் தமது சிவில் உரிமைகளுக்காக நடத்திய போராட்டங்கள் அந்த கால கட்டத்தில் உலக மனச்சாட்சியையே உலுக்கியெடுத்த நிகழ்வுகள். இப்படியாக இத்தனை போராட்டங்கள், தியாகங்கள் போன்றவற்றினூடாக பெறப்பட்ட உரிமைகளை மிகவும் சாதரணமாக தூக்கியெறிவதானால் அதற்கு சரியான காரணங்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இருப்பது அவசியமானது அல்லவா?

எம்மைப் பொறுத்தவரையில் பாராளுமன்றத்தில் புரட்சியாளர்கள் பங்குபற்றுவது பின்வரும் காரணங்களுக்காக முக்கியத்துவம் பெறுகிறது.

- மக்கள் தமது அரசியல் உரிமைகள் பற்றிய பிரக்ஞை இன்றி வெறுமனே செயலற்று இருப்பதை விட, பற்றாக்குறை உடையதுதான் என்றாலுங்கூட இந்த பாராளுமன்ற அரசியலில் சம்பந்தப்பட்டு பல்வேறு கட்சிகளினால் முன்வைக்கப்படும் அரசியல் வாதங்களை உற்றுக் கவனித்து அந்தந்த தேர்தல்களில் வாக்களிப்பது ஒடுக்கப்பட்ட மக்களது விழிப்புணர்வின் கருநிலையை குறிக்கிறது. இங்கு செயலற்ற புறக்கணிப்பிற்கும் (Apathy), செயல்பூர்வமான புறக்கணிப்பிற்கும் (Active Boycott) இடையிலான வேறுபாடுகளை நாம் குறித்துக் கொள்ள வேண்டும்.
- மக்களில் பெரும்பாலானோர் இன்று அரசியல் என்பதை ஐந்து வருடங்களுக்கு ஒரு தடவை வரும் தேர்தல்களில் வாக்களிப்பதுதான் என்பதான குறுகிய அர்த்தத்திலேயே புரிந்து கொண்டுள்ளார்கள். இப்படியாக அவர்கள் ஐந்து வருடங்களுக்கு ஒரு தடவை "விழித்தெழுந்து" தம்மை நாடி வரும் அரசியல் கட்சிகளையும், அவர்களது கருத்துக்களையும் கவனிக்கத் தொடங்கும் போது நாம் அவர்களை நாடிச் செல்வதும், அவர்கள் முன்பு எமது கருத்துக்களை முன்வைப்பதும் அவசியமானது. தேர்தல் காலங்களில் ஏற்படுத்தப்படும் இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களை நாம் தவற விட்ட பின்பு, மக்கள் "உறக்கத்தில்", அரசியல் அக்கறை அற்று இருக்கும் காலங்களில் அவர்களை அணுகுவதும், எமது கருத்துக்களை தெரிவிப்பதும் சாத்தியமற்றது.
- மக்கள் இன்று இப்படியாக இருப்பதற்கு அவர்கள் முதலாளித்துவ சக்திகளது சித்தாந்த மேலாண்மைக்கு உட்பட்டிருப்பதே என்று பார்த்தோம். அப்படியானால் இந்த ஆளும் வர்க்க சித்தாந்த மேலாண்மையை எவ்வாறு முகம் கொடுத்து முறியடிப்பது என்ற கேள்வி எழுவது தவிர்க்க முடியாதது அல்லவா? இது எங்கெல்லாம் இந்த ஆதிக்க சக்திகள் மக்களை ஏய்க்க முனைகிறார்களோ அங்கெல்லாம் நாம் சென்று, அந்தந்த இடத்திலேயே இவர்களது முகத்திரைகளை கிழித்தெறிவதனால் மாத்திரமே சாத்தியமாகும். இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களை இந்த தேர்தல் மேடைகளும், பாராளுமன்ற மேடைகளும் தாராளமாகவே வழங்குகின்றன. இவற்றை புறக்கணித்துவிட்ட பின்பு இந்த ஆதிக்க சக்திகளது சித்தாந்தங்களை நேருக்கு நேர் முகம் கொடுத்து முறியடிப்பதற்கான சந்தர்ப்பங்கள் கிடைப்பது அத்தனை இலகுவானதாக இராது.
- புரட்சியாளர்களது கருத்துக்கள் எவ்வளவு தூரம் சரியானவை என்பதை மக்கள் வெறுமனே அவர்களது வாதத்திறமை, தர்க்கம் போன்றவற்றை மாத்திரம் அடிப்படையாகக் கொண்டு முடிவு செய்வதில்லை. அவர்கள் தமது சொந்த அனுபவங்கள் மூலமாக புரட்சியாளர்களது கருத்துக்கள்தாம் சரியானவை என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். இப்படி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ப்பட்ட சந்தர்ப்பங்கள் புரட்சியாளர்களும் தேர்தல்களில் கலந்து கொண்டு, பாராளுமன்றத்தில் அங்கத்துவம் வகித்து அந்தந்த மேடைகளில் தமது அம்பலப்படுத்தல்களை மேற்கொண்டு, அதனை சாதரண மக்கள் தமது சொந்த அனுபவங்கள் மூலமாக சரியானவை என்று உணர்ந்து கொள்ள சந்தர்ப்பங்களை வழங்காமல் இந்த மக்கள் பிரிவினரை வென்றெடுப்பது சாத்தியப்படமாட்டாது.

மேலே குறிப்பிட்ட காரணங்களுக்காகவே மார்க்சும், ஏங்கெல்சும் பாட்டாளி வர்க்கமானது தனக்கென சொந்த அரசியல் கட்சிகளை நிறுவிக் கொள்வதையும், அந்த கட்சிகள் ஏனைய புரட்சிகர பணிகளுடன் கூடவே முதலாளித்துவ சமூகத்தில் நிகழும் முக்கியமான அரசியல் நிகழ்வுகளிலும் பங்கேற்றுக் கொள்வதை வலியுறுத்தினார்கள். இங்குதான் மார்க்சியவாதிகளுக்கும், அராஜகவாதிகளுக்கும் இடையிலான முக்கியமான முரண்பாடுகள் தோன்றுகின்றன. முதலாளித்துவத்தின் கரங்களில் ஒரு ஒடுக்குமுறை சாதனமாக இருக்கும் அரசை அராஜகவாதிகள் எடுத்த எடுப்பிலேயே ஒழித்துவிடலாம் எனக் கருதுகிறார்கள். இதனால் இவர்கள் பாட்டாளி வர்க்கமானது அரசதிகாரத்தை புரட்சியின் மூலமாக எடுத்துக் கொள்வதை நிராகரிக்கிறார்கள். அதன் தொடர்ச்சியாக புரட்சியாளர்கள் பாராளுமன்றத்தில் கலந்து கொள்வதையும் நிராகரிக்கிறார்கள். அவ்விதம் கலந்து கொள்வதானது ஒரு மோசமான புல்லுருவி அமைப்பான அரசிற்கு, அதன் சீரழிந்து பாராளுமன்ற முறைக்கு புரட்சிகர வர்க்கங்கள் வழங்கும் அங்கீகாரமாக ஆகிவிடும் என்கிறார்கள். இயங்கியல்வாதிகளான மார்க்சியவாதிகள் அரசை ஒழிப்பதற்கும், அதனை முதலில் கைப்பற்றுவதற்கும் இடையில் முரண்பாடுகளை காண்பதில்லை. ஏனெனில் அரசானது உருவாவதற்கும், நிலைத்து நிற்பதற்கும் ஒரு காரணம் இருக்கிறது. அதுதான் வர்க்க முரண்பாடும், வர்க்க போராட்டமுமாகும். பாட்டாளி வர்க்கமானது அரசை கைப்பற்றி, அதனை சுரண்டும் வர்க்கங்களை இல்லாதொழிப்பதற்காக பயன்படுத்தி வர்க்கமும், வர்க்க முரண்பாடுகளும் அற்ற ஒரு சமுதாயத்தை படைக்கும் வரையில் அரசை ஒழித்துவிட முடியாது என்கிறது மார்க்சியம். ஆனால் அராஜகவாதிகளோ (Anarchists), இந்த படிமுறைகள் அனைத்தையும் ஒரே தாவில் தாவிவிட முனைகிறார்கள். இது நடைமுறையில் சாத்தியமாகப் போவதில்லை. இவர்களால் புரட்சியாளர்களை ஒரு திட்டவட்டமான அமைப்பு வடிவில் ஒழுங்கமைக்கவோ, புரட்சிகர மாற்றத்திற்கான மூலோபாயத்தை வகுக்கவோ முடிவதில்லை.

பாராளுமன்றம் தொடர்பாகவும் இதே பிரச்சனைதான் மார்க்கிசவாதிகளுக்கும், அராஜகவாதிகளுக்கும் இடையில் ஏற்படுகிறது. பாராளுமன்றமானது ஊழலும் மோசடிகளும் நிறைந்த ஒரு இடமாக இருப்பதைக் காணும் அராஜகவாதிகள் அதனை முற்றாகவே நிராகரிக்கிறார்கள். ஆனால் மார்க்சியவாதிகள் அதனை அவ்வாறு பார்ப்பதில்லை. மக்கள் எங்கெல்லாம் உள்ளார்களோ அங்கெல்லாம் சென்று பணியாற்ற வேண்டியது புரட்சியாளர்களது கடமையாக பார்க்கிறார்கள். பாராளுமன்றமானது எந்தவிதமான புரட்சிகர மாற்றங்களையும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கொண்டுவந்துவிடாது என்பதில் மார்க்சியவாதிகளுக்கு எந்தவிதமான மயக்க மும் கிடையாது. ஆனால் மக்கள் திரளானது பாராளுமன்றத்தின் வரையறை களை புரிந்து கொள்ளும் வரையில் அங்கு சென்று பணியாற்றுவது புரட்சி யாளர்களது கடமை என் வலியுறுத்துகிறார்கள். அந்த வகையில் இதுவோர் கடந்து செல்லும் பிரச்சனையாகும். மக்களுக்கு எட்டாமல் இருக்கும் ஒன்றை அவர்கள் வென்றெடுப்பதும், பின்பு அதன் பற்றாக்குறையை அவர்கள் உணர் ந்து கொண்டு அதனை கடந்து அடுத்த புரட்சிகர மாற்றங்களை நோக்கி முன்னேறுவதும் நடைபெற வேண்டும். எந்தவொரு மெய்யான சமூக இயக்க மும் இப்படிப்பட்ட வளர்ச்சிப் படிகளின் ஊடாகத்தான் தனது இலக்குகளை அடைந்து கொள்கிறதே ஒழிய திடீரென பல படிகளை ஒரே தடவையில் தாண்டிக் குதித்துவிடுவதில்லை. இப்படியாக அராஜகவாதிகளை எதிர்த்த போராட்டதத்தில் மார்க்ஸ் அவர்களை கடுமையாக விமர்சித்தார்.

> “முதலாளித்துவ பாராளுமன்ற முறை “பன்றித் தொழுவமே” ஆயினுங்கூட அதனை பயன்படுத்திக் கொள்ள, முக்கியமாய் நிலைமை புரட்சிகரமான தாய் இல்லை என்பது தெளிவாக தெரியும் நேரத்தில் அதனை பயன்ப டுத்திக் கொள்ள, திராணியற்றதாய் இருந்ததென்பதற்காக அராஜகவாதிக ளிடம் இருந்து தயவு தாட்சண்யமின்றி முறித்துக் கொள்ள மார்க்சுக்கு தெரிந்திருந்தது. அதேபோது பாராளுமன்ற முறையை மெய்யாகவே புரட்சி கரமான பாட்டாளி வர்க்க நிலைப்பாட்டிலிருந்து விமர்சிக்கவும் அவருக்கு தெரிந்திருந்தது” (*லெனின் - அரசும் புரட்சியும்*).

இதேவேளை பாராளுமன்றத்தின் மிகவும் குறுகிய வரையறுக்கப்பட்ட பாத்திர த்தை தெளிவாக புரிந்து கொண்டுள்ள மார்க்சியமானது புரட்சிகரகட்சியானது பாராளுமன்ற தேர்தல்களில் கலந்து கொண்டு பெரும்பான்மை பெறுவதன் மூலமாக ஒடுக்கப்பட்ட வர்க்கங்கள் தமது புரட்சிகர இலக்குகளை அடைந்து விடலாம் என்பதை ஒருபோதும் ஏற்றுக் கொள்வதில்லை. முதலாளித்துவ தேர்தல்கள் மூலமாக முதலாளித்துவ வர்க்கமானது மக்களை ஆள்பவர் தமக் குள் யார் என்பதைத்தான் முடிவு செய்கிறார்களே ஒழிய, வேறு எந்தவொரு உருப்படியான மாற்றங்களும் பாராளுமன்றம் மூலமாக ஏற்படுவதில்லை என்ப தில் மிகவும் தெளிவாகவே உள்ளார்கள். அத்தோடு பாராளுமன்றத்தில் பெரு ம்பான்மை பெறுவது என்பது அரசாங்கத்தை அமைப்பதைக் குறிக்கிறது. அதாவது முதலாளித்துவ சமூக அமைப்பை நிர்வகிக்கும் பொறுப்பை பெற் றுக் கொள்வதைக் குறிக்கிறதே ஒழிய அதனை மாற்றியமைப்பதற்கான அதிகாரத்தை அது கொடுப்பதில்லை. ஆதலால் இதனை ஒரு கடந்து செல்லும் பிரச்சனையாக, மக்களை இதனைத் தாண்டி வென்றெடுத்து செல்லும் ஒரு வழி முறையாக, தந்திரோபாய சாதனமாக காண்கிறார்களே ஒழிய அதற்கு மேல் அதிகம் எதனையும் அதனிடம் எதிர்பார்ப்பதில்லை. ஆனால் வெகுஜனங்கள் பாராளுமன்ற மாயையில் இருந்து விடுபடாத வரை யில் தாம் விரும்பினாலும் இல்லாவிட்டாலும் கூட புரட்சியாளர்கள் அதில் கலந்து கொண்டுதான் ஆக வேண்டியிருக்கிறது. ஆனால் பாராளுமன்றத்தில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கலந்து கொள்வதுடன் உண்மையான புரட்சியாளர்கள் தம்மை மட்டுப்படுத்திக் கொள்வதில்லை. மாறாக பாராளுமன்றத்திற்கு வெளியிலும் தொடர்ந்தும் விடாப்பிடியாக தமது போராட்டத்தை முன்னெடுக்கிறார்கள். மக்களை அணுகுவதற்கு கிடைக்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் அதன் நோக்கில் பயன்படுத்திக் கொள்கிறார்கள். மக்கள் மத்தியில் கிளர்ச்சி, பிரச்சாரம் என்பவற்றை மேற்கொண்டு அவர்களை அணிதிரட்டுகிறார்கள். அவர்களது அன்றாட போராட்டங்களில் கலந்து கொண்டு அவர்களை வழி நடத்துவதன் மூலமாக தலைமை தாங்குகிறார்கள். இப்படியாக ஒடுக்கப்பட்ட மக்கள் பிரிவினர் தமது சொந்த வாழ்க்கையின் போராட்டங்களின் ஊடாக கண்டுகொள்ளுமாறு வழிநடத்தப்படுகிறார்கள். இந்த சமூக அமைப்பின் அநீதியான தன்மையையும், அதனை எதிர்த்து போராட வேண்டியதன் அவசியத்தையும், அதனை வெற்றிகரமாக செய்வதற்கான வழிமுறைகளையும் தமது சொந்த போராட்ட அனுபவங்களை கண்டு கொள்ள உதவி செய்கிறார்கள். இப்படியாக புரட்சியாளர்கள் மக்களிடம் இருந்து கற்றுக் கொள்ளும் போதே மக்களுக்கு கற்றுக் கொடுக்கவும் செய்கிறார்கள்.

நடப்பிலுள்ள சமூக அமைப்பினை மாற்றுவதற்கு அவசியமான அத்தனை போராட்ட வழிமுறைகளையும் கற்றுத் தேர்வது புரட்சியாளர்களது கடமையாகிறது. வரலாறானது பல்தரப்பட்ட போராட்ட வழிமுறைகளை புரட்சியாளர்கள் முன் வைத்துள்ளது. இவற்றில் சில பகிரங்கமானவை - சில தலைமறைவானவை: சில சட்டபூர்வமானவை - சில சட்டத்திற்கு புறம்பானவை: சில வன்முறை வடிவிலானவை - சில வன்முறை சாராதவை: சில வேகமான செயல்திறன் கொண்டவை - சில மிகவும் நிதானமாக முன்னெடுக்கப்பட வேண்டியவை. உண்மையிலேயே எதிரியை தோற்கடித்து யுத்தத்தில் வெற்றி காண விழையும் எந்தவொரு போராட்ட அமைப்பும் எதிரியின் கரங்களில் உள்ள அத்தனை ஆயுதங்களையும் சரிவர பயன்படுத்திக் கொள்வதற்கு அவசியமான பயிற்சியை முறையாக பெற்றிருப்பது அவசியமானது. இவற்றில் சிலவற்றை யுத்தம் தொடங்கு முன்பே நிராகரித்து விடுவது என்பது எமது தோல்வியை நாமே வலிந்து வருவித்துக் கொள்வதாக அமைந்துவிடும். ஏனெனில் வரலாறு எப்படிப்பட்டதொரு போர்க்களத்தை தம்முன் விரிக்கப் போகிறது என்பதை முன்னரே அறிந்து கொள்ளும் ஆற்றல் கொண்டவர் எவருமே கிடையாது. அந்த வகையில் வரலாறு புரட்சியாளர்கள் முன்வைத்துள்ள அத்தனை போராட்ட வழிமுறைகளையும் போதியளவு கற்றுத் தேர்ந்து அவற்றில் தனித்தேர்ச்சி பெற்றுக் கொள்ளாமல், யதார்த்தத்தில் எந்தவொரு புரட்சிகரமான போராட்டத்திற்கும் யாரும் தலைமை தாங்கிவிட முடியாது. அந்த வகையில் இந்த பல்தரப்பட்ட போராட்ட வழிமுறைகளை படிநிலை வரிசைப்படுத்த (Hierarchial) முனைவது, அவற்றில் சிலவற்றை முக்கியமானவையாக கருதி அவற்றை வழிபடுவதும், இன்னும் சிலவற்றை முக்கியத்துவம் அற்றதாகவும் கருதி நிராகரிப்பதும் மோசமான தோல்விகளை நாமே வருந்தி அழைத்துக் கொண்டதாக அமைந்துவிடும். கடந்த காலத்தில் எமது போராட்டத்தில் ஆயுத போராட்டத்தை உயர்ந்த போராட்ட வடிவமாக கருதத் தொட



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ங்கி, பின்னர் அதுவே ஒரே போராட்ட வடிவமாக ஏற்றுக் கொள்ளப்பட்டது எப்படிப்பட்ட தீங்குகளை ஏற்படுத்தின என்ற படிப்பினை எம் அனைவருக்கும் இருக்கிறது அல்லவா?

## 5

வரலாற்று ரீதியாக பார்ப்போமேயானால், உலகலாவிய அளவில் பல்வேறு கொம்யூனிஸ்ட்டுக் கட்சிகளும் பாராளுமன்ற பாதையினால் ஆட்சியதிகாரத்தை கைப்பற்ற நடந்த முயற்சிகளில் பல நேர்மறை மற்றும் எதிர்மறை அனுபவ ங்களை சர்வதேச அளவில் புரட்சிகர இயக்கங்களுக்கு வழங்கியுள்ளன. முதலில் நாம் எதிர்மறை அனுபவங்களை எடுத்துக் கொள்வோம்.

## சிலியின் அனுபவங்கள்

1970 ம் ஆண்டில் சிலி நாட்டில் அங்குள்ள கொம்யூனிஸ்ட்டு கட்சியானது அதன் பொதுச் செயலாளர் அலண்டே யின் தலைமையில் பாராளுமன்றத்தில் பெரும்பான்மையைப் பெற்று ஆட்சிக்கு வந்தார். இவர் ஆட்சிக்கு வந்த போது பல்வேறு மக்கள் பிரிவினர் மத்தியிலும் மிகவும் உற்சாகமான மனநிலையும், அதிக எதிர்பார்ப்புக்களும் நிலவின. ஆனால் இவர்களால் கையேற்கப்பட்ட ஆட்சியை கொண்டு நடத்துவது அத்தனை சுலபமானதாக இருக்கவில்லை. ஆட்சிக்கு வந்தவுடன் வறிய மக்களது வாழ்க்கை நிலைமைகளை சீர்படுத்தும் பல திட்டங்களை முன்னெடுத்தார். இவர் பல பாரிய அளவிலான தொழி ற்துறைகளையும், சுகாதார சேவைகளையும் அரசுடமையாக்கினார். பாடசாலை மாணக்கருக்கு இலவசமாக பால் வழங்கினார்: தீவிரமான நிலச் சீர்திரு த்தத்தை செய்தார்: சுரங்கத் தொழிலை அந்நிய மூலதனத்தின் பிடியில் இருந்து தேசவுடமையாக்கினார். இந்த நடவடிக்கைகள் காரணமாக வறிய வர்களதும், நடுத்தர வர்க்கத்தினதும் வருமானமானது கணிசமான அளவு உயர்ந்தது. பணக்காரர்களது வருமானமானது குறையத் தொடங்கியது.

இந்த விதமான நடவடிக்கைகள் முதலாளித்துவ வர்க்கத்தைப் பீதியில் ஆழ்த்தியது. இது தனது வர்க்க போராட்டத்தை (Class Struggle) ஒரு நேரடியான வர்க்க யுத்தமாகவே (Class War) மாற்றியது. முதலாளித்துவ கட்சிகளே, தாம் புனிதமானதாக காட்டிக் கொள்ளும் அரசியலமைப்பின் விதி முறைகளை மீறி, சட்டபூர்வமாக தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கத்தை கவிழ்க் குமாறு இராணுவத்தை கோரத் தொடங்கின. முதலாளித்துவ வர்க்கத்தின் கரங்களில் இருந்த வெகுஜன தொடர்பு சாதனங்கள் பகிரங்கமாகவே அரசா ங்கத்திற்கு எதிராக கண்டனங்களை வெளியிட்டதுடன், இராணுவ சதிக்கான கோரிக்கைகளை முன்வைத்தது. குட்டி முதலாளி வர்க்கமும் இதனோடு சேர்ந்து கொண்டது. நீதிமன்றம் நேரடியாகவே ஆட்சியை கண்டிக்க ஆரம்பி த்தது. முதலாளிகள் தமது ஆலைகளில் உற்பத்திகளை முடக்கினர். வியாபா ரிகள் உணவுப் பொருட்களைப் பதுக்கி பெரிய அளவிலான தட்டுப்பாடுகளை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



செயற்கையாக தோற்றுவித்தனர். 40,000 ட்ரக் வண்டிகளின் உரிமையாளர்க ளது வேலை நிறுத்தமானது நாட்டில் மோசமான உணவு மற்றும் அத்தியாவசி ய தேவைகளின் தட்டுப்பாட்டை ஏற்படுத்தியது. அரசாங்கத்திற்கு எதிரான வேலைநிறுத்தங்களும் இடம்பெறத் தொடங்கின. ஆட்சியில் அமர்ந்த நாள் முதலாக தொடர்ச்சியாக தன்மீது தொடுக்கப்பட்ட மூர்க்கத்தனமாக தாக்கு தல்களின் முன்னால் கொம்யூனிஸ்ட்டுகட்சியின் அரசாங்கமானது செய்வதறி யாது திகைத்து நின்றது. தனது ஆதரவாளர்களையும், மக்களையும் ஆயுத மயப்படுத்த முனையவில்லை. அமெரிக்க அரசானது தனது சீ.ஐ.ஏ மூலமாக நேரடியாகவே சதி முயற்சியில் இறங்கியது. இறுதியில் 1973 இல் செப்டம்பர் 11ம் திகதி இராணுவம் தனது சதிப்புரட்சி மூலமாக இந்த ஆட்சியை முடிவுக்கு கொண்டு வந்தது. இந்த தாக்குதல்களின் போது ஜனாதிபதியான அலண்டே அவர்களும், அவரது குடும்பமும், நெருங்கிய ஆதரவாளர்கள் மற் றும் தோழர்களும் உயிர் இழந்தார்கள். அடுத்த சில வருடங்கள் நீடித்த இராணுவ ஒடுக்குமுறையில் பல்லாயிரக்கணக்கான இடதுசாரிகள், அவர்களது ஆதரவாளர்கள், அனுதாபிகள் என்று பலர் கொல்லப்பட்டனர், காணாமற் போயினர். அடுத்த ஒரு தலைமுறைக்கு இடதுசாரி அமைப்புக்களே தலை தூக்க முடியாதவாறு செய்துவிட்டார்கள்.

## இந்தியாவில் அனுபவங்கள்

இந்தியாவில் மேற்கு வங்கத்திலும், கேரளாவிலும் இடதுசாரி கட்சிகள் ஆட்சிக்கு வந்தன. இந்திய மத்திய அரசுக்கு கட்டுப்பட்ட ஒரு மாநிலத்தில் ஆட்சி ஏறுவதன் மூலமாக பெரிதாக எதையும் சாதிக்க முடியாதவர்களாக இவர்கள் இருந்தார்கள். தாம் முதலாளித்துவ உற்பத்தி உறவுகளை நிர்வ கிப்பதற்கான பெறுப்பை ஏற்று இருக்கிறார்களே அன்றி, அந்த உறவுகளை மாற்றியமைப்பதற்காக அல்ல என்பதை இவர்கள் வெளிப்படுத்திக் கொண்டா ர்கள். தமது அரசாங்கம் தானே ஆட்சியில் இருக்கிறது என்ற தைரியத்தில் தொழிலாளர்களும் தமது கோரிக்கைகளை முன்வைத்து வேலை நிறுத்தத்தில் இறங்கினார்கள். வீதியில் இறங்கிப் போராடினார்கள். போராட்டத்தின் ஒரு கட்டத்தில் நாட்டின் சட்டம் ஒழுங்கை “காப்பாற்றும்” நோக்கில் வீதியில் இறங் கிப் போராடிக் கொண்டிருந்த தொழிலாளர்கள் மீது பொலிசை - அரச இய ந்திரத்தை - ஏவிவிட்டு துப்பாக்கிச் சூடு நிகழ்த்தினார்கள். அப்போது பதவி யில் இருந்த கொம்யூனிஸ்ட்டு கட்சியின் மந்திரிகள் மக்கள் முன்தோன்றி பொலிசாரின் இந்த செயற்பாடுகளை அரசாங்கம் என்றவகையில் நியாய ப்படுத்தியாக வேண்டிய நிலை உருவானது. இந்த சம்பவமானது அதுவரை காலமும் கொம்யூனிஸ்ட்டு கட்சியில் விசுவாசமாக உழைத்துவந்த முன்னணி ஊழியர்களுக்கே பெரிய அதிர்ச்சியாக இருந்தது. மக்கள் மத்தியில் கொம்யூனிஸ்ட்டு கட்சி மீதான நம்பிக்கைகளை இது தகர்த்தது.

இதனை ஒத்த நிலைமைகளே தொடர்ந்தும் மேற்கு வங்காளத்திலும் நடந்து வருகிறது. அங்கு நீண்ட காலமாக ஆட்சியில் அமர்ந்திருக்கும் கொம்யூனிஸ்ட்டுக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கட்சி தலைமையிலான அரசாங்கமே அங்கு முதலாளித்துவ சக்திகளை தொழிலாளர்களது போராட்டங்களில் இருந்து பாதுகாக்கும் பணியை செய்து வருகிறது. இங்கு போராடும் தொழிலாளர், விவசாயிகள், மாணவர்கள், பழங்குடிகள் போன்றவர்களுக்கு எதிராக அரசாங்கம் அடக்குமுறைகளை ஏவி விடுவது சர்வ சாதாரணமானது. அண்மைக் காலத்தில் அந்நிய முதலாளிக ளது முதலீடுகளை கவர்வதற்காக பலவிதமான சலுகைகளை வழங்கி வரும் இந்த அரசாங்கமானது, விவசாயிகளது நிலங்களை போதிய இழப்புகள் இன்றியும், அவர்களது முறையான சம்மதத்தை பெறாமலும் கையகப்படுத்தி பெரும் முதலாளிகளுக்கு வழங்கி வருகிறது. இதிலே டாட்டா நிறுவனத்திற்கு எதிராக விவசாயிகள் மேற்கொண்ட போராட்டமானது இந்த தொடர்கதை களின் ஒரு அங்கம் மட்டுமே. அவ்வாறே பழங்குடிகளுக்கு எதிராக பொலிசார் நடத்தி வரும் அடாவடித்தனங்களை ஏவி விடுவதும் அதனை வழி நடத்து வதும் சிபிஎம் தலைமையிலான அரசாங்கமேயாகும்.

## இலங்கையில் அனுபவங்கள்

இலங்கையில் இடதுசாரி கட்சிகள் நீண்ட பாரம்பரியம் கொண்டவை. தீவிரமான போர்க்குணாம்சம் கொண்டவை என்று பெயரெடுத்தவை. சுதந்திரம் கிடைப்பதற்கு முன்பு நடைபெற்ற தேர்தல்களில் ஐக்கிய தேசிய கட்சிக்கு அடுத்த பலமான கட்சியாக பாராளுமன்றத்தில் திகழ்ந்தன. 1956 இல் தனிச் சிங்கள சட்டம் கொண்டு வரப்பட்ட போது “இரண்டு மொழியானால் ஒரு நாடு, ஒரு மொழியானால் இரண்டு நாடு” என்று துணிச்சலாக பாராளுமன்றத்தில் அந்த சட்டத்திற்கு எதிராக முழங்கியவர்கள். ஆனால் இவர்களால் இந்த நிலைப்பாடுகளில் நிலைத்து நிற்க முடியவில்லை. பாராளுமன்றவாதத்திலேயே மூழ்கிப் போன இவர்கள் நாட்டின் சனத்தொகையில் பெரும்பான்மையாக உள்ள சிங்கள மக்களது வாக்குகளை பெறுவதற்காக சிங்கள இனவாத கட்சிகளுடன் போட்டியிட வேண்டிய நிலையில் இருந்ததனால், அவர்களால் தொடர்ந்தும் சிங்கள பேரினவாதத்திற்கு எதிராக உறுதியாக போரிட முடிய வில்லை. பாராளுமன்றவாதமானது உழைக்கும் மக்களிடையே தொடர்ச்சியாக பணியாற்றி அவர்களை தவறான சித்தாந்தங்களின் பிடியில் இருந்து விடு விப்பதை ஊக்குவிப்பதில்லை. மாறாக அவ்வப்போது தேர்தல் காலங்களில் மாத்திரம் மக்களிடம் சென்று மக்களது உணர்ச்சிகளுக்கு தீனி போடக் கூடியவிதமாக பிரச்சாரங்களை மேற்கொண்டு அவர்களது வாக்குகளை கைப்பற்றுவது என்பதையே குறியாக கொண்டது. அத்தோடு மக்களின் வாக் குகளை எவ்விதமான குறுக்குவழிகளில் கைப்பற்றுவது மற்றும் ஆட்சிபீடம் ஏறுவதற்கு யாருடன் கூட்டு சேர்வது என்பதை இலக்காக கொண்டு செயற்ப டுவதாகும். இதனால் இவர்கள் தமது புரட்சிகர உள்ளாற்றலை முற்றாக இழந்து இன்னொரு முதலாளித்துவ, இனவாத பிழைப்புவாத கட்சிகளாக சீரழிந்து போனார்கள். 1972 இல் இலங்கையில் புதிய குடியரசின் அரசிய லமைப்பை வரைந்தவர் முன்பு மொழிப் பிரச்சனையில் தீவிரமாக முழக்கம் செய்த அதே கொல்வின் ஆர் டி சில்வாதான். அவர்தான் இலங்கை சிங்கள



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பௌத்தநாடு என வரையறுக்கும், இன்று வரையில் தேசியபிரச்சனைக்கு அரசியல்ரீதியாக தீர்வுகான தடையாக இருக்கும் ஒற்றையாட்சி அரசியலமைப்பை வரைந்தவராவர். இலங்கையின் வரலாற்றில் தேசியபிரச்சனையானது இந்தளவிற்கு மோசம் அடைந்ததில் முக்கியமான பங்கு இந்த இடதுசாரி கட்சிகளுக்கும் உண்டு.

இலங்கையில் தொழிற்சங்க அமைப்புகள் மிகவும் பலம் வாய்ந்தவையாக இருந்து வந்தன. 1952 இல் ஹர்த்தாலின் போது கொழும்பில் அமைச்சரவையைக் கூட்டுவது ஆபத்தானதாக இருக்கலாம் என்று பயந்து அப்போதைய பிரதமர் டட்லி சேனநாயக்க, தனது அமைச்சரவையை கொழும்பு துறைமுகத்திற்கு வெளியே தரித்து நின்ற ஒரு கப்பலில் நடத்தும் அளவிற்கு இவர்களது செயற்பாடுகள் தீவிரமானவையாக இருந்தன. இந்த தொழிற்சங்க இயக்கத்திற்கு கிடைத்த முதல் பெரிய அடி 70 களில் இடதுசாரி கூட்டு ஆட்சியில் இருந்த போதே கிடைத்தது. வேலை நிறுத்தம் செய்த வங்கி ஊழியர்களை வேலை நீக்கம் செய்ததன் மூலமாக தொழிற்சங்க அமைப்பிற்கு பலத்த அடியை கொடுக்கும் செயற்பாட்டை இடதுசாரி அமைச்சரான என் எம் பெரேரோ தான் முன்னெடுத்தார் என்பது கவனத்திற்குரியதாகும்.

இப்படியாக இடதுசாரி கட்சிகள் தேர்தலில் வெற்றி பெற்று நேரடியாகவோ அல்லது முதலாளித்துவ கட்சிகளுடன் கூட்டுச் சேர்ந்தோ ஆட்சியில் அமர்ந்த போது, அமைச்சர் பதவிகளை வகித்த போது இவர்களால் சோசலிசத்தை கொண்டுவர முடியவில்லை. அதிலும் பல சந்தர்ப்பங்களில் மோசமான கேடுகளையே இவர்களால் புரட்சிகர இயக்கங்களுக்கு இழைக்க முடிந்தது. இவற்றை நாம் பாராளுமன்ற பாதையின் மூலமாக சோசலிசத்தை அடைவதாக கூறுபவர்களுக்கு எதிர்மறையான பாடங்களாக காட்ட முடியும்.

## நேர்மறை அனுபவங்கள்

1960 களின் பிற்பகுதி, உலகளாவிய அளவில் புரட்சிகர இயக்கங்கள் முழு அளவில் தீவிரமாக வெளிப்பட்டுக் கொண்டிருந்த காலம். 1967 இல் பொலிவியாவில் சேகுவேராவின் இறப்பும், அந்த இயக்கத்தின் தோல்வியில் ஆரம்பித்த சரிவும், அடுத்தடுத்ததாக இலத்தீன் அமெரிக்காவில் இடம் பெற்று வந்து பல்வேறு புரட்சிகர இயக்கங்களது தோல்வியில் முடிவடைந்தது. 1973 இல் சிலியில் அலண்டேயின் தோல்வி அடுத்த பெரிய அடியாக விழுந்தது. 1980 களின் முற்பகுதியில் மீண்டும் இலத்தீன்அமெரிக்கா வீறு கொண்டு எழுந்தது. எல்சல்வடோர், குவாத்தமாலா, நிக்கராகுவா என்று மீண்டும் பல்வேறு நாடுகளில் புரட்சிகர அலை வீசியது. இதில் நிக்கரகுவாவில் சண்டனிஸ்டாக்கள் தலைமையில் புரட்சிகர இயக்கமானது அரசதிகாரத்தை கைப்பற்றியது. ஆயினும் அதனை தொடர்ந்தும் தக்க வைப்பதில் பல பிரச்சனைகள் எழுந்தன. ஒரு புறத்தில் அமெரிக்க அரசானது நேரடியாகவே எதிர்ப்புரட்சி குழுக்களை அமைத்து, அவற்றிற்கு நிதி, பயிற்சி மற்றும் ஆயுதங்கள் என்பவற்றை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வழங்கி, இந்த நாட்டின் மீது தொடர்ச்சியான தாக்குதல்களை தொடுத்து, இந்த ஆட்சியை நிலைகுலைய வைத்தது. மறுபுறத்தில் சண்டனிஸ்டா அரசானது உள்நாட்டு விவகாரங்களை கையாள்வதில் - குறிப்பாக நடுத்தர விவசாயிகள் பற்றிய பிரச்சனையில் - இழைத்த தவறானது அவர்களுக்கு மக்கள் மத்தியில் இருந்த செல்வாக்கை சரிவடையச் செய்தன. தாம் ஒரு அரசு என்ற வகையில் தோற்கடிக்கப்படாத போதிலும், எதிர்ப்புரட்சியாளர்களை ஒடுக்கவும் முடியாமல் திண்டாடினார்கள். இந்த நிலையில் அமெரிக்கா தலைமையிலான சர்வதேச அழுத்தங்களுக்குப் பணிந்து முதலாளித்துவ கட்சிகளும் கலந்து கொள்ளும் தேர்தலை நடத்த உடன்பட நேர்ந்தது. இந்த தேர்தலில் தோல்வியடைந்ததனால் சண்டனிஸ்டா அரசானது கவிழ்ந்தது. ஆயினும் தேர்தல் நடத்துவதற்கு முன்பு செய்து கொண்டு ஒப்பந்தங்களின் அடிப்படையில் இராணுவத்தில் முன்னாள் புரட்சியாளர்கள் முக்கிய பதவிகளை வகிப்பதை வெற்றி பெற்ற முதலாளித்துவ ஆட்சியாளர்கள் தடுத்தவிட முடியவில்லை. இது அந்த புரட்சியின் நலன்கள் சிலவற்றையாவது பாதுகாப்பதை ஓரளவிற்கு உத்தரவாதப்படுத்திக் கொள்ள உதவியது.

1980 - 90களில் ஏகாதிபத்தியங்கள் கொண்டு வந்த புதிய தாராண்மைவாத மீட்பானது மூன்றாம் உலக நாடுகளில் மிகவும் கடுமையான பிரச்சனைகளை உழைக்கும் மக்களிடையே தோற்றுவிக்கலாயின. இதனால் இந்த கொள்கைக்கும், அதனை முன்னெடுத்த உள்ளூர் ஆட்சியாளர்களுக்கும் எதிரான உணர்வானது இலத்தீன் அமெரிக்க நாடுகளில் தீவிரமாக வெளிப்படலாயிற்று. 1990 இல் மெக்சிக்கோவின் சியாபஸ் பிரதேசத்தில் தொடங்கிய சபடிஸ்டா புரட்சியை அடுத்து இலத்தீன் அமெரிக்காவின் ஏனைய பிரதேசங்களிலும் இந்த எதிர்ப்புணர்வானது பரவத் தொடங்கியது. பொலிவியாவில் உள்ள கோச்சம்பா பிரதேசத்தில் குடிநீர் வளங்களை தனியார்மயமாக்கலுக்கு எதிராக நடந்தது உட்பட அமெரிக்க சுதேச மக்களது இயக்கங்கள் தீவிரம் பெறத் தொடங்கின. இவற்றைவிட இந்த நாடுகளின் பூர்வகுடிகளின் மரபில் வந்தவர்கள் முதல் தடவையாக தமது அரசியல் பிரதிநிதித்துவம் பற்றி தீவிரமான அக்கறையை வெளிப்படுத்தத் தலைப்பட்டார்கள். இந்த சூழ்நிலையானது ஒரு புதுவிதமான அரசியல் முன்னெடுப்புக்களுக்கு வழிவகுத்தது.

## வெனிசுவேலா அனுபவம்

1992 இல் வெனிசுவேலா நாட்டின் இராணுவ அதிகாரியான மேஜர் ஹுகோ சாவேஸ் என்பவர் ஒரு இராணுவ புரட்சி முயற்சியில் தோல்வியுற்றார். இவர் ஒரு இடதுசாரி கருத்துக்களைக் கொண்டவர். இராணுவப் புரட்சியின் தோல்வியை அடுத்து நீதிமன்றத்தில் தோல்விக்கான பொறுப்பை ஏற்றுக் கொண்டு அவர் தான் அப்படிப்பட்ட ஒரு புரட்சியில் ஈடுபடுமாறு தன்னை துாண்டிய சமூக நிலைமைகள் மீது கடுமையான விமர்சனங்களை முன்வைத்து உரையாற்றியிருந்தார். இதனை அடுத்து இவருக்கு கிடைத்த தண்டனையை சிறையில் கழித்து வெளிவந்த சாவேஸ் 'ஐந்தாம் குடியரசிற்கான அமைப்பு' என்ற



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பெயரில் ஒரு அரசியல் இயக்கத்தை முன்னெடுத்தார். 1999 இல் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெற்று பதவிக்கு வந்தார். வெனிசுவேலா நாட்டின் வரலாற்றில் ஆட்சிக்கு வந்த முதல் கலப்பினத்தவர் சாவேஸ் என்பது குறிப்பிடத்தக்கதாகும். பதவி ஏற்றதும் தான் தேர்தல் வாக்குறுதியில் அறிவி த்தது போலவே புதிய அரசியலமைப்புச் சபையை கூட்டி, புதிய அரசிய லமைப்பை உருவாக்கி மக்களது அங்கீகாரத்தை சர்வசன வாக்கெடுப்பில் பெற்றுக் கொண்டார். நாட்டில் உற்பத்தி உறவுகளை பெரியளவில் இவர் மாற்றவில்லை. தனியார் உடைமையை நீக்கவில்லை. வெகுஜன தொடர்பு சாதனங்களில் தனியாரது ஆதிக்கமே நிலவுகிறது. ஆயினும் எண்ணெய் வளம் கொண்ட நாடானதால் அவற்றை முன்னாள் முதலாளித்துவ கட்சிகளின் ஆதர வாளர்களது ஆதிக்கத்தில் இருந்த எண்ணெய் நிறுவனங்களை அரச உடமை யாக்கினார். அதன் வருமானம் மக்களுக்கான பொதுப்பணிகளில் செலவிடப்ப டுவதை உத்தரவாதப்படுத்தினார். பொதுமக்களுக்கு சாதகமான பெருமளவு சட்டங்களை நிறைவேற்றினார். நிலச் சீர்திருத்தம், பொதுச் சேவைகளின் தரமு யர்த்தல், உணவு மானியங்கள் போன்றவை இவற்றில் முக்கியமானவையாகும்.

இவற்றையெல்லாம் விட முக்கியமானது, இவர் ஒழுங்கமைத்த ‘பொலிவேரியோ மக்கள் குழுக்கள்’ எனப்படும் உள்ளூர் குழுக்களது பாத்திரம்தான். உள்ளூர் அளவில் சாதாரண மக்களை கொண்டு தனது புரட்சிகர நடவடிக்கைகளுக்கு ஆதரவான குழுக்களை அமைத்தார். அவற்றில் நாட்டின் அரசியலமைப்பை வாதித்து விவாதிக்க ஊக்குவித்தார். தமது பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதற்கான முன்முயற்சிகளை ஊக்குவித்தார். இவை அந்த நாட்டின் சாவேசின் ஆட்சியை காத்து நிற்பதில் முக்கியமான பங்காளிகளாக திகழ்கிறார்கள்.

தோற்றுப் போன முதலாளித்துவ கட்சிகள் எதிர்கட்சி வரிசையில் அமைதி யாக கைகட்டி அமர்ந்திருந்து அடுத்த தேர்தலுக்காக காத்திருக்கவில்லை. உடனடியாகவே களத்தில் இறங்கி அமெரிக்க அரசு தலைமையில் வெனிசுவேலாவின் சாவேஸ் ஆட்சிக்கு எதிராக தீவிரமான பிரச்சாரங்களையும் பல்வேறு விதமான நெருக்குதல்களையும் தீவிரப்படுத்தினார்கள். எதிர்க்கட்சிக ளின் கரங்களில் பெருமளவில் குவிந்திருக்கும் பொதுசன தொடர்பு சாத னங்கள் மூலமாக விசமத்தனமான பிரச்சாரங்கள் கட்டவிழ்த்துவிடப்பட்டன. அவர் ஒரு கலப்பினத்தவர் என்ற இனவாத தகவல்களும் அவரை இழிவுப டுத்தும் வகையில் விரிவாக பேசப்பட்டன. எதிர்கட்சித் தலைவர்கள் நேரடியா கவே இராணுவ புரட்சிக்கு அழைப்பு விடுத்தார்கள். அடிக்கடி தமது ஆதரவா ளர்களை நகரத்தில் திரட்டி பெரிய அளவிலான ஆர்ப்பாட்டங்களை நடத்தி இயல்பு நிலையை ஸ்தம்பிக்கச் செய்து வரலானார்கள். முதலாளிகளும், எதிர் க்கட்சிகளின் பிடியில் உள்ள தொழிற் சங்கங்களுமாக சேர்ந்து தொழிற் கதவ டைப்பை நடத்தி, அதனை மாபெரும் தொழிலாளர் வேலை நிறுத்தம் என அறிவித்த உள்ளூரிலும், சர்வதேச அளவிலும் எதிர்ப் பிரச்சாரத்தை மேற்கொ ண்டார்கள். இறுதியில் 2004ம் ஆண்டில் அமெரிக்க ஆதரவுடன் ஒரு இராணுவப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



புரட்சியையே மேற்கொண்டார்கள்.

எதிர்தரப்பாரது ஒவ்வொரு நடவடிக்கைகளுக்கு சுடச்சுட திரும்பி பதிலடி கொடுக்கப்பட்டது. தான் ஆட்சிக்கு வந்து குறைந்த காலமான பத்து வருடத்தி ற்குள் எட்டு தடவைகள் அவர் மக்களை வெவ்வேறு தேர்தல்களில் - அரசி யல் அமைப்புச் சபைக்கானது, அரசியல் அமைப்பை அங்கீகரிப்பதற்கானது, புதிய பாராளுமன்றத்திற்கானது, அடுத்த ஜனாதிபதித் தேர்தல், ஜனாதிபதியை மீளழைப்பது குறித்த சர்வஜன வாக்கெடுப்பு உட்பட பல தேர்தல்கள் - சந்தி த்து ஒவ்வொரு தடவையும் எதிர்க்கட்சியினரின் பிரச்சாரங்களை தவிடுபொ டியாக்கி பெருமளவு வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். எதிர்தரப்பு நடத்தும் ஆர்ப்பாட்டங்களுக்கு இணையாக அரச ஆதரவாளர்களும் ஆர்ப்பா ட்டங்களில் ஈடுபட்டனர். இந்த இரண்டு ஆர்ப்பாட்டங்களும் தோற்ற அளவி லேயே மிகவும் வித்தியாசமானவையாக இருப்பதை எவரும் காணலாம். எதிர் க்கட்சியினரது ஆர்ப்பாட்டங்கள் நகரின் செல்வந்தர்கள் வசிக்கும் பகுதியில் இருந்து புறப்பட்ட நகரின் மையத்தை நோக்கி வரும். அதில் கலந்து கொள்ப வர்கள் எல்லோரும் ஐரோப்பாவில் இருந்து குடியேரிய 'கிரியோல்' இனத்தைச் சேர்ந்த முதலாளித்துவ, மத்திய தர வர்க்கத்தைச் சேர்ந்தவர்களாக இருப்பர். அரச ஆதரவு ஆர்ப்பாட்டங்கள் நகரின் சேரிப்புறங்களில் இருந்து ஆரம்பமாகி நகரின் மையத்தை நோக்கி வரும். இதில் இடம் பெறுபவர்கள் பூர்வகுடி, கலப்பின, கறுப்பின பின்னணியைக் கொண்டவர்களாக இருப்பர். பெரும்பாலும் வறிய வர்க்கப் பிரிவினரைச் சேர்ந்தவர்களாக இருப்பர். இந்த ஊர்வலங்களே அந்த நாட்டில் நடைபெறும் வர்க்க போராட்டத்தின் வெளிப்படையான வகைமா திரியாக அமைந்திருக்கும்.

இராணுவப் புரட்சி நடைபெற்ற போதிலும் கூட இப்படித்தான் நடைபெற்றது. இராணுவ புரட்சியை நடத்தியவர்கள் ஜனாதிபதி சாவேஸ் அவர்கள் தனது பதவியை இராஜிநாமா செய்துவிட்டதாக மாத்திரம் அறிவித்து விட்டு, சாவேஸை ஆட்கள் நடமாட்டம் இல்லாத ஒரு தீவில் சிறையிட்டனர். எதிர்கட்சி தரப்பை சேர்ந்த ஒருவரை தற்காலிக ஜனாதிபதியாக நியமிப்பதாக அறிவித்து விட்டு, அவரது தலைமையில் பெரும்பாலும் எதிர்க்கட்சி பிரமுகர்களைக் கொண்டு அமைச்சரவையையும் நியமித்து அதனூடாக அன்றாட நிர்வாகம் பிரச்சனையின்றி தொடர்வதாக மக்களுக்கும், சர்வதேச சமூகத்திற்கும் ஒரு தோற்றத்தைக் கொடுத்தனர். இந்த செய்தியையே உள்ளூர் செய்தித்தாப னங்களும் தொடர்ந்தும் வெளியிட்டுவந்தன. நாட்டில் நடந்து முடிந்த சதிப்பு ரட்சி பற்றிய செய்தியானது சர்வதேச செய்தி நிறுவனங்களின் ஊடாகவே நாட்டு மக்களுக்கு தெரிய வந்தது. அதனால், இந்த செய்திகளில் சந்தேகம் கொண்ட பொலிவேரியோ குழுக்களைச் சேர்ந்தவர்கள் ஜனாதிபதி மாளிகை யை நோக்கி இலட்சக் கணக்கில் அணிதிரண்டு சுற்றி வளைத்துக் கொண்டா ர்கள். மக்கள் திரள் இந்த ஏதிர்ப்புரட்சிக்கு எதிராக திரும்பிவிட்டதை கண்ட, ஜனாதிபதி மாளிகையில் புதிய அமைச்சரவையின் பாதுகாப்பிற்காக காவலு க்கு நின்ற சாதாரண சிப்பாய்கள் தமது துப்பாக்கிகளை திசை திருப்பி புதிய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஆட்சியாளர்களை பணயக் கைதிகளாக ஆக்கினார்கள். இவர்களது வேண்டு கோளின் பேரில் சிறப்பான ஒரு தீவில் காவலில் வைக்கப்பட்டிருந்த சாவேஸ் மீண்டும் அழைத்து வரப்பட்டு அவரது கரத்தில் மீண்டும் அதிகாரம் ஒப்படை க்கப்பட்டது. இன்று இவர் இலத்தீன் அமெரிக்க நாடுகளில் ஒரு நம்பிக்கை நட்சத்திரமாக திகழ்கிறார். கியூபாவுடன் நெருக்கமான உறவுகளை ஏற்படு த்திக் கொண்டு அவர்களுக்கு எண்ணையை பண்டமாற்று அடிப்படையில் வழங்கி, தனது மக்களுக்கு அவசியமான மருத்துவர்கள் மற்றும் ஆசிரியர்க ளது சேவைகளை பெற்றுக் கொண்டுள்ளார். அத்தோடு ஏனைய லத்தீன் அமெரிக்க நாடுகளுடன் சேர்ந்து அமெரிக்க அதிகாரத்தின் செல்வாக்கின் எல்லைக்கு அப்பாற்பட்ட ஒரு சுதந்திரமான இலத்தீன் அமெரிக்க நாடுகளின் கூட்டமைப்பை உருவாக்குவதில் வெற்றியும் பெற்றுவிட்டுள்ளார்.

## பொலிவிய அனுபவம்

வெனிசுவேலாவில் நடந்த மாற்றங்களைத் தொடந்து பொலிவியாவிலும் இதே விதமான மாற்றங்கள் ஏற்பட்டன. 2004ம் ஆண்டில் நடைபெற்ற தேர்தலில் எதிர்கட்சி சார்பில் போட்டியிட்ட ஈவா மொராலிஸ் என்ற பூர்வகுடியைச் சேர்ந்த ஒருவர் இலத்தீன் அமெரிக்க நாடுகளின் வரலாற்றிலேயே முதல் தடவையாக பதவி ஏற்றுள்ளார். பதவிக்கு வந்தவுடனேயே அந்த நாட்டில் வாழும் பூர்வகுடி களுக்கு இழைக்கப்பட்ட கொடுமைகளுக்கு நிவாரணம் வழங்கும் முகமாகவும், அவர்களது சுயாதீனத்தை அங்கீகரிப்பதாகவும் இந்த அரசியலமைப்பு அமை கிறது. இந்த மாற்றங்களுக்கு எதிராக இதுவரை காலமும் ஆட்சியல் இருந்து வந்து ஐரோப்பிய வழிவந்தவர்கள் பெரிய அளவிலான எதிர்ப்புக்களை காட்டி வருகிறார்கள். நாட்டின் கனிம வளங்கள் மீதான அரசின் கட்டுப்பாட்டை மீள ஏற்படுத்திக் கொண்டன் மூலமாக அந்நிய சக்திகள் தமது நாட்டின் மூலவள ங்களை கொள்ளையடித்துச் செல்வதை தடுத்து நிறுத்துவதில் வெற்றி பெற்று ள்ளார். இவர் நாட்டில் உள்ள வறிய தொழிலாளர், விவசாயிகள், வேலையற்ற வர்களது வாழ்க்கை நிலைமைகளை உயர்த்த அயராது பாடுபட்டு வருகிறார். ஐந்நூறு வருடங்களுக்கு மேலாக கொடுமையை அனுபவித்துவந்த பூர்வகுடி களின் வாழக்கை நிலைமைகளை மேம்படுத்துவது இவரது முக்கியமான கரிசனையாக இருக்கிறது.

இந்த மாற்றங்களைத் தொடர்ந்து ஈக்குவடோர் நாட்டில் அடுத்ததாக ராபேல் கோரியா என்பவர் இவர்களது தரத்தில் ஆட்சிக்கு வருகிறார். அத்துடன் நிக்க ராகுவாவில் நடைபெற்ற தேர்தலில் இரண்டு தடவைகள் தோல்வியுற்ற தலைவ ர்கள் இந்த தடவை பாராளுமன்ற தேர்தல்கள் மூலமாக ஆட்சிக்கு வருகின்ற னர். இவர்கள் அனைவருடனும் கியூபத் தலைவர் மிகவும் நெருக்கமான தொடர்புகளைக் கொண்டிருக்கிறார். இவரது வழிகாட்டுதலில் இப்போது இந்த புதிய இலத்தீன் நாடுகளுக்கான கூட்டமைப்பானது உருவாகியுள்ளது. இது அந்த பிராந்திய மக்கள் நம்பிக்கையோடு தமது எதிர்காலத்தை முகம் கொடுக்க உதவியாக இருக்கும் என்று பலரும் நம்பிக்கை கொண்டுள்ளார்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இவர்களது நம்பிக்கை சரியானதுதானா என்பதை எம்மால் இப்போதே உறுதியாக கூற முடியவில்லை. அந்த அடிப்படையில் பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பெறுவதால் சோசலிசத்தை அடையலாம் என்றும் நாம் கருதவில்லை. ஆனால் நாம் எம்மைச் சுற்றி நடப்பவை பற்றி கண்களை மூடிக் கொண்டு இருந்து விட்டு முடிவுகளை அகநிலை சார்ந்து எடுப்பது தவறு என்ற அடிப்படையில் சில அவதானங்களுக்காக மாத்திரம் இவற்றை முன்வைக்கிறோம்.

## நேபாள அனுபவங்கள்

1996, பெப்ரவரி மாதம் 13ம் திகதி தலைமறைவாக இருந்த நேபாள கொம்யூனிஸ்ட்டுக்கட்சி (மாவோ) யினால் மக்கள் யுத்தம் ஆரம்பிக்கப்பட்டிருப்பினும், 2000 ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி நேபாள அரச குடும்பம் படுகொலை செய்யப்பட்டதன் பின்னரான காலகட்டத்தில் தான் அது தீவிரம் பெற்றது. அதுவரையிலான காலமும் இந்த போராட்டமானது, பிராந்திய ளவில், உள்ளூர் கெரில்லா படைகளினால் பொலிஸ்நிலையங்கள் மீதான தாக்குதல்களே நடத்தப்பட்டு வந்தன. நேபாள இராணுவம் மீது தாக்குதல்கள் நடத்தப்படவில்லை. மன்னர் குடும்பத்தில் படுகொலைகளை அடுத்து இந்த போராட்டமானது முழு அளவிலான புரட்சிகர உள்நாட்டு யுத்தமாக மாற்றம் பெற்றது. வெகுஜன அடித்தளத்தை கொண்ட புரட்சிகர படையானது கணிசமான பிரதேசத்தை தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்ததுடன், முறையாக ஒழுங்கமைக்கப்பட்ட மக்கள் விடுதலை இராணுவத்தையும் கொண்டிருந்தது. மன்னரும் அவரது உடனடி குடும்பத்தவரும் படுகொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து நேபாளிய தேசிய இராணுவமானது புரட்சியாளர்களுக்கு எதிராக தாக்குதலில் இறக்கப்பட்டது. இந்த தாக்குதல்களை முகம் கொடுத்து முறியடித்த புரட்சியாளர்கள் மேலும் பலம் பெறலானார்கள்.

செப்டம்பர் பதினோராம் திகதி நிகழ்வுகளுக்குப் பின்பு அமெரிக்க அரசு நேபாளத்தில் இராணுவரீதியாக தலையிட்டு, புரட்சியாளர்களை “பயங்கரவாதிகளாக” முத்திரை குத்தி, அவர்களது போராட்டத்தின் நியாயாதிக்கத்தை மறுத்ததுடன், அமெரிக்கர்களது கண்ணோட்டத்தின்படி புரட்சியாளர்களை உலகளாவிய ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட ஆயுத மோதல்கள் தொடர்பான சர்வதேச சட்டங்களிலிருந்தும் ஒதுக்கி வைக்க முயற்சி செய்தது. 2004 ஆண்டிலிருந்து படிப்படியாக நேபாளத்தின் அண்டை நாடுகள் புரட்சியாளர்களது போராட்டத்தின் நியாயாதிக்கத்தை ஏற்றுக்கொள்ள தொடங்கியதுடன், “பயங்கரவாதிகள்” என்ற பதத்தையும் சிறிது சிறிதாக கைவிடத் தொடங்கினார்கள்.

மோசமடைந்து வரும் சர்வதேச நிலைமைகள், மற்றும் யுத்தத்தில் நேரடியாக வெற்றி பெறுவதிலுள்ள சிக்கலான பிரச்சனைகள், மற்றும் மக்கள் சமாதானத்தை நோக்கி போரிடும் இரண்டு தரப்பினருக்கும் கொடுத்த நெருக்கடிகள் என்பவற்றின் பயனாக, புரட்சியாளர்கள் சர்வதேச மேற்பார்வையுடனான ஒரு போர்நிறுத்தத்தில் கைச்சாத்திடுகிறார்கள். இதன்படி முடியரசை உடனடியாகவே



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கலைப்பது எனவும், அந்த இடத்தில் ஒரு மக்கள் ஜனநாயக குடியரசை அமைப்பது என்பதும் ஏற்றுக் கொள்ளப்படுகிறது. ஒரு புதிய, மக்களது உரிமைகளுக்கு உத்தரவாதப்படுத்தக் கூடிய அரசியலமைப்பை வரைவது தொடர்பாகவும் உடன்பாடு எட்டப்பட்டது. அந்த அரசியல் அமைப்புச் சபையை நிறுவுவதற்கான தேர்தலில் போட்டியிட்டு புரட்சியாளர்கள் பெரும்பான்மை பலத்தை பெறுகிறார்கள். புரட்சியாளர்களது தலைவரான பிரசண்டிரா பிரதம மந்திரியாக பதவியேற்கிறார். ஆனால் அடுத்து தொடர்பவை ஒன்றும் இலகுவான பயணமாக இருக்கவில்லை. புதிய அரசியலமைப்பை வரைவது தொடர்பாகவும், முன்னாள் புரட்சியாளர்களை அரச இராணுவத்தில் சேர்ப்பது தொடர்பாகவும் பலத்த தடைகளை ஆளும் வர்க்கங்கள் ஏற்படுத்தி வருகின்றன. இதனால் ஒரு கட்டத்தில் பிரசன்டிரா அவர்கள் தனது பதவியை இராஜிநாமா செய்து அரசாங்கத்தை விட்டு வெளியேறுகிறார். இப்போது அரசாங்கத்திற்கு வெளியிலிருந்து சமாதான உடன்படிக்கையை முழுமையாக நிறைவேற்றும் படி அழுத்தம் கொடுத்து வருகிறார். இவர்களது எதிர்காலப்பாதை என்பது இன்னமும் நிச்சயமற்றதாகவே உள்ளது என்பது உண்மைதான். ஆனால் இப்படிப்பட்ட ஒரு வழிமுறையை தேர்ந்தெடுத்ததன் மூலமாகத்தான் இந்த புரட்சிகர அமைப்பானது, செப்டம்பர் 11 இன் பின்பு சர்வதேச அளவில் நிகழ்ந்து முடிந்து விட்ட பாரிய மாற்றங்களை சரிவர புரிந்துகொண்டு தம்மை மிகவும் கவனமாக வழிநடத்திச் செல்கின்றனர். ஆதலால் ஆயுதம் ஏந்திப் போராடும் அமைப்புக்கள் கூட பல்வேறு சூழ்நிலைகளில், இப்படிப்பட்ட தேர்தல்களை முகம் கொடுப்பதும், அவற்றின் மூலமாகவும் கூட தாம் வரித்துக் கொண்டு இலக்குகளை நோக்கி முன்னேறிச் செல்வதும் தவிர்க்க முடியாததாகிறது.

## 6

மேற்கொண்டு நாம் பாராளுமன்றம் தொடர்பான வாதங்களை தொடர்வதற்கு முன்பாக அரசு மற்றும் வர்க்கம் ஆகியவற்றுக்கு இடையிலான உறவுகள் எவ்வாறு அமைகின்றன என்று சற்று விரிவாக பார்த்துச் செல்வோம். முதலில் நாம் ஒரு குறிப்பிட்ட அரசை முதலாளித்துவ அரசு என்று ஏன் அழைக்கிறோம் என்பதை தெளிவு படுத்திக் கொள்ள வேண்டும். முதலாளித்துவ சமூகத்தில் இருக்கும் ஒரு அரசு என்பதனால் மாத்திரம் அந்த அரசானது முதலாளித்துவ அரசாகி விடுவதில்லை. மாறாக முதலாளித்துவ உற்பத்திசக்திகள், உற்பத்தி உறவுகள் ஆகியவற்றை தோற்றுவிப்பது, பாதுகாப்பது, மற்றும் மறு உற்பத்தி செய்வது போன்ற செயற்பாடுகளில் செயலூக்கமாக பற்றுவதனால் மாத்திரமே குறிப்பிட்ட ஒரு அரசானது முதலாளித்துவ அரசாக ஆகிறது. இது எவ்வாறு நடைபெறுகிறது என்று பார்ப்போம்.

## அரசும் வர்க்கமும்

முதலில் அரச இயந்திரத்தின் முக்கிய பகுதிகளான இராணுவம், பொலிஸ், நீதி, நிர்வாகம், சிறைச்சாலை போன்ற முக்கிய துறைகளில் தலைமையானது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஒரு **அதிகார வர்க்கத்தின்** கரங்களில் இருக்கிறது. இந்த அதிகார வர்க்க மானது ஒன்றில் நேரடியாக முதலாளித்துவ வர்க்க பிரிவுகளில் இருந்தோ அல்லது நடுத்தர வர்க்கத்தின் மேல் மட்டத்தில் இருந்தோ வருகிறது. தப்பி த்தவறி நடுத்தர வர்க்கத்தின் மத்திய பிரிவில் இருந்து வந்தாலும் கூட அவர்க ளை தனது சமூக சூழலினுள் இழுத்துக் கொள்வதற்கு முதலாளி வர்க்கத்தி ற்கு அதிக சிரமம் இருப்பதில்லை. மிகவுயர்ந்த சம்பளங்கள் மற்றும் திருமண உறவுகள் போன்றவை இவற்றை மிகவும் இலகுவாக சாத்தியப்படுத்தி விடுகின்றன. இந்த அதிகார வர்க்கமும், முதலாளித்துவ வர்க்கமும் ஒரு சமூகச் சூழலில் இருந்தே வருகின்றன. அதாவது, ஒரேவிதமான ''கௌரவ மான'' குடும்பங்கள், ஒரேவிதமான பாடசாலைகள், இணைந்திருக்கும் சங்கங் கள், இரசனைகள், நுகர்வுகள் போன்றவற்றில் மிகவும் நெருக்கமானவையாக இருக்கின்றன. இதற்கும் மேலாக, **தேசத்தின் நலன்கள்** என்பதை பொரு ளாதார அபிவிருத்தியின், அதாவது **மூலதனத்தின், நலன்களே** என்பதை மிக வும் உறுதியாக இரண்டு பிரிவினரும் உண்மையிலேயே நம்புபவர்களாக உள் ளார்கள். அப்படியாக நம்பும்படி அவர்களது கல்விமுறையும், சமூக பழக்க வழக்கங்களும், நடவடிக்கைகளும் அமைந்திருக்கின்றன. இதனால் இந்த அதிகாரவர்க்கமானது நாட்டின் நலன்கள் என்ற அக்கறையில் மேற்கொள்ளும் பல்வேறு நடவடிக்கைகளும் தவிர்க்க முடியாதபடி முதலாளித்துவ நலன்களை காப்பனவாக உள்ளன.

அரசியலமைப்புச் சட்டமானது ஒரு நாட்டின் மிகவும் புனிதமான சட்டமாக காட்டப்படுகிறது. இந்த சட்டமே **தனிச்சொத்துரிமையை புனிதமானதாக** காட்டு கிறது. தனிமனித சுதந்திரத்தின் உச்சகட்ட வெளிப்பாடாக கருதுகிறது. அத் தோடு கூலிஉழைப்பு என்பதை மிகவும் இயல்பானதாகவும், சந்தையில் சுதந் திரமாக நடைபெறும் சமமதிப்புள்ள பண்டங்களின் நியாயமான பரிவர்த்த னையாக காட்டுகிறது. ஆனால் இந்த தனிச்சொத்துடைமையின் விளைவாக தோன்றும் சுரண்டல், வறுமை, பட்டினி, நோய், மரணம் போன்றவற்றை இவை கடுமையான குற்றங்களாக கருதுவதேயில்லை. இப்படிப்பட்ட ஒரு ஏற்பாட்டை காப்பதை நோக்கமாக கொண்டே பெருமளவிலான சட்டங்கள் இயற்றப்பட்டு ள்ளன. முதலாளித்துவமானது அதன் ஆரம்ப கட்டத்தில் பெரிதும் சுதந்திர மாக போட்டியிடும் அமைப்பாகவே இருக்கிறது. இதனால் பல்வேறு முதலாளி களிடையே மூலவளங்கள், சந்தை போன்றவற்றிற்காக மாத்திரமன்றி அன்றாட நிதி கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் ஒப்பந்தங்கள் தொடர்பாகவும் அடிக்கடி சர்ச்சைகள் உருவாகின்றன. இப்படிப்பட்ட சர்ச்சைகளினால் முதலாளித்துவ வர்க்கமானது தனக்குள் மோதிக்கொண்டு தன்னைத்தானே அழித்துக் கொள் ளாமல் இருப்பதை உத்தரவாதப்படுத்தியாக வேண்டியுள்ளது. இதனை சமர சம் செய்யும் பாத்திரத்தை அரசே மேற்கொள்கிறது. சிவில் சட்டத்தின் மூல மாக இதனை செய்து முடிக்கிறது. வர்க்க முரண்பாடு என்பது ஒரு வர்க்கம் இன்னொரு வர்க்கத்தை சுரண்டுவது, ஒடுக்குவது, அடக்கிவைப்பது என்பவ ற்றை உள்ளடக்கியதாக அமைகிறது. இதனால் சுரண்டும் வர்க்கத்திற்கும், சுரண்டப்படும் வர்க்கத்திற்கும் இடையில் அடிக்கடி சர்ச்சைகளும்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சச்சரவுகளும் உருவாகிக் கொண்டே இருக்கின்றன. அத்துடன் இந்த இரண்டு வர்க்கங்களும் ஒன்றை விட்டு ஒன்று விலகிச் சென்றுவிட முடியாதபடி உற்ப த்தி முறையினால் அன்றாடம் முகம் கொடுத்து செயற்படும்படி நிர்ப்பந்திக்க ப்படுகையில் இந்த முரண்பாடுகள் இன்னமும் தீவிரமான தன்மையையும் பெறுகின்றன. இப்படியாக சொத்துடைய வர்க்கத்திற்கும் உழைக்கும் வர்க்க த்திற்கும் இடையில் ஏற்படும் பிரச்சனைகளை கிரிமினல் சட்டங்களினூடாகவும் கையாள்கிறது.

வரலாற்று ரீதியாக பார்க்கும் போது முதலாளித்துவத்தின் தேவைகளு க்கேற்ப அரசானது மிகவும் குறிப்பான சட்டங்களை இயற்றி அதன் வளர்ச்சி க்கு அவசியமான சமூக நிலைமைகளை உருவாக்கிக் கொடுத்துள்ளது. தொழில்துறை முதலாளித்துவமானது அதன் ஆரம்ப கட்டத்தில் இருந்தபோது அதற்கு ''சுதந்திரமாக'' செயற்படக்கூடிய பாட்டாளி வர்க்கத்தினர் பெருமள வில் தேவைப்பட்டார்கள். இதற்கு வசதி செய்யும் முகமாக பண்ணையடிமை முறைமையை அகற்றும் சட்டங்களை இயற்றியது. அத்தோடு கிராமப் பகுதி களில் இருந்து பொது மேய்ச்சல்நிலம் மற்றும் காட்டுப்பகுதிகளை இந்த விவசாயிகள் பாவிக்க முடியாதவாறு சட்டப்படி அடைத்துவிட்டதன் மூலமாக (Enclosure Laws) பல கோடிக்கணக்கான விவசாயிகளை உடமைநீக்கம் செய்தார்கள். இவர்கள் நகர்ப்புறங்களில் தமது உழைப்புச் சக்தியைத் தவிர விற்பதற்கு ஏதுமற்ற பாட்டாளிகளாக திரளத்தொடங்கினார்கள். இதற்கு மேலும் தொழிற்சாலைகளில் வேலைக்கு போகாமல் நாடோடியாகவோ, அல்லது ஏனைய ''குற்றச் செயல்களிலோ'' ஈடுபட்டவர்களை கைது செய்து மிக கடுமையாக தண்டித்தது. இப்படியாக முதலாளித்துவ உற்பத்தி முறைக்கு அவசியமான பாட்டாளி வர்க்கத்தை அவர்களது தொழிற்சாலைகளுக்கு கொண்டு வந்து சேர்த்ததில் இந்த அரசுக்கு பெரும் பங்கு இருக்கிறது.

முதலாளித்துவ உற்பத்திமுறையானது வெற்றிகரமாக செயல்படுவதற்கு அவ சியமான பொதுப் போக்குவரத்து, தொலைத்தொடர்புகள் போன்ற பெருமள விலான உள்ளக கட்டுமானங்கள் அவசியமாகின்றன. அத்தோடு மூலதனத் திற்கு அவசியமான உழைப்புச் சக்தியை தொடர்ந்தும் கிடைப்பதை உத்தர வாதப்படுத்துவதும் அவசியமானதாகிறது. அதாவது முதலாளித்துவ உற்பத்தி உறவுகளை மறுஉற்பத்தி செய்தாக வேண்டியுள்ளது. இந்த நோக்கில் கல்வி, சுகாதாரம், வீட்டுவசதிகள் போன்ற பலவற்றை செய்தாக வேண்டியுள்ளது. இதனைவிட தொழிற்துறையின் வளர்ச்சிக்கு அவசியமான தொழில்நுட்ப வளர் ச்சி மற்றும் விஞ்ஞான ஆராய்ச்சிகள் என்பவை பெருமளவு செலவு கூடிய செயற்பாடுகள் ஆகும் இவற்றை தனித்தனியே முதலாளிகள் தாமாக செய்து கொள்வது சாத்தியமற்றது. இந்த பணியை அரசினால் உருவாக்கப்படும் பல்க லைக்கழகங்களும், தொழில்நுட்ப கல்லூரிகளும் செய்கின்றன. இவற்றை அரசே முன்னின்று செய்வதனால் முதலாளித்துவ உற்பத்திமுறைமை செயற்ப டுவதற்கு அவசியமான பௌதீக நிலைமைகளை உருவாக்கிக் கொடுக்கிறது. முன்னர் நிலப்பிரபுத்துவ காலகட்டத்தில் இருந்தது போன்று நாடானது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சிற்றரசுகளாக பிரிந்து கிடப்பதானது மூலவளங்கள், சந்தை, மற்றும் தொழிலா ளர்களது நகர்வு போன்றவற்றிற்கு பெரும் தடையாக இருக்கிறது. இதனை ஈடு செய்யும் விதத்தில் நாட்டின் பல்வேறு பிரதேசங்களையும் ஒன்றிணைத்து, மத்தியப்படுத்தி, பொதுவான மொழி, பொதுவான சந்தை, பொதுவான நாணயம், வங்கிகள், சட்டங்கள் என ஒன்றிணைத்து பொதுவான தேசமாக அரசு உருவாக்குகிறது. அத்தோடு அந்நிய மூலதனங்களது நடவடிக்கைக ளில் இருந்து தனது ஆளுகைக்குட்பட்ட பிரதேசத்தை பாதுகாப்பதன் மூல மாக உள்ளூர் மூலதனத்திற்கு அவசியமான உள்ளூர் சந்தையை அந்நிய மூலதனங்களின் அத்துமீறல்களில் இருந்து பாதுகாக்கிறது. தேவைப்படும் போது நாடு கடந்து போய் ஏனைய நாடுகளை கைப்பற்றுவதன் மூலமாகவும் கூட கொலனிகளை உருவாக்கி உள்ளூர் மூலதனத்தின் தடையற்ற வளர்ச் சிக்கு அவசியமான அனைத்தையும் செய்கிறது.

## வர்க்கமும் அரசும்

அடுத்ததாக நாம் முதலாளித்துவ அரசிற்காக முதலாளிவர்க்கம் எவற்றை செய்கிறது என்று பார்ப்போம். முதலில் அரசு என்பது ஒரு பெரிய நிறுவனம். இதற்கென தனியான வருமானம் பெற முக்கியமான வழிமுறைகள் என்று எது வும் இருப்பதில்லை. ஆனால் பல இலட்சக்கணக்கான ஊழியர்களைக் கொண்ட ஒரு பெரிய அரசியந்திரத்தைக் கொண்டுள்ளது. அதிகார வர்க்கம், படைகள், காவல்துறை, நீதிமன்றம், சிறைச்சாலை போன்றவை அரச நிதிகளில் பெரும ளவை பயன்படுத்திவிடக் கூடியவை. அத்தோடு சமூகத்திற்கு அவசியமான கல்வி, மருத்துவம், சட்டம் - ஒழுங்கு என்று பல்வேறு பணிகளை, பெரும்பா லான சந்தர்ப்பங்களில் இலாப நோக்கற்று செய்ய நேர்கிறது. இப்படிப்பட்ட அத்தனை கடமைகளையும் முறைப்படி செய்வதற்கு அரசிற்கு பெருமளவில் பணம் தேவைப்படுகிறது. இதனை முக்கியமாக வரிவிதிப்புகளின் மூலமாகவே அரசானது பெறுகிறது. மக்களில் பெருந்தொகையானோர் சாதாரண உழை க்கும் மக்களாக இருக்கையில் இவர்கள் மீது விதிக்கப்படும் வரிகள் இந்த பாரிய தேவைகளை நிறைவு செய்துவிட மாட்டாது. அதனால் மூலதனத்தின் மீது ஒரு குறிப்பிட்ட அளவில் பெரிய வரிவிதிப்பது தவிர்க்க முடியாததாகிறது. இந்த வரியானது தொழிலாளர்களிடம் இருந்து முதலாளிகள் அபகரித்த உபரி மதிப்பின் ஒரு பகுதியே என்பதும், மூலதனத்திற்காக அரசு செய்யும் பல்வேறு பணிகளுக்கான நியாயமான கொடுப்பனவாக இவை கருதப்படலாம் என்ற போதிலும் கூட, இதனை கொடுப்பதில் முதலாளிகளுக்கு நாட்டம் கிடையாது. இதனை பலத்த முணுமுணுப்புடனேயே செய்கிறது. முடிந்தபோது இதனை குறைத்துக் கொள்ள தன்னாலான அனைத்தையும் செய்கிறது. அத்துடன் அரசானது தனது வரவு செலவை திட்டமிடும் போது, அடுத்த வருட செலவி ற்கு அவசியமான அத்தனை பணத்தையும் கையில் வைத்துக் கொண்டு திட்டமிடுவது கிடையாது. வரிப்பணமானது வருட இறுதியிலேயே கிடைக்கும். அதுவரையில் தேவைப்படும் தொகையை யாரிடமாவது கடனாக பெற்றாக வேண்டியுள்ளது. இதற்காக முதலாளிகளிடமே அரசானது கையேந்துகிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இந்த நோக்கில் அரசானது அரச சேமிப்பு முறிகளை (State Bonds) விற்ப னைக்கு விடுகிறது. இதனை வாங்கித்தான் ஆக வேண்டும் என்று யாரையும் நிர்ப்பந்தம் செய்யும் உரிமை அரசிற்கு கிடையாது. இதனை முதலாளிகள் தாமாக முன்வந்து வாங்குவதானால் அது அரசுடன் கொண்டுள்ள நல்லுறுவின் மூலமாக மாத்திரமே சாத்தியமாகும். இவற்றைவிட தாம் அதிருப்தியுறும் பட்சத்தில் தமது மூலதனமிடலை தற்காலிகமாக வேறு நாடுகளுக்கு நகர்த்து வதனால் அந்த நாட்டின் பொருளாதாரத்தில் கணிசமான சலசலப்பை முதலா ளிகள் இலகுவாக ஏற்படுத்திவிட முடியும். இவற்றைவிட அரசின் கொள்கை வகுப்பதுடன் தொடர்புடைய பல்வேறு வழிகாட்டுதல்களை தனது சிந்தனை மையங்கள் (Think Tank) மூலமாக வழங்கி வழிகாட்டுகிறது. இப்படியாக முதலாளித்துவ அரசானது மூலதனத்தின் நலன்களுக்கு சாதகமாக செயற்ப டுவதை முதலாளிவர்க்கமானது உத்தரவாதப்படுத்திக் கொள்கிறது.

முதலாளித்துவ அரசானது மூலதனத்தின் நலன்களை திருப்திப்படுத்துவது டன் நின்றுவிட முடியாது. மாறாக நாட்டில் பெருந்தொகையாக உள்ள உழை க்கும் மக்களை சமரசம் செய்தும் ஆகவேண்டியுள்ளது. அத்துடன் அனைவரு க்குமான வாக்கெடுப்பு நடைமுறையில் உள்ள ஒரு நாட்டில் இது அறவே தவிர்க்க முடியாததாகிறது. இதுவொன்றும் அரசின் நல்லெண்ணங்களில் இரு ந்து பிறக்கும் ஒரு செயற்பாடல்ல. மாறாக, தொழிலாளர் வர்க்கம் நடத்தும் வர்க்க போராட்டத்தின் விளைவாகவும், மூலதனத்தின் நீண்டகால நலன்கள் பற்றிய அக்கறைகள் என்பதிலிருந்தும் பிறப்பதாகும். தொழிற்துறை முதலா ளித்துவத்தின் ஆரம்ப கட்டத்தில் தொழிலாளர்களது வாழ்க்கை நிலைமைகள் மிகவும் சகிக்கவொண்ணாததாக இருந்தது. இதனை ‘இங்கிலாந்தில் தொழிலாளர் வர்க்கத்தின் நிலைமை’ எனும் நூலில் ஏங்கெல்ஸ் தெளிவாக படம் பிடித்துக் காட்டுகிறார். பதினாறு மணிநேர வேலை, மிகவும் குறைந்த ஊதியம், சிறுவர்களை வேலையில் ஈடுபடுத்துவது, போதிய உணவு மற்றும் இருப்பிட, கழிப்பிட வசதியின்மை போன்றவை எங்கும் விரிவாக காணப்பட்டன. கடுமையான நோய்கள், தொற்று நோய்கள், இளவயதில் அகால மரணம், சிசு மரணம் போன்றவை எங்கும் பரவி பாட்டாளி வர்க்கத்தை வாட்டியெடுத்தது. இதனை எதிர்த்து தொழிலாளர்கள் போரடலானார்கள். அத்துடன் மருத்து வர்கள் மற்றும் சமூகத்தில் உள்ள மனிதாபிமானம் படைத்த பலரும் பாராளு மன்றத்திற்கு மனுக்களை வழங்கி இது தொடர்பாக பொது விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கைகளை எழுப்பினார்கள். பிரித்தானிய பாராளுமன்றத்தில் இது தொடர்பான விவாதங்களும் நடந்து விசாரணை குழுக்கள் அமைக்கப்பட்டு அவற்றின் அறிக்கைகளும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டு விவாதிக்கப்பட்டன. இவற்றின் விளைவாக தொழிலாளர் வாழ்க்கை நிலைமைகள் சீர்படுத்தும் பல சட்டங்களும் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டன.

இப்படியாக முதலாளித்துவ அரசுகள் தொழிலாளர் நலன்கள் தொடர்பாக தலையீடு செய்வதற்கு பல காரணங்கள் இருக்கின்றன. இவற்றில் முதலாவதும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தலையானதும் தொழிலாளர் வர்க்கத்தின் வர்க்க போராட்டத்தின் அழுத்த ம்தான் என்பதை குறிப்பிட வேண்டும். அடுத்ததாக இன்னும் சில விடயங்கள் முக்கியத்துவம் பெறுகின்றன. தனிப்பட்ட முதலாளிகள் தமது உடனடியானதும், நேரடியானதும் இலாபம் கருதிச் செயற்படுகிறார்கள். அவர்கள் தொழிலா ளர்களை மிக உயர்ந்த பட்சம் சுரண்டுவதனால் பெறக் கூடிய இலாபம் பற்றி மட்டுமே சிந்திக்கிறார்கள். ஆனால் முதலாளித்துவ அரசானது ஒட்டுமொத்த முதலாளித்துவ வர்க்கத்தின் சார்பில் முதலாளித்துவ உற்பத்தி முறையின் நீண்டகால நலன்கள் பற்றி சிந்தித்து செயற்பட்டாக வேண்டியுள்ளது. தொழி லாளர் வர்க்கத்தை மிகவும் மோசமான வாழ்க்கை நிலைமைகளில் வைத்திரு ப்பதானது நீண்டகாலத்தில் உழைப்புச் சக்தியை தொடர்ச்சியாக பெறுவதில் பெருத்த நெருக்கடிகளை உருவாக்கும். இதனால் முதலாளித்துவத்தின் நீண்ட கால நலனானது, அதாவது முதலாளித்துவத்தின் மறுஉற்பத்தியானது தொழி லாளர் வர்க்கத்தின் வாழ்க்கைத்தரமானது சகிக்கமுடியாதபடி செல்லாமல் பார்த்துக் கொள்வதிலும், அவர்கள் நீண்டகாலமாக உழைக்கக் கூடியவர்க ளாக இருப்பதிலும் தங்கியுள்ளது. அத்துடன் தொடர்ந்துவரும் தொழில்நுட்ப வளர்ச்சியுடன் ஈடுகொடுக்கும் வகையில் அடுத்த தலைமுறை தொழிலாளர்கள் முறையாக பயிற்றெடுக்கப்பட வேண்டியதன் அவசியத்தையும் முதலாளித்துவ அரசானது உணர்கிறது. இதனால் குறைந்தபட்ச ஊதியம், உயர்ந்தபட்ச வேலை நேரத்திற்கான சட்டங்கள் போன்றவற்றை கொண்டு வருகிறது. அத்தோடு தொழிற்சாலை பாதுகாப்பு சட்டங்கள், சிறுவர்களை வேலைக்கு அமர்த்துவது தொடர்பான சட்டங்கள், தொழிலாளரது காப்புறுதி, ஓய்வூதியம், பெண்களுக்கான மகப்பேற்று விடுமுறைகள் போன்ற பலவற்றை அரசு செய் தாக வேண்டியுள்ளது. இவற்றில் பலவற்றை செய்வதில் முதலாளி வர்க்கத்தின் கணிசமான பிரிவினருக்கு உடன்பாடு கிடையாது என்ற போதிலும், முதலா ளித்துவ உற்பத்திமுறையின் நீண்டகால நலன்கள் மற்றும் மூலதனத்தின் மறு உற்பத்தி கருதியே அரசு இதனை செய்கிறது. முதலாளித்து வர்க்கத்தில் உள்ள அறிவொளி பெற்ற, ஜனநாயக கூறுகள் இதனை புரிந்து ஏற்றுக் கொள்ளவும் செய்கின்றன.

தொழிலாளரது குடியிருப்பு மற்றும் கழிப்பிட வசதிகள் போன்ற பிரச்ச னைகள் வெறுமனே தொழிலாள வர்க்கம் தொடர்பான பிரச்சனையாக மாத்தி ரம் அமைந்துவிடவில்லை. இப்படிப்பட்ட மோசமான சுகாதார நிலைமைகள் அடிக்கடி பலவிதமான தொற்றுநோய்களை உருவாக்கிவிட்டன. அதுவும் நுண் ணுயிர்க்கொல்லிகள் மற்றும் நோய்த்தடுப்பு மருந்துகள் கண்டுபிடிக்கப்படாத, மருத்துவ வளர்ச்சி மிகவும் குறைந்த நிலைமையில் இப்படியாக தோன்றும் தொற்று நோய்கள் வெறுமனே தொழிலாளர் வர்க்கத்துடன் நின்றுவிடும் என்ப தற்கு எந்தவிதமான உத்தரவாதமும் வழங்கப்பட முடியவில்லை. ஆதலால் முதலாளிகள் தமது சொந்த பாதுகாப்பு குறித்தாவது தொழிலாளர் வர்க்க த்தின் குடியிருப்பு மற்றும் கழிப்பறை வசதிகள் பற்றி கவனம் செலுத்தியாக வேண்டியேற்பட்டது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இவற்றைவிட தொழில்நுட்பம் வளரும் போது கூடவே உழைப்பின் உற்பத்தித் திறன் கூடுகிறது. அத்தோடு மக்கள் தொகுதியில் பெரும்பான்மையினரை ஒட்டாண்டியாக வைத்துக் கொண்டு அபரிமிதமாக உற்பத்தி செய்யும் பொருட்களை யாருக்கு விற்பது என்ற பிரச்சனையும் எழுகிறது. இத்துடன் தொழிலாளர்களது போராட்டங்களும் சேரவே அது மேலும் தொழிலாளரது வாழ்க்கைத் தரத்தை இன்னும் மேம்படுத்த காரணமாக அமைகிறது. இவற்றைவிட முதன்மையான முதலாளித்துவ நாடுகள் தமது கொலனிகள் மற்றும் ஏனைய வளர்ச்சி குன்றிய நாடுகளை சுரண்டி உபரியை தமது நாட்டிற்கு கொண்டுவருவது தொடரும் நிலையில் இப்படி கொண்டுவரப்பட்ட உபரியின் ஒரு பகுதியை தமது தொழிலாளர் வர்க்கத்துடன் பகிர்ந்து கொள்ளவும் நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். இதனால் வளர்ந்த முதலாளித்துவ நாடுகளில் தொழிலாளர் வர்க்கத்தின் வாழ்க்கை நிலைமைகள் குறிப்பிடத்தக்க அளவுக்கு முன்னேற்றம் அடைகிறது. சொந்தமான வீடு, வாகனங்கள், பெருமளவிலான நுகர்பொருட்கள், சம்பளத்துடன் கூடிய விடுமுறை, வேலைநேரம் வாரத்திற்கு முப்பத்தியாறு மணிநேரமாக குறைப்பது போன்ற பல உரிமைகளை தொழிலாளர்கள் வென்றெடுக்கிறார்கள். இப்படியாக இந்த நாடுகளில் உள்ள தொழிலாளர் வர்க்கத்தின் வாழ்க்கை நிலைமையானது, ஏங்கெல்ஸ் குறிப்பிட்ட ஆரம்பகால வாழ்க்கை நிலைமைகளுடன் ஒப்பிடுகையில் மிகவும் கணிசமானளவு விருத்தியுற்றதாக இருக்கின்றன. இப்படிப்பட்ட செயலானது தமது சொந்த நாடுகளில் உள்ள தொழிலாளர் வர்க்கத்தை அமைதிப்படுத்துவதில் அதிகம் பங்களிப்பு செய்கின்றன. இது எப்படியிருப்பினும் இந்த வெற்றிகள் எதுவும் தொழிலாளர் வர்க்கத்தைப் பொறுத்தவரையில் நிலையான வெற்றிகளாக அமைவதில்லை. உழைப்பை மூலதனம் சுரண்டும் நிலைமை நீடிக்கும் வரையில் மூலதனத்திற்கும் உழைப்பிற்கான முரண்பாடும், வர்க்க போராட்டமும் தொடரவே செய்கிறது. இப்போது இது அரசின் மட்டத்தில் நடக்கிறது. போராடும் வர்க்கங்களில் எது பலமாக இருக்கிறதோ, அது தனக்கு சாதகமாக இந்த சமநிலையை நகர்த்த முனைகிறது. இதனை எதிர்த்து மற்றையது போராடுகிறது. உதாரணமாக, பொருளாதார நிலைமைகள் சாதகமாக இருக்கும் போது, தொழிலாளர் வர்க்கம் பலமாக இருக்கும் போது தொழிலாளர்கள் தமது போராட்டங்கள் மூலமாக கணிசமாக உரிமைகளை, வாழ்க்கை நிலையை மேம்படுத்த அவசியமான தேவைகளை போராடிப் பெற்றுக் கொள்கிறார்கள். ஆனால் பொருளாதார நிலைமைகள் தேக்கமடைந்து, தொழில் உத்தரவாதமற்றுப் போகும் போது, உலகளாவிய அளவில் வலது சாரி அலை வீசும் போது முதலாளி வர்க்கமானது முன்பு தாம் கொடுக்க நிர்ப்பந்திக்கப்பட்டவற்றை மீளப்பெற முயல்கிறது. இப்படியாக அரசு என்பது வர்க்க போராட்டத்தின் ஒரு கலனாக மாறுகிறது. இன்று மேற்கு நாடுகளில் நடைபெறும் தொழிலாள வர்க்கத்திற்கு எதிரான வெட்டுகளும், பெரும் முதலாளித்துவ நிறுவனங்களுக்கு அரசுகள் வழங்கும் சலுகைகளும் இந்த போராட்டம் தொழிலாளர் வர்க்கத்திற்கு பாதகமாகவும், மூலதனத்திற்கு சாதகமாகவும் நகர்வதன் வெளிப்பாடே அன்றி வேறல்ல. அரசிற்கு நிதி நெருக்கடிகள் தோன்றும் போது யாரிடம் வரியை அதிகரிப்பது அல்லது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



குறைப்பது, யாருடைய சேவைகளை குறைப்பது என்பதில் இந்த வர்க்க போராட்டமானது அன்றாடம் நடந்துகொண்டு இருக்கிறது (Rick Wolff).

## 7

அரசியல் கட்சி என்பது ஒரு வர்க்கத்தின் அல்லது சமூகப் பிரிவின் அரசியல் பிரக்ஞையின் உயர்ந்ததோர் வெளிப்பாடாகும். நிலவுடமை சமூகத்தில் புதிதாக முதலாளித்துவ சக்திகள் அரங்கிற்கு வந்து பலம்பெறத் தொடங்குகையில் தமது அரசியல் பிரதிநிதித்துவம் பற்றி குரலெழுப்பத் தொடங்குவதுடனேயே நவீன அர்த்தத்திலான அரசியல் கட்சிகள் தோற்றம் பெறுகின்றன. ஆரம்ப த்தில் இவை மன்னரை ஆதரிக்கும் நிலப்பிரபுத்துவ சக்திகளையும், புதிய வர்த்தக முதலாளித்துவ பிரிவுகளையும் பிரதிநிதித்துவப் படுத்துபவையாக தோற்றம் பெற்றன. காலப்போக்கில் முதலாளித்தவ வர்க்கத்தினுள் தோன்றிய அறிவொளி கொண்ட ஜனநாயக பிரிவினரும், பிற்போக்கு நிலைப்பாடு கொண் டவர்களுக்கும் இடையிலான வேறுபாடுகள் இந்த கட்சி அமைப்புக்களையும் பாதித்தன. முன்னைய மன்னர் ஆதரவு கட்சிகள் பிற்போக்கு முதலாளிப் பிரிவி னருடன் சேர்ந்து தீவிர வலதுசாரி பழமைவாத கட்சிகளை தோற்றுவித்துக் கொண்டன. அவ்வாறே முதலாளி வர்க்கத்தின் ஜனநாயகக்கூறுகள் மத்தியதர வர்க்கங்கள் போன்றவற்றுடன் இணைந்து லிபரல் கட்சிகளாக உருப்பெற்றன. காலப்போக்கில் விழிப்புணர்வு பெற்று வந்த தொழிலாளர்கள் சமூக ஜனநாயக கட்சிகளாக உருப்பெற்றார்கள். தொடர்ந்து வந்த காலத்தில் சமூக ஜனநாயக கட்சியின் தலைவர்கள் தமது புரட்சிகர நிலைப்பாடுகளில் இருந்து விலகிச் செல்வதாக உணரப்பட்ட போது, புரட்சியின்பால் தீவிர ஈடுபாடுகொண்ட பிரிவி னர் தம்மை கொம்யூனிஸ்ட்டு கட்சிகளாக வடிவமைத்துக் கொண்டார்கள். அவ் வாறே ஆரம்பத்தில் 'பிரமுகர் ஆட்சியையே' கருத்தில் கொண்டு உருவாக்க ப்பட்ட இந்த பாராளுமன்ற முறைமையானது, தொடர்ச்சியாக ஒடுக்கப்பட்ட மக்கள் பிரிவினரின் நடத்திய போராட்டங்களினால்தான் இன்றுள்ள சர்வஜன வாக்குரிமை என்பதன் அடிப்படையில் தமது பாராளுமன்ற உறுப்பினர்களை தேர்ந்தெடுக்கும் தேர்தல் முறைகளுக்கு வழிவகுத்தன.

முதலாளித்துவ சமூகத்தில் அரசியல் அதிகாரம் செயற்படும் விதமானது, நிலவுடமை சமுதாயத்தில் செயற்பட்டதில் இருந்தும் வேறுபட்டது. நிலப்பிரபு த்துவ சமூகத்தில் சுரண்டும் வர்க்கம் தானே நேரடியாக ஆட்சிபீடத்தில் அமர்ந்து கொண்டு தானே எல்லா விடயங்களிலும் நேரடியாக தலையிட்டு முடிவுகள் எடுப்பதாக இருந்த நிலைமை இங்கு காணப்படுவதில்லை. மாறாக அதிகாரத்தை "பரவலாக்கம் செய்கிறது". அதாவது அரசானது, தமக்குள் முட்டிமோதும் பல்வேறு முதலாளித்துவ பிரிவுகளினுள் ஏதாவது ஒன்றிற்கு சார்பாக இராமல், "நடுநிலையாக" இருக்க வேண்டும் என்பதில் அதிகம் அக்கறைப்படுகிறது. இதனால் தனியான அதிகார வர்க்கத்தைக் கொண்டு ஒரு நிர்வாக இயந்திரத்தை கட்டமைக்கிறது. கூடவே தனது சொத்துரிமை களை பாதுகாப்பதை முதன்மையான நோக்கமாக கொண்டு அரசியல்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அமைப்பு மற்றும் சட்டங்களை உருவாக்கிக் கொள்கிறது. இவற்றை அமுல்படுத்துவதற்காகவே நீதித்துறை, இராணுவம், பொலிஸ் மற்றும் சிறைச் சாலை போன்ற அமைப்புக்களை உருவாக்குகிறது. இவற்றிற்கும் மேலாக பாராளுமன்ற அமைப்புமுறையானது மக்கள் தாமே நேரடியாக தேர்ந்தெடுக்கும் பிரதிநிதிகள் மூலமாக ஆட்சி நடத்துவதான ஒரு தோற்றப்பாட்டை உருவாக்குவதில் மிகவும் பயன்மிக்க ஏற்பாடாக அமைகிறது. இந்த பாத்திரத்தை அரசியல் கட்சிகள் சிறப்பாக ஆற்றுகின்றன. ஆகவே இங்கு ஆளும் வர்க்கமானது இங்கு தானே நேரடியாக இல்லாமல் தனது பிரதிநிதிகள் மூலமாக ஆட்சியை நடத்துகிறது.

அப்படியானால் **சுரண்டும் வர்க்கங்கள் எவ்வாறு இந்த அரசியல் கட்சிகளை கட்டுப்படுத்துகின்றன?** என்ற கேள்வி எழுவது தவிர்க்க முடியாததாகிறது. முதலாவதாக, இந்த கட்சிகள் வெற்றிகரமாக செயற்படுவதற்கு பெருமளவிலான நிதிவளங்கள் தேவைப்படுகின்றன. தமது அன்றாட கட்சி நடவடிக்கைகளை நடத்துவதற்கு பல முழுநேர ஊழியர்களை கொண்டிருந்தாக வேண்டியுள்ளது. அதனைவிட மாநாடுகள், கூட்டங்கள் என்று பல்வேறு நிகழ்வுகளும் மிகவும் செலவு மிக்கவையாக உள்ளன. அத்தோடு தேர்தல் நடைபெறும் போது அதற்கான பிரச்சாரங்கள், பொதுச் கூட்டங்கள், விளம்பர ஏற்பாடுகள்... இத்தியாதி. இத்தியாதி மிகப் பெரும் செலவான செயற்பாடுகளாக இவை அமைந்து விடுகின்றன. இவற்றிற்காக தேவைப்படும் பெருமளவு நிதியை சுரண்டும் வர்க்கங்களே தமக்கு ஆதரவான கட்சிகளுக்கு - சமயத்தில் இரண்டு முக்கிய எதிரெதிர் கட்சிகளுக்குமே - வழங்குகின்றன. ஆகவே தேர்தலில் வெற்றி பெறுவது என்பது இந்த சுரண்டும் வர்க்கங்களது நிதி ஆதரவை பெற்ற கட்சிகளினால் மாத்திரமே சாத்தியமாகிறது. ஆனால் இந்த சுரண்டும் வர்க்கங்கள் ஒன்றும் கொடை வழங்கும் தாபனங்கள் அல்ல. அவை தமக்கு சாதகமான நிலைப்பாடுகளை கொண்டுள்ள கட்சிகளுக்கு மட்டுமே ஆதரவை வழங்குகின்றன. இந்தவிதத்தில் முதன்மையான, ஆளும் மற்றும் எதிர் கட்சிகளின் கொள்கைகள் தமது பொருளாதார நலன்களுக்கு எதிரானவையாக அமையாதவாறு இருப்பதை உத்தரவாதப்படுத்திக் கொள்கின்றன.

அடுத்ததாக இந்த கட்சிகளது கொள்கை வகுப்பது எனும் பிரச்சனை வருகிறது. இந்த கட்சிகளில் தலைவர்களாக அறியப்பட்டவர்கள் நாட்டின், சர்வதேச விவகாரங்களின் அத்தனை வளைவு சுழிவுகளையும் அத்துப்படியாக கற்றுத் தேர்ந்த நிபுணர்கள் அல்லர். இவர்கள் ஒருவிதத்தில் வெறுமனே மேடை நடிகர்களே. இந்த விவகாரங்கள் தொடர்பாக ஆழமாக கற்றறிந்து இந்த அரசியல் கட்சிகளுக்கு வழிகாட்டுவதற்கான அமைப்புக்கள் - **சிந்தனை மையங்கள்** (Think Tanks) என்பவை - செயற்படுகின்றன. இவை சுதந்திரமான அமைப்புக்களாக காட்டப்பட்டாலும் கூட இவற்றிற்கான நிதியாதாரங்களை வழங்குவதும் இதே முதலாளித்துவ நிறுவனங்களேயாகும். இந்த சிறப்பான சிந்தனை மையங்கள் காலக்கிரமமாக நாட்டிலும், சர்வதேச அளவிலும் நடைபெறும் முக்கியமான நிகழ்வுகளை முதலாளித்துவ நிலைப்பாட்டில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இருந்து முறைப்படி பரிசீலனை செய்து தமது ஆய்வுரைகளை, விதந்துரைகளை அவ்வப்போது கட்சியின் முக்கியமான கொள்கை வகுப்பாளர்களுக்கு அறிவுறுத்துகின்றன. பின்பு இதே நபர்கள் அரசியல், பொருளாதார, இராணுவ ஆய்வாளர்கள், நிபுணர்கள் என்ற பெயரில் இதே முதலாளித்துவ சக்திகளினால் கட்டுப்படுத்தப்படும் தொடர்பு சாதனங்களின் ஊடாக தினந்தோறும் வந்து "நிபுணத்துவ கண்ணோட்டங்களை" முன்வைக்கிறார்கள். இவை அடுத்த மட்டங்களுக்கு இன்னமும் விரிவாக இந்த தொடர்பு சாதனங்களினால் கொண்டு செல்லப்படுகையில், இது ஒருவித சித்தாந்த மேலாண்மையை மக்கள் மத்தியில் உருவாக்க ஏதுவாகிறது. இப்படியாக இந்த சிந்தனை மையங்கள் முதலாளித்துவ கட்சிகளை வழிநடத்துவதுடன், இவர்களது வழி நடத்துதல்களை ஏற்கக் கூடியவர்களாக மக்களையும் வேறு நாளாந்தம் தயார்படுத்தி வருகிறது. இப்படியாக முதலாளித்துவ வர்க்கமானது தனது சித்தாந்த மேலாண்மையை மிகவும் திட்டமிட்ட முறையிலும், தொடர்ச்சியாகவும் செய்து வருகிறது. இப்படிப்பட்ட நிலையில், வேறு கூர்மையான பிரக்ஞையை செயலூக்கமுடன் வளர்த்துக் கொள்ளாத தனிநபர்கள் இந்த ஆளும் வர்க்க சித்தாந்தத்தை தமது கருத்தாக வரித்துக் கொள்வதைத் தவிர வேறு மார்க்கம் இருப்பதில்லை. இவர்களை தேர்தலில் வாக்களிக்க வாய்ப்பளித்தால் இவர்கள் தாமே முன்வந்து ஏதாவது ஒரு முதலாளித்துவகட்சிக்கு எவ்வித தயக்கமும் இன்றி வாக்களித்துவிட்டு வருவார்கள். இதற்கு வேறு எந்த விதமான நிர்ப்பந்தங்களும் தேவைப்பட மாட்டாது. ஆதலால் இப்படிப் பட்ட அரசியல் முடிவுகளை நோக்கி மக்களை வரச் செய்வதில் இந்த **சித்தாந்த மேலாண்மை** என்பது முக்கியமானது. இதனை நாட்டிலுள்ள, உலகளாவிய அளவில் உள்ள பல்கலைக்கழகங்கள் முதலாளித்துவ புத்திஜீவிகளை தோற்றுவிப்பதன் மூலமாக செய்து வருகிறது. இந்த பல்கலைக் கழகங்களின் நுழைவுத்தகுதி, பாடத்திட்டங்கள், பேராசிரியர்கள், வழங்கப்படும் புலமைப் பரிசில்கள் போன்ற அனைத்துமே இப்படிப்பட்ட ஒரு சித்தாந்த மேலாண்மையை நோக்கமாகக் கொண்டே நடைபெறுகின்றன.

தேர்தலில் வெற்றி பெறும் அரசியல்வாதிகள் வெறுமனே அரசாங்கம் கொடுக்கும் ஊதியத்தினால் தனது சட்டமன்ற கடமைகளை ஆற்றிவிட முடிவதில்லை. ஒரு வளர்ச்சியடைந்த முதலாளித்துவ நாட்டின் சட்டசபையில் வாரம் தோறும் பல சட்டங்கள் வாதிக்கப்படுகின்றன. அவை ஒவ்வொன்றும் பல ஆயிரக்கணக்கான பக்கங்களைக் கொண்ட, மிகவும் கடினமான சட்டத்துறைசார்ந்த மொழிநடையில் எழுதப்பட்டிருக்கும். இத்தனை அறிக்கைகளையும் படிப்பது, அவை தொடர்பாக தனது கருத்துக்களை உரைகளாக எழுதிக் கொள்வது போன்ற அத்தனையும் ஒரு சாதாரண அரசியல்வாதியின் சக்திக்கு மீறிய செயல்களாகவே அமைகின்றன. இந்த பணிகளில் உதவியாக லொபிக்கள் எனப்படும் பல்வேறு சக்திகளது நலன்களை காக்கும்முகமாக உருவாக்கப்பட்ட குழுக்கள் செயற்படுகின்றன. இவை இந்த அரசியல்வாதிகளது இப்படிப்பட்ட தயாரிப்பு பணிகளை செய்து கொடுத்து, அவரது சட்டமன்ற பணிகளை செய்வதற்கு துணையாக பணியாற்றுகின்றன. லொபிக்கள் என்பவை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



முதலாளித்துவ மற்றும் குறிப்பான நலன்களை உடைய அமைப்புக்களது நிதி உதவிகளில் செயற்படும் அமைப்புக்களாகும். இந்த அமைப்புக்களில் செயற் படும் நபர்கள் இதே முதலாளித்துவ நிபுணர்களேயாவர். ஆகவே தேர்தலில் வெற்றி பெற்ற பின்னரும் கூட இந்த அரசியல்வாதிகள் குறிப்பிட்ட நலன்களை உடைய சக்திகளினாலேயே அவர்களது அன்றாட பணிகளில் வழிநடத்தப்படு கிறார்கள். தம்மிடம் கடவுச்சீட்டு கிடையாது எனக் கூறுவதில் பெருமைப்படும் அமெரிக்க கொங்கிரஸ் உறுப்பினர் ஒருவர், முறையான உயர்கல்வியையோ, அல்லது இராணுவப் பயிற்சியையோ முடிக்காத ஒருவர் மூன்றாம் உலக நாடொன்றில் குண்டு வீசுவதாக முடிவெடுப்பதற்கு ஆதரவாகவோ, அல்லது எதிராகவோ வாக்களிப்பதில் எத்தனை அபத்தம் இருக்க முடியும் என்பது புரிந்து கொள்ளக் கூடியதே.

ஆகவே ஆளும் வர்க்கத்திற்கும், முதலாளித்துவ கட்சிகளுக்கும், அவை செயற்படும் ஜனநாயக தளத்திற்கும் இடையிலான உறவானது பன்முகதன்மை கொண்ட வலைப்பின்னல்களினால் மிகவும் நெருக்கமாக பிணைக்கப்பட்டு ள்ளது. இதன் மூலமாக முதலாளித்துவ வர்க்கமானது தனது நலன்கள், மக்கள் திரளது பங்குபற்றலுடன் கூடிய இந்த ஜனநாயக நடைமுறைகளின் ஊடாக காக்கப்படுவதை உத்தரவாதப்படுத்திக் கொள்ள முடிகிறது. இந்த சிக்கலான பொறிமுறைகள் என்பவை புரட்சிகர சக்திகளது, ஆழமான பரிசீலனைக்குள்ளாக வேண்டியவையாகும். அத்தோடு இந்த ஆதிக்க சக்திக ளது சித்தாந்தத்திற்கு மாறாக ஒரு புரட்சிகர சித்தாந்த மேலாண்மையை நிறுவுவது எவ்வாறு என்பது இன்னமும் முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சனை ஆகிறது.

## 8

மேலே குறிப்பிட்டுள்ளவாறு வளர்ச்சியுற்ற முதலாளித்துவ சமூகத்தில் காண ப்படும் வர்க்கம், அரசு, அதிகாரவர்க்கம், அரசியல் கட்சிகள் போன்றவற்றிற்கி டையிலான உறவுகள் பற்றிய ஒரு படத்துடன் மூன்றாம் உலக நாடுகளது அரசியலை அணுகும் ஒருவருக்கு மிகவும் வித்தியாசமான ஒரு காட்சிப்படிவம் காத்திருக்கும். மூன்றாம் உலக நாடுகளில் நாம் வளர்ச்சியடைந்த முதலா ளித்துவ நாடுகளில் காணப்படும் **வர்க்கம் - அரசு - கட்சி - தலைமை** என்பதற்கு முற்றிலும் வேறுபட்ட ஒரு ஒழுங்குமுறையை காணமுடியும். மூன்றாம் உலகநாடுகளில் இந்த உறவானது ஒருவித தலைகீழ் வரிசையில் அமைந்திரு க்கும். கட்சியின் தலைவர்களாக மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த தனிநபர்க ளும், அவர்களை முற்றிலும் சார்ந்திருக்கும் கட்சிகளும், இந்த தலைவரது தோட்டக்காரர்கள் போல செயற்படும் அதிகாரவர்க்கமும், இவர்களை திருப்தி ப்படுத்துவதன் மூலமாக தனது வாய்ப்புக்களை பெருக்க காத்திருக்கும் ஆளும் வர்க்கங்களும் என்றதொரு தோற்றப்பாட்டை நாம் காணமுடியும். வலதுசாரிகள் சர்வவல்லமை கொண்ட ஒரு தலைவரும், அவரது குடும்பத்தி னரும் வரலாற்றை தீர்மானிப்பவர்கள் என்பதான ஒரு தோற்றப்பாட்டை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



உருவாக்க முயன்றுகொண்டிருக்கின்றனர். மாறாக இடதுசாரிகளோ வர்க்கத்தின் முதன்மையான பாத்திரத்தை யாருமே கண்டுகொள்ள மறுப்பதாக குறைபட்டுக் கொள்கின்றனர். அல்லது, இது அரசில் காணப்படும் நிலப் பிரபுத்துவ அம்சமாக சித்தரிக்கின்றனர். இதனை ஒரு **கொலனித்துவதிற்கு பிந்திய ஒரு போக்காக** இவர்கள் இனம் கண்டு, அது தொடர்பான சரியான ஒரு மதிப்பீட்டை உருவாக்கிக் கொள்ள தவறிவிடுகின்றனர்.

இப்போது நாம் மூன்றாம் உலக நாடுகளது அரசு மற்றும் அவற்றின் அரசாங்க முறைகள் பற்றி சற்று விரிவாக பார்த்துச் செல்வோம். மேற்கு நாடுகளில் முதலாளித்துவம் தோன்றியபோது, அந்தந்த சமூகங்களில் இருந்த ஆதிக்க சக்திகள் தொடர்ச்சியாக ஒன்றுடன் ஒன்று அதிகாரத்திற்காக போராட வேண்டியிருந்தது. இந்த போராட்டத்தின் முடிவில் எஞ்சியிருந்த சக்திகள் தமக்கிடையில் ஒரு பொதுவான கருத்திணக்கத்தை எட்டின. இந்த கருத்திணக்கமானது, ஒரு அரசியலமைப்பை வரைவதன் மூலமாக திடப்படுத்தப்பட்டது. இதன் மேல்தான் முதலாளித்துவ ஜனநாயகம், பாராளுமன்றம், அரசியல் கட்சிகள் போன்றவை உருவாக்கப்பட்டு, அவை அனைத்தும் பங்கேற்கக் கூடிய பாராளுமன்ற அரசியல் முறைமை உருவாக்கப்பட்டது.

கொலனித்துவத்தின் கீழ் இப்படிப்பட்ட முதலாளித்துவ ஜனநாயக நடைமுறைகள் மேலிருந்து திணிக்கப்பட்ட போது, மேலே குறிப்பிட்ட பொருளாதார மாற்றங்களோ, அவை முன்னுக்கு கொண்டுவந்துவிட்ட சமூக சக்திகளோ பெரிய அளவில் அரங்கில் காணப்படவில்லை. அப்போதுதான் விழிப்புற்று எழுந்த பல்வேறு சமூகப்பிரிவினரும் தம்மைப்பற்றிய சுய பிரக்ஞை கொள்வதற்கே போதிய கால அவகாசம் அவர்களுக்கு இருக்கவில்லை. பொதுவான விழுமியங்களையும், கருத்திணக்கத்தையும் ஏற்படுத்துவதற்காக பொருளாதார மற்றும் சமூக நிலைமைகள் உருவாகியிருக்கவில்லை. சுதந்திரத்தின் போது இந்த நாட்டின் தலைமைகள் ஒரு புதிய தேசத்தை உருவாக்கும் பொறுப்பையும் ஏற்றுக் கொள்ள வேண்டியிருந்தது. பல்வேறு இன மற்றும் மத சமூகங்களிடையே ஏற்றத்தாழ்வு அற்ற ஒரு சமத்துவமான சமுதாயத்தை கட்டியமைக்கும் பணியை மேற்கொள்ள வேண்டியிருந்தது. மேற்கத்தைய நாடுகளில் முதலாளித்துவ உற்பத்தி உறவுகள் பலப்பட்ட நிலையில் அங்கு தோன்றிய அரசியல் வளர்ச்சிகள் என்பவை அங்குள்ள சமூக நிலைமைகளின் உயிர்த்துடிப்புள்ள வளர்ச்சியாக (Organic Growth) அமைந்திருந்தது. அதாவது அந்த மேற்கு ஐரோப்பிய நாடுகளில் முதலாளித்துவ அரசியல் மாற்றங்கள் என்பவை, அந்த நாட்டில் நடைபெற்ற முதலாளித்துவ பொருளாதார முறைமையின் வளர்ச்சியின் பயனாக உருவாகின. ஆனால் இப்படிப்பட்ட பொருளாதார வளர்ச்சிகள், அது மேலே கொண்டு வரக்கூடிய சமூக சக்திகள், இவற்றினிடையே ஏற்படும் கருத்திணக்கம் போன்ற எதற்குமே கொலனித்துவ ஆட்சியில் வாய்ப்புகள் இருக்கவில்லை. இப்படிப்பட்ட ஒரு நிலைமையிலேயே இந்த முதலாளித்துவ ஜனநாயக அரசியல் அமைப்பு முறையானது, சுதந்திரத்தின் போது இந்த புதிய நாடுகளிடம் மேலிருந்து திணிக்கப்பட்டது. புதிய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நாடுகளில் சுதந்திரத்திற்கு - அல்லது கொலனித்துவத்திற்கு - பின்பு ஆட்சிக்கு வந்த அரசியல் தலைமையானது அந்த நாடுகளில் பொருளாதாரத்தை - அதாவது முதலாளித்துவத்தை - புதிதாக உருவாக்கியாக வேண்டியிருந்தது. மேற்கு நாடுகளில் பொருளாதாரம் மேலோங்கியிருந்த நிலைமைக்குப் பதிலாக இந்த நாடுகளில் அரசியல் என்பதே மேலோங்கியதாக இருந்தது. இந்த அரசே நாட்டிற்கான பொருளாதாரத்தையும் கட்டமைக்க வேண்டிய பொறுப்பில் இருந்தது. மூன்றாம் உலக நாடுகளில் சிவில்சமூகம் என்ற ஒன்று மிகவும் பலவீனமானதாக இருந்ததனால், அரசியல் அதிகாரத்தை மட்டுப்படுத்துவது மிகவும் கடினமான காரியமாக இருந்தது. இவை சுதந்திரம் அடைந்த போது இந்த அரசுகளிடம் வரம்பற்ற அதிகாரம் குவிந்திருந்தது. இதனால் இவர்கள் சம்மதத்தை பெறுவது என்பதிலும் பார்க்க பலப்பிரயோகத்தில் நாட்டம் கொண்டவர்களாக ஆளும் வர்க்கங்கள் விளங்கின.

கொலனித்துவ காலத்தில் நாட்டில் இருந்த பல்வேறு இனக்குழுமங்களும், மதப்பிரிவினரும் சுயாதீனமாக செயற்பட அனுமதிக்கப் பட்டிருக்கவில்லை. ஆனால் சுதந்திரத்தின் பின்பு வேகமாக நடைபெற்ற மாற்றங்கள் காரணமாக இந்த சக்திகளிடையே ஒரு முறையான சமநிலையை நிலைநாட்ட முடியவில்லை. அரசியலமைப்பு பற்றிய சிந்தனைகள் இவர்களை அதிகம் பாதிக்கவில்லை. நியாயாதிக்கம் (Legitimacy) என்பது ‘சட்டத்தின்படி நடக்கும் ஆட்சி’ என்பதில் இருந்தல்லாமல், இன்னும் பல மூலங்களில் இருந்து வந்தது. நாட்டை நவீன மயப்படுத்துவது, அபிவிருத்தி என்பவை முதன்மையான கரிசனைக்குரியனவாக மாறிவிடவே, அரசானது தனது கரங்களில் அதிகாரங்களை குவித்துக் கொள்வது எளிதாக நியாயப்படுத்தப்பட்டது. மனித உரிமைகள் என்பவை பின்னே தள்ளப்பட்டன. அரசியல் கட்சிகளின் பாத்திரம் மிகவும் உயர்வாக கருதப்படும் நிலைமை உருவானது. சில நாடுகளில் இக்கட்சிகளின் தலைவர்கள் என்பவர்கள் மன்னரை ஒத்தவராகவும் கருதப்பட்டனர். தலைவரது சிந்தாந்த மேலாண்மையை நிலைநிறுத்தும் வகையில் நாட்டின் அரசியல் அமைப்பும் சட்டங்களும் கூட மாற்றியமைக்கப்பட்டன. இப்படிப்பட்ட தலைவர்களைச் சுற்றி ஒருவித கவர்ச்சி தோன்றத் தொடங்குகிறது.

நாட்டிலுள்ள சந்தையின் பெரும் பகுதியானது அந்நிய குடிவரவாளர்களாலும், வெளிநாட்டவர்களாலும் கட்டுப்படுத்தப்படுவதனால், சந்தையானது அரசியல் தலைவர்களால் கட்டுப்படுத்தப்பட வேண்டிய ஒன்றாக நோக்கப்படுகிறது. இதனால் சுதந்திரமான சந்தை நிலைமை மட்டுப்படுத்தப்பட்டு, அரச வளங்கள் உள்ளூர் பொருளாதார சக்திகளை பலப்படுத்தும் விதத்தில் பயன்படுத்தப்படுகிறது. அரசானது ஆதி மூலதனத் திரட்டலை மேற்கொள்ளும் நிலையில் ஊழலானது எங்கும் நிறைந்திருக்கிறது. அரசியல் தலைவர்களது ஆதரவு தளம் என்பது ஒரு வர்க்கம், அல்லது கட்சி, அதன் வேலைத்திட்டம் என்பதன் அடிப்படையில் அல்லாமல் தனிப்பட்ட தொடர்புகள், செல்வாக்குகள் என்ற அடிப்படையில் நிலவுவதால், ஒவ்வொருவரும் தமது செல்வாக்கு மண்டலங்களை விஸ்தரிக்க முனைவதானது பலருக்கும் ஊழலுக்கான வாய்ப்புகளை திறந்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



விடுவதாக இருக்கிறது. இதனால் வெளிப்படையான தன்மை, பொதுவான கணக்குப் பரிசீலனை முறைமை போன்றவை அனுமதிக்கப்படுவது கிடையாது.

சித்தாந்த மேலாண்மையை நிலை நாட்டத் தவறிய அரசின் எதேச்சாதிகார தன்மை காரணமாக மாற்றுக் கருத்தானது ஆரம்பம் முதலாகவே சகித்துக் கொள்ளப்பட மாட்டாதாக இருந்துவருகிறது. சிவில் சமூகமானது முழுமையாக நசுக்கப்படுகிறது. சிவில் சமுதாயமானது கடுமையாக நசுக்கப்பட்டிருப்பத னால், ஆட்சிக்கான ஒப்புதலானது சம்மதத்தின் வாயிலாக அல்லாமல் பலப்பிர யோகத்தின் வாயிலாக பெறப்பட்டிருப்பதனால், மக்கள் பொதுவாகவே அரசி யல் அரங்கில் இருந்து விலகிக் கொள்கிறார்கள். அரசியல்வாதிகள் நேரடி யாக மூலதனத்தின் ஆதித்திரட்டலில் ஈடுபட்டிருப்பதனாலும், பலமான, ஒழுங்க மைக்கப்பட்ட விவசாய, தொழிலாளர் அமைப்புகள் எதுவும் இல்லாத காரண த்தினாலும் அரசியல்வாதிகள் நேரடியாக தாமே ஆள்வதற்கு தலைப்படுகி றார்கள்.

நாட்டில் வர்க்க உறவுகள் திடப்படாத நிலையில் இருப்பதனாலும், இனப்பிரி வினைகள் காரணமாக ஆளும் வர்க்கம் கூட ஒன்றிணைந்து ஒரு சக்தியாக செயற்பட முடியாது இருப்பதனாலும் ஒரு சர்வாதிகாரமான அரசுத் தலைவரின் தேவை ஏற்படுகிறது. நாட்டில் உள்ள இன வேறுபாடுகள் மற்றும் ஏனைய பிளவுகள் என்பவற்றைக் கடந்து, தேசியத்தில் குறியீடாக நிற்பதன் மூலமாக ஒரு தலைவர் அரசாங்கத்தின் நியாயாதிக்கத்தை நிலைநாட்டிக் கொள்ள முடியும். அப்படிச் செய்வதனால் அவர் இன மற்றும் வர்க்க பிளவுகளைக் கடந்து தேசிய ஒற்றுமையை உருவாக்குவதன் முக்கிய காரணியாக செயற்பட முடியும். ஆனால் தமது சொந்த பொருளாதார பலவீனங்கள், தமது தமது விசுவாசிகள் மூலமாக வளர்த்துவிட்ட இன அடிப்படையிலான அரசியல் என்பன காரணமாக இந்த நிலைப்பாட்டை எடுக்க பலரும் தயங்குவதுண்டு. நாட்டு மக்கள் அனைவருக்கும் தார்மீகரீதியான தலைமையை கொடுக்க முடியாத தன்மை காரணமாக வரம்பற்ற அதிகாரத்தை நோக்கி இவர்கள் நகர் கிறார்கள். விசுவாசிகள் பணத்தை சம்பாதிப்பதை நோக்கமாகக் கொண்டு சூழ்ந்து கொள்கிறார்கள். இது தவிர்க்க முடியாதவாறு கொத்தடிமைத்தனம், சக போட்டியாளருக்கு குழிபறிக்கும் சதிகள், கோஸ்டிவாதம் போன்றவற்றிற்கு இட்டுச் செல்கிறது. பகிரங்கமாக செய்யப்படும் வஞ்சகப் புகழ்ச்சிகள் மூல மாக தலைவரது கடைக் கண்பார்வைக்காக போட்டியிடுவது தொடர்கிறது. அரசுத் தலைவரை சந்திப்பது என்பது நாட்டின் சட்டங்களைவிட முக்கிய த்துவம் பெற்றதாக விளங்குகிறது. தலைவர் என்பவர் சட்டத்திற்கு மேலான வராகிறார். இதற்கு மேல் இவர் அடக்குமுறை மற்றும் அச்சுறுத்தல் மூலமா கவே தனது அதிகாரத்தை தக்க வைத்துக் கொள்கிறார். இந்த நாடுகளில் அரசியல் அமைப்பு என்பதும் சட்டங்கள் என்பதும் அவற்றின் சுதந்திரமான தன்மையை முற்றாக இழந்து விடுகின்றன.

இப்படிப்பட்ட நாடுகளில் அரசியல் என்பது அதிகளவில் தனிநபர்கள்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சார்ந்ததாக ஆகிவிட்டுள்ளது. நாட்டின் சொத்தானது தலைவரது சொத்தில் இருந்து அரிதாகவே பிரித்துப்பார்க்கப்படக் கூடியதாக இருக்கிறது. அதிகார வர்க்கமானது அரசுத் தலைவரின் வீட்டு வேலையாட்கள் போல ஆக்கப்பட்டுவிட்டார்கள். நீதிமன்றத்தை அவமதிப்பது, சிறுமைப்படுத்துவதில் அரசுத் தலைவரே ஈடுபடுகிறார். அரசத் தலைவருக்கு கொடுக்கும் தனிப்பட்ட மனுவானது பல நீதிமன்ற விவாகாரங்களை ஒரு நொடியில் தீர்த்துவிடக் கூடியதாகவும், பிரச்சனைகளுக்கு தீர்வு கொண்டு வருவதாகவும் இருக்கும்.

இந்த வகையில் நாம் இன்று எமது நாடுகளில் காணும் அரசியல் தலைவர்களும், அவர்களது மிகைப்படுத்தப்பட்ட அடாவடித்தனங்களும் ஏதோ தற்செயலானவை அல்ல என்பதும், இது பின்-கொலனித்துவ சமூகங்களின் குறிப்பான பிரச்சனை எனவும் புரிந்து கொள்ளப்பட்டு, இதனை முகம்கொடுப்பதற்கான வழிமுறைகள் பற்றிய விரிவான விவாதங்களும் தேடல்களும் அவசியமானவையாகின்றன. ஆனால் இந்தவகை புரிதலை எட்டுவது என்பது நாம் ஏற்கனவே உருவாக்கிக் கொண்டுள்ள மூடப்பட்ட குறுங்குழுவாத, வறட்டுத்தனமான சிந்தனைகளை விட்டு வெளியே வருவதுடன் திட்டவட்டமான தொடர்பைக் கொண்டுள்ளது. வளர்ச்சியுற்ற முதலாளித்துவ ஜனநாயக அமைப்பு முறைக்கும், எமது நாடுகளில் காணப்படும் பின்-கொலனித்துவ முறைமைக்கும் உள்ள இந்த வேறுபாட்டை நாம் கவனத்தில் கொள்ளாத போது எமது அரசு, வர்க்கம், மற்றும் மூலோபாயம் பற்றிய கணிப்புக்களும் பல பிரச்சனைகளுக்கு முகம் கொடுக்க நேரும்.

## 9

இப்போது நாம் **புரட்சியாளர்களும் பாராளுமன்றமும்** என்ற விடயத்திற்கு நேரடியாகவே வருவோம். மார்க்சியமானது அதன் ஆரம்ப நாட்கள் தொடக்கம் பாராளுமன்றம் தொடர்பாக 'இடது' மற்றும் 'வலது' தீவிரவாத போக்குகளுக்கு எதிராக போராடியே வந்துள்ளது. இடது தீவிரவாதமானது 'அராஜகவாதிகளால்' முன்னெடுக்கப்பட்டது. இதனை மார்க்ஸ் கடுமையாக விமர்சித்தார். அதேவேளை சந்தர்ப்பவாத பிழைப்புவாதிகளால் இந்த வலது பாதை பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டது. இதனை மார்க்சும், ஏங்கெல்சும் 'பாராளுமன்ற பித்து' என்று கேலி செய்தார்கள். இந்த இரண்டு போக்குகளுக்கும் எதிரான போராட்டத்தினூடாகத்தான் மார்சியத்தின் பாராளுமன்றம் தொடர்பான நிலைப்பாடானது வளர்த்தெடுக்கப்பட்டது. ஏங்கெல்சின் மறைவின் பின்னால் எட்வர்ட் பெர்சன்ரைன் (Eduard Bernstein) என்பவரால் 'பரிணாம சோசலிசம்' (Evolutionary Socialism – 1899) என்ற நூல் வெளியிடப்பட்டது. இவர் மார்க்சிய மூலவர்களது அடிப்படைக் கருத்துக்களை திரித்து பாராளுமன்றத்தில் ஏற்படுத்தப்படும் படிப்படியான சீர்திருத்த நடவடிக்கைகள் மூலமாக பாட்டாளி வர்க்கமானது சோசலிசத்தை அடையலாம் என்று வாதிட்டார். இவருக்கு எதிரான கடுமையான விமர்சனங்கள் பிளக்னேவ் (சோசலிசத்தின் பிரச்சனைகள்), கோட்ஸ்கி (பெர்சன்ரைனும் சமூகஜனநாயக வேலைத்திட்டமும்), ரோசா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



லக்சம்பர்க் (புரட்சியா அல்லது சமூகசீர்திருத்தமா?) போன்றோர்களால் கடுமை யாக முன்வைக்கப்பட்டன. பின்பு முதலாம் உலகயுத்தம் தொடங்கும் நிலையில் கோட்ஸ்கியும் சீர்திருத்த பாதையை மேற்கொண்டார். லெனினும், ரோசா லக்சம்பர்க் அவர்களும் இதனை எதிர்த்து போராடினார்கள். அதேவேளை பாராளுமன்ற புறக்கணிப்பு பற்றிய இடதுதீவிரவாதமும் அடிக்கடி தலைக்காட்டவே செய்தது. அதுவும் ரஸ்யாயில் போல்சேவிக்குகள் அரசதி காரத்தை புரட்சியின் மூலமாக கைப்பற்றிக் கொண்ட பின்பு, முதலாம் உலக யுத்தத்தை அடுத்து ஒரு புரட்சிகர அலையானது அடித்து ஓய்ந்த பின்பு இந்த போக்கானது இன்னும் பலம் பெற்றது. இந்த போக்கின் ஆபத்தை உணர்ந்த லெனின் அவர்கள் 'இடதுசாரி கொம்யூனிசம் - ஒரு இளம்பருவக் கோளாறு' என்ற நூலை எழுதினார். இந்த நூலானது முழுக்க முழுக்க இடது தீவிரவா திகளால் அப்போது எழுப்பப்பட்ட பாராளுமன்ற புறக்கணிப்புவாதம், மற்றும் தொழிற்சங்க பணிகளை புறக்கணிப்பு போன்றவை குறித்த மிகவும் காட்டமான விமர்சனத்தை முன்வைப்பதனால் அந்த நூலில் இருந்து சற்று விரிவாகவே மேற்கோள் காட்டுவது அவசியம் எனக் கருதுகிறேன். பொதுவாகவே தமது சொந்த கருத்தை துணிவாக முன்வைக்காமல் பிறரது மேற்கோள்களின் பின்னால் மறைந்து கொள்வது என்பது வாசகர்களை சலிப்புறச் செய்யக் கூடியது என்பது தெரிகிறது. ஆயினும் லெனினியத்தின் பெயரால் இப்படி ப்பட்டதொரு நிலைப்பாடானது நியாயப்படுத்தப்படுகையில் இந்த பிரச்சனை தொடர்பாக லெனின் என்ன சொல்கிறார் என்பதை ஆரம்பத்திலேயே தெளிவு படுத்திக் கொள்வது நல்லது என்பதால் வாசகர்கள் இதனை சற்று பொறுத்துக் கொள்வார்கள் என்றே நம்புகிறேன்.

*பிற்போக்கு அரசோச்சிய ஆண்டுகள் (1907 - 10) ஜாரிசம் வெற்றி பெற்றுவிட்டது, புரட்சிகர கட்சிகள், எதிர்க் கட்சிகள் யாவும் நொறுக்கப்பட்டன. தளர்வு, மனச் சோர்வு, பிளவுகள், பூசல்கள், ஓடுகாலித்தனம், ஆபாசம் - இவையே அரசியல் என்றாயிற்று. ... இந்தப் பெருந்தோல்வியானது புரட்சிகர கட்சிகளுக்கும் புரட்சிகர வர்க்கத்திற்கும் மிகவும் பயனுள்ள மெய்யான பாடம் கற்பித்தது: வரலாற்றுத் துறை இயக்கவியலில், அரசியல் போராட்டத்தை புரிந்து கொள்வதில், அந்தப் போராட்டத்தை நடத்தும் கலையில் பாடம் கற்பித்தது. ஆபத்தான தருணங்களில்தான் யார் யார் தனது நண்பர்கள் என்பதை ஒருவர் தெரிந்து கொள்கிறார். தோல்வியுற்ற சேனைகள் நன்கு படிப்பினை பெறுகின்றன.*

*புரட்சிகர கட்சிகள் தமது கல்வி போதத்தை நிறைவுறச் செய்து கொள்ள வேண்டியிருந்தது. எப்படித் தாக்குதல் தொடுப்பது என்று இதுவரை அவை கற்று வந்தன. இப்பொழுது அவை அந்த அறிவுடன் கூட, எப்படி ஒழுங்கு கலையாமல் பின்வாங்குவது என்ற அறிவைப் பெறுவதும் அவசியமென்பதை உணர வேண்டியதாயிற்று. ... பின்வாங்க வேண்டுமென்பதையும், எப்படிப் பின் வாங்குவதென்று தெரிந்திருக்க வேண்டுமென்பதையும், நாடாளுமன்றங்களில் மிகவும் பிற்போக்கானவற்றிலும், தொழிற் சங்கங்களிலும் கூட்டுறவுச்*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



*சங்கங்களிலும் இன்சூரன்ஸ் கழகங்களிலும் இன்ன பிற நிறுவனங்களிலும் மிகவும் பிற்போக்கானவற்றிலும் சட்டபூர்வமான முறையில் வேலை செய்யத் தெரிந்திருக்க வேண்டுமென்பதையும் புரிந்து கொள்ள விரும்பாத புரட்கிசர வாய்வீச்சுக்காரர்களை போல்சேவிக்குகள் ஈவிரக்கமின்றி அம்பலப்படுத்தி விலக்கியதால்தான் அவர்களால் இதைச் செய்ய முடிந்தது.*

*போல்சேவிக்குகள் சட்டவிரோதமான வேலைகளைச் செய்வதுடன் "சட்ட பூர்வமான வாய்ப்புக்களைத்" தவறாமல் பயன்படுத்திக் கொள்வதையும் இணைத்திடுவதென்ற பிழையற்ற போர்த்தந்திரத்தை பின்பற்றி இராவிடில், மென்சேவிக்குகளை பின்னுக்குத் தள்ளுவதில் அவர்களால் வெற்றி பெற்றிரு க்க முடியாது. பழுத்த பிற்போக்குவாத டூமாவுக்கு நடந்த தேர்தல்களில் போல்சேவிக்குகள் தொழிலாளர் தொகுதியின் முழு ஆதரவினையும் வென்று கொண்டனர்.*

*வெகுஜனங்கள் போல்சேவிக் கருத்துக்களே சரியானவை என்று தமது சொந்த அனுபவத்தின் வாயிலாக மேலும் மேலும் ஐயமற உணர்ந்து கொண் டனர்.*

*நாடாளுமன்றத்தில் - மிகவும் பிற்போக்கான நாடாளுமன்றம்தான் என்றாலுங் கூட - ஒருவர் எதிர்க் கட்சி ஒன்றின் தலைவராய் இருந்தார் என்ற உண்மை யானது, பிற்பாடு புரட்சியில் அவர் பங்காற்றுவதற்கு வசதியானதாக இருந்தது.*

*போல்சேவிசமானது **குட்டிமுதலாளித்துவப் புரட்சிவாதத்தை** (அழுத்தம் மூல த்தில் உள்ளபடி - ஆர்) எதிர்த்து நீண்ட பல ஆண்டு நடத்திய போராட்டத் தின் மூலமாக உருப்பெற்று வளர்ச்சியுற்று உருக்கு உறுதியடைந்ததென்ற உண்மை குறித்து பிற நாடுகளில் அதிகம் தெரியாது. குட்டி முதலாளித்துவப் புரட்சிவாதம் அராஜகவாதச்சாயல் கொண்டது: அல்லது அராஜகவாதத்திடமி ருந்து சில அம்சங்களைக் கடன் வாங்கிக் கொள்கிறது. ... இவர்கள் எளிதில் புரட்சிகர அதிதீவிர நிலைகளுக்கு சென்றுவிடுகிறார்கள் என்றாலும், விடா முயற்சியுடன் போராடவோ, ஒழுங்கமைப்பு பெறவோ, கட்டுப்பாடும் உறுதிப் பாடும் கொள்ளவோ திராணியற்றவர்கள் என்பதை மார்க்சியவாதிகளுக்கு இது தத்துவத்தின் வாயிலாக முழு அளவுக்கு நிலை நாட்டப்பட்டிருக்கிறது.*

***தொழிலாளர் வர்க்க இயக்கத்தில் இழைக்கப்படும் சந்தர்ப்பவாத குற்றங்க ளுக்கு, ஒரு வகைத் தண்டனையாக அராஜகவாதம் தலைதூக்கிவிடுவதை அடிக்கடி காணலாம்.***

*1905 ஆகஸ்ட்டில் ஆலோசனை அந்தஸ்த்துடைய 'நாடாளுமன்றம்" கூட்டப்ப டுவதாக ஜார் பிரகடனம் செய்தபோது, போல்சேவிக்குகள் எல்லா எதிர்க் கட்சிகளுக்கும் மென்சேவிக்குகளுக்கும் எதிரான நிலையை ஏற்று, அதனைப் புறக்கணிப்பு செய்யும்படி அறைகூவினர். உண்மையில் இந்த 'நாடாளுமன்றம்"*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



*1905 ஒக்டோபரில் மூண்ட புரட்சியால் துடைத்தெறியப்பட்டது. அக்காலத்தில் புறக்கணிப்பே பிழையற்றதாக இருந்தது. பிற்போக்கான நாடாளுமன்றங்களில் பங்குகொள்ளாது இருப்பது பொதுவாக சரியானதே என்பதல்ல காரணம்: எதார்த்த நிலைமையை நாங்கள் பிழையின்றி மதிப்பிட்டோம் என்பதே காரணம். வெகுஜன வேலைநிறுத்தங்கள் முதலில் அரசியல் வேலைநிறுத்தமாகவும், பிறகு புரட்சிகர வேலைநிறுத்தமாகவும், முடிவில் ஓர் எழுச்சியாகவும் வேகமாய் வளர்ச்சியுற்று வந்தன என்பதே அப்போதிருந்த எதார்த்த நிலைமை. தவிரவும், முதலாவது பிரதிநிதித்துவசபை கூட்டப்படுவதை ஜாரின் கையில் விட்டுவிடுவதா, அல்லது அதனைப் பழைய ஆட்சியிடமிருந்து பறிப்பதற்கு முயற்சி செய்வதா என்பதே அக்காலத்திய மையப் பிரச்சனையாக இருந்தது. எதார்த்த நிலைமை இதையொத்ததாக இருக்கும் என்ற நிலைமை நிச்சயம் இல்லாத போதும் இருக்க முடியாத போதும், அதையொத்த ஒரு போக்கு இதே வளர்ச்சி வேகமும் இருக்குமென்ற நிச்சயம் இல்லாத போதும், இருக்க முடியாத போதும் புறக்கணிப்பு சரியானதல்ல.*

*"கோட்பாட்டு அடிப்படையில்" சமரசங்களை நிராகரிப்பது, எவ்வகையானவை என்பதை கருதாமலேயே பொதுப்பட எல்லாச் சமரசங்களையும் நிராகரிப்பது சிறுபிள்ளைத்தனமாகும்: பரிசீலனை செய்வதற்கே தகுதியற்ற ஒன்றாகும்.*

*... எல்லா சந்தர்ப்பங்களுக்கும் அப்படியே எடுத்துக் கையாளக் கூடிய தயார் நிலையிலுள்ள தீர்வுகளை அளிக்கக் கூடிய ஒரு வகை சூத்திரத்தை தொழிலாளர்களுக்கு வகுத்தளிக்க முற்படுகிறவர் எவரும், அல்லது புரட்சிகர பாட்டாளி வர்க்கத்தின் கொள்கை எக்காலத்திலும் கடினமான அல்லது சிக்கலான நிலைமைகளை எதிர்ப்படாதென வாக்குறுதி அளிப்பவர் எவரும் ஏமாற்று வித்தைக்காரரே ஆவார்.*

*இந்தப் "பிற்போக்கு தன்மையைக்" கண்டு அஞ்சுவதோ, அதனை தட்டிக்கழிக்க அல்லது தாவிக்குதிக்க முயலுவதோ படுமோசமான மடமையே ஆகும். ஏனெனில் தொழிலாளர் வர்க்கத்தின், விவசாயிகளின் பெருந்திரளினரையும் பயிற்றுவித்து, போதமளித்து, அறிவொளி பெறச் செய்து, புது வாழ்வினுள் ஈர்த்திடுவது என்ற பாட்டாளி வர்க்க முன்னணிப் படைக்கு உரிய அந்தப் பணியை கண்டு அஞ்சுவதாகவே இதற்கு அர்த்தம்.*

*... புரட்சியாளர்கள்... வெகுஜனங்கள் காணப்படும் இடங்களில் எல்லாம் வேலை செய்தாக வேண்டும்...*

*பாட்டாளி வர்க்கத்தின் லட்சக் கணக்கானோரும் எண்ணற்றோரும் இன்னமும் பொதுவாக பாராளுமன்ற முறையை ஆதரிப்பதோடன்றி, அப்பட்டமான "எதிர்ப்புரட்சித் தன்மை வாய்ந்தோராயும்" இருக்கையில், நாடாளுமன்ற முறை அரசியல் வழியில் காலாவதியாகிவிட்டது என்று கூறுவது எப்படி? ஜெர்மனியில் நாடாளுமன்ற முறை இன்னமும் அரசியல் வழியில் காலாவதி ஆகிவிடவில்லை*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



*என்பது தெளிவு. ஜெர்மனியிலுள்ள "இடதுசாரிகள்" தமது விருப்பத்தை தமது அரசியல் சித்தாந்த போக்கை எதார்த்த உண்மையாகத் தவறாய் நினைத்துக் கொண்டு விட்டனர் என்பது விளங்குகிறது.*

*நமக்கு காலாவதியாகி விட்டதால் அது வெகுஜனங்களுக்கும் காலாவதியாகி விட்டதாகும் எனக் கருதக் கூடாது. "இடதுசாரிகளுக்கு" ஒரு வர்க்கத்தின் கட்சியாக, வெகுஜனங்களின் கட்சியாக சிந்தனை செய்யத் தெரியவில்லை. ... வெகுஜனங்களது நிலைக்கு, ஒரு வர்க்கத்தின் பிற்பட்ட பகுதியின் நிலைக்கு நீங்கள் சரிந்துவிடக் கூடாது. அதில சர்ச்சைக்கு இடமில்லை. அவர்களுக்கு கசப்பான உண்மையைச் சொல்லத்தான் வேண்டும். அவர்களுடைய முதலா ளித்துவ, ஜனநாயக, நாடாளுமன்றவாதத் தப்பெண்ணங்களை, அவை தப்பெ ண்ணங்கள் என்று சுட்டிக் காட்ட வேண்டியதுதான் உங்களுடைய கடமை. ஆனால் அதேபோதில் (வர்க்கத்தின் கொம்யூனிஸ்ட்டு முன்னணிப்படை மட்டு மன்றி) வர்க்கம் அனைத்தின், (உழைப்பாளி மக்களின் முன்னேறிய பகுதியோர் மட்டுமன்றி) உழைப்பாளி மக்கள் அனைவரின் வர்க்க உணர்வு, தயார் நிலைமை இவற்றின் எதார்த்த நிலவரத்தை நீங்கள் திதானமாய்க் கவனித்து மதிப்பிட்டாக வேண்டும்.*

*முதலாளித்துவ நாடாளுமன்றங்களையும் இதர வகையான பிற்போக்கு நிறுவ னங்கள் அனைத்தையும் அகற்றிடும் பலம் உங்களிடத்தில் இல்லாதவரை நீங் கள் அவற்றில் வேலை செய்தே ஆகவேண்டும். ஏனெனில் பாதிரிமார்களால் ஏமாற்றப்பட்டும், கிராம வாழ்க்கைமுறையின் பிற்பட்ட நிலைமைகளினால் முடக் கப்பட்டும் வரும் தொழிலாளர்களை இவற்றில்தான் இன்னமும் நீங்கள் காண் பீர்கள். அவ்வாறு வேலை செய்யாவிடில், நீங்கள் வாய்வீச்சடிப்பதைத் தவிர வேறு எதற்கும் உதவாதோராய் மாறிவிடும் அபாயம் ஏற்படும்.*

*வெகுஜனங்களுடைய புரட்சிகர மனப்பான்மை இல்லாமல், இந்த மனப்பான்மை வளர்வதற்கு அனுசரணையான நிலைமைகள் இல்லாமல், புரட்சிகர போர்த்தந்திரம் ஒருநாளும் செயல் நிலைக்கு வளர்ச்சியுற முடியாது என்பதை கூறத் தேவையில்லை....முற்றிலும் புறநிலை நோக்குடன் கூடிய மதிப்பீட்டையே போர்த்தந்திரம் அடிப்படையாக கொண்டிருக்க வேண்டும். நாடாளுமன்ற சந்தர்ப்பவாதத்தை தூற்றுவதால் மட்டுமோ, நாடாளுமன்றங்களில் பங்கெடுத்துக் கொள்வதை நிராகரிப்பதால் மட்டுமோ ஒருவர் தமது ஒருவர் தமது புரட்சிகர மனோபாவத்தை வெளிப்படுத்திக் கொண்டு விடுவது மிகமிக சுலபம். ஆனால் இந்த சுலபத்தின் காரணமாய், அது கடினமான, மிகமிகக் கடினமான ஒரு பிரச்சனைக்குரிய தீர்வாகிவிடுவதில்லை.*

*பிற்போக்கு நாடாளுமன்றத்தை புரட்சிகர நோக்கங்களுக்காக பயன்படுத்திக் கொள்ளும் கடுமையான பணியைத் தட்டிக்கழிப்பதன் மூலம் இந்த கடின நிலையை சமாளிக்க முயல்வதானது முற்றிலும் சிறுபிள்ளைத்தனமானதே*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



*ஆகும். நீங்கள் ஒரு புதிய சமுதாயத்தை சமைக்க விரும்புகிறீர்கள். ஆயினும் திடநம்பிக்கையும் பற்றுறுதியும் கொண்ட வீரமிக்க கொம்யூனிஸ்ட்டுகளாலான சிறந்த நாடாளுமன்றக் குழு ஒன்றினை பிற்போக்கு நாடாளுமன்றத்தில் நிறுவிக் கொள்வதிலுள்ள பிரச்சனைகளைக் கண்டு அஞ்சுகிறீர்கள்.*

*மேற்கு ஐரோப்பாவில் உள்ளவர்கள் முதலாளித்துவ ஜனநாயக தப்பெண்ணங்களிலும் பாராளுமன்றவாதத் தப்பெண்ணங்களிலும் ஊறியிருக்கிறார்கள். ... இதனால் முதலாளித்துவ நாடாளுமன்றங்களைப் போன்ற அமைப்புக்களின் உள்ளிருந்துதான் கொம்யூனிஸ்ட்டுகள் எவ்விதமான இடையூறுகளாலும் கலக்கமடையாமல் இந்த தப்பெண்ணங்களை அம்பலம் செய்யவும் களையவும் முறியடிக்கவும் விடாப்பிடியான நீண்ட போராட்டம் நடத்த முடியும், நடத்தவும் வேண்டும்.*

*குற்றவிமர்சனம் - மிகவும் கடுமையான, தாட்சண்யமற்ற சமரசத்திற்கு இடமில்லாத குற்றவிமர்சனம் - நாடாளுமன்றவாதம் அல்லது நாடாளுமன்ற செயற்பாடுகளுக்கு எதிராய் அல்லாமல், நாடாளுமன்றத் தேர்தல்களையும், நாடாளுமன்ற அரங்கையும் புரட்சிகரமான, கொம்யூனிஸட்டு முறையில் பயன் படுத்திக் கொள்ள முடியாத தலைவர்களுக்கு எதிராய் - இன்னும் அதிகமாய் அவற்றைப் பயன்படுத்திக் கொள்ள விரும்பாதவர்களுக்க எதிராய் திருப்பி விடப்பட வேண்டும்.*

*இந்த கடிதத்தின் ஆசிரியரிடம் முதலாளித்துவ "வர்க்க அரசியல்வாதிகள்" பால் புனிதமான, பாட்டாளி வர்க்க வெறுப்புணர்ச்சி நிரம்ப இருக்கிறது. ... ஒடுக்கப்படும் வர்க்கங்களின் பிரதிநிதி ஒருவரிடம் காணப்படும் இந்த வெறுப்புணர்ச்சி உண்மையிலேயே அனைத்து அறிவின் ஆரம்பமாகும்: எந்த ஒரு சோசலிச கொம்யூனிச இயக்கத்திற்கும் அதன் வெற்றிக்குமான அடிப்படை ஆகும். ஆனால் அரசியல் என்பது ஒரு விஞ்ஞானமும் கலையும் ஆகும். அது அப்படியே ஆகாயத்தில் இருந்து வந்து குதித்துவிடுவதோ, வரப்பிரசாதமாய் கிடைப்பதோ அல்லவென்பதையும், பாட்டாளி வர்க்கமானது முதலாளித்துவ வர்க்கத்தின் மீது வெற்றி பெற விரும்பினால் அது முதலாளித்துவ அரசியல்வாதிகளுக்கு எவ்விதத்தலும் சப்பையில்லாத தனது சொந்த பாட்டாளி வர்க்க அரசியல்வாதிகளை உருவாக்க வேண்டுமென்பதையும் இக்கடிதத்தின் ஆசிரியர் பார்க்கத் தவறிவிடுகிறார் என்பது தெரிகிறது.*

*...சோவியத்துக்களுக்கு ஆதரவான அரசியல்வாதிகளை நாடாளுமன்றத்தின் உள்ளே வரச் செய்யாமல், உள்ளிருந்தே நாடாளுமன்ற முறையை சிதைவுறச் செய்யாமல், நாடாளுமன்றததை கலைத்திடுவதற்காக சோவியத்துக்களின் வெற்றிக்காக நாடாளுமன்றத்தினுள்ளிருந்து வேலை செய்யாமல், நாடாளுமன்ற த்தின் மீது சோவியத்துக்கள் வெற்றி பெறுவது சாத்தியம்தானா என்று இக் கடிதத்தின் ஆசிரியர் கேட்கவே இல்லை.*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



*நாடாளுமன்றத்தின் உள்ளிருந்து ...அரசாங்கத்தின் விளைவுகளை தொழி லாளி வெகுஜனங்களுக்கு நடைமுறையில் கண்டுணருவதற்கு துணை புரிய வேண்டும்.... வேறுவிதமாய் செயல்படுவதானது, புரட்சி இலட்சியத்திற்கு ஊறு செய்வதாகவே இருக்கும். ஏனெனில் தொழிலாளி வர்க்கத்தின் பெரும் பாலோரது அபிப்பிராயங்களில் மாற்றம் உண்டாக்காமல் புரட்சி சாத்தியமன்று. அந்த மாற்றத்தை வெகுஜனங்களுடைய அரசியல் அனுபவத்தால் உண்டாக்க முடியுமேயன்றி, பிரச்சாரத்தால் மட்டும் ஒரு நாளும் உண்டாக்கிவிட முடியாது.*

*புரட்சி நடைபெற வேண்டுமானால், சுரண்டலாளர்கள் பழைய வழியில் ஆட்சி நடத்தவும் முடியாமற் போவது அவசியமானதாகும். பழைய வழியில் வாழ அடிமட்ட வர்க்கங்கள் விரும்பவில்லை, மேல் வர்க்கங்களால் பழைய வழியில் நடத்திச் செல்ல முடியவில்லை என்கிற நிலை ஏற்படும் பொதுதான புரட்சி வெற்றி பெற முடியும்.*

*நாடாளுமன்ற இடங்களின் எண்ணிக்கை நமக்கு முக்கியமல்ல: இடங்களைப் பிடிப்பதல்ல நமது நோக்கம். இந்த விவகாரத்தில் நாம் விட்டுக் கொடுத்து விடுவோம். ...இதன் விளைவாய் நாம் சில நாடாளுமன்ற இடங்களை இழக்க நேர்ந்தால், அது நமக்கு முக்கியமானதல்ல. முற்றிலும் நம்பகமாக ஒரு சில தொகுதிகளில், அதாவது நாம் போட்டியிடுவதால் தொழிற்கட்சி வேட்பாளர்க ளுக்கு பாதகமாய் மிதவாதிகள் இடங்கள் பெற முடியாத தொகுதிகளில், நாம் நமது வேட்பாளர்களை நிறுத்துவோம். தேர்தல் இயக்கத்தில் நாம் பங்கெடு த்துக் கொள்வோம்: கொம்யூனிசத்திற்காக கிளர்ச்சி செய்யும் துண்டுப் பிரசுரங்களை விநியோகிப்போம். நமது வேட்பாளர்கள் போட்டியிடாத எல்லா தொகுதிகளிலும் நாம் முதலாளித்துவ வேட்பாளரை எதிர்த்தும் தொழிற்கட்சி வேட்பாளரை ஆதரித்தும் வாக்களிக்கும் படி நாம் வாக்காளர்களை வற்புறுத் துவோம். ... இதற்கு ஆட்சேபம் எழுப்பும் இடதுசாரி ஆட்சேபக்காரர்களைப் பார்த்து உங்களுடைய வறட்டுச் சூத்திரத்தை வெகுஜனங்களுக்குரியதாக கூறாதீர்கள் என்று பதிலளிப்பேன்.*

*புரட்சிகர வர்க்கம் தனது பணியை நிறைவேற்ற வேண்டுமாயின் அது சமு தாயச் செயற்பாட்டின் எல்லா வடிவங்களையும் அல்லது கூறுகளையும் விதி விலக்கின்றி கற்றுப் பாண்டித்தியம் பெறும் ஆற்றலுடையதாய் இருத்தல் வேண் டும். ... அந்தப் புரட்சிகர வர்க்கம் ஒரு வடிவம் பிறிதொன்றாய் மிகவும் விரை வாகவும் திடுதப்பென்றும் மாற்றப்படுவதற்கு தயாராய் இருக்க வேண்டும். ... பகைவன் வசமுள்ள அல்லது அவனிடம் இருக்கக்கூடிய எல்லா ஆயுதங்க ளையும், போருக்கான எல்லா சாதனங்களையும் பயன்படுத்திக் கொள்வதற்கு தன்னைப் பயிற்றுவித்துக் கொள்ளாத எந்தச் சேனையும் விவேகமற்ற முறை யில், ஏன் கொடுங்குற்றத்துக்குரிய முறையிலும்கூட நடந்து கொள்கிறது என் பதை எவரும் ஒத்துக் கொள்வர்.*

www.tamilarangam.net



*ரஸ்யாவிலும் கூட தேர்தல்கள் சந்தர்ப்பவாதமும், முற்றிலும் முதலாளித்துவ தில்லுமுல்லுகளும் கள்ளத்தனமும் சூதுவாதும் எப்போதும் மலிந்தே இருந்தன. ... ஆனால் இந்த வழக்கத்திற்கு மாறான. சந்தர்ப்பவாதமல்லாத, பதவி வேட்டையாக அமையாத புதிய ரக நாடாளுமன்ற முறையை தோற்றுவிக்க கற்றுக் கொள்ள வேண்டும். கொம்யூனிஸ்ட்டு கட்சிகள் தமது கோசங்களை வெளியிட வேண்டும். மெய்யான பாட்டாளி வர்க்கத்தினரின் .. ஏழை எளியவரின் உதவியுடன் துண்டுப்பிரசுரங்களை விநியோகிக்க வேண்டும். ... அவர்களது சாராயக் கடைகளுக்கு சென்றும், பாமர மக்களின் சங்கங்களுக்குள்ளும், கழகங்களுக்குள்ளும் தற்செயலான கூட்டங்களுக்குள்ளும் ஊடுறுவியுடம் இம்மக்களுடன் பேச வேண்டும். ... தேர்தல் காலங்கள் அல்லாத பிற காலங்களில் இது சாத்தியமாய் இருந்ததில்லை. ... மிகவும் பழமையான, இருள் மண்டிய, நம்பிக்கைக்கு சிறிதும் இடமில்லாததாய்த் தோன்றும் துறைகளையும் கிளர்த்திவிட நாம் வேலை செய்தாக வேண்டும். இல்லையேல் நாம் எமது கடமைகளை நிறைவேற்ற முடியாமற் போய்விடும். விரிவான அளவில் தயார் செய்து ஆயத்த நிலையில் இருக்க முடியாமற் போய்விடும். எல்லா ஆயுதங்களையும் பெற்றவர்களாய் இருக்க முடியாமல் போய்விடும்.*

மேலே மேற்கோள் காட்டிய பகுதிகள் சற்று நீண்டதாக போய்த்தான் விட்டன. ஆனால் பாராளுமன்ற புறக்கணிப்பு பற்றிய ஒரு தீவிரமான விமர்சனத்தை லெனின் மூலமாகவே அறிந்து கொள்வது விரயமானதாக இருக்காது என்று உறுதியாக நம்புகிறேன்.

## 10

மேலே குறிப்பிட்ட 'இடதுசாரி கொம்யூனிசம் - ஓர் இளம்பருவக் கோளாறு' என்ற நூலை வெளியிட்ட சில காலத்தில் வெற்றி பெற்ற ரஸ்ய போல்சேவிக் கட்சியினால் - இப்போது இதன் பெயர் சோவியத் யூனியனின் கொம்யூனிஸ்ட்டு கட்சி என்பதாக இருந்தது - கூட்டப்பட்ட மூன்றாவது அகிலத்தின் இரண்டாவது மாநாடு 1920ம் ஆண்டில் ஓகஸ்ட்டு மாதம் கூட்டப்பட்டது. இந்த மாநாட்டில் சோவியத் யூனியனது கொம்யூனிஸ்ட்டு கட்சியின் சார்பில் லெனின், புக்காரின், டரொட்ஸ்கி, செனெவேவ் ஆகியோர் கலந்து கொண்டனர். இந்த மாநாட்டில் **'பாராளுமன்றத்தில் கொம்யூனிஸ்ட்டுக் கட்சிகள்'** என்ற தலைப்பில் ஆய்வுரை ஒன்று சமர்ப்பிக்கப்பட்ட விவாதிக்கப்பட்டு ஏற்றுக் கொள்ளப்பட்டது. இந்த ஆவணமானது அன்று தொட்டு உலகெங்கும் வாழும் புரட்சியாளர்களிடையே பாராளுமன்ற செயற்பாடுகள் தொடர்பான மிகவும் நம்பகமான வழிகாட்டும் நெறியாக திகழ்ந்து வந்துள்ளது. இந்த ஆவணத்தின் வரலாற்று முக்கியத்துவம் கருதி அதனை அப்படியே தருகிறேன்.

1. *பாராளுமன்றவாதமானது ஒரு அரசமைப்பு முறைமை என்ற வகையில் முதலாளித்துவ ஆட்சியின் ஒரு ஜனநாயகபூர்வமான வடிவமாக வந்திருக்கிறது. முதலாளித்துவ வளர்ச்சியின் ஒரு கட்டத்தில் மக்களது பிரதி*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நிதித்துவம் பற்றிய ஒரு புனைவை உருவாக்கி, மக்களின் விருப்பத்தின் பெயரில் செயற்படும் வர்க்க பேதங்களுக்கு அப்பாற்பட்ட அமைப்பாக ஒரு தோற்றப்பாட்டை கொடுத்த போதிலும் கூட, சாரம்சத்தில் இது மூலதனத்தின் கரங்களில் ஒடுக்குவதற்கும், கீழ்படியச் செய்வதற்கும் ஆன ஒரு கருவியாகவே செயற்படுகிறது.

2. பாராளுமன்றம் என்பது அரச அமைப்பின் ஒரு திட்டவட்டமான கூறாக அமைகிறது. அதனால் இது வர்க்கங்களோ அல்லது வர்க்க முரண்பாடுகளோ இல்லாத ஒரு கொம்யூனிச சமுதாயத்தில் ஒரு பகுதியாக அமைய முடியாது.

3. முதலாளித்துவ வர்க்க சர்வாதிகாரத்தின் காலகட்டத்திலிருந்து பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தை நோக்கிச் மாறிச் செல்லும் ஒரு கால கட்டத்தில் பாராளுமன்றமானது ஒரு அரச நிர்வாக வடிவமாக திகழும் இலாயக்கற்றது. கூர்மையான வர்க்க போராட்டமும், உள்நாட்டு யுத்தமும் நடைபெறும் ஒரு காலத்தில் பாட்டாளி வர்க்கமானது தனது அரச அமைப்பை ஒரு போராட்ட அமைப்பாக கட்டமைத்தாக வேண்டியுள்ளது. இதற்குள் முன்னைய ஆளும் வர்க்கத்தைச் சேர்ந்தவர்கள் சேர்த்துக் கொள்ள மாட்டார்கள். இந்த காலகட்டத்தில் மக்கள் விருப்பு பற்றிய எந்த புனைவும் தொழிலாளர் வர்க்கத்தை பலவீனப்படுத்தவே செய்யும். இந்த காலகட்டத்தில் அதிகாரத்தை பகிர்ந்து கொள்வதற்கான பாராளுமன்றம் பாட்டாளி வர்க்கத்திறகு தேவைப்பட மாட்டாது. பாட்டாளி வர்க்க சர்வாதிகாரம் என்பதே சோவியத் குடியரசாக இருக்கும்.

4. முதலாளித்துவ பாராளுமன்ற அமைப்பானது, முதலாளித்துவ அரச இயந்திரத்தின் முக்கிய அம்சமாக இருக்கிறது. நீண்டகாலத்தில் இதனை பாட்டாளி வர்க்கமானது அப்படியே தனது பக்கத்திற்கு வென்றெடுத்துக் கொள்ள முடியாது. நடப்பிலுள்ள முதலாளித்துவ அரச இயந்திரத்தையும், அதன் பாராளுமன்றத்தையும் அடித்து நொறுக்கியாக வேண்டியுள்ளது. சட்ட வரம்பிற்குட்பட்ட முடியாட்சியானால் என்ன, குடியரசானால் என்ன, அது முதலாளித்துவ அரசாக இருப்பதை பாதிப்பதில்லை.

5. உள்ளூராட்சி நிறுவனங்களும் கூட இந்த பண்பில் வேறுபட்டவை அல்ல. இவற்றை முதலாளித்துவ அரசிற்கு எதிரானவையாக காட்ட முனைவது கோட்பாட்டு ரீதியில் தவறானதாகும். முதலாளித்துவ அரச இயந்திரத்தின் கூறுகள் என்ற வகையில் இவையும் அடித்து நொறுக்கப்பட்டு இவற்றின் இடத்தை உள்ளூர் சோவியத் அமைப்புக்கள் எடுத்துக் கொள்ளும்.

6. இதனால் கொம்யூனிசமானது பாராளுமன்றத்தை எதிர்கால சமூதாயத்தின் ஒரு கூறாக ஏற்றுக் கொள்வதில்லை. பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்தின் வடிவங்களில் ஒன்றாக பாராளுமன்றத்தை கொம்யூனிசம் ஏற்றுக் கொள்வதில்லை. பாராளுமன்றத்தை நீண்ட காலத்தில் கைப்பற்றுவதை கொம்யூனிசமானது ஏற்றுக் கொள்ளவில்லை. மாறாக பாராளுமன்றவாதத்தை அழிப்பதையே அது தனது நோக்காக கொண்டுள்ளது. ஆதலால் முதலாளித்துவ நிறுவனங்களை முதலாளித்துவத்தை அழிப்பதற்காக பயன்படுத்துவது என்ற கேள்வியே எழ முடியாது. மாறாக இந்த



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கேள்வியானது பின்வரும் ஒரு முறையில் மாத்திரமே எழுப்பப்பட முடியும்.

7. ஒவ்வொரு வர்க்க போராட்டமும் ஒர அரசியல் போராட்டமாக அமை கிறது. ஏனெனில் இறுதி ஆய்வில் இது அதிகாரத்திற்கான ஒரு போராட்ட மாகும். எந்தவொரு வேலைநிறுத்தமும் கூட, அது நாடளாவியரீதியில் பரவும் போது அது முதலாளித்துவ அரசுக்கு அச்சுறுத்தலாக மாறுகிறது. இதனால் அது அரசியல் பண்பை பெற்றுவிடுகிறது. முதலாளித்துவ அரசை தூக்கியெறிவதற்கு, அதனை நொறுக்குவதற்கு எடுக்கப்படும் எந்தவொரு முயற்சியும் அரசியல் போராட்டத்தை முன்னெடுப்பதாக ஆகிவிடுகிறது. நிர் வாக தேவைகளுக்காகவும், எதிர்ப்பைக் காட்டும் முதலாளி வர்க்கத்தை ஒடுக்குவதற்கும் உருவாக்கப்படும் பாட்டாளி வர்க்க அரசானது, அது எப்ப டிப்பட்ட கருவியாக இருப்பினும் கூட, அரசியல் அதிகாரத்தை வென்றெடு ப்பதாகிறது.

8. இவற்றின் விளைவாக அரசியல் அதிகாரம் பற்றிய பிரச்சனையானது, பாராளுமன்றம் பற்றிய எமது மனோபாவம் பற்றிய பிரச்சனையிலிருந்து வேறுபட்டதாகும். முன்னைய பிரச்சனை என்பது பாட்டாளி வர்க்க போராட் டம் தொடர்பான பொதுவான ஒரு பிரச்சனை பற்றியதாகிறது. சிறியதும் பகுதியளவிலானதுமான போராட்டங்கள் தீவிரமடைந்து பொதுவான போரா ட்டமாக வளர்ந்து முதலாளித்துவ ஒழுங்கமைப்பை முற்றாக தூக்கியெ றிவதே இதன் பண்பாக இருக்கிறது.

9. முதலாளித்துவத்திற்கு - அதாவது அதன் அரச இயந்திரத்திற்கு - எதிரான பாட்டாளி வர்க்கத்தின் பிரதான போராட்ட முறையானது மக்கள் திரள் போராட்டமாக அமைகிறது. இந்த மக்கள் திரள் நடவடிக்கைகள் பாட்டாளி வர்க்கத்தை தலைமையாக கொண்ட புரட்சிகர மக்கள் அமைப்பு க்களினால் (தொழிற்சங்கங்கள், கட்சிகள், சோவித்துக்கள்) போன்றவற்றி னால் ஒழுங்கமைக்கப்பட்டு, தலைமை தாங்கப்பட்டு நடத்தப்படுகின்றன. இந்த வெகுஜன அமைப்புக்கள் என்பவை, நன்கு ஒழுங்கமைக்கப்பட்ட, கண்டிப்பான கட்டுப்பாட்டைக் கொண்ட, மத்தியப்படுத்தப்பட்ட கொம்யூ னிஸ்ட்டுக் கட்சிகளினால் தலைமைதாங்கப்படுகிறது. உள்நாட்டு யுத்தம் என்பதும் ஒரு யுத்தமே. இந்த யுத்தத்தில் பாட்டாளி வர்க்கமானது யுத்த த்தை வழிநடத்த வல்ல நன்கு புடமூட்டப்பட்ட, உறுதியான தலைமையை வேண்டி நிற்கிறது.

10. மக்கள் திரள் இயக்கத்தை முழுமையாக எடுத்துக் கொண்டால், இங்கு நடவடிக்கைகள் படிப்பயாக அவற்றிற்கே உரிய தர்க்கரீதியாக வளர் ச்சியுற்று, முதலாளித்துவ அரசிற்கு எதிரான கிளர்ச்சிகளாக மாறுகின்றன. உள்நாட்டு யுத்தமாக வளர்ந்து செல்லும் ஒரு மக்கள் திரள் அமைப்பை தலைமை தாங்கும் கட்சியானது, சட்டரீதியான விடயங்களில் தன்னை திட ப்படுத்திக் கொண்டு அவற்றை தனத புரட்சிகர நடவடிக்கைகளுக்கு ஒரு துணையான ஆதார சக்தியாக வைத்திருக்க வேண்டும் என்பது ஒரு விதி யாகும். கட்சியின் பிரதான தாக்குதலான மக்கள் திரளது நடவடிக்கை களுக்கு இந்த விதமான சட்டபூர்வமான அம்சங்கள் கீழ்ப்பட்டதாக அமைய வேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



11. முதலாளித்துவ பாராளுமன்ற மேடை என்பதும் இப்படிப்பட்ட ஒரு மேடைகளில் ஒன்றாகும். முதலாளித்துவ அரச நிறுவனம் என்ற வகையில் பாராளுமன்றம் தொடர்பாக எழும் விமர்சனங்களை நாம் பாராளுமன்ற போராட்டத்தில் கலந்து கொள்வதற்கு எதிராக பயன்படுத்த முடியாது. கொம்யூனிஸ்ட்டு கட்சிகள் பாராளுமன்றத்திற்கு போவது பாராளுமன்றத்தின் உயிர்த்துடிப்பான அதன் முக்கிய பணிகளை கவனிப்பதற்காக அல்ல. மாறாக பாராளுமன்றத்திற்கு வெளியில் உள்ள மக்கள்திரள் பாராளுமன்ற த்தையும் அரச இயந்திரத்தையும் உடைத்தெறிவதற்கு அவர்களுக்கு உதவி செய்வதற்காகவே கொம்யூனிஸ்ட்டுகள் பாராளுமன்றம் போகிறார்கள்.

12. பாராளுமன்றத்தில் கொம்யூனிஸ்ட்டுகளின் பணியானது முக்கியமாக பாராளுமன்ற மேடையில் இருந்து புரட்சிகர கிளர்ச்சியை செய்வதாகவே அமைகிறது. எதிர்தரப்பாரை அம்பலப்படுத்துவது: மக்களுக்கு இருக்கக் கூடிய முதலாளித்துவ ஜனநாயகம் பற்றிய மாயைகளை கிழித்தெறிவது போன்றவை இங்குள்ள முக்கிய பணியாக அமைகிறது. இவை யாவுமே வெளியில் நடைபெறும் மக்கள்திரள் இயக்கதின் போராட்டங்களுக்கு கீழ்ப ட்டதாகவே இருக்க வேண்டும். தேர்தல் பிரச்சாரங்களில் கலந்து கொள் வதும், பாராளுமன்ற மேடையில் மேற்கொள்ளப்படும் புரட்சிகர பிரச்சாரமும் இதுவரை காலமும் அரசியல் வாழ்வில் இருந்து ஒதுங்கியிருந்த மக்கள் பிரிவினரை வென்றெடுப்பதில் முக்கியமாக பங்காற்றுகிறது.

13. உள்ளூராட்சி கழகங்களில் கொம்யூனிஸ்ட்டுகள் பெரும்பான்மை பெரும் இடத்தில் அவர்கள் (அ) மத்தியில் இருக்கும் முதலாளித்துவ அரசி ற்கு எதிராக புரட்சிகர எதிர்ப்பை முன்னெடுக்க வேண்டும். (ஆ) வறிய மக்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு தம்மாலான அனைத்தை யும் செய்ய வேண்டும். (இ) வாய்க்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், தமது பணிகளை விரிவுபடுத்து முதலாளித்துவ அரசு தடையாக இருப்பதை மக்க ளுக்கு விளக்க வேண்டும். (ஈ) இந்த அடிப்படையில் மத்திய அரசுடன் முரண்பட நேரும் என்ற பயம் சிறிதும் இன்றி தீவிரமான புரட்சிகர பிரச்சா ரத்தை மேற்கொள்ள வேண்டும். (உ) சில குறிப்பான நிலைமைகளின் கீழ் உள்ளூர் நிர்வாகத்தை உள்ளூர் தொழிலாளரது அமைப்பினால் பிரதியீடு செய்யலாம். இந்த செயற்பாடுகள் அனைத்தினதும் நோக்கமானது முதலா ளித்துவ முறைமைக்கு இடையூறு ஏற்படுத்துவது என்பதாகவே இருக்க வேண்டும்.

14. தேர்தல் பிரச்சாரமானது எப்படியும் பெரும்பான்மை ஆசனங்களைப் பெறுவது என்ற நோக்கில் அல்லாமல், பாட்டாளி வர்க்க புரட்சிகர சுலோக ங்களை நோக்கி மக்களை வென்றெடுப்பது என்ற நோக்கில் முன்னெடு க்கப்பட வேண்டும். தேர்தல் பிரச்சாரமானது கட்சியின் தலைமையைச் சேர்ந்த சிலரால் மட்டுமன்றி மக்கள் திரள் அமைப்பைச் சேர்ந்த அனைவ ராலும் மேற்கொள்ளப்பட வேண்டும். அந்த காலகட்டத்தில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் மக்கள் திரளின் அனைத்து நடவடிக்கை வடிவங்களையும் (வேலை நிறுத்தங்கள், ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள், படைவீரர்கள் மத்தியில் கிளர்ச்சி செய்வது போன்ற அனைத்தையும்) அந்தப் பிரிவினருடன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நெருக்கமாக வரும் விதத்தில் பயன்படுத்துவது அவசியமானது. பாட்டாளி வர்க்கத்தின் மக்கள் திரள் அமைப்புக்களை இந்த பணிகளில் ஈடுபடுத்து வது அவசியமானது.

15. இப்படியாக பாட்டாளி வர்க்க கட்சியின் பாராளுமன்ற நடவடிக்கைகள் என்பவை - அவை நடத்தப்படும் விதம், வழங்கப்படும் அறிவுறுத்தல்கள், நடைபெறும் நிலைமைகள் போன்ற அனைத்திலும் - இது ஒரு சராசரி சமூக ஜனநாயக கட்சியின் பாராளுமன்ற நடவடிக்கைகளில் இருந்து முற்றிலும் வேறுபட்டதாகும். சமூக ஜனநாயக கட்சியினர் பாராளுமன்றத்திற்கு செல் வதே அங்குள்ள ஜனநாயக கட்டமைப்புக்களை பலப்படுத்தவதற்காக, அல்லது அவற்றை கைப்பற்றுவதற்காக. கொம்யூனிஸ்ட்டு கட்சியானது பாராளுமன்றத்தை தனது புரட்சிகர நோக்கங்களுக்காக பயன்படுத்திக் கொள்ள மட்டுமே (கார்ல் லீப்க்னெக்ட்டும், போல்சேவிக்குகளும் செய்தது போல) பாராளுமன்றத்திற்கு செல்கிறது.

16. 'பாராளுமன்ற எதிர்ப்புவாதம்' ஒரு கொள்கை என்ற வகையில், பாராளுமன்ற தேர்தல்களில் கலந்து கொள்வது மற்றும் புரட்சிகர நோக்க ங்களுக்காக பாராளுமன்றத்தை பயன்படுத்திக் கொள்வது என்பவற்றை முற்றாக நிராகரிப்பது என்பது அப்பாவித்தனமானது: சிறுபிள்ளைத்தனமா னது: சில சந்தர்ப்பங்களில் இது பாராளுமன்ற பிழைப்புவாதிகளது அசிங்க ங்கள் தொடர்பான அருவருப்பில் இருந்து பிறப்பதாக இருப்பினும் கூட எந்தவொரு விமர்சனத்திற்கும் தாக்குப் பிடிக்கும் வல்லமையற்றது. ஏனெ னில் இது புரட்சிகர நோக்கில் பாராளுமன்றத்தை பயன்படுத்துவதற்கான சாத்தியப்பாடுகளை காணத்தவறுகிறது. மேலும் இந்த நிலைப்பாடானது கட்சியின் பாத்திரம் குறித்த தவறான நிலைப்பாட்டுடன் அடிக்கடி தொடர்பு டையதாகவும் இருக்கிறது. இந்த கண்ணோட்டமானது கொம்யூனிஸ்ட்டு கட்சியை தொழிலாளரது அதிரடிப் படையாக பார்க்காமல், வெறுமனே பல்வேறு குழுக்களது மையப்படாத சேர்க்கையாக காண்கிறது.

17. இதன் மறுதலையாக, பாராளுமன்ற நடவடிக்கைகளை ஏற்றுக் கொள் வது என்பது, எல்லா சந்தர்ப்பங்களிலும் பாராளுமன்ற தேர்தல்களில் கல ந்து கொள்வதையும், பாராளுமன்ற அமர்வுகளில் பங்கு கொள்வதையும் கட்டாயமாக, முற்றாக வலியுறுத்துவதாக அர்த்தப்படுத்திக் கொள்வதும் சரியானதல்ல. இந்த முடிவானது பலவிதமான தொடர்ச்சியான குறிப்பான நிலைமைகளைச் சார்ந்ததாக இருக்கிறது. சில குறிப்பான நிலைமைகளின் கீழ் பாராளுமன்றத்தில் இருந்து பின்வாங்கிக் கொள்வது அவசியமானதாக இருக்கலாம். இதனைத்தான் போல்சேவிக்குகள் பாராளுமன்றத்தை கூட்டுவதற்கான முயற்சிகளின் போது அதில் கலந்து கொள்ள மறுப்பதன் மூலமாக செய்தார்கள். எழுச்சியின் தொடக்க காலத்தில் அதனை நீர்த்துப் போகச் செய்து, புதிதாக உருவாகி வந்த சோவியத்துக்களது வீரியத்தை அபகரிக்கும் நோக்குடன் பாராளுமன்றமானது கூட்டப்படும் நிலையில் அந்த முயற்சியை முறியடிக்கும் நோக்கத்துடன் இந்த புறக்கணிப்பைச் செய்தா ர்கள். அரசியலமைப்புச் சபையை கலைக்கும் தினத்திலும் இதனையே செய்தார்கள். இப்படி செய்ததன் மூலமாக சோவியத்துக்களது மூன்றாவது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பேராயத்தை அரசியல் நிகழ்வுகளின் மிகவுயர்ந்த செயற்பாடாக ஆக்கினார்கள். இப்படியாக சூழ்நிலைகளின் தேவைக் கேற்ப தேர்தலைப் புறக்கணித்து முதலாளித்துவ அரச இயந்திரத்தை மாத்திரமன்றி, முதலாளித்துவ ஆளும் குழுமத்தையும் கூட உடனடியாக, வன்முறை மூலமாக அகற்றுவது அவசியமாகலாம்: அல்லது இதன் மறுதலையாக பாராளுமன்றத்திற்கான தேர்தல்களில் கலந்து கொள்ளும் அதே சமயம், பாராளுமன்ற அமர்வுகளில் கலந்து கொள்வதை புறக்கணிப்பதும் கூட தேவைப்படலாம்.

18. மத்தியிலுள்ள பாராளுமன்றத்திற்கான தேர்தல்களில் மாத்திரமன்றி, உள்ளூராட்சி அமைப்புக்களுக்கான தேர்தல்களிலும் கூட கலந்து கொள்வதும், இந்த அமைப்புக்களில் பணியாற்றுவதன் தேவையையும் பொதுவான ஒரு கொள்கை என்றளவில் கொம்யூனிஸ்ட்டு கட்சிகள் ஏற்றுக் கொள்கிற போதிலும், நடைமுறையில் இந்த முடிவுகள் ஒவ்வொன்றும் தம்முன்னுள்ள நிலைமைகளை குறிப்பாக எடுத்துக் கொண்டு புறநிலையாக மதிப்பீடு செய்வதன் மூலமே மேற்கொள்ளப்பட வேண்டும். ஆயுத போராட்டம் மூலமாக அதிகாரத்தை கைப்பற்றுவதற்கான நிலைமைகள் கனிந்துள்ள சூழ்நிலைகளில் மாத்திரமே பாராளுமன்ற தேர்தல்களை புறக்கணிப்பது, அல்லது தேர்தல்களில் கலந்து கொண்ட பின்பு அதன் அமர்வுகளில் கலந்து கொள்ளாமல் விடுவது அனுமதிக்கத்தக்கதாகும்.

19. இந்த போக்கில் பாராளுமன்றம் பற்றிய பிரச்சனையின் சார்பளவில் முக்கியத்துவமற்ற தன்மையை ஒருவர் மனதில் எப்போதும் இருத்திக் கொள்ள வேண்டும். அரசதிகாரத்தை கைப்பற்றுவதற்கு பாராளுமன்றத்திற்கு வெளியில் நடைபெறும் போராட்டத்தில்தான் ஒரு புரட்சியின் புவியீர்ப்பு மையம் இருக்கிறது என்பதை மறந்துவிடக் கூடாது. இதனால் பாட்டாளி வர்க்க சர்வாதிகாரப் பிரச்சனை மற்றும் அதனை ஏற்படுத்துவதற்கான வெகுஜன போராட்டம் என்பவை ஒரு போதும் பாராளுமன்றத்தை பயன்படுத்திக் கொள்வது தொடர்பாக பிரச்சனைக்கு சமமான தளத்தில் வைத்து பார்க்கப்பட முடியாது என்பது இதிலிருந்து பிறக்கிறது.

20. இதனால் கொம்யூனிஸ்ட்டு அகிலமானது பாராளுமன்றத்தை பயன்படுத்துவது என்ற நோக்கில் அல்லது இந்த ஒரே பிரச்சனையின் அடிப்படையில் கொம்யூனிஸ்ட்டு கட்சிகளை பிளவுபடுத்துவது அல்லது அவற்றினுள் பிளவுகளை ஏற்படுத்த முனைவதானது தவறான செயற்பாடு என்று கடுமையாக வலியுறுத்துகிறது. முதலாளித்துவ பாராளுமன்றத்தை பயன்படுத்துவது தொடர்பான பிரச்சனையில் இருக்கக் கூடிய அபிப்பிராய பேதங்களைக் கடந்து, மத்தியப்படுத்தப்பட்ட கட்சியின் தலைமையில், புரட்சிகர பாட்டாளி வர்க்கத்தின் செல்வாக்கை தொழிலாளர் வர்க்கத்தின் வெகுஜன அமைப்புக்கள் மீது ஏற்படுத்தி அதன் மூலமாக, பாட்டாளி வர்க்க சர்வாதிகாரத்திற்கான போராட்டத்தை நடத்துவது என்பதை ஏற்றுக் கொண்டுள்ள அனைத்து சக்திகளையும், கொம்யூனிஸ்ட்டு பிரிவுகளது ஐக்கியத்திற்காக பாடுபடுமாறு இந்த கொங்கிரசானது கேட்டுக் கொள்கிறது.

## புரட்சிகர பாராளுமன்றவாதம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



புரட்சிகர பாராளுமன்ற தந்திரோபாயங்களை முறையாக கையாள்வதை உத்தரவாதப்படுத்திக் கொள்வதற்காக பின்வரும் நிலைமைகள் அவசிய மானவை.

1. *தேர்தலுக்கு முன்பான தயாரிப்பு காலத்தில் முழு கட்சியும் அதன் மத்திய குழுவும் கட்சியின் பாராளுமன்ற குழுவிற்கான நபர்களை அவர்களது அரசியல் மற்றும் அமைப்புத் துறை சார்ந்த தகுதிகளின் பரிசீலனை செய்து தேர்ந்தெடுக்க வேண்டும். பாராளுமன்ற குழுவின் அனைத்து நடவடிக்கைகளுக்கும் கட்சியின் மத்திய குழு பொறுப்பாக இருக்க வேண்டும். எந்தவொரு அமைப்பினாலும் முன்மொழிந்த வேட்பாளர்கள், தாம் தேர்ந்தெடுக்கப்படும் இடத்தில் தம்மை உண்மையான கொம்யூனிஸ்டாக நடப்பார் என்பதை உத்தரவாதப்படுத்திக் கொள்ள முடியாத பட்சத்தில், அவர்களை நிராகரிக்கும் முழு உரிமையும் மத்திய குழுவிற்கு இருக்க வேண்டும். சமூக ஜனநாயக கட்சிகளின் பாரம்பரியமான ''அனுபவம் வாய்ந்த'' பாராளுமன்றவாதிகள் என அழைக்கப்டும் நபர்களை, முக்கியமாக சட்டத்தரணிகளை, மாத்திரம் வேட்பாளர்களாக நியமிப்பது என்ற பாராம்பரியத்தில் இருந்து கொம்யூனிஸ்ட்டு கட்சிகள் முறித்துக் கொள்ள வேண்டும். தொழிலாளர்களை தமது வேட்பாளர்களாக நியமிப்பது என்பதை விதியாக கொள்ள வேண்டும். இது சில சமயங்களில் பாராளுமன்ற அனுபவங்கள் எதுவுமற்ற சாதாரண அணிகளைச் சேர்ந்த, பெரிய அளவிலான பாராளுமன்ற அனுபவங்கள் எதுவுமற்ற, தொழிலாளர்களை நியமிப்பதாக இருக்கலாம்: ஆனால் இதனையிட்டு கவலைப்படக் கூடாது. கொம்யூனிஸ்ட்டு கட்சியுடன் இணைந்து கொள்வதால் பாராளுமன்றத்திற்கு தாம் தேர்ந்தெடுக்கப்படும் வாய்ப்பு கிடைக்கும் என்ற எண்ணத்தில் கட்சியை நோக்கி வரும் பிழைப்புவாத அரசியல்வாதிகளையிட்டு கொம்யூனிஸ்ட்டு கட்சியானது எந்தவிதமான ஈவிரக்கமும் காட்டக் கூடாது. தமது நீண்டகால செயற்பாட்டின் மூலமாக தாம் தொழிலாளர் வர்க்கத்திற்கு விசுவாச மானவர்கள் என்பதை நடைமுறையில் நிரூபித்த நபர்களையே மக்களது வேட்பாளர்களாக கொம்யூனிஸ்ட்டுக் கட்சிகள் நியமிக்க வேண்டும்.*

2. *தேர்தலை அடுத்து வென்றெடுக்கப்பட்ட பாராளுமன்ற குழுவின் பொறுப்பானது மத்திய குழுவின் பொறுப்பில் இருக்க வேண்டும்: இது கட்சியின் தலைமறைவு நிலை அல்லது சட்டபூர்வமான அந்தஸ்த்தை பெற்றுள்ள நிலைமை ஆகிய இரண்டு நிலைமைகளின் கீழும் விதிவிலக்கின்றி ஒரே மாதிரியான கட்டுப்பாட்டிலேயே இருக்க வேண்டும். கட்சியின் பாராளுமன்ற குழுவின் தலைமை அங்கங்களை கொம்யூனிஸ்ட்டு கட்சியின் மத்திய குழு உறுதி செய்தாக வேண்டும். மத்திய குழுவின் அங்கத்துவர் ஒருவர் இந்த பாராளுமன்ற குழுவில் நிரந்தரமாக இடம் பெறுவார். இவர் இரத்து செய்யும் (வீட்டோ) அதிகாரம் கொண்டவராக இருப்பார். பாராளுமன்ற குழுவானது மத்திய குழுவிடம் இருந்து முக்கியமான அரசியல் பிரச்சனைகள் தொடர்பாக முன் வழிகாட்டுதல்களை பெற்றுக் கொள்ள வேண்டும். பாராளுமன்றத்தில் உள்ள கொம்யூனிஸ்ட்டுகள், அங்கு சில*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



*முக்கியமான இயக்கங்களை முன்னெடுக்கும் போது பாராளுமன்ற குழுவைச் சேர்ந்த எந்த நபர்களை குறிப்பிட்ட பணிகளில் நியமிப்பது மற்றும் எந்த நபர்களை நிராகரிப்பது போன்ற கடமையும் உரிமையும் கட்சியின் மத்திய குழுவுக்கு இருக்கிறது: அத்தோடு குறிப்பிட்ட அங்கத்தவரிடம் இருந்து அவரது உரைக்கான ஆரம்ப குறிப்புக்களை அல்லது முழு உரையையுமே கேட்டுப் பெற்று, வாசித்து அதனை அங்கீகரிக்கம் உரிமையும் கட்சியின் மத்தியக் குழுவிற்கு இருக்கிறது. கொம்யூனிஸ்ட்டுகளாக தேர்தலில் நிற்கும் அபேட்சகர்கள் தாம் கட்சியின் மத்திய குழுவானது தம்மை கேட்டுக் கொள்ளும் பட்சத்தில் தமது பதவிகளை துறந்துவிடத் தயார் என்று எழுத்து மூலமாக சம்மத்தை கொடுக்க வேண்டும். இதனால் கட்சியின் மத்திய குழுவானது, குறிப்பான தேவைகள் எழும் சந்தர்ப்பங்களில் ஒட்டு மொத்தமாக அனைத்து பாராளுமன்ற உறுப்பினர்களையும் இராஜிநாமா செய்விப்பதனால், ஒட்டு மொத்தமாக நாடாளுமன்றத்தை விட்டு வெளியேற முடியும்.*

3. *ஏற்கனவே சீர்திருத்தவாத, அரைகுறை சீர்திருத்தவாத, பிழைப்புவாத நபர்கள் ஏற்கனவே கொம்யூனிலஸ்ட்டு கட்சியின் பாராளுமன்ற குழுவில் அங்கம் வகித்துவரும் நிலையில் (சில நாடுகளில் நிலைமைகள் அப்படித் தான் இருக்கிறது) கொம்யூனிஸ்ட்டு கட்சியின் மத்திய குழுவானது இந்த சந்தர்ப்பவாத கூறுகளை களையெடுக்க வேண்டும். கொள்கையற்ற ஒரு பெரிய கூட்டத்தைப் பார்க்கிலும், ஒரு சிறிய ஆனால் உறுதியான கொம்யூனிஸ்ட்டுகளினால், தொழிலாளர் வர்க்கத்தின் நலன்களுக்கு அதிகம் பணியாற்ற முடியும் என்பதே இங்கு வழிகாட்டும் நெறியாக இருக்க வேண்டும்.*

4. *மத்திய குழுவானது தீர்மானிக்கும் பட்சத்தில் பாராளுமன்றத்தின் கொம்யூனிஸ்ட்டு பிரதிநிதிகள் சட்டரீதியான பணிகளையும், சட்டவிரோதமான பணிகளையும் இணைத்து முன்னெடுக்க வேண்டும். பாராளுமன்ற அங்கத்தினர்கள் சட்டரீதியாக சில பாதுகாப்புக்களை அனுபவிக்கும் நாடுகளில், இவர்கள் தமது இந்த சலுகைகளை கட்சியின் சட்டவிரோதமான, அமைப்புத்துறை மற்றும் பிரச்சார பணிகளுக்கு பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.*

5. *கொம்யூனிஸ்ட்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது அனைத்து பாராளுமன்ற நடவடிக்கைகளையும், கட்சியினது பாராளுமன்றத்திற்கு அப்பாலான பணிகளுக்கு கீழ்படுத்திக் கொள்ள வேண்டும். கொம்யூனிஸ்ட்டு பாராளுமன்ற பிரிவினர் தொடர்ச்சியாக சில சட்ட முன்மொழிவுகளை மேற்கொள்வதை கட்சியும், அதன் மத்திய குழுவும் நிச்சயப்படுத்திக் கொள்ள வேண்டும்: இது முதலாளித்துவ பாராளுமன்றம் இவற்றை ஏற்றுக் கொண்டு சட்டமாக்கும் என்ற நம்பிக்கையில் மேற்கொள்ளப்படுபவை அல்ல: மாறாக, கட்சியின் பிரச்சாரம், கிளர்ச்சி, மற்றும் அமைப்புத்துறை பணிகளை நோக்காக கொண்டவை.*

6. *தொழிலாளர் வர்க்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட வீதி ஆர்ப்பாட்டங்களோ அல்லது வேறு புரட்சிகர நடவடிக்கைகளோ நடைபெறும் பட்சத்தில் கொம்யூனிஸ்ட்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் இவற்றில் கலந்து*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



*கொள்வதுடன், இப்படிப்பட்ட நிகழ்வுகளில் பாட்டாளி வர்க்கத்தின் தலைமை என வெளிப்படையாக தெரியும் விதத்தில் நடந்து கொள்ள வேண்டும்.*

7. *கொம்யூனிஸ்ட்டு பாராளுமன்ற உறுப்பினர்கள், தாம் கட்சியின் கட்டுப்பாட்டிற்குள் செயற்படும் போதே, தமக்கு கிடைக்கும் அத்தனை சந்தர்ப்பங்களையும், பத்திரிகைள் மூலமாகவும் ஏனைய வழிமுறைகள் மூலமாகவும், புரட்சிகர தொழிலாளர், விவசாயிகள், மற்றும் ஏனைய உழைக்கும் மக்கள் ஆகியோருடன் தமக்குள்ள உறவுகளை பலப்படுத்த பயன்படுத்திக் கொள்ள வேண்டும். ஏனைய சமூக ஜனநாயக கட்சியினர் போன்று இவர்கள் எந்தவொரு சந்தர்ப்பங்களிலும், தமது வாக்காளர்களுடன் தனிப்பட்ட வர்த்தக உறவுகளை வளர்த்துக் கொள்ள எந்த சந்தர்ப்பத்திலும் அறவே முயலக் கூடாது. இவர்கள் எல்லா சந்தர்ப்பங்களிலும் கொம்யூனிஸ்ட்டு அமைப்பின் பிரச்சாரத்தை முன்னெடுக்க தயாராக இருக்க வேண்டும்.*

8. *கொம்யூனிஸ்ட்டு பாராளுமன்ற உறுப்பினர்கள் எல்லா சந்தர்ப்பங்களிலும் ஒரு விடயத்தை மனதில் நன்கு பதிய வைத்திருக்க வேண்டும்: இவர்கள் ஏனைய பாராளுமன்ற உறுப்பினர்களுடன் கருத்திணக்கத்தை ஏற்படுத்தி உடன்பாடுகளை ஏற்படுத்த வந்தவர்கள் அல்லர்: மாறாக எதிரியின் முகாம்களுக்குள் கட்சியின் செயற்பாடுகளை மேற்கொள்வதற்காக அனுப்பி வைக்கப்பட்ட கட்சியின் கிளர்ச்சியாளர்கள் என்பதை மறந்து விடக் கூடாது. பாராளுமன்றத்தினுள் செயற்படும் கொம்யூனிஸ்ட்டு அங்கத்தவர்கள் கொம்யூனிஸ்ட்டு கட்சிக்குத்தான் - கட்சி சட்டபூர்வமானதாகவோ அல்லது சட்டவிரோதமானதாகவோ இருப்பினும் கூட - பொறுப்பு சொல்லக் கடமைப்பட்டவர்களே அன்றி, சிதறடிக்கப்பட்டிருக்கும் மக்களுக்கு அல்ல.*

9. *கொம்யூனிஸ்ட்டு கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களது பாராளுமன்ற உரைகள் ஒவ்வொரு அடிமட்ட தொழிலாளர், விவசாயிகள், மற்றும் சாமான்ய உழைப்பாளிகள் அனைவரினாலும் புரிந்து கொள்ளத் தக்கதாக இருக்க வேண்டும். கட்சியானது தனியான பிரசுரங்களாக தயாரித்து மிகவும் தொலைவில் உள்ள கிராமப்புற மூலைமுடுக் கெல்லாம் கொண்டு சேர்க்க வேண்டும்.*

10. *சாதாரண அடிமட்டத்தில் இருந்து வரும் தொழிலாளர்கள் - கொம்யூனிஸ்ட்டுகள் முதலாளித்துவ பாராளுமன்றங்களில் பேசுவதற்கு பயப்படவே கூடாது. இந்த தொழிலாளர்கள் பாராளுமன்ற பணிகளுக்கு புதியவர்களே ஆனாலும் கூட, "அனுபவம்வாய்ந்த" பாராளுமன்றவாதிகள் என்று சொல்லப்படுபவர்கள் குறித்து அஞ்சக் கூடாது, தேவைப்பட்டால் இந்த அங்கத்தவர்கள் தமது உரைகளை குறிப்புக்களில் இருந்து வாசிக்கலாம். பின்பு இந்த பேச்சுக்கள் பத்திரிகைகளிலும், பிரசுரங்களாகவும் வெளியிடப்படலாம்.*

11. *பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் கொம்யூனிஸ்ட்டு அங்கத்தவர்கள் அந்த மேடையை வெறுமனே முதலாளித்துவத்தையும், அதன் தீவிர ஆதரவாளர்களையும் விமர்சிப்பதற்காக மாத்திரம் அன்றி, ஏனைய சீர்திருத்தவாத, ஊசலாட்டக்காரர்கள், சந்தர்ப்பவாத சக்திகள் போன்றவ*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



*ற்றை அம்பலப்படுத்தவும் பயன்படுத்த வேண்டும். அவ்வாறே அவர்கள் இந்த சந்தர்ப்பங்களை மூன்றாவது அகிலம் பற்றிய செய்திகளை பரப்பவும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.*

*12. பாராளுமன்றத்தில் ஒன்று அல்லது இரண்டு கொம்யூனிஸ்ட்டு பிரதிநிதிகள் மாத்திரமே இருந்தாலும் கூட இவர்களது நடத்தைகள் முதலாளித்துவத்திற்கு சவால்விடுவதாக அமைந்திருக்க வேண்டும். முதலாளித்து சக்திகளுக்கும் அவர்களது "சமூக-தேசபற்று" வால்களுக்கும் விடாப்பிடியான பகைமையை வெளிப்படுத்தினால் மாத்திரமே இவர்கள் கொம்யூனிஸ்ட்டுகள் என்ற பெயருக்கு தகுதியானவர்களாக இருக்க முடியும் என்பதை எப்போதும் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்.*

மேலே உள்ள இரண்டு பகுதிகளிலும், சாதாரண நிலைமைகளில் நாம் செய்ய விரும்பாததும், அனுமதிக்கத் தக்கதும் இல்லாத அளவிற்கு மிகவும் நீண்ட மேற்கோள்களை லெனினது 'இடதுசாரி கொம்யூனிசம் ஓர் இளம்பருவக் கோளாறு' எனும் நூலில் இருந்தும், லெனினது வழிகாட்டுதலில் ஏனைய போல் சேவிக் தலைவர்களினாலும் புரட்சிர பாராளுமன்றவாதம் குறித்து வகுத்தளித்த கருத்துக்களை மிகவும் விரிவாக முன்வைத்துள்ளோம். சாதாரண நிலைமைகளின் கீழ் இது அவ்வளவு விரும்பத்தகாத ஒரு நிகழ்வாக இருந்த போதிலும், எமது தமிழ் சூழலில் பாராளுமன்றவாதம் குறித்து கட்டமைக்கப்பட்டுள்ள ஒரு கருத்தமைவை சில திட்டவட்டமான கோட்பாட்டு சாதனங்களின் துணையுடன் முகம் கொடுப்பதற்கு இவை மிகமிக அவசியமானது எனக்கருதியே இவ்வளவு விரிவாக இதனை செய்ய நேர்ந்தது. இனிவரும் பகுதிகளில் இதன் வெளிச்சத்தில் நாம் எமது சமூகத்தில் முகம் கொடுக்க நேரும் பாராளுமன்றவாதம் குறித்த கருத்துக்களை முகம் கொடுக்கத் தொடங்குவோம்.

## 11

மேலே குறிப்பிட்ட 'இடதுசாரி கொம்யூனிசம் ஒரு இளம்பருவக் கோளாறு' மற்றும் மூன்றாவது அகிலத்தின் இரண்டாவது கொங்கிரசில் மேற்கொள்ளப்பட்ட பாராளுமன்றவாதம் தொடர்பான தீர்மானம் ஆகிய இரண்டும் மார்க்சியத்தின் வரலாற்றில் மிகவும் முக்கியமான இரண்டு ஆவணங்களாகும். இந்த இரண்டு ஆவணங்களுமே சந்தேகத்திற்கோ, குழப்பங்களுக்கோ இடம் தராதவகையில் பாராளுமன்றம் தொடர்பாக புரட்சிகர கட்சிகளின் நிலைப்பாடுகள் எப்படிப்பட்டதாக இருக்க வேண்டும் என்று தெட்டத் தெளிவாக வரையறுத்து இருக்கிறது. இதுவே அடுத்து வந்த சுமார் ஐம்பது ஆண்டுகால புரட்சிகர இயக்கங்களின் நடைமுறையாகவும் இருந்தது. அப்படியிருக்க இந்த பாராளுமன்ற புறக்கணிப்புவாதம் எப்படி எமது பிராந்தியத்தில் புரட்சிகர தாபனங்கள் என்று கூறப்படுவனவற்றின் பிரதான போக்காக வந்தது என்ற கேள்வி எழுகிறது. சரி அப்படித்தான் வந்தாலும் கூட இந்த முடிவை வந்தடைந்ததற்கான காரணங்களை கோட்பாட்டுரீதியாக முன்வைத்தார்களா என்றால் அதுவும் கிடையாது. மிகவும் குறுகிய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அர்த்தத்திலான சுலோகங்களே பதிலாக வருகின்றன. இவை பற்றி பின்னால் பரிசீலிப்போம். இப்போது இந்த நிலைப்பாடுகள் மேற்கொள்ளப்பட்ட சூழலை ஒரு தடவை நாம் பார்த்துச் செல்வோம்.

ஸ்டாலினின் மறைவை அடுத்து சோவியத்யூனியனில் ஆட்சிபீடம் ஏறிய குருசேவ் பலவிதமான திரிபுவாத நிலைப்பாட்டை முன்னெடுத்தார். பாராளுமன்றவாதம் தொடர்பான விடயங்கள் இவற்றில் குறிப்பான முக்கியத்துவம் பெற்றனவாக இருந்தன. சோவியத்யூனியன் ஏற்கனவே சோசலிச காலகட்டத்தை நிறைவு செய்து விட்டதாகவும், இதற்கு மேல் கொம்யூனிசத்தை கட்டமைக்கும் கட்டத்தில் நுழைவதனால் இதற்குமேல் வர்க்க போராட்டம் என்பது தேவையற்றது எனவும், சமாதானபூர்வமாகவே தாம் அதனை அடையலாம் எனவும் முன்மொழிந்தார். அத்துடன் உலகலாவிய அளவில் முதலாளித்துவ அமைப்பை போட்டியின் மூலமே முறியடிக்கலாம் என்பதால் இதற்கு மேல் வர்க்க போராட்டத்தை கைவிட்டுவிட்டு, சமாதான வழியில் பாராளுமன்றம் மூலமாக சோசலிசத்திற்கு செல்வது குறித்து குருசேவ் முன்மொழிந்தார். அவ்வாறே உலக கொம்யூனிச இயக்கத்தில் இருந்த கட்சிகளையெல்லாம் பாராளுமன்றவாதத்தை நோக்கி அழைத்தார். இப்படிப்பட்ட திரிபுவாத நிலைப்பாடுகளை எதிர்த்து மாவோ தலைமையிலான சீன கொம்யூனிஸ்ட்டுக் கட்சியானது தீவிரமான போராட்டத்தை முன்னெடுத்தது. வர்க்க போராட்டத்தை தீவிரமாக வலியுறுத்திய இவர்கள் பாராளுமன்ற பாதை மூலமாக சோசலிசத்தை அடையமுடியும் என்ற முன்மொழிவை நிராகரித்தார்கள். மார்க்சியத்தின் வரலாற்றில் பெர்சன்ரைன், கோட்ஸ்கி ஆகியோர் முன்வைத்த அதே பழைய சீர்திருத்தவாதமே இதுவென்பதை சுட்டிக்காட்டினார்கள். அத்தோடு கடந்தகாலத்தில் இந்த பாதையை மேற்கொண்ட இடதுசாரி கட்சிகள் எவ்வாறு சீரழிந்து போயின என்பதையும் விளக்கமாக முன்வைத்தார்கள். பாராளுமன்றம் தொடர்பாக ஏற்கனவே மேற்கொள்ளப்படடிருந்த நிலைப்பாட்டை - அதாவது பிரசாரம் மற்றும் கிளர்ச்சி போன்ற மட்டுப்படுத்தப்பட்ட தேவைகளுக்காக மாத்திரம் புரட்சியாளர்கள் பாராளுமன்றத்தை பயன்படுத்திக் கொள்ள முடியுமே அன்றி, பாராளுமன்றத்தில் இதற்குமேல் எதனையும் எதிர்பார்ப்பது அப்பட்டமான சந்தர்ப்பவாதமே என்று இவர்களது ஆவணம் விளக்கியது. ஆனால் இந்த ஆவணத்தில் எந்தவொரு நிலையிலும் பாராளுமன்ற புறக்கணிப்பு பற்றிய பேச்சுக்கே இடம் இருக்கவில்லை.

> ‘‘முதலாளிகளின் பிற்போக்கு தன்மையை அம்பலப்படுத்தவும், மக்களுக்கு கற்றுக் கொடுக்கவும், புரட்சிகர வலிமையை சேகரித்துக் கொள்ள உதவவும், குறிப்பான சூழ்நிலைமைகளில் பாட்டாளி வர்க்கக் கட்சி பாராளுமன்றப் போராட்டத்தில் பங்கு கொள்ள வேண்டும் என்றும், பாராளுமன்ற மேடையை பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றும் மார்க்சிய-லெனினியவாதிகள் எப்போதும் கூறி வருகிறார்கள். தேவைப்படும்போது இந்த சட்டபூர்வமான போராட்ட வடிவத்தை பயன்படுத்திக் கொள்ள மறுப்பது தவறாகும். ஆனால்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பாட்டாளி வர்க்க கட்சி ஒருபோதும் பாட்டாளி வர்க்க புரட்சிக்கு மாற்றாக பாராளுமன்ற போராட்டத்தைக் கருதக்கூடாது அல்லது சோசலிசத்துக்கான மாற்றத்தை பாராளுமன்ற பாதையின் மூலம் சாதித்துவிடலாம் என்ற மாயை யில் ஆழ்ந்துவிடக்கூடாது. அது எல்லா சமயங்களிலும் வெகுஜனப் போரா ட்டங்களிலேயே கவனம் செலுத்தவேண்டும்.

லெனின் கூறினார்:

“புரட்சிகர பாட்டாளி வர்க்க கட்சி மக்களை விழிப்படைய செய்யும் பொரு ட்டு முதலாளித்துவ பாராளுமன்றத்தில் பங்கெடுக்க வேண்டும். தேர்தல்க ளின் போதும், பாராளுமன்றத்தில் கட்சிகளுக்கு இடையில் நடக்கும் போரா ட்டங்களின் போதும் அவ்வாறு செய்ய முடியும். ஆனால் வர்க்க போராட்ட த்தை பாராளுமன்ற போராட்டமாக குறுக்கிவிடுவது, பாராளுமன்றப் போரா ட்டத்தை உயர்ந்தபட்ச, தீர்மானகரமான வடிவமாக்கி அனைத்து போராட்ட வடிவங்களையும் இதற்குட்பட்டவையாக்குவது உண்மையில் பாட்டாளி வர்க்கத்துக்கு எதிராக முதலாளித்துவத்தின் பக்கம் ஓடிவிடுவதாகும்”

1964, மார்ச் 31 ம் திகதியிட்ட சீன கொம்யூனிஸ்ட்டு கட்சியின் விமர்சனத்தில் இப்படிபட்ட ஒரு நிலைப்பாடே முன்வைக்கப்படுகிறது (மாபெரும் விவாதம் - பக் 608). ஆனால் இந்த விவாதங்கள் நடந்து முடிந்த ஒரு குறுகிய காலத்தி னுள்ளேயே பாராளுமன்ற புறக்கணிப்புவாதமானது இந்திய கொம்யூனிஸ்ட்டு க்கட்சியின் (மார்க்சிய - லெனினிய) பிரிவானது சாரு மஜூம்தார் தலைமையில் உருவாகி அது பாராளுமன்ற புறக்கணிப்புவாதத்தை முன்வைக்கிறது. தம்மை மாவோயிஸ்ட்டுகள் எனவும், மார்க்சிய - லெனினியவாதிகள் எனவும் திரும் பத்திரும்ப வலியுறுத்தும் இந்திய மா-லெ குழுக்களது பாராளுமன்ற புறக்கணி ப்புவாதமானது எவ்வாறு மார்க்சிய - லெனினிசத்தின் போராலும், மாவோவின் பேராலும் முன்வைக்கப்படுகிறது என்பது இங்கு முக்கியமான கேள்வியாக எழுகிறது. இதற்கான விடையை காணும் வகையில் இந்திய கொம்யூனிஸ்ட்டு கட்சி (மா-லெ) இனது கோட்பாட்டு இதழான ‘லிபரேசனை’ இன்னும் பரிசீலிப் போம். 1968ம் ஆண்டு ஜூன் மாத இதழில் முதன் முறையாக தேர்தல் புறக்க ணிப்பை கட்சி முன்வைக்கிறது. இந்த முன்மொழிவின் சாராம்சம் பின்வருமாறு அமைகிறது.

ஏகாதிபத்தியம் வீழ்ச்சியுற்று, சோசலிசம் வெற்றி பெறும் இன்றைய கால கட்டத்தில் முதலாளித்துவ பாராளுமன்ற நிறுவனமானது வரலாற்றுரீதியில் காலாவதியாகிவிட்டது. இந்தியா போன்றதொரு அரைக்கொலனித்துவ, அரைநிலப்பிரபுத்துவ நாட்டில் புரட்சிக்கு தடையாக அமைந்துவிட்டது. நக்ச ல்பாரி இயக்கமானது பாராளுமன்றவாதத்தை இடுகாட்டிற்கு அனுப்பிவிட்டு ள்ளது. நாம் தேர்தலை புறக்கணிக்கும் அதேசமயத்தில் புதிய ஜனநாயகப் புரட்சியில் இணைந்துகொள்ளுமாறு வேண்டுகோள் விடுகிறது.

இந்திய கொம்யூனிஸ்ட்டு கட்சி (மார்க்சிஸ்ட்டு) யினுள் இருந்த புரட்சியாள



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ர்கள் அந்த கட்சியின் சந்தர்ப்பவாத பாராளுமன்றவாத போக்கில் அதிருப்தியுற்று வெளியில் வந்து, பின்பு இந்திய கொம்யூனிஸ்ட்டுக் கட்சி (மார்க்சிஸ்ட்டு - லெனினிஸ்ட்) என்ற அமைப்பை உருவாக்கினார்கள். இவர்கள் சிபிஎம் கட்சியில் இருந்த வலதுசாரி சந்தர்ப்பவாதங்களின் எதிர்விளைவாக, இடது சந்தர்ப்பவாத நிலைப்பாடுகள் பலவற்றை மேற்கொண்டார்கள். இவர்களது முக்கியமான நிலைப்பாடுகள் பின்வருமாறு அமைந்தன.

- இந்திய சமூகத்தை அரைக்கொலனித்துவ, அரைநிலப்பிரபுத்துவ சமூகமாக வரையறுத்தல்.
- கிராமப்புறங்களில் தளப்பிரதேசங்களை அமைத்து விவசாயிகளது போரட்டத்திற்கு தலைமை தாங்குவது.
- வர்க்க எதிரிகளை அழித்தொழிப்பது.
- பாராளுமன்ற புறக்கணிப்பு.
- நீதிமன்ற புறக்கணிப்பு.

இவற்றில் பல்வேறு நிலைப்பாடுகளும் பின்நாட்களில் சாருவின் வழிவந்தவர்களினால் இடது தீவிரவாத வகைப்பட்டவை என்று கைவிடப்பட்டதுண்டு. இவற்றைவிட 'சீனத்தலைவர் எமது தலைவர்' போன்ற கோசங்கள், சாருவின் தன்னிச்சையான செயற்பாடுகள் போன்ற பல்வேறு விடயங்களும் கட்சியினுள் பலத்த பிரச்சனைகளை உருவாக்கின. அதிலும் சீன கொம்யூனிஸ்ட்டு கட்சியின் தலைவர்களே இவர்களுக்கு பல விமர்சனங்களை முன்வைத்ததும் நடந்தது. இது பிற்காலத்தில் பலவிதமான பிளவுகளுக்கும், புதிதாக உருவாகிய குழுக்கள் பல்வேறு புதிய நிலைப்பாடுகளை மேற்கொள்வதற்கும் வழிவகுத்தன.

மா-லெ அமைப்புக்களின் முக்கியமான பிரச்சனைக்குரியதாக இருந்த விடயம் **இந்திய சமூகத்தின் புரட்சிகர தயார்நிலை பற்றிய மதிப்பீடு என்று சொன்னால் அது மிகைப்படுத்தலாகமாட்டாது.** ஏனெனில் ஏனைய பெரும்பாலான நிலைப்பாடுகள் இந்திய சமூகம் ஒரு புரட்சிக்கு தயாராக இருக்கிறது என்ற நிலைப்பாட்டில் இருந்தே மேற்கொள்ளப்பட்டன. ஒரு சமூகத்தில் புரட்சிக்கான நிலைமைகள் முற்றிவிட்டனவாக என்பதை கண்டறிவது எப்படி என்பதை லெனின் விளக்கியிருக்கிறார். **"புரட்சி நடைபெற வேண்டுமானால், சுரண்டலாளர்கள் பழைய வழியில் ஆட்சி நடத்தவும் முடியாமற் போவது அவசியமானதாகும். பழைய வழியில் வாழ அடிமட்டத்து வர்க்கங்கள் விரும்பவில்லை, மேல் வர்க்கங்களால் பழைய வழியில் நடத்திச் செல்ல முடியவில்லை என்கிற நிலை ஏற்படும் போதுதான புரட்சி வெற்றி பெற முடியும்"** (இடதுசாரி கொம்யூனிசம்). இதனைவிட ஸ்தூலமாக இதனைக் கண்டறிவதற்கும் பல வழிமுறைகளை ஒரு கட்சி கையாளமுடியும். மக்கள் திரள் புரட்சிகர கட்சியிலும், அதன் தலைமையில் உள்ள பல்வேறு அமைப்புகளிலும் பெருமளவில் அணிதிரண்டிருப்பது: தேர்தல்களில் உழைக்கும் மக்கள் இந்த கட்சிக்கு தமது அமோக ஆதரவை வெளிப்படுத்தியிருப்பது: உழைக்கும் மக்களுக்கும் ஆதிக்க சக்திகளுக்கும் இடையிலான போராட்டங்கள் அரசியல் போராட்டங்களாக வளர்ந்து சென்று,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வீதியில் மோதல்களாக வெடிப்பது: ஏனைய நட்பு சக்திகள் புரட்சிகர சக்திகளுக்கு ஆதரவாக களத்தில் இறங்கத்தயாராக இருப்பது... இப்படிப்பட்ட புறநிலையான அம்சங்கள் மூலமாக ஒரு சமூகம் புரட்சிக்குத் தயாராக இருக்கிறதா என்பதை நாம் கணித்துக் கொள்ள முடியும். ஆனால் இந்தவிதமான புறநிலை அம்சங்கள் எதனையும் கவனத்திற் கொள்ளாமல், தனித்து **தமது அகவயப்பட்ட உணர்வுகளையே மக்கள் மீது ஏற்றிப்பார்க்கும் நிலைமைதான்** இவர்களிடத்தில் நிலவியது. **"இந்தியாவின் ஒவ்வொரு முனையும் வெடிக்கும் தருவாயிலுள்ள எரிமலையைப் போன்றிருக்கிறது"** என்ற மதிப்பீடும், ஒரு **மூன்றாம் உலகயுத்தம் தொடங்கிவிடும் சூழ்நிலையில் இருப்பதாக தவறாக மதிப்பீடு செய்யப்பட்டது. "முன்னோக்கி நடைபோடுங்கள் வெற்றித்திருநாள் சமீபித்திருக்கிறது" என்ற சாருவின் கோசமும் இதனையே வெளிப்படுத்துகிறது.** இதுபோன்ற பல விமர்சனங்களை பின்னால் வந்த குழுக்களது மீள் மதிப்பீட்டு ஆவணங்களில் நாம் காணலாம் (மக்கள் யுத்தம் - பிரசுரிக்கப் படாத ஆவணங்கள்).

இதேவேளை சர்வதேச அளவில் எதிர்ப்புப் போரட்டங்கள் ஒரு பெரும் அலையாக வீசிக்கொண்டிருந்தது. இதனால் அறுபதுகளில் நிலவிய அசாதாரமான சர்வதேச சூழலுடன் இதனை இணைத்துப் பார்ப்பது பயனுள்ளதாக இருக்கும் என்று நினைக்கிறேன். சீனாவில் கலாச்சாரப் புரட்சி நடந்த காலம் அது. லத்தீன் அமெரிக்காவில் கியூபப் புரட்சியை அடுத்து சேகுவேராவின் அலை வீசியது. வியட்நாம் போராட்டம் வெகு தீவிரமான முன்னேறிக் கொண்டிருந்தது. பிரான்சில் மாணவர் - தொழிலாளர் கிளர்ச்சிகள் அரசை ஆட்டம் காணச் செய்யும் அளவுக்கு தீவிரமானவையாக இருந்தன. அமெரிக்காவிலும், மேற்கு ஐரோப்பிய நாடுகளிலும் வியட்நாம் யுத்தத்திற்கு எதிரான ஆர்ப்பாட்டங்களும், அமெரிக்காவில் கறுப்பின மக்களது சிவில் உரிமைக்கான போராட்டங்களும் தீவிரம் பெற்றன. பெண்விடுதலைப் போராட்டத்தின் இரண்டாவது அலை என வர்ணிக்கப்பட்ட பெண்களின் இயக்கத்தின் போராட்டங்கள் தீவிரப்பட்டதும் இக்காலகட்டத்தில்தான். **இப்படிப்பட்ட ஒரு எழுச்சிமிகுந்த சர்வதேச சூழலில், மிகுந்த மனவெழுச்சி கொண்ட நிலையில் மேற்கொள்ளப்பட்ட அகநிலையான (Subjective), சாகசவாத (Adventurism) வகைப்பட்ட முடிவுகளே இவை என்பதை இப்போது வெளிப்படையாக காணமுடியும்.**

உலகில் உள்ள ஒவ்வொரு நாடும், அவற்றின் சமூக, பொருளாதார, கலாச்சார, வரலாறு மற்றும் அவற்றிற்கே உரிய குறிப்பான பிரச்சனைகள் என்றவகையில் மிகவும் தனித்துவமானவை. இதனால் எந்தவொரு நாட்டில் வெற்றி பெற்ற புரட்சியின் மாதிரியும் இன்னோர் நாட்டில் அப்படியே பிரயோகிக்கப்பட முடியாதவையாகும். இப்படி கூறுவதன் அர்த்தம் பல்வேறு நாடுகளின் புரட்சிகர செயற்பாடுகளுக்கிடையில் உள்ள **சர்வவியாபகமான** (Universal) அம்சங்களை மறுப்பதல்ல. மாறாக, அந்த சர்வவியாபக அம்சங்களையும் கடந்து, குறிப்பிட்ட நாட்டின் **குறிப்பான** (Particular) அம்சங்கள் அந்தந்த நாடுகளைச் சேர்ந்த புரட்சியாளர்களது கவனத்தை அதிகம் வேண்டி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



நிற்கின்றன. ஏனெனில் அந்த பிரச்சனைகளை அந்தந்த நாட்டைச் சேர்ந்த புரட்சியாளர்கள் தவிர்த்து வேறுயாரும் பெரியளவில் கவனிக்க, புரிந்து கொள்ள, தீர்வுகாண முயலமாட்டார்கள். இதனால் இந்த குறிப்பான பிரச் சனைகள் என்பவை அந்த குறிப்பான நாட்டின் புரட்சியாளர்களது மிகவும் குறிப்பான கவனத்தை வேண்டி நிற்பவையாகிறது. லெனின் எழுதிய "ரஸ்யாவில் முதலாளித்துவத்தின் வளர்ச்சி", மற்றும் ரோசா லக்சம்பர்க் எழுதிய "போலந்தில் தொழில்துறையின் வளர்ச்சி" போன்ற அசலான கோட்பாட்டு முயற்சிகள் எதுவுமே இந்தியாவில் புரட்சிகர இயக்கங்கள் மத்தியில் இருக்கவில்லை. குறைந்த பட்சம் மாவோவின் ''கிராமப் புறங்களில் வர்க்க பகுப்பாய்வு" என்பது போன்ற படைப்புகளைக் கூட இவர்கள் உருவா க்கவில்லை. இவர்களிடம் இருந்த பிரச்சனை எல்லாம் மாவோவின் இந்த படைப்பை பிரதியெடுத்து தமது கட்சி ஊழியர்களுக்கு சுற்றுக்கு விடலாமா இல்லையா? என்பது பற்றிய பிரச்சனையே. மாவோவுடைய ஹுனான் அறிக் கையை தமது கட்சி ஊழியர்களிடம் படிக்கக் கொடுத்தது திரிபுவாதத்திற்கு இட்டுச் சென்றதான விமர்சனம்தான் எழுந்தது. (மக்கள் யுத்தம் பிரசுரிக்கப்ப டாத ஆவணங்கள்).

மார்க்சிய லெனினியவாதிகள் மாவோயிசத்தை தம்காலத்தின் மிகவும் வளர்ச்சியடைந்த மார்க்சியம் என்று பிரகடனப்படுத்தும் போது, இந்த சுயமான கோட்பாடுச் செயற்பாடு பற்றிய அக்கறை அடிபட்டுப் போகிறது. அதாவது கோட்பாடு தயாராக இருப்பதாகவும், அவற்றை பிரயோகிப்பதே பிரச்சனை என்பது போலவும் ஆகிவிடுகிறது. இதனால் தமது நாட்டின், சமூகத்தின் குறிப் பான, தனிச்சிறப்பான தன்மைகள், அவற்றை முகம் கொடுப்பதற்கு அவசிய மாக தேவைப்படும் **அசலான** (Original) **கோட்பாட்டுச் செயற்பாட்டின்** அவசி யம் இல்லாமற் போகின்றது. இதனால் தமது நாட்டின் பிரச்சனைகளை எவ் வாறு மாவோவின் சிந்தனைக்குள், அவரது சொல்லாடல்களுக்குள், அடைப் பது என்றவகையில் பிரச்சனைகள் அணுகப்படுகின்றனவே அன்றி, தமது நாட் டின் பிரச்சனைகள் எந்தளவிற்கு சீனாவைவிட வேறுபட்ட, தனித்துவமான அம் சங்களைக் கொண்டவை என்ற அக்கறை அடிபட்டுப் போகிறது. 1960களின் பிற்பகுதியில் இருந்த இந்தியாவானது 1930 களில் இருந்த சீனாவின் நிலை மைகளுடன் ஒப்பிடும் போது பல்வேறு அம்சங்களில் மிகவும் வேறுபட்டதாக இருந்தது. முதலாவது அப்போதைய இந்திய சமூகமானது ஒரு பின்-கொலனி த்துவ சமூகம் என்றவகையில் பல மிகவும் குறிப்பான பிரச்சனைகளைக் கொண்டிருந்தன. ஆனால் இந்த வேறுபாடுகள் கவனத்தில் கொள்ளப்பட வில்லை. மாவோ 1930 இல் பயன்படுத்திய அரைக் கொலனித்துவ அரைநிலப் பிரபுத்துவ நாடு என்ற வரையறை அப்படியே எடுத்துக் கொண்டார்கள். இந்தியாவில் மையப்படுத்தப்பட்ட ஒரு அரசு இருந்தது. இந்த முக்கிய வேறு பாடானது கவனத்தில் கொள்ளப்படாமலேயே கிராமங்களில் தளப்பிரதேசங் களை அமைத்து நகரங்களை சுற்றி வளைப்பது என்ற இராணுவ யுத்த தந்திரம் பின்பற்றப்பட்டது (மக்கள் யுத்தம் ஆவணங்கள்). அதனைவிட 1960 இலிருந்த இந்திய பொருளாதாரத்தின் நிலைமைகள், இந்தியாவிற்கே உரிய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



சாதிய அமைப்புமுறை, மற்றும் தேசிய பிரச்சனைகள் போன்ற பல மிகவும் குறிப்பான வேறுபாடுகள் இந்தியாவில் காணப்பட்டன. இவற்றை புரட்சியாளர்கள் எவ்வாறு முகம்கொடுப்பது என்ற வகையில் மிகவும் குறிப்பான கோட்பாட்டுச் செயற்பாடானது இந்த விடயங்கள் தொடர்பாக மிகவும் அவசியமாக தேவைப்பட்டன. ஆனால் இவை எதுவுமே நடைபெறவில்லை. சாதியம் என்பது நிலப்பிரபுத்துவத்தின் மிச்சசொச்சமான விபரிக்கப்பட்டது. இப்படியாக பற்பல அம்சங்களில் இவர்கள் தமது கோட்பாட்டு செயற்பாட்டை நிராகரித்து மாவோவிடம் இருந்து கோட்பாடுகளை - இன்னும் குறிப்பாக கூறுவதானால் சொல்லாடல்களை - இரவல் வாங்க முயன்றதானது பலவிதமான நெருக்கடிகளை இந்த அமைப்புகளுக்கு ஏற்படுத்தின. இன்று 2010 ஆண்டில் கூட இவர்களிடத்தில் இந்திய சமூக உருவாக்கம் தொடர்பான அசலான, சொந்தமான ஆய்வுகள் எதுவும் கிடையாது. **“...இங்குள்ள சூழ்நிலை ஆய்விலிருந்து தொடங்காமல் பிறநாட்டு வரலாற்று அனுபவத்தை அப்படியே பெயர்த்து பொருத்தும் இணைக்கோட்டுவாதம் மேலோங்கியிருந்தது...”** (மக்கள் யுத்தம் ஆவணங்கள்)

இதே பிரச்சனைகள்தாம் இந்திய புரட்சிக்கான மூலோபாயம் - தந்திரோபாயம் போன்றவற்றை வகுப்பதிலும், ஏனைய வேலைமுறைகளை வடிவமைப்பதிலும் ஏற்பட்டன. அழித்தொழிப்பு கோட்பாட்டிற்கும், கிராமங்களில் தளப்பிரதேசத்தை கட்டமைப்பதற்கும் இடையிலான உறவு என்பது என்னவென்று ஆராயப்படவில்லை. அவ்வாறே அமைப்பை கட்டுவதற்கான வழிமுறைகள் பற்றிய விடயத்திலும், மக்களை அணிதிரட்டும் செயற்பாடுகளை மேற்கொள்வதிலும் பாரிய பிரச்சனைகள் இருந்தன. இப்படியாக ஆரம்பத்தில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு நிலைப்பாடுகள் பிற்காலத்தில் மாற்றிக் கொள்ளப்பட்டாலும், பாராளுமன்ற புறக்கணிப்பானது அனேகமாக எல்லாக் குழுக்களாலும் தொடர்ந்தும் கடைப்பிடிக்கப்பட்டே வருகின்றன. இப்போது இவர்கள் பாராளுமன்ற புறக்கணிப்புவாதம் தொடர்வாக முன்வைக்கும் நியாயங்களைப் பார்ப்போம்.

## 12

இந்திய மா-லெ குழுக்கள் இப்போது தமது முன்னைய நிலைப்பாடுகளை மாற்றிக் கொண்டாலும் கூட, பாராளுமன்ற புறக்கணிப்புவாதத்தை தொடரவே செய்கிறார்கள். ஆனால் முன்புபோல இந்தியா ஒரு புரட்சியின் காலகட்டத்தில் பிரவேசித்துக் கொண்டிருப்பதாக குறிப்பிடாமல் வேறு சில காரணங்களை முன்வைக்கிறார்கள். இந்தியா ஒரு அரைக்கொலனித்துவ, அரைநிலப்பிரபுத்துவ நாடு என்பதால் இங்கே பாராளுமன்றம் பயனற்றது என்பது ஒருவாதம். கட்சியானது கிராமங்களில் இருந்து நகரங்களைச் சுற்றிவளைக்கும் ஒரு மூலோபாயத்தை கொண்டிருப்பதால் இங்கு பாராளுமன்ற விளையாட்டுகளுக்கு இடமில்லை என்பது மற்றறையது. ஜனநாயகப் புரட்சியை நிறைவு செய்யாத ஒரு நாட்டில் பாராளுமன்றமுறை பயனற்றது என்பது இன்னுமொரு வாதம். இப்போது இந்த வாதங்களை தனித்தனியாக பரிசீலிப்போம்.

இந்தியா ஒரு அரைக்கொலனித்துவ, அரைநிலப்பிரபுத்துவ நாடு என்பது ஒரு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



தவறான மதிப்பீடாகும். இந்திய கொலனித்துவத்தில் இருந்து விடுதலை பெற்ற ஒரு நாடாகும். இந்த சுதந்திரத்தை முற்றாக மறுப்பது என்பது தவறானது. தனது கொலனித்துவ காலகட்டத்தில் இருந்ததிலும் பார்க்க இந்திய அரசும், மக்களும் மிகவும் வேறுபட்ட அளவிலான சுதந்திரத்தை அனுபவிக்கிறார்கள். பெற்ற சுதந்திரம் முற்றுமுழுதானதா? அது எந்தளவிற்கு எப்படிப்பட்ட பொறி முறைகளால் கட்டுப்படுத்தப்படுகிறது என்பது முக்கியமான பிரச்சனைக்குரிய ஒரு விடயமாகும். அதனை தனியான ஆய்வுப் பொருளாக எடுத்துக் கொண்டு நாம் எமது கோட்பாட்டு செயற்பாடுகள் மூலமாக அதற்கான விடைகளை காணவேண்டும். இதனூடாக, இந்திய சமூகத்தில் புரட்சியாளர்கள் மேற் கொள்ள வேண்டிய மூலோபாயம் - தந்திரோபாயங்களையும் வகுத்துக் கொள் வது அவசியமானது. ஆனால், இதற்குப்பதிலாக மாவோவின் சொல்லாடலான ''அரைக்கொலனி, அரைநிலப்பிரபுத்துவம்'' என்பதை பயன்படுத்திக் கொள்வது எமது அறிவுத்துறை சோம்பேறித்தனத்தை மாத்திரமே காட்டுகிறது.

இந்திய புரட்சியின் ஆரம்பமே சட்டவிரோத, தலைமறைவான செயற்பாட்டு டன் தொடங்குகிறது. அதாவது ஆயுத போராட்டத்துடன் தொடங்கப்படுகிறது. இப்படியாக சட்டவிரோதமான பணிகளுடன் தொடங்கும் ஒரு கட்சியானது சட்டரீதியான பாராளுமன்ற முறையை பயன்படுத்திக் கொள்ள முடியும் என்று எதிர்பார்க்க முடியாது என்பது நியாயமான வாதமாகவே படுகிறது. ஆனால் இந்த வாதம் இத்துடன் நின்றுவிடுவதில்லை. இவர்கள் சட்டபூர்வமாக வழி முறைகளை பயன்படுத்துவதன் அவசியம் குறித்தும் பேசுகிறார்கள். ஆனால் அவ்வாறு குறிப்பிடும் போதும் இவர்கள் பாராளுமன்ற முறையை இந்த சட்ட பூர்வமான வழிமுறைகளுள் ஒன்றாக ஏற்றுக் கொள்வதில்லை. அதற்கு இவர்கள் கூறும் காரணம், "இவற்றில் பங்கு கொள்வது புரட்சிகர மையங்களு க்கும், எதிர்புரட்சிகர மையங்களுக்கும் இடையிலான வேறுபாட்டை மறைத்து விடும்" என்பதாகும் (இந்தியப் புரட்சியின் போர்த்தந்திரமும், செயல்தந்திரமும் - மக்கள் யுத்தம்). இந்த வாதத்தில் முரணற்றதன்மையை (Consistency) காணமுடியவில்லை. சாரு மஜும்தார் காலத்தில் மேற்கொள்ளப்பட்ட ஒரு முடிவை காப்பதற்கு செயற்கையான காரணங்களை முன்வைப்பதாகத்தான் தோன்றுகிறது.

அடுத்த விடயம், ஜனநாயகப்புரட்சி நடைபெறாத ஒரு நாட்டில் பாராளுமன்ற தேர்தலில் ஈடுபடமுடியாது என்பதாகும். இதனை எந்த அடிப்படையில் கூறு கிறார்கள் என்பது தெரியவில்லை. மார்க்சியத்தில் எந்த ஒரு இடத்திலும் ஜன நாயகப் புரட்சி நடைபெற்ற பின்புதான் புரட்சியாளர்கள் பாராளுமன்ற தேர்த லில் பங்குபெற வேண்டும் என்று யாராவது வலியுறுத்தியிருக்கிறார்களா என்ன? லெனின் தலைமையிலான போல்சேவிக் கட்சியானது 1908 இல் ரஸ்ய பாராளுமன்ற (டுமா) தேர்தலில் கலந்துகொண்டபோது ரஸ்யா முடியரசா கத்தனே இருந்தது. 1917 பெப்ருவரியில்தானே அந்த நாட்டில் முதலாளித்துவ ஜனநாயகப் புரட்சி நடைபெற்றது. உண்மைகள் இப்படியிருக்க இந்த ஜனநாயகப்புரட்சி நடைபெறாத நாட்டில் பாராளுமன்ற தேர்தலில் கலந்து



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கொள்ள முடியாது என்ற வாதம் எங்கிருந்து வருகிறது?

இவற்றையெல்லாம் தொகுத்துப் பார்க்கையில் பின்வரும் முடிவுக்குத்தான் வரமுடியும். அதாவது வேறுபட்ட காரணங்களுக்காக - முதலாளித்துவ பாராளு மன்ற அரசியல்வாதிகளின் நடவடிக்கைகளின்பால் ஏற்பட்ட நியாயமான வெறுப் புணர்வு, துணிச்சல்வாதம், அராஜகவாதம், சாகசவாதம் - மேற்கொள்ளப்பட்ட பாராளுமன்ற புறக்கணிப்பு வாதத்தை நியாயப்படுத்தவே இந்த வாதங்கள் கூறப்படுகின்றன. இதற்கும் மேல் இந்த வாதங்கள் எதுவுமே ஒன்றோடு ஒன்று பொருந்தி வருவதாகவும் இருப்பதில்லை. இதனால் இந்த வாதங்கள் ஏற்றுக் கொள்ளக் கூடியனவாக இல்லை என்பதை குறிப்பிட்டுத்தான் ஆகவேண்டும்.

இப்படியாக மிகவும் முக்கியமான அரசியல் விவகாரங்களில் உள்ள கோட் பாட்டு இடைவெளியை வெறுமனே பொதுப் புத்தி மட்டத்திலான வாதங்க ளினால் இட்டு நிரப்ப முனைகிறார்கள். உதாரணமாக மகஇக வின் *'தேர்தலை புறக்கணி, புரட்சி செய்'* என்ற பிரசுரத்தை எடுத்துக் கொள்வோம். இது முழுக்க முழுக்க முதலாளித்துவ அரசியல்வாதிகளது ஊழல்கள், மோசடிகள் பற்றிய விபரணைகளினால் நிறைந்து இருக்கிறது. இது இந்தியாவில் இருக்கும் முதலாளித்துவ அரசியல்வாதிகளுக்கு மாத்திரம் உரிய குறிப்பான பிரச்சனை கிடையாது. எல்லா முதலாளித்துவ நாடுகளின் அரசியல்வாதிகளும் இதே போன்ற பண்புகளை, சற்றேரக்குறைய கொண்டே உள்ளார்கள். இதற்கும் புரட்சியாளர்கள் பாராளுமன்றத்தை புறக்கணிப்பதற்குமான காரணத்திற்கும் உள்ள உறவு என்ன? பாராளுமன்றம் மூலமாக அரசதிகாரத்தை கைப்பற்றி புரட்சியை செய்து விடலாம் என்று கூறுபவர்களுக்கு வேண்டுமானால் இது வோர் பதிலாக அமைய முடியும். ஆனால் பாராளுமன்ற புறக்கணிப்பை நியாய ப்படுத்துவதற்கு போதிய ஆதாரமாக இதனை கொள்ள முடியாது.

சண்முகதாசனது கட்சியின் நிலைப்பாட்டை எடுத்துக் கொண்டால், இவர் தமது நிலைப்பாட்டிற்கு திட்டவட்டமான கோட்பாட்டு நியாயங்களை முன் வைக்க தவறிவிட்டார். பொதுவில் அரசு மற்றும் அரசாங்கம் பற்றிய வேறுபாடு களை குறிப்பிடுவதுடன், “புரட்சிகரஅலை ஆசிய, ஆபிரிக்க, இலத்தீன் அமெரிக்க நாடுகளை தாக்கிக் கொண்டிருக்கும் காலத்தில் வங்குரோத்து த்தனமான பாராளுமன்ற பாதையை நிராகரிக்க வேண்டும்” என்கிறார் (சண்முகதாசன்: அரசு பற்றிய மார்க்சிய கோட்பாடு). சரி, அப்படித்தான் புரட்சிகர அலை இலங்கையை தாக்கியதாக இவர் மதிப்பிடடாலும் கூட, அந்த முடிவை எந்த புறநிலையான அளவுகோள்களின் அடிப்படையில் மேற் கொண்டார் என்பதை இவர் விளக்க வேண்டும் அல்லவா? இது தொடர்பாக கட்சியினுள் எந்தவிதமான விவாதங்கள் நடைபெற்றன? இந்த விவாதத்தின் போது முன்வைக்கப்பட்ட மாறுபட்ட கருத்துக்கள் எவை? இந்த கேள்விக ளுக்கு திருப்பதியான விடை கிடைக்காது. ஏனெனில் இந்த விடயம் தொடர்பாக கட்சியினுள் ஆரோக்கியமான ஒரு விவாதம் நடத்தப்படவே இல்லை. இது கட்சிக்கு வெளியில் இருப்பவர்கள் முன்வைக்கும் விமர்சனம்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மாத்திரம் அல்ல. மாறாக கட்சிக்குள் அந்த காலத்தில் உள்ளிருந்து போரா டிய அவரது சொந்த தோழர்களது விமர்சனமாகும் (சி. கா. செந்தில்வேல் - இலங்கையில் இடதுசாரி இயக்கத்தின் ஐம்பது ஆண்டுகள்). அரசு பற்றிய கோட்பாட்டு விவாதங்களை விரிவாக முன்னெடுப்பதற்குப் பதிலாக முதலா ளித்துவ அரசியல்வாதிகள் பற்றி மக்களிடம் இருக்கக் கூடிய நியாய மான மனக்குறைகள், மற்றும் கீழான பார்வைகள் ஆகியவற்றை மாத்திரம் முதன் மையாக கொண்டு ஒரு கோட்பாட்டு பிரச்சனைக்கு தீர்வு கண்டுவிட முடியாது. சரி, இந்த முடிவை மேற்கொள்ளும் போது நாட்டில் புரட்சிர அலை வீசிக் கொண்டிருப்பதாக தவறாக மதிப்பீடு செய்வதாகவே வைத்துக் கொள்வோம். ஆனால் இந்த மதிப்பீடானது தவறானது என்பதை நடைமுறை அரசியல் நிகழ்வுகள் இவர்களுக்கு முகத்தில் அடித்து உரைத்ததே! அதனை இவர்கள் அறவே புரிந்து கொள்ளாததேன். உதாரணமாக, 1977 முதல் சுமார் பதினேழு ஆண்டுகள் இலங்கையில் மோசமான ஏகாதிபத்திய அடிவருடியான ஐதேக ஆட்சி நீடித்தது. தேசிய பிரச்சனை மிகவும் முற்றி உள்நாட்டு யுத்தமாக மாறியிருந்தது. இப்படிப்பட்ட தீவிரமான மாற்றங்கள் நாட்டில் நடைபெற்று ஒரு உள்நாட்டு யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருக்கும்போது, இவற்றை கண்டு கொள்ளாமல் இன்னமும் இலங்கையில் புரட்சிகரஅலை வீசிக் கொண்டிருப்ப தாக எப்படி சாதிக்கமுடியும்?

பாராளுமன்றத்தை புரட்சிகர நோக்கில் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்று கூறும் எவருமே பாராளுமன்றத்தின் மூலமாக புரட்சியை செய்து முடித்துவிடலாம் என்ற அர்த்தத்தில் கூறவில்லை என்பது மார்க்சியவாதிகளான இவர்களுக்கு நிச்சயமாக தெரிந்திருக்கும். அப்படியானால் இந்த நிலைப் பாட்டிற்கு மாறான நிலைப்பாடுகளை இவர்கள் ஏன் மேற்கொண்டார்கள் என்ற கேள்வி எழுவது தவிர்க்க முடியாததாகிறது. மொத்தத்தில் இவர்கள் லெனினது 'இடதுசாரி கொம்யூனிசம்...' நூலும், மூன்றாம் அகிலத்தின் வழிகாட்டுதல்களும் இருப்பதாகவே காட்டிக் கொள்ளாதது ஏன்? காரணம் இலகுவானதுதான். அதாவது அந்தந்த காலத்தல் தாம் கொண்டிருந்த அகவயமான எழுச்சிகளின் அடிப்படையில் நாட்டின் நிலைமைகளையோ, அல்லது கோட்பாட்டுரீதியான விடயங்களையோ சரிவர பரிசீலனை செய்யாமல் மேற்கொள்ளப்பட்ட ''குட்டி முதலாளித்துவ சாகசவாத'' ''அராஜகவாத'' நிலைப்பாடுகள் அன்றி வேறு என்னவாக இவை இருக்க முடியும்? பாராளுமன்ற சகதியில் மூழ்கிவிட்ட சந்தர்ப்பவாத இடதுசாரிகளின் எதிர்வி ளைவாக இவர்களது பாராளுமன்ற புறக்கணிப்புவாதம் வருகிறது. லெனின் குறிப்பிட்ட "வலதுசாரி சந்தர்ப்பவாத தவறுக்கு ஒரு வகை தண்டனையாக பிறக்கும் இடது அராஜகவாதம்" என்று குறிப்பிட்டது இவர்களையன்றி வேறு யாரை?

மேற்சொன்ன நிலைப்பாடுகளை மேற்கொண்டவர்களிடம், தமது நிலைப்பாடு களை நியாயப்படுத்தக் கூடிய கோட்பாட்டுரீதியான வாதங்கள் இருக்குமாயின் இவர்கள் தமது எதிர் தரப்பார் மீது வசை பாடும் தேவை இராது. இப்படிப்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பட்ட செயற்பாடுகள் காரணமாக இவர்கள் தமது அமைப்பின் முன்கையெடுக்கும் ஆற்றலை முற்றாக இழந்தது மாத்திரமல்ல, தம்மை கோட்பாட்டு ரீதியாக கேள்விக்கு உள்ளாக்கும் மாற்று கருத்துடையவர்களை திட்டித் தீர்ப்பதன் மூலமாக உண்மையில் தமிழ் சூழலில் ஒரு விவாதத்திற்கு ஒரு ஆரோக்கியமான சூழ்நிலையையே இல்லாமற் செய்துள்ளார்கள். ஈழத்தில் புலிகள் வன்முறை மூலமாக ஏற்படுத்திய ஜனநாயகமற்ற சூழலோடு ஒப்பிடும் போது, இவர்களால் உருவாக்கப்பட்டுள்ள இந்த சூழலானது தோற்ற அளவில் வேண்டுமானால் வேறுபடலாம். ஆனால் சாராம்சத்தில் அதிகம் வேறுபட்டதாக இல்லை. கடந்த பல பத்தாண்டுகளாக இந்திய மா-லெ மத்தியிலும் சரி, இலங்கையின் இடதுசாரிகள் மத்தியிலும் சரி முறையான கருத்துப் பரிமாற்றத்திற்கான ஒரு ஆரோக்கியமான சூழ்நிலையானது அறவே இல்லாமற் போயுள்ளது. தம்மிடம் நியாயம் இருக்கும் என்று நம்பினால், அதனை நிலை நாட்டுவதற்கு போதியளவு கோட்பாட்டு பலமும் இருக்குமானால் நாம் எமது எதிர்தரப்பார் மீது வசைபாட வேண்டிய தேவையே எழ மாட்டாது அல்லவா? இன்று உலகளாவிய அளவில் பல்வேறு சமூக இயக்கங்களும் பல்வேறு பிரச்சனைகளையும், அவை தொடர்பான கோட்பாட்டு விவாதங்களையும் கிளப்பியுள்ளன. இந்த விவாதங்கள் உலகளாவிய ரீதியில் மிகவும் தீவிரமாக நடைபெற்றுக் கொண்டு இருக்கின்றன. இந்த விவாதங்களின் ஊடாக பல்வேறு சக்திகளும், ஏகாதிபத்தியத்தின் அத்தனை கெடுபிடிகளையும் மீறி, ஒரு பொதுவான வேலைத் திட்டத்தை வரைவதை நோக்கி முன்னேறிக் கொண்டிருக்கின்றன. இவை வெற்றி பெறலாம் அல்லது பெறாமலும் போகலாம். ஆனால், எமது நாடுகளில் இருக்கும் குழுக்கள் படிப்படியாக சிதறிப் போவதே நடைமுறையாக இருக்கிறது. தமது எதிர்தரப்பாரும் மதிக்கத்தக்க திட்டத்தை வரைந்து முன்வைப்பதற்கான தைரியம் எம்மிடம் கிடையாது. மாற்று கருத்துள்ளவர்களை வென்றெடுப்பதற்காக கருத்துப் பலம் கிடையாது. இதனால் எமக்கெதிராக கேள்வி எழுப்புபவர்களை எதிரிகளாக பாவித்து தாக்க முனைகிறோம். இதனால் எங்கும் சிதைவும், குழப்பமுமே மிஞ்சும். இதுதான் இந்த போக்கின் தலைவிதியாக அமையும்.

மார்க்சியத்தின் வரலாற்றில் பாராளுமன்றத்தைப் பொறுத்தவரையில் மூன்று விதமான நிலைப்பாடுகள் இனம்காணப்பட்டுள்ளன. முதலாவது போக்கு, பாராளுமன்ற பித்து. இது பாராளுமன்றம் மூலமாகவே சோசலிசத்தை அடையலாம் என்று வாதிடும் வலதுசந்தர்ப்பவாத நிலைப்பாடு. இரண்டாவது போக்கு, பாராளுமன்ற புறக்கணிப்பு. இது குட்டிமுதலாளிய, அராஜகவாத, சாகசவாத நிலைப்பாடு. இது லெனினால் கடுமையாக விமர்சிக்கப்பட்டது. எந்தவொரு முக்கியமான மார்க்சிய கோட்பாடும் இதனை ஆதரிப்பது கிடையாது. மூன்றாவது, பாடாளுமன்றத்தை அதன் வரையறைகளை புரிந்து கொண்ட, மிகவும் குறிப்பான பிரச்சார, கிளர்ச்சி போன்ற பாத்திரங்களுக்காக மாத்திரம் பயன்படுத்த முனைபவர்கள். இதில் பாராளுமன்றத்தை, அதன் வரையறுக்கப்பட்ட பாத்திரத்தை புரிந்துகொண்டு, தமது கட்சியின் கிளர்ச்சி மற்றும் பிரச்சார நோக்கங்களுக்காக பயன்படுத்துவது என்பதுதான் சரியான

www.tamilarangam.net



மார்க்சிய வழிமுறையாகும். ஆனால் இப்படியான வழிமுறைகளை முன்மொழி பவர்களை எதிர்தரப்பார் எவ்வாறு முதலாவது வகையினரான வலதுசந்த ர்ப்பவாத சக்திகளாக இனம்காட்டுவதும் விமர்சிப்பதும் சாத்தியமாகிறது என்ற கேள்வி எழுவது தவிர்க்க முடியாததாகிறது. இது சம்பந்தப்பட்டவர்களது அறியாமை மற்றும் சிறுபிள்ளைத்தனத்தில் இருந்து பிறக்கும் ஒரு செயற்பாடு மாத்திரமல்ல: மாறாக ஒருவித அரசியல் அறம் பற்றிய பிரச்சனையும் கூட. ஏனெனில் இவர்களுக்கு நிச்சயமாக முதலாம், மூன்றாம் போக்குகளை ஒன்றாக போட்டுக் குழப்புவது பற்றி தெரிந்தே இருக்கிறது.

பாராளுமன்ற பாதையை தேர்ந்தெடுத்தவர்கள்தாம் சந்தர்ப்பவாதிகளாக சீரழிந்து போய்விட்டார்கள்! சரி, பாராளுமன்றத்தை புறக்கணித்த எமது ‘இடது தீவிரவாதிகளது’ நிலைமை என்ன என்பதும் நாம் பரிசீலிக்க வேண்டியிரு க்கிறது அல்லவா? நக்சல்பாரி அமைப்பானது ஆரம்பிக்கப்பட்டு நாற்பது வருடங்களுக்கு மேலாகிவிட்டது. தாம் முகம்கொடுக்கும் முக்கியமான கோட் பாட்டு பிரச்சனைகளை முகம்கொடுத்து தீர்வுகாண முடியாதவர்களாக இருக் கிறார்கள். சிதைவும், குழப்பமும் தான் மிச்சம். வர்க்க குறுக்கல்வாதத்தினுள் சிக்கிவிட்ட இவர்களினால் தமது சொந்த சமுதாயத்தில் எழுந்து வரும் போரா ட்ட சக்திகளைக் கூட இவர்களால் சரிவர இனம்காண முடியவில்லை. சமூக உருவாக்கத்தை ஒரு சிக்கலான முழுமையாக காணத் தவறும் இவர்களால் ஏனைய ஒடுக்கு முறைகளுக்கு எதிராக போராடும் சக்திகள் பற்றியும் முறை யான நிலைப்பாடுகளை மேற்கொள்ள முடிவதில்லை. தமது ‘வர்க்க குறுக்கல் வாதத்திற்குள்’ சிக்காத நிகழ்வுகளை எதிர்மறை கண்ணோட்டத்துடன் அணுகு கிறார்கள். தேசியம், பெண்ணியம், சாதிய எதிர்ப்பு, ஓரினப்புணர்ச்சியாளர்கள்... போன்ற பல்வேறு பிரச்சனைகளிலும் எதிர்மறையான கண்ணோட்டத்தையே கொண்டுள்ளார்கள். இப்படிப்பட்ட பிரச்சனைகளில் நீதிமன்றங்கள் பல நேர் மறையான முடிவுகளை எடுத்துள்ளமை கவனத்திற்குரியது. கிராமப்புறங்களில் தளப்பிரதேசங்களைக் கட்டி நகரங்களை சுற்றிவளைக்கப் போவதாக புறப்ப ட்டவர்கள், கடைசியில் நித்தியானந்த சாமியார் விடயத்தில் குமுதம் பத்திரிகை அலுவலகத்தை சுற்றிவளைக்கும் நிலைக்குத்தான் சென்றுள்ளார்கள்.

பாராளுமன்றத்தை நிராகரித்த சண்முகதாசன், சீனாவில் மாவோ தலை மையில் முன்னெடுத்த விவசாயப் புரட்சி, கிராமங்கள் மூலமாக நகரங்களை சுற்றி வளைப்பது போன்ற மூலோபாயங்களை அப்படியே முன்மொழிகிறார். தான் வாழும் சமூகம், அதன் சமூக சக்திகளது பரஸ்பர சமபலநிலைகள், மக்களது ஆதரவுத் தளம், நாட்டின் புவியியல் தன்மைகள் போன்ற எந்தவி தமான ஸ்தூலமான ஆய்வுகளையும் முன்னெடுக்காமல் மாவோவின் மூலோபா யத்தை பிடுங்கி நட்டுவிட்டால் இலங்கையில் புரட்சி நடைபெற்றுவிடும் என்று எதிர்பார்ப்பது அசட்டுத்தனம் அன்றி வேறென்னவாக இருக்க முடியும். இலங் கையில் மிகவும் மையப்படுத்தப்பட்ட ஒரு அரசு இருப்பதையும், கொலனித்துவ கால பெருந்தோட்டத்துறையானது நகரங்களையும் கிராமங்களையும் இணைக்கும் விரிவான பெருந்தெருக்களின் வலைப்பின்னல்களை தோற்றுவித்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



திருப்பதையும், தேசியபிரச்சனை முதன்மையான பிரச்சனையாக நாட்டில் உருவெடுத்திருப்பதையும் கூட இவர் கவனிக்க அறவே தவறிவிட்டார். அவர் உயிர் வாழ்ந்த காலம் முழுவதுமே இந்த சிக்கலான பிரச்சனைகளை முகம் கொடுப்பதை தவிர்த்தார். அவருக்கு பின்னர் சிதைந்து போனவர்கள் போக மீதமாக இருப்பவர்கள் இன்னமும் சிறு குழுக்களாகவே செயற்பட்டு வருகின்றனர். ஆயினும் கோட்பாட்டு செயற்பாடு என்பது இவர்களை விட்டு அதிகம் தள்ளியே நிற்பதனால், தமது வரையறைக்குள் அகப்படாத எதனையும் இப்போதும் பகைமையானவையாகவே பார்த்து வருகிறார்கள். இதனால் இவர்கள் தமது குறுங்குழுவாத பற்றாக்குறைகளைக் கடந்து வருவது என்பது மிகவும் சாத்தியமற்றதாகவே இருக்கிறது.

## 13

சரி இப்போது எமது நாட்டின் நிலைமைக்கு வருவோம். எமது நாட்டில் இப்போது புரட்சிகரஅலை ஒன்றும் வீசிக் கொண்டிருக்கவில்லை. மக்கள் ஒரு நீண்டதும் கொடியதுமான ஒரு போராட்டத்தின் தோல்வியிலிருந்து இப்போது தான் படிப்படியாக வெளியே வந்து கொண்டிருக்கிறார்கள். போராட்டம் தொடர்பான நம்பிக்கையீனமும், களைப்பும், விரக்தியும் எங்கும் ஓங்கி நிற்கிறது. தப்பிப் பிழைத்தல், அன்றாட வாழ்வை எப்படி ஒழுங்குபடுத்துவது என்பது போன்ற பிரச்சனைகளிலேயே அவர்களது கவனங்கள் குவிந்துள்ளன. அன்றாட வாழ்வாதார பிரச்சனைகள் இவர்களை வாட்டி எடுக்கிறது. ஆனால் சிறீலங்கா அரசோ இந்த நிலையிலும் தேசிய பிரச்சனைக்கு ஒரு நேர்மையான அரசியல் தீர்வை காணும் அக்கறை சிறிதும் அற்றதாக, தனது தேசிய ஒடுக்குமுறையை தீவிரப்படுத்து செயற்பாட்டை முன்னெடுப்பதாக நடந்து கொண்டிருக்கிறது. இதற்குள் சிறீலங்கா அரசாங்கமானது புலிகள் மீது கொண்ட வெற்றியை பயன்படுத்தி தனது ஆட்சியை இன்னொரு தடவை தொடரும் நோக்குடன் அடுத்தடுத்து தேர்தல்களை வைத்து வெற்றியும் பெற்றுள்ளது. இதில் அரச ஆதரவு கூலிக் குழுக்களும், முன்னாள் புலிகளது கொத்தடிமைகளும் போட்டியிட்டனர். முன்னவர்கள் தேசியபிரச்சனை இருப்பதையே மறுத்து, இதனை வெறுமனே அபிவிருத்தி சார்ந்த சொல்லாடல்களால் பூசி மெழுகுகினார்கள். மற்றையவர்கள் மீண்டும் தமிழ் தேசியத்தின் காவலர் வேடம் பூண்டுள்ளார்கள். இந்த இரண்டு தரப்பினரும் தவறானவர்கள் என்பதில் பெரும்பான்மையான மக்களுக்கு சந்தேகம் கிடையாது. ஆனால் அவர்களது அரசியல் பங்குபற்றல் என்பது வெறுமனே பாராளுமன்ற தேர்தல்களில் வாக்களிப்பது என்பதுடனேயே மட்டுப்படுத்தப்பட்டிருப்பதால், இவர்கள் அரசாங்கத்திற்கு தமது எதிர்ப்புணர்வைக் காட்ட, அல்லது அன்றாட தேவைகளை நிறைவு செய்யும் நோக்குடன் வாக்களிக்கிறார்கள். இப்படிப்பட்ட நிலையில் முற்போக்கு ஜனநாயக சக்திகள் என்ன செய்வது என்பதுதான் இங்குள்ள பிரச்சனையாகும்.

நாம் தேர்தலில் கலந்து கொள்வதும், சந்தர்ப்பவாத சக்திகளை அம்பலப்ப



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



டுத்துவதும் முக்கியம் என்கிறோம். எதிர் தரப்பார் தேர்தல் புறக்கணிப்பை முன்மொழிகிறார்கள். இதற்கு அவர்கள் முன்வைக்கும் வாதங்கள் வெறுமனே ஜனநாயகபுரட்சி நடைபெறாமை பற்றியதும், முதலாளித்துவ அரசியல்வாதிகள் தொடர்பில் மக்கள் மத்தியில் உள்ள நியாயமான வெறுப்புணர்வை கொட்டு வதும்தான். ஆனால் இத்தனையையும் மீறி மக்கள் ஏன் வாக்களிக்கிறார்கள் என்ற கேள்வியை தீவிரமாக பரிசீலிக்க இவர்கள் தயாராக இல்லை. இங்கு மக்கள், குறிப்பாக வடக்கில், பதினெட்டு சதவீதம் மாத்திரமே வாக்களித்தா ர்கள் என்று கூறுவதை அனைவரும் ஒரு தடவை விஞ்ஞானபூர்வமாக பரிசீலி ப்பது முக்கியமானது. அதாவது வாக்காளர் பட்டியலில் உள்ள எண்ணிக்கை யில் பதினெட்டு சதவீதத்தினர் வாக்களித்தார்கள் என்பது உண்மைதான். ஆனால் இந்த பட்டியலானது 1981 இற்கு பின்னர் முறையாக புதுப்பிக்கப்ப டவில்லை என்பதை கருத்தில் கொள்ள வேண்டும். இந்த இடைக்காலத்தில் வடபகுதியை விட்டு வெளியேறியவர்கள், அகதிகளானவர்கள், புலம் பெயர்ந் தவர்கள் எண்ணிக்கையை கழித்துவிட்டால் இப்போது இருக்கும் வாக்கா ளர்களது உண்மையான எண்ணிக்கை பதிவில் உள்ளதைவிட பாதியிலும் குறைவாகத்தான் இருக்கும். அந்த வகையில் வாக்களிப்பு வீதம் சுமார் ஐம் பது வீதம் அளவில் இருக்கும் என்பதை கருத்திற் கொள்ள வேண்டும். **இந்த எண்ணிக்கை பற்றிய பிரச்சனை தமிழ் மக்களது அரசியல் உணர்வை புரிந்து கொள்வதில் மிகவும் முக்கியமானதாகும். ஏனெனில் தவறான புள்ளி விபரங் கள் தவறாக அரசியல் அனுமானங்களை ஏற்படுத்தவும், மிகவும் அபத்தமான அரசியல் நிலைப்பாடுகளை மேற்கொள்ளவும் வழிவகுக்கும் என்பதால். யதார் த்தமான புள்ளிவிபரங்களை அடிப்டையாக கொள்ளாத அரசியல் முடிவுகள் அனுமதிக்கத் தக்கதல்ல.**

இப்போது நாம் மீண்டும் தேர்தல்களில் கலந்து கொள்வதன் அவசியம் பற்றி பார்ப்போம்.

- நாம் ஒரு புரட்சிகர அலை வீசும் காலத்தில் இல்லை. யுத்தம் முடிந்து மக்கள் மிகுந்த நம்பிக்கையீனத்துடன் தமது வாழ்வை மீண்டும் தொடங் கும் ஒரு காலகட்டத்தில் இருக்கிறோம். இந்த நிலையில் நாம் எவ்வாறு பின்வாங்குவது, எப்படி மீள ஒழுங்கமைப்பு பெறுவது என்பதிலேயே எமது கவனம் இருந்தாக வேண்டும். இப்படிப்பட்ட ஒரு காலகட்டத்தில் சட்டபூர் வமான வழிமுறைகளை, பாராளுமன்ற தேர்தல்கள் உட்பட, நாம் பயன்ப டுத்திக் கொள்வது அவசியமானது. இதுவே நாம் மக்களை சென்றடை யவும், மக்கள் மத்தியில் விரிவான விவாதங்களை மீண்டும் தொடங்கவும் வாய்பை எமக்கு அளிக்கும்.

- மக்கள் இப்போதுதான் ஒரு நீண்ட இருண்ட காலத்திலிருந்து வெளியே வந்து கொண்டிருக்கிறார்கள். இந்த அமைதி தற்காலிகமானதுதான் என்றா லும் அதனை யாரும் குலைப்பதை விரும்ப மாட்டார்கள். அவர்களைப் பொறுத்தவரையில் அரசியல் என்பது வெறுமனே வாக்களிப்பது என்பதா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கவே சுருங்கிப் போயுள்ளது. கடந்த காலத்தில் கூட யாருமே பாராளுமன்றத்தின் பற்றாக்குறை குறித்தோ, அதற்கு மாற்றான வழிமுறைகளில் ஒழுங்கமைத்துக் கொள்வது குறித்தோ எதுவுமே செய்யவில்லை என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

- நாம் விரும்பினாலும் இல்லாவிட்டாலும் அண்மையில் ஒரு குறிப்பிட்ட காலத்திற்காவது இந்த பாராளுமன்ற முறைமை அமுலில் இருந்தே ஆக வேண்டியுள்ளது. இதில் பல்வேறு சந்தர்ப்பவாதிகளும், பிழைப்புவாதிகளும் கலந்து கொண்டு ஆசனங்களை நிரப்பவே போகிறார்கள். பாராளுமன்றத்தை நாம் நிராகரிப்பதனால் இந்த இடங்களில் மோசமான பேர்வழிகள் அமர்ந்து கொண்டு அதனை தேசவிரோத செயற்பாடுகளுக்காக பயன்படுத்தப் போகிறார்கள். வேறு ஜனநாயக சக்திகள் அந்த இடங்களை எடுப்பதனால் இப்படியாக எமது போராட்டத்திற்கு ஊறு விளைவிக்கும் புல்லுருவியொன்றை ஒரு பகிரங்கமான மேடையை விட்டும் அகற்றி விடுகிறோம்.

- மக்கள் தமது அன்றாட தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக தமது தொகுதிகளில் உள்ள பாராளுமன்ற அங்கத்தவர்களது உதவிகளில் சார்ந்திருக்க நேர்கிறது. அந்த பொறுப்பை கடைந்தெடுத்த அயோக்கியர்களிடம் பிழைப்புவாதிகளிடமும் நாம் ஒப்படைக்க முடியாது.

- தேர்தல்களில் நாம் கலந்து கொள்வது எப்படியும் ஆசனங்களை பெற்றுக் கொள்ள வேண்டும் என்ற பேரவாவினால் அல்ல. தேர்தலில் கலந்து கொள்வதானது நாம் முதலில் மக்களை சந்திக்கவும், அவர்கள் மத்தியில் எமது கருத்துக்களை எடுத்துச் செல்லவும் வழி வகுக்கிறது. இதிலிருந்து தொடங்கி மக்களது அரசியல் விழிப்புணர்வை ஏற்படுத்தும், அமைப்பாக்கம் செய்யும், சுயமாக போராட்டங்களை முன்னெடுக்கும் நடைமுறைகளை நாம் சிறிது சிறிதாக கட்டமைத்தாக வேண்டும். வெற்றி பெற்று பாராளுமன்றம் செல்லும் பட்சத்தில் அரசினதும், தமிழ் தலைமைகளினதும் மோசடிகளை அம்பலப்படுத்த உதவியாக செயற்படலாம். இது பாராளுமன்றத்திற்கு வெளியில் செய்யும் எமது பணிகளுக்கு உதவியாக அமையும்.

- மோசமான சந்தர்ப்பவாதிகளும், கைக்கூலிகளும் தேர்தலில் கலந்து கொள்கிறார்கள் என்பது உண்மையே! ஆனால் இவர்களை நாம் எவ்வாறு அம்பலப்படுத்தப் போகிறோம் என்பதுதான் இங்குள்ள பிரச்சனை. மக்கள் ஐந்து வருடங்களுக்கு ஒரு தடவை விழித்தெழுந்து தமது “ஜனநாயக கடமைகளை” செய்வதற்கு தயாராக, தம்முன்னுள்ள வேட்பாளர்களையும், அவர்களது கருத்துக்களையும் பரிசீலிக்கத் தயாராக இருக்கும் போது எமது கருத்துக்களை முன்வைக்கப் போகிறோமா? அல்லது மக்கள் தமது “ஜனநாயக கடமைகளை” முடித்துவிட்டு சாகவாசமாக உறக்கத்தில் இருக்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கும் போது எமது கருத்துக்களை முன்வைக்கப் போகிறோமா?

• தவறான சக்திகளை அம்பலப்படுத்துவது என்பது அந்த சக்திகளது அரசியலை நேரடியாக முகம் கொடுத்து நேருக்கு நேர் அம்பலப்படுத்துவ துடன் தொடர்புடையதாகும். நாமும் தேர்தலில் கலந்து கொண்டால்தானே அந்த வேட்பாளர்களது தேர்தல் அறிக்கைகளை, அவர்களது கடந்தகால அரசியல் நடத்தைகளை விமர்சிக்க, அம்பலப்படுத்த முடியும். இதனை விடுத்துவிட்டு தூரமாக விலகி நின்று தேர்தலை புறக்கணி என்று கோசம் போடுவதால் நாம் இந்த அரசியல்வாதிகளை அம்பலப்படுத்தும் வாய்ப்பு களை இழந்துவிடுகிறோம் அல்லவா?

• ஆதிக்க சக்திகள் தமது சித்தாந்த மேலாண்மையை எவ்வாறு நிலை நாட்டிக் கொண்டுள்ளார்கள் என்பதை கவனிப்பது முக்கியமானது. கிராம்சி யின் கூற்றுப்படி, “இன்றைய சமூக நடப்புநிலைகள் இயல்பானவை, நியாய மானவை: அல்லது குறைந்த பட்சம் மாற்ற முடியாதவை என்பதை வலியுறு த்துவதன் மூலமாகவே” மக்கள் தம்முன் வேறு மாற்றுவழி கிடையாது என்ற நிலையில் தவறான சக்திகளை, அவர்கள் தவறானவர்கள் என்பதை தெரிந்து கொண்டும் ஆதரிக்குமாறு நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளார்கள். இந்த மக்களிடம், இந்த சமூக ஒழுங்கமைப்பு தவறானது மட்டுமல்ல, இதனை மாற்றியமைப்பதும் சாத்தியமானதே என்பதை நாம் நிரூபித்தாக வேண் டாமா? அதனை இப்படிப் பட்ட தேர்தல்களை நாம் புறக்கணிப்பதால் இழந்துவிடுகிறோம்.

• லெனின் கூறுவது போல, மக்கள் வெறுமனே எமது பிரச்சாரங்களை மாத்திரம் வைத்துக் கொண்டு தமது முடிவுகளை மேற்கொள்வது கிடை யாது. அவர்கள் தமது சொந்த அனுபவத்தில் நாம் கூறும் கருத்துக்கள் சரியானவை என்பதை கண்டு கொள்ளும் பொழுதே அவற்றை ஏற்றுக் கொள்கிறார்கள். இப்படிப்பட்ட ஒரு நிலைமையை தோற்றுவிப்பதற்கு நாம் மக்களுடன் தொடர்ச்சியாக செயற்பட்டாக வேண்டும். தேர்தல் காலத்தி லும், தேர்தல் இல்லாத காலத்திலும் செயற்பட்டாக வேண்டும். பாராளும ன்றத்திற்கு வெளியிலும், பாராளுமன்றத்தின் உள்ளும் செயற்பட்டாக வேண்டும். பாராளுமன்றத்தின் உள்ளே செயற்பட்டால் மாத்திரமே பாராளு மன்றத்தின் வரையறைகள் பற்றி மக்கள் தமது சொந்த அனுபவத்தின் வாயிலாக கண்டு கொள்வது சாத்தியப்படும். இதனை விடுத்து வேறு வழிகளில் நாம் மக்களிடம் போதிய அரசியல் விழிப்புணர்வை ஏற்படுத்தி விட முடியாது.

• போல்சேவிக்குகள் ரஸ்யாவில் பாராளுமன்றத்தில் செயற்பட்டதுடன் பாராளுமன்ற தேர்தல்களில் தொழிலாளரது பெரும்பான்மை வாக்குகளை பெறக்கூடிய நிலையில் இருந்தார்கள். அத்துடன் 1917 பெப்ருவரி புரட்சிக்கு பின்பு தோன்றிய சோவியத் அமைப்பில் பெரும்பான்மையாக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வந்த பின்பே அரசதிகாரத்தை கைப்பற்றினார்கள். இந்த தேர்தல்கள் மக்களது, புரட்சிகர வர்க்கங்களது மனோநிலையை, அரசியல் முதிர்ச்சியை சரிவர இனம் கண்டுகொள்ள புரட்சியானர்களுக்கு உதவியது. இப்படிப் பட்ட அணுகுமுறையே சந்தர்ப்பவசமற்ற துணிச்சல்வாதத்திற்கு எதிரான உத்தரவாதமாக அமையமுடியும். இப்படியாக அல்லாமல் மக்களது அரசியல் முதிர்ச்சி நிலையை அளந்து கொள்ள உத்தரவாதமான அளவு கோலை வரலாறு இதுவரை படைக்கவில்லை.

## 14

தொகுத்துப் பார்ப்போம். மார்க்சியவாதிகளைப் பொறுத்தவரையில் அரசு, அரசாங்கம் ஆகியவற்றிற்கிடையிலான வேறுபாடுகள் மிகவும் அடிப்படையானவை. அரசின் முக்கியமான பணிகள் யாவும் அரசியந்திரத்தின் முக்கியமான சில்லுகளான நிர்வாக இயந்திரம், படைகள், நீதிமன்றம் போன்றவற்றினாலேயே நடத்தப்படுகிறது. பாராளுமன்றம் என்பது ஒரு விதத்தில் மக்களை ஏய்க்கும் ‘‘அரட்டை அரங்கமாகவே” அமைந்துள்ளது. இதனால் பாராளுமன்றத்தில் பெரும்பான்மை பெறுவதன் வாயிலாக அரசதிகாரத்தை கைப்பற்றி புரட்சியை வெற்றிகரமாக நிறைவு செய்யலாம் என்பதை ஏற்றுக் கொள்வதில்லை. ஆனால் புரட்சியை நோக்கிய பயணத்தில் மக்களுக்கு பயன்படும் பல்வேறு சாதனங்களுள் பாராளுமன்றமும் ஒன்றாகும். இதுதான் மார்க்சியம் நிலைநாட்டியுள்ள உண்மையாகும். இந்த உண்மைகளை புறக்கணிப்பதானது குட்டிமுதலாளித் துவ அராஜகவாதம், சாகசவாதம் என்பவற்றின் வெளிப்படையே அன்றி மார்க்சியமாகாது.

புரட்சியாளர்கள் தாம் எங்கிருக்கிறோம் என்பதை மாத்திரம் பார்த்தால் போதாது: மக்களது அரசியல் முதிர்ச்சி பற்றிய பிரச்சனையையும் முக்கியமாக கவனத்தில் கொள்ள வேண்டும். மக்கள் தமது பாராளுமன்ற தேர்தல்களில் கலந்து கொள்வதையே தமது முக்கியமான அரசியல் பங்குபற்றலாக பார்க்கும் நிலைமை நீடிக்கும் வரையில் புரட்சியாளர்கள் பாராளுமன்றத்தை புறக்கணிக்க முடியாது. **பாராளுமன்றமானது வரலாற்றுரீதியாக காலாவதியாகிப் போனதற்கும், அரசியல்ரீதியாக காலாவதியாகாமல் இருப்பதற்கும் இடையிலான வேறுபாட்டை கவனத்தில் கொள்ள வேண்டும்** என்பதே லெனினுடைய நிலைப்பாடாகும். இதற்கு மாறான நிலைப்பாட்டை முன்வைப்பவர்கள் தமது நிலைப்பாடுகளை கோட்பாட்டுரீதியில் முன்வைக்க வேண்டும். சுலோகங்களும், அவதூறுகளும் அசலான கோட்பாட்டு செயற்பாட்டிற்கு மாற்றாக முடியாது!

போராட்டம் மிகவும் பின்னடைந்து போயிருக்கும் நிலையில் நாம் மிக விழிப்புடன் செயற்பட வேண்டும். மக்களது நம்பிக்கையை சிறிது சிறிதாக கட்டியெழுப்ப அதிகம் உழைத்தாக வேண்டும். மக்களை அணுகுவதற்கு எமக்கு கிடைக்கும் அத்தனை வாய்ப்புக்களையும் நாம் பயன்படுத்தியாக வேண்டும். இதில் சட்டரீதியானதும், சட்டத்திற்கு புறம்பானதும், வெளிப்படையானதும்,



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



இரகசியமானதும், வன்முறை சார்ந்ததும், வன்முறையற்றதுமான அத்தனை வழிமுறைகளும் இந்த நோக்கில் பயன்பட்டாக வேண்டும். இதில் இழைக்கப்படும் பாரதூரமான தவறுகள் மீண்டும் மீண்டும் தோல்விகளுக்கே இட்டுச் செல்லும்.

அரசியல் என்பது ஒரு தனித்துறை போலக் கருதி அதனை மக்களுக்கு அப்பாற்பட்டதாக, மக்களுக்கு போதிக்கப்பட வேண்டியதாக, வழிகாட்ட வேண்டிய ஒரு துறைபோல நாம் கருதிக் கொண்டாலும் கூட, அடிப்படையில் அரசியல் என்பது மக்களது அன்றாட வாழ்வாதார பிரச்சனை (உப்பு - புளி பற்றிய பிரச்சனை) பற்றியதாகும். வேலை வாய்ப்பு, வறுமை, சுரண்டல், சம்பள உயர்வு, குடியிருப்பு, போக்குவரத்து, கல்வி, சுகாதாரம், உரிமைகள், அடக்கு முறைகள் ... போன்று புரட்சியாளர்கள் அக்கறைப்படும் அத்தனை விடயங்களும் மக்கள் அன்றாடம் வாழ்க்கையில் அனுபவித்து, துன்பப்பட்டு கொண்டிருக்கும், மக்களை அன்றாடம் உழலவைக்கும் பிரச்சனைகள் ஆகும். இதில் நாம் மக்களுக்கு எதை புதிதாக சொல்லிக் கொடுக்கப் போகிறோம்? என்பது நியாயமான கேள்விதான். உண்மையில் இவற்றை மத்தியதர வர்க்க பின்னணியில் இருந்து வரும் பெரும்பாலான புரட்சியாளர்களை விட சாதாரண மக்கள் தமது அன்றாட வாழ்க்கைப் போராட்டத்தின் ஊடாக இன்னும் நன்றாக, நெருக்கமாக அறிந்து கொண்டுள்ளார்கள். அப்படியாயின் இந்த வாழ்க்கை அனுபவத்திற்கும், அரசியல் விழிப்புணர்விற்கும் இடையில் வேறுபாட்டை எவ்வாறு புரிந்து கொள்வது என்ற பிரச்சனை எழுவது தவிர்க்க முடியாததாகிறது.

இங்கே நாம் மிகவும் முக்கியமான ஒரு தத்துவார்த்த பிரச்சனையை (Philosophical Question) முகம் கொடுக்கிறோம். அதாவது, ஒருவரது வாழ்க்கைக்கும் அவரது பிரக்ஞைக்கும் இடையிலுள்ள உறவு பற்றிய பிரச்சனை இது. ஒருவரது அனுபவத்திற்கும் அவரது அறிவிற்கும் இடையிலான உறவு பற்றியது இது.

முதலாவதாக **மக்கள் யதார்த்தத்துடன் நேரடியாக தொடர்பு கொள்வதில்லை: மாறாக சித்தாந்தத்தின் ஊடாகவே தொடர்பு கொள்கின்றனர்.** இந்த சித்தாந்தமானது ஆளும் வர்க்கத்தினது, அதிகார சக்திகளது நலன்களுடன் தொடர்புபட்டது. இந்த **ஆதிக்க சித்தாந்தமானது சமூகத்தில் காணப்படும் ஏற்றத்தாழ்வுகளை, அடக்குமுறைகளை இயல்பானதாக, நியாயமானதாக, அல்லது குறைந்த பட்சம் மாற்ற முடியாததாக சித்தரிக்கிறது.** இது சர்வசாதாரணமாக சமூகத்தில் அன்றாடம் நடைபெறும் பல்வேறு சித்தாந்த செயற்பாடுகள் மூலமாக, சடங்குகள், மரபுகள், சொல்லாடல்கள் மூலமாக திரும்பத் திரும்ப மக்களுக்கு ஊட்டப்படுகிறது. இப்படியாக **மனிதரது தன்னிலைகளை** (Subjectivity) **அடங்கிப்போகும் விதத்தில் கட்டமைக்கிறது.** இது குடும்பம், தொழில், கலை இலக்கியம், மதம், கல்விமுறை மற்றும் அரசியல் கட்சிகள், தொழிற்சங்கங்கள் போன்ற இன்னோரன்ன நிறுவனங்கள் மூலமாக திரும்பத் திரும்ப, ஒரு நாளிலேயே பல்வேறு தடவைகள் மனிதருள் புகுத்தப்பட்டு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஒருவித நிரம்பல் அடையச் செய்யப்படுகிறது. இதனை அல்துாசர் Interpellation என்ற பதத்தின் மூலமாக குறிப்பிடுகின்றார். இப்படிப்பட்ட செயற்பாடுகள் மனிதரை தாம் சுயமான சித்தமுள்ள, சரி - தவறுகளை புரிந்து கொண்டு முடிவெடுக்கக் கூடிய, தேவைப்பட்டால் நிலைமைகளை மாற்றியமைக்கக் கூடிய, அதாவது **மாற்றத்தை நோக்கி செயற்படக்கூடிய சக்தியாக (Agency) உணரவிடாமல் தடுக்கிறது.** இப்படியாக ஆதிக்க சித்தாந்தமானது எங்கும் நீக்கமற நிறைந்திருக்கும் நிலையில் எமது பிரச்சாரங்கள் மாத்திரமல்ல, அவர்கள் அன்றாடம் ஒடுக்குமுறைகளை முகம் கொடுக்க நேர்வது கூட போதிய விழிப்புணர்வை கொண்டுவந்து விடுவதில்லை. அப்படியானால் மக்கள் இப்படிப்பட்ட கையறு நிலையில் இருந்து மீள்வது எப்படி? என்ற கேள்வி எழுவது தவிர்க்க முடியாததாகிறது.

இதற்கான பதில் சுலபமானதல்ல. இது மிக நீண்டதும், விடாப்பிடியானதுமான செயற்பாட்டை புரட்சியாளர்களிடத்தில் வேண்டி நிற்கிறது. பல்வேறு தளங்களில் நடைபெறும் தொடர்ச்சியான செயற்பாடுகள் மூலமாக இந்த ஆதிக்க சித்தாந்தத்தை படிப்படியாக முறியடித்து புரட்சிகர சித்தாந்த மேலாண்மையை நிலைநாட்ட வேண்டும். இது இலகுவான செயற்பாடல்ல. இந்த எதிரியின் கோட்டையை ஒவ்வொரு செங்கல்களாக பெயர்த்தாக வேண்டும். இப்படியாக இந்த செங்கற்கள் அகற்றப்படத் தொடங்கும் போது, மக்கள் யதார்த்தத்தின் உண்மையான நிலவரத்தை ஆதிக்க சித்தாந்தத்தின் ஊடாக அல்லாமல், எமது புரட்சிகர சித்தாந்தத்தின் ஊடாக காணத் தலைப்படு வார்கள். அப்போதுதான் மக்கள் மாற்றத்திற்கான ஒரு சக்தியாக (Agency) படிப்படியாக செயற்படத் தொடங்குவர். ஆகவே மக்கள் போதிய விழிப்புணர்வு பெறுவது என்பது இந்த ஆதிக்க சித்தாந்த வலையமைப்பு தகர்க்கப்படுவதுடன் நெருங்கிய தொடர்புடையது. இந்த தகர்ப்பானது எமது கிளர்ச்சி, பிரச்சாரம் என்பவற்றுடன் கூடவே மக்கள் ஒழுங்கமைக்கப்படுவது, தாமாக போராடி சொந்தமாக படிப்பினைகளைப் பெற்றுக்கொள்வது போன்றவற்றையும் உள்ளடக்கியதாக அமைகிறது. அப்படியாக அல்லாமல் மக்கள் நேரடியாக யதார்த்தத்துடன் தொடர்பு கொள்வதாக கருதி, எமது ஒரு அறைகூவல் மக்களை விழிப்புணர்வு பெறச் செய்ய போதுமானது என்ற கருத்துடன் செயற்படும் போது வெறும் ஏமாற்றமும், விரக்தியுமே மிஞ்சும். மக்களை மந்தைகளாக மதிப்பிடச் செய்யும். மக்களுக்குப் பதிலாக புரட்சியாளர்கள் தாமே செயற்பட முனைவர். இதுவே அராஜகவாதமாகிறது. தனிநபர் பயங்கரவாதம் தொடக்கம் இந்த பாராளுமன்ற புறக்கணிப்பு வரையில் இது பல்வேறு வடிவங்களில் வெளிப்படுகிறது. இது தவிர்க்க முடியாதபடி மேட்டுக்குடிவாதத்திற்கு இட்டுச் செல்கிறது. ஆதிக்க சித்தாந்தத்தை தகர்த்தெறிய வேண்டிய புரட்சியாளர்களே தம்பங்கிற்கு ஆதிக்க சித்தாந்தங்களுக்கு பலியாகிப் போவதில் போய்முடிகிறது.

அடுத்ததாக மக்களை ஆதிக்க சித்தாந்தத்தின் பிடியில் இருந்து எவ்வாறு விடுவிப்பது என்ற பிரச்சனை எழுகிறது. இது மக்கள் எங்கே இருக்கிறா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ர்களோ, அங்கே இருந்துதான் தொடங்கப்பட முடியும். சிறந்த ஆசிரியர்கள் முதலில் தமது மாணாக்கரின் புரிதல் மட்டம் என்பதை சரிவர மதிப்பிட்ட பின்புதான் தமது கற்பித்தலைத் தொடங்குவார்கள். இங்கு விடயம் இன்னமும் சிக்கலானது. மக்களது புரிதல் மட்டம் என்ன என்பது மட்டுமல்லாமல், மக்களது வாழ்க்கை மற்றும் போராட்ட அனுபவங்களில் இருந்தும் புரட்சியாளர்கள் கற்றுக் கொள்வதற்கு அதிகம் இருக்கிறது. இதனால்தான் மாவோ, மக்களுக்கு கற்பிப்பதற்கு முன்னாள் புரட்சியாளர்கள் மக்களிடம் இருந்து கற்றுக் கொள்ள வேண்டும் என்றார். இப்படியாக மக்களுக்கு தலைமை தாங்குவது என்பது நாம் மக்களிடம் இருந்து கற்றுக் கொள்வது, மக்களுக்கு கற்றுக் கொடுப்பது என்ற இருவழியில் அமைந்த ஒரு இயங்கியல் நடைமுறையாகும்.

அடுத்த விடயம் மக்கள் எங்கு இருக்கிறார்கள் என்பதை தெளிவாக குறித்துக் கொள்வதாகும். இதில் மக்களின் வாலாக இருப்பதற்கும், மக்களது புரிதல் மற்றும் செயற்பாட்டு மட்டத்தில் இருந்து செயற்படத் தொடங்குவதற்கும் இடையிலான வேறுபாட்டை குறித்துக் கொள்வது அவசியமானது. புரட்சியாளர்கள் முன்னணிப் படையினர் என்ற வகையில் மக்களின் வாலாக அமைய முடியாது. ஆனால் மக்கள் எங்கிருக்கிறார்கள் என்பதை சரிவர இனம் கண்டு கொள்ளத் தவறினால், எமது தொடங்கு புள்ளிகள் மக்களை விட்டு மிகவும் வேறுபட்ட தளத்திலும், மட்டத்திலும் அமைந்துவிடும். இதனால் மக்கள் தமது இலக்குகளை சரிவர இனம்காண, முன்னணிப்படையை பின்பற்றிவர முடியாமற் போய்விடும். மக்கள் பல்வேறு பிற்போக்கான சித்தாந்தங்களால் வழிநடத்தப்படுகிறார்கள் என்றால் நாம் பொறுமையாக இருக்க வேண்டும். அவர்களிடம் சென்று அவர்கள் எங்கிருக்கிறார்களோ அங்கிருந்து செயற்படத் தொடங்க வேண்டும். எமது விமர்சனங்களை முன்வைக்கும் போதே அவர்கள் பின்பற்றும் வழிமுறைகள் பயனற்றவை என்பதை கண்டு கொள்ளும் வரையில் பொறுமையுடன் நாம் செயற்பட்டாக வேண்டும். அத்தோடு மக்களிடம் இருக்கும் குறிப்பான வாழ்க்கை அனுபவங்களையும், அவர்களிடம் உள்ள புரிதலையும் கூட நாம் கருத்திற்கொள்ள வேண்டும். அந்தளவிற்கு பொறுமையும், விடா முயற்சியும் எம்மிடம் இல்லையானால் நாம் எம்மை புரட்சியாளர்கள் என்று அழைத்துக் கொள்ளக் கூடாது. நாம் ஒன்றும் எமது நலன்களை மக்கள் மீது திணிக்கவில்லை. எமது அக்கறைகள் யாவும் மக்களது அடிப்படையான நலன்கள் சம்பந்தப்பட்டவை என்பது உண்மையானால், மக்கள் சற்று காலம் கடந்தாவது அவற்றை கண்டு கொள்வார்கள் என்பதை நாம் உறுதியாக நம்பித்தான் ஆகவேண்டும்.

மக்கள் பாராளுமன்றத்தில் வாக்களிப்பது மட்டும்தான் தமது அரசியல் பணி என்று கருதுவார்களேயானால், நாம் அங்கிருந்தே தொடங்குவோம். நாம் மக்களது நலன்கள் எவை என்பதையும், அவற்றை எவ்வாறு இந்த ஆதிக்க சக்திகள் மறைத்து ஏமாற்றுகின்றன என்பதையும் எமது ஆரம்ப புள்ளியாக கொண்டு தொடங்குவோம். முதலில் அவர்கள் தமது நலன்களையும், அவற்றை முன்னெடுக்கும் கட்சியையும் இனம்காண பழக்குவோம். பின்னர் படி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**ப்படியாக அந்த பாதையின் போதாக்குறை பற்றி பேசுவோம். இவை முறையாகவும், சோர்வின்றியும் செய்யப்படுமானால், இரண்டு அல்லது மூன்று தேர்தல்களில் மக்கள் போதியளவு விழிப்புணர்வை பெற நாம் வழிகாட்ட முடியும்.**

அடுத்த பிரச்சனை எமது தலைமைதாங்கும் பண்பு பற்றியதாகும். நாம் எவ்வாறு சமூகப் முரண்பாடுகளையும், அதன் இயங்குவிதிகளை இனம் கண்டு கொள்கிறோம் என்பது எல்லாவற்றையும் விட முதன்மையான பிரச்சனையாக வருகிறது. புரட்சியாளர்கள் ஒரு முன்னணிப்படையாக இருக்க வேண்டுமானால் அவர்கள் அந்த காலத்தின் மிகவும் முன்னேறிய கோட்பாட்டினால் வழிகாட்டப்பட வேண்டும். மார்ச்சியத்தை நாம் ஒரு விஞ்ஞானம் என்று கருதுவோமேயானால் அது ஏனைய அறிவுத்துறைகளில் ஏற்படும் வளர்ச்சிகளுடன் சமநடைபோட்டு வளர்ந்து கொண்டு செல்ல வேண்டும். அப்போதுதான் அது **மிகவும் முன்னேறிய கோட்பாடு** என்ற வார்த்தைகளுக்கு பொருத்தமானதாக இருக்க முடியும். ஆனால் இன்றுள்ள நிலைமைகள், அதுவும் தமிழ் சூழலில் அவ்வாறு குறிப்பிடப்படும் நிலையில் இல்லை என்பதுதான் மிகவும் வேதனைக்குறிய விடயமாகும். இன்று இயற்கை விஞ்ஞானம் மாத்திரம் அன்றி சமூக விஞ்ஞானத்தின் பல்வேறு துறைகளிலும் மிகப் பெரிய அளவிலான பாய்ச்சல்கள் நடந்துள்ளன, நடந்து கொண்டு இருக்கின்றன. சமூகவியல், மானுடவியல், வரலாறு, உளவியல், பாலியல் போன்ற பல்வேறு துறைகளிலுங்கூட - மிகவும் முக்கியமான கண்டுபிடிப்புகளை முன்வைத்திருக்கிறது. இந்த முக்கியமான பாய்ச்சல்களை நாம் கட்டாயமாக கருத்திற்கொண்டாக வேண்டியிருக்கிறது. அத்தோடு மார்க்சியவாதிகளின் தலைமையில் ஆட்சியதிகாரத்தை கைப்பற்றிய அனுபவம் புதிதான பலகேள்விகளையும் என்முன்னே எழுப்பியுள்ளது. இவற்றையும் நாம் முறையாக பரசீலனை செய்தாக வேண்டியுள்ளது. இந்த வெளிச்சங்களை நாம் கவனத்திற் கொள்ள தவறிவிட்டால், இதற்குமேல் எமது **கோட்பாடானது மிக முன்னேறிய கோட்பாடு என்று அழைக்கும் தகுதியை இழந்துவிடும். இப்படிப்பட்ட ஒரு கோட்பாடு எமது செயலுக்கான வழிகாட்டியாக திகழமுடியாது.** தேசியத்தை முதலாளித்துவம எனும்போது: பெண்ணியத்தை மத்தியதர வர்க்க பிரச்சனையாக சித்தரிக்கும்போது: ஓரினப்பால் புணர்ச்சியாளரை சிலரது பிரச்சனையாக காட்டும்போது: சாதியத்தை வர்க்கமாக குறுக்கும்போது: கருக்கலைப்பு உரிமையை ஏகாதிபத்தியத்தின் கலாச்சார சீரழிவு என்று குறிப்பிடும்போது: ஒரு ஆரோக்கியமான கோட்பாட்டு வளர்ச்சியை காட்டவில்லை. உலகளாவியரீதியில் எதிர்ப்பியக்கங்கள் முன்வைத்துள்ள முக்கியமான படிப்பினைகளை நாம் தவறவிடுவோமேயானால், எமது கோட்பாடு மிகவும் வறுமைப்பட்டுப்போகும். எமது சொந்த இயலாமை காரணமாக மிகவும் வளமான கோட்பாடாகிய மார்க்சியத்தை நாம் நலிவடையச் செய்துவிடக்கூடாது. எமது சொந்த கோட்பாட்டு வறுமை, அறிவுத்துறை சோம்பேறித்தனம், அறியாமை போன்றவற்றின் காரணமாக மார்க்சியமானது வெறும் கேலிச்சித்திரமாக மாற்றிவிடப்பட்டுள்ளது. இப்படிப்பட்ட, அதன் ஆன்மாவை இழந்துவிட்ட ஒரு சிந்தனைமுறையானது, மிகவும் முன்னேறிய கோட்பாடாகாது. இது மார்க்சியம் என அழைக்கப்பட தகுதியற்றது. வெறும் பொருளாதாராவாதமும், வர்க்க குறுக்கல்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



வாதமும் எத்தனைதான் மார்க்சிய வேடம் பூண்டாலும் அது புரட்சிகர கோட்பா டாக மாறிவிடமாட்டது.

இவர்களது கோட்பாட்டு வறுமையானது மாற்றுக் கருத்து கொண்டவர்களை முகம் கொடுத்து முறியடிக்க முடியாதவர்களாக ஆக்கி விட்டுள்ளது. அந்த இயலாமையில் இருந்து பிறக்கும் கோபமானது மாற்று கருத்து கொண்டு வர்கள் மீதான தாக்குதல்களாக வெளிப்படுகிறது. பொதுவில் ஒரு இயக்க த்திலும், தமது அமைப்பிற்குள்ளும் மாற்றுக் கருத்துக்களை சகித்துக்கொள்ள, தோழமைபூர்வமான விவாதங்களை நடத்தமுடியாதபோது, அறிவானது தேங்கி ப்போகிறது. இந்த அறிவுத்தேக்கமானது அமைப்புரீதியான தேக்கதிற்கு இட்டு ச்செல்கிறது. இவர்களது அணிக்குள் இருந்து **சொந்தமான புத்திஜீவிகளும்** (Organic Intelectuals) தோன்றுவது கிடையாது: இவர்களது அடாவடித்தனம் தாங்காமல் வெளியில் உள்ள **மரபார்ந்த புத்திஜீவிகளும்** (Traditional Intelectuals) இவர்களை தீண்டுவது கிடையாது. இப்படியாக அறியாமையே பலமாக, தமக் குத் தாமே ஒளிவட்டம் கட்டி மகிழ்வதைத் தவிர வேறு எதனையும் இவர்க ளால் உருப்படியாக செய்ய முடியாது என்பதை இத்தனை கால வரலாறு காட்டியுள்ளது.

இப்போது எம்முன்னுள்ள பிரச்சனை வெளிப்படையானது. நாம் உண்மையி லேயே மக்களது முன்னணிப்படையாக திகழ வேண்டுமாயின், நாம் எமது காலத்தின் மிக முன்னேறிய கோட்பாட்டினால் வழிகாட்டப்பட வேண்டும். அத ற்கு நாம் இந்த பொருளாதாரவாத, வர்க்க குறுக்கல்வாத குப்பைகளையெல் லாம் மூட்டை கட்டி வைத்துவிட்டு எமது கோட்பாட்டு அறிவை அகலமாகவும், ஆழமாகவும் ஆக்குவதை உடனடிப்பணியாக கொள்ள வேண்டும். அந்த பணி யின் வெற்றியைப் பொறுத்தே எமது ஏனைய பணிகளின் வெற்றி தீர்மானிக்க ப்படும். சரியான கோட்பாடு எம்மிடம் இருக்குமானால் நாம் எமது சமுதாயத் தின் சிக்கலான தன்மையை புரிந்து கொள்வதில் வெற்றி பெறலாம். வெவ் வேறு ஒடுக்குமுறைகளுக்கு எதிராக போராட்டம் பல்தரப்பு ஒடுக்கப்பட்ட மக் கள் பிரிவினரது இணைவில் தோன்றும் ஒரு **புரட்சிகர குழுமத்தை** (Revolutionary Bloc) அமைத்து இன்றைய சுரண்டலும், ஒடுக்குமுறையும் நிறைந்து சமூகத்தை தூக்கியெறிந்துவிட்டு, ஒரு புதிய புரட்சிகர சமுதாய த்தை படைக்கும் பணிய-ில் நாம் தீவிரமாக இறங்கலாம். இந்த அடிப்படையான நிபந்தனைகள் நிறைவு செய்யப்படாத வரையில் எமது இலக்குகள் எட்டப் படாமலேயே இருந்துவிடும். இது புரட்சியாளர்களாகிய எமக்கு மாத்திரமல்ல, மக்களுக்கும் பெரிய இழப்பாகிவிடும்.

தொகுத்துப் பார்த்தால், வரலாறு எமக்கு அளித்த போராட்ட வடிவங்க ளினுள் பாராளுமன்றமும் ஒன்றாகும். அது ஒரு முதன்மையான வடிவமாக இல்லாமற் போகலாம். ஆனால் ஒரு போராட்டமானது மிகவும் கடுமையாக தோற்கடிக்கப்பட்டு, மக்கள் நம்பிக்கை அறவே இழந்து போன நிலையில் வெறுமனே புரட்சிகர சுலோகங்களை வைத்தக் கொண்டு வாய்ச்சவடால்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**செய்வதில் அர்த்தம் இருக்க முடியாது. ஆதலால் பாராளுமன்றத்தை, அதன் வரையறுக்கப் பட்ட பாத்திரத்தை அறிந்து கொண்டு நாம் எமது நோக்கங்க ளுக்காக பயன்படுத்திக் கொண்டாக வேண்டும். மக்கள் எங்கிருக்கிறார்களோ நாம் அங்கிருந்துதான் எமது அணிதிரட்டலை ஆரம்பிக்க வேண்டும். ஆகவே நாம் பாராளுமன்ற தேர்தல்களில் கலந்து கொள்வதும், அதன் மூலமாக மக் களை சென்றடைவதும், மக்கள் முன்பு எமது கருத்துக்களை முன்வைப்பதும், அணிதிரட்டுவதும் அவசியமானது. அப்படியாக மக்கள் அணிதிரட்டப்பட்டு முறையான போதமளிக்கப்படும் போது அவர்களால் ஆதிக்க சித்தாந்தத்தின் பிடியில் இருந்து விடுபடவும், முறையான விழிப்புணர்வு பெறவும் சாத்திய ப்படும். பாராளுமன்றத்தை ஏதோ "தீட்டு" போல எண்ணி, அதனை தொட்டா லேயே பாவம் என்பது போல பாசாங்கு செய்வது எதற்கும் உதவ மாட்டாது. அது மக்களை அப்படியே எதிரியிடம் தாரை வார்க்கவே உதவும். இப்படியாக மக்களை அணுகுவதற்கு கிடைக்கும் வாய்ப்புக்களையே துறந்துவிட்டு மக் களை வழிநடத்துவதாக, தலைமை தாங்குவதாக நாம் தம்பட்டம் அடிப்பதில் எந்த அர்த்தமும் இருக்க முடியாது.**

## உசாத்துணை நூல்கள்:


லெனின்: அரசும் புரட்சியும்
லெனின்: இடதுசாரி கொம்யூனிசம் இளம் பருவக் கோளாறு.
சண்முகதாசன்: ஒரு கொம்யூனிச போராளியின் அரசியல் நினைவுகள்.
சண்முகதாசன் கட்டுரைகள்: மார்க்சிய கற்கைகளுக்கான சண்முகதாசன் நிலையம்.
சண்முகதாசன்: கார்ள் மார்க்சின் வாழ்வும் போதனைகளும்.
சண்முகதாசன்: அரசு பற்றிய மார்க்சிய கோட்பாடு
வெகுஜனன், இமயவரம்பன்: கொம்யூனிஸ்ட்டு இயக்கத்தில் தோழர் சண்முகதாசன்.
சி. கா. செந்தில்வேல்: இலங்கையில் இடதுசாரி இயக்கத்தின் ஐம்பது ஆண்டுகள்.
மகஇக வெளியீடு: ஓட்டுப் போடாதே, புரட்சி செய்.
ஹோகான் சீ: நவசீன புரட்சியின் வரலாறு.
கேடயம் வெளியீடு: மாபெரும் விவாதம்.
மக்கள் யுத்தம்: அரசியலமைப்பு நகலறிக்கை (பிரசுரிக்கப்படாத ஆவணங்கள்)
மக்கள் யுத்தம்: இந்தியப் புரட்சியின் போர்த்தந்திரமும் செயல்தந்திரமும்
Colin Hay: Marxist state theory in The State: Theories and Issues: Edited by Colin Hay, Michael Lister and David Marsh
Gautam Appa: Naxalites:, nlr no.
Goeran Therborn: What does the ruling class do when it rules?
K. Damodaran: Memoir of an Indian Communist: new left review. no.93
Liberation (CPI –ML Journal): at - http://sanhati.com/liberation/
Lucio Colletti: From Rousseau to Lenin, In this collection 'Bernstein and the marxism of the second international'
M. N. Srinivas Social Change in Modern India
Maurice Sibelle: Revolutionaries and Parliament – the Bolshevik Experience
Nicos Poulantzas: Political Power and Social Classes
Paul Damato: Marxist and elections: International Socialist Review, Issue 13.
Ralph miliband: Class Power and State Power.
Rick Wolff: Class Struggles and National Debts – Znet. www. zcommunication.org/content/169187
Spartacist: Marxist Principle And Electoral Tactics: english edition no 61:
Sumit Sarkar: The State Of India.nlr no.
Tariq Ali : Pirates of the Caribbean – Axis of Hope. Verso.2008.
The State and Capitalism today: international Socialism: summer 1991
Theses on the communist parties and parliamentarianism: Minutes of the second congress of the Communist International, August 02, 1920
Yash Ghai: The theory of the state in the third world and the problem of constitutionalism:




தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# எதிர்வினைகள்

நீண்ட காலத்தின் பின்பு இப்படிப்பட்ட ஒரு இதழ் கைக்கு கிடைத்ததும் மிகுந்த ஆவலுடன் படிக்கத் தொடங்கினேன். ஆனால், நீங்கள் ஏமாற்றத்தைத்தான் தந்தீர்கள். புலிக்காய்ச்சலை விட்டு நீங்கள் வெளியே வராமல் இந்த தேசிய விடுதலைப் போராட்டத்தில் ஏதாவது உருப்படியாக சாதிக்க முடியும் என்று நான் கருதவில்லை.

***– ஆதவன், இலங்கை.***

ஒரு கோட்பாட்டு சஞ்சிகையை வெளியிடுபவர்கள் தமது சஞ்சிகையில் வரும் கருத்துக்களுக்கு பொறுப்பு எடுப்பது அவசியமானது. புனை பெயரில் எழுதுவதானது இந்த பொறுப்பெடுப்பில் இருந்து சம்பந்தப்பட்ட கருத்துக்களை முன்வைத்தவர்களை விடுவித்து விடுகிறது. இதனால் ஆரோக்கியமான விவாதங்களை நடத்துவது சாத்தியமற்றுப் போகிறது. புலிகளின் மறைவிற்கு பின்னாலும் பாதுகாப்பு காரணங்களை முன்வைத்து கட்டுரை ஆசிரியர்கள் தங்களை இனம் காட்டாமல் மறைத்துக் கொள்வது ஆரோக்கியமானதாக படவில்லை.
புலிகள் தொடர்பான கட்டுரையை வரைந்தவர் தனது கருத்துக்களை வெறுமனே ஊக அடிப்படையில் முன்வைத்துச் செல்வதாக கட்டுரை அமைந்துவிடுகிறது. அவர் முன்வைக்கும் பல்வேறு தகவல்களுக்குமான ஆதாரங்களை காட்ட வேண்டும். இல்லாத போது அந்த கருத்துக்களின் நம்பகத்தன்மை அடிபட்டுப் போய்விடுகிறது.

***– ஜமுனா ராஜேந்திரன், லண்டன்.***

இந்த சஞ்சிகையில் பல புதிய சொற்பதங்களை ஆசிரியர் பாவிக்கிறார். அது பரவலாக பாவிக்கப்படும் அர்த்தங்களை விட வேறுபட்டதாகவும் படுகிறது. உதாரணமாக தேசம் போன்ற பதங்கள். எல்லோரும் பாவிக்கும் சொல்லான தேசியஇனம் என்ற சொல்லை பாவிக்கலாம்.
இல்லையென்றால், இந்த சொல்லாடல்களை பயன்படுத்துவதற்கான காரணங்களை தொளிவுபடுத்துவது அவசியம் அல்லவா?

***– மாறன், பிரான்ஸ்.***

வியூகம் இதழ் ஒன்றில் வந்த கட்டுரைகள் யாவும் நன்றாக இருந்தன. அதிலும் இந்திய ஆக்கிரமிப்பு தொடர்பான கட்டுரையானது மிகவும் நன்றாக அமைந்தது. குறிப்பாக எமது போராட்டம் தொடர்பாக இந்திய அரசின் அக்கறைகள் எவ்வாறு வெளிப்படுகின்றன என்பதை விளங்கிக் கொள்ள உதவியாக இக்கட்டுரை அமைந்தது.
இன்னொரு கட்டுரையான பெண்களின் பாத்திரம் பற்றியதில் பல தகவல்கள் தவறாக இருப்பதாக நண்பர்கள் சுட்டிக் காட்டினார்கள். நான் நினைக்கிறேன் நீண்ட அனுபவங்கள் கொண்ட நீங்கள் இந்த விதமான தவறுகளை தவிர்ப்பது அவசியமானது என்று.

***– நந்தன், சுவிஸ்***



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



பெண்கள் தொடர்பான பல பிரச்சனைகள் எமது சமூகத்தில் இருக்கின்றன. இவற்றை முகம் கொடுக்கும் விதத்தில் பெண்ணியம் சார்ந்து பல கட்டுரைகளை தொடர்ந்தும் எழுத வேண்டும். அத்துடன் எமது தேசத்தின் ஒடுக்கப்பட்ட ஏனைய சமூகப் பிரிவுகள் பற்றியும் விரிவாக எழுத வேண்டும். வெறுமனே ஏதோ எல்லா விடயங்களையும் தொடவேண்டும் என்று பெயரளவில் அல்லாமல், தீவிரமான அக்கறையுடன், பிரச்சனைகளுக்கு தீர்வு காணப்பட வேண்டும் என்ற தார்மீக கோபத்துடன் இவை அமைவது அவசியமானது.
நாம் இந்த மண்டபத்தில் இருந்து பல்வேறு பிரச்சனைகள் பற்றியும் தீவிரமாக விவாதித்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் இந்த விதமான உரையாடல்களில் கட்டாயமாக கலந்து கொள்ள வேண்டியவர்களான இளைஞர்கள் இன்று தவறான வழிநடத்தல்களினால் இந்த விவாத களத்திற்கு வெளியில் இருக்கிறார்கள். இப்படிப்பட்டவர்களும் எமது உரையாடல்களில் கலந்து கொள்வதற்கான வழிமுறைகள் என்ன என்பது குறித்து நாம் யோசித்தாக வேண்டும் அல்லவா?

*– தர்சிகா, ரொறொன்ரோ.*

தேசியவாதம் தொடர்பாக எழுதப்பட்ட கட்டுரை சிறப்பாக அமைந்திருந்தது. இது காலம் அறிந்து எழுதப்பட்ட கட்டுரை. இதில் இணையத்தளத்தில் நடக்கும் பல விவாதங்களில் எழுப்பப்பட்ட கேள்விகளுக்கு தெளிவை ஏற்படுத்தியதாக அமைந்திருந்தது. நன்றி.
இது போன்று தேசியவாதம் குறித்து தொடர்ந்தும் நீங்கள் எழுத வேண்டும். தேசியவாதம் தொடர்பான கோட்பாட்டு பிரச்சனையை நாம் சரிவர தீர்வு காணாமல், மேற்கொண்டு எமது அரசியலில் சரியான நிலைப்பாடுகளை மேற்கொள்வது கடினமானதே.

*– அசோக், லண்டன்.*

சஞ்சிகையின் அமைப்பு, அதன் கட்டுரைகள் போன்ற அனைத்துமே தரமாக அமைந்திருந்தன. ஆனால் அதன் முதல் பக்கமானது பலத்த ஏமாற்றத்தை ஏற்படுத்துவதாக அமைந்தது. முன்பு பல்வேறு இயக்கங்களும் தலைமறைவாக தமது பிரசுரங்களைத் தயாரித்து, தொடர்பு முகவரிகளும் இல்லாமல் வெளியிட்டன. அது போன்றதொரு தோற்றத்தை முதல் பக்கம் ஏற்படுத்தியது. அத்துடன் இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் உள்ளவர்கள் எல்லோரும் கணணிகள், வலை வசதிகளுடன் இருப்பார்கள் என்பதில்லை. ஆதலால் தொடர்பு முகவரிகளை வெளியிடுவது அவசியமானது.

*– குமரன், ரொறொன்ரோ.*

தோழர்களே, இது மிகவும் நல்ல முயற்சி. மனமார்ந்த பாராட்டுக்கள். இவற்றில் காணப்படும் குறைபாடுகள் என்று சொல்லப்படக் கூடியவை சில காணப்பட்டாலும் கூட, எனது அக்கறைகள் நாம் முகம் கொடுக்கும் முக்கியமான கோட்பாட்டு, அரசியல் பிரச்சனைகளை முறையாக கோட்பாட்டு மட்டத்தில் வைத்து பேசுவதற்கான ஒரு தளம் எமக்கு மிகவும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அவசியமானதாகும். அதனை நீங்கள் ஏற்படுத்திக் கொடுத்தாலேயே, அதுவே எமது போராட்டத்தில் நீங்கள் ஆற்றும் மகத்தான பங்களிப்பாக கருதப்படக் கூடியதாக இருக்கும்.
உங்கள் மீதான விசமத்தனமான அவதூறுகளை பரப்புவதற்கான முயற்சிகள் நடப்பதை நான் காண்கிறேன். இவற்றையிட்டு நீங்கள் அறவே அலட்டிக் கொள்ள வேண்டாம் என்பதுதான் எனது ஆலோசனையாக இருக்கும். இவர்கள் எதனையும் தாமாக உருவாக்க மாட்டார்கள். அடுத்தவர்கள் செய்வதையும் அனுமதிக்க மாட்டார்கள். கருத்துக்கள் என்ற அளவில் முரண்பட்டால், சம்பந்தப்பட்டவர்களுடன் விவாதிப்பதில் அர்த்தமிருக்கும். தனிப்பட்ட முறையிலும், அரசியலற்றதுமான இந்த குப்பைக்குள் கால் நனைப்பதன் மூலமாக உங்களது பணிகளில் இருந்து திசை திரும்பாமல் இருப்பதே இன்றைய தேவை என்று நான் நம்புகிறேன்.

*– இராசன், சுவிஸ்.*

கடந்த காலத்தில் புலிகள் இழைத்த தவறுகளுக்கெல்லாம் மன்னிப்பு கேட்க வேண்டும். தம்மை சுயவிமர்சனம் செய்ய வேண்டும் என்று கேட்கிறீர்கள். உங்களது வாதம் சரியானதுதான். ஆனால் தலைமையைச் சேர்ந்த யாருமே உயிரோடு இல்லாத நிலையில் அது எவ்வாறு சாத்தியப்படும் என்று தெரியவில்லையே?

*– ஆத்மா, ரொறொன்ரோ,*

புலிகள் பற்றிய கட்டுரை அருமையானது. இதில் கூறப்பட்ட பல கருத்துக்கள் பலராலும் முன்னரேயே ஆங்காங்கே கூறப்பட்டவைதாம். ஆயினும், அவற்றை முறைப்படி தொகுத்து பகுப்பாய்வு செய்தவிதமானது பல புதிய விளக்கங்களுக்கு இட்டுச் செல்வதாக இருந்தது. தொடர்ந்தும் சமகால அரசியல் நிகழ்வுகள் பற்றி விரிவாக எழுதுங்கள். அதுதான் இப்போது தேவைப்படுவதாகும்.

*– ஆர்கவி, கொழும்பு*

உங்களது கட்டுரைகளின் கனதியான தன்மையானது, இந்த சஞ்சியை யாரைச் சென்றடைய வேண்டுமோ, அவர்களைச் சென்றடைவதில் தடையாக அமைந்துவிடுமோ என்ற சந்தேகம் எனக்கு இருக்கிறது. இது பற்றி சற்று கவனம் செலுத்தவும்.
உங்களது கட்டுரைகள் எல்லாமே தமிழ் தேசியவாதத்தை நியாயப்படுத்தும் விதத்திலேயே அமைந்திருக்கின்றன. அதற்கு மாறான வழிமுறைகள் பற்றி நீங்கள் ஏன் சிந்திக்க மறுக்கிறீர்கள் என்று புரியவில்லை. இத்தனை பெரிய தோல்விக்குப் பின்னரும் தோல்வியுற்ற அதே தேசியவாதத்தைத்தான் தொடர்ந்தும் முன்னெடுக்க முனைவது ஒருவிதத்தில் தோல்வியுற்ற பாதையிலேயே திரும்பவும் செல்வதாக அர்த்தப்படாதா?

*– சிவகுமார், மொன்றியல்.*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சரியான கோட்பாடு என்பது புரட்சியின் வெற்றியை உத்தரவாதப்படுத்திவிடுவதில்லை என்ற போதிலும், வெற்றி பெற்ற எல்லா புரட்சிகளுமே சரியான கோட்பாட்டை கொண்டிருந்தன. மூன்றாம் உலக நாடொன்றில், தேசிய ஒடுக்குமுறைக்கு எதிராக போராடும் நாம், எமது குறிப்பான சமூக, பொருளா-தார, அரசியல், மற்றும் சர்வதேச பிரச்சனைகளை முகம் கொடுக்கவல்ல ஒரு கோட்பாட்டை உருவாக்கிக் கொள்வது எமது புரட்சியின் வெற்றிக்கு முன்னிபந்தனையாகிறது. இந்த இடத்தை எற்கனவே தாயராக உள்ள எந்த கோட்பாட்டாலும் நிரப்ப முடியாது. எமது சொந்த கோட்பாட்டு செயற்பாட்டின் மூலமாக, நாமே, எமது குறிப்பான பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதன் மூலமாக மாத்திரமே இதனை செய்தாக வேண்டும். சர்வதேச புரட்சிகர மரபானது எவ்வளவுதான் மகத்தானதாக இருப்பினும் கூட, எமது தேவைகளை பூர்த்தி செய்யக்கூடிய தீர்வுகளை முன்வைத்துவிட மாட்டாது. இரவல் படையில் மாத்திரமல்ல, இரவல் கோட்பாட்டினாலும் கூடத்தான் புரட்சியை நடத்திவிட முடியாது. இப்படியான வரலாற்று கடமையை நாம் செய்து முடிப்பதற்கு நாம், எம்மிடமுள்ள அறிவுத்துறை சோம்பேறித்தனம், போலி பெருமித உணர்வுகள், வாய்ச்சவடால்கள் போன்றவற்றைக் கடந்து கடுமையான ஒரு உழைப்புக்கு எம்மை தயார்படுத்திக் கொள்வது அவசியமானது.

வியூகம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்